CHRISTIAN COLLEGE KOPAY
FOR TRUTH & JUSTICE

# யா/கோப்பாய்
# கிறிஸ்தவ கல்லூரி

FOR TRUTH AND JUSTICE
CHRISTIAN COLLEGE KOPAY

## 150வது ஆண்டு நிறைவு விழா மலர்










2.06
PR



# J/KOPAY CHRISTIAN COLLEGE
## 150th Anniversary Special Souvenir

# மெடி எயிட்ஸ் மருந்தகம்

320, இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

644, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

# மெடி எயிட்ஸ் கிளினிக்



689, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 021 - 2223511.

# STATIONERIES PARADISE

646, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

322, பருத்தித்துறை வீதி,
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

# TELELINK COMMUNICATION SERVICE

இருபாலைச் சந்தி,
கோப்பாய்.
தொலைபேசி 021 -2223559.

நல்லூர்.
T.P 021- 2222183
T.P 021- 2223106
FAX-021-2223106



யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

# 150 ஆவது ஆண்டு நிறைவு மலர்

1852 -2002

# J/ KOPAY CHRISTIAN COLLEGE 150th ANNIVERSARY SPECIAL SOUVENIR

1852 - 2002

2002

34752

N. Sivakadadcha
PRINCIPAL
J/Kopay Christian C
KOPAY


372.06
கிறி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு/திருமதி/செல்வி
அவர்கள் நன்கொடையாக அளித்தது
திகதி 09.08.2004

# மலர்க்குழு

1. திருமதி. ச. கனகரத்தினம்
2. திரு. சி. சிவலிங்கம்
3. திரு. பே. சா. அ. அரியரத்தினம்
4. திரு. சு. சிவனேசராசன்
5. திரு. ப. கனேசன்
6. திரு. வி. லிங்கேஸ்வரன்
7. திருமதி. S. சிவஞானரத்தினம்
8. திரு. வே. மகாலிங்கம்
9. திரு. S.K. தங்கவடிவேல்
10. திரு. யோசப்தாவீது
11. திரு. சு. சண்முகதாசகுருக்கள்

# மலரின் உள்ளே.........................




| | |
|---|---|
| வாழ்த்துச்செய்திகள் (ஜனாதிபதி, கல்வியமைச்சர்) | I-II |
| அதிபரின் செய்தி | 1 |
| ஆசிச்செய்திகள், | III-XIII |
| வாழ்த்துச்செய்திகள் | XIV-XXX |
| அதிபரின் பரிசுநாள் உரை ~ 2002 | 2-6 |
| எங்கள் உபஅதிபர்கள் | - |
| அதிபர்கள் வரிசையில் | XXXI-XLVI |
| ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் | - |
| அமரர்களான முன்னாள் ஆசிரியர்கள் | - |
| ஓய்வுபெற்ற கல்விசாரா ஊழியர்கள் | - |
| கல்லூரி வரலாறு | 7-10 |
| மாணவர் பக்கம் | 11-20 |
| பரிசுப்பட்டியல் | 21-27 |
| மன்றங்களின் அறிக்கைகள் | 28-45 |
| விளையாட்டுத்துறை | 46-48 |
| பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | 49-52 |
| பழைய மாணவர் சங்கம் | 53-58 |
| பழைய மாணவர் சங்கம் கொழும்பு | 58-60 |
| பழைய மாணவர் சங்கம் வெளிநாடுகள் | 61-62 |
| 2002இல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு | 63-64 |
| 150ஆவது ஆண்டு விழாச்சபை | 65-71 |
| 150ஆவது ஆண்டு நிறைவு | 72-74 |
| கட்டுரைகள், கவிதைகள் (தமிழ், ஆங்கிலம்) | 75-135 |
| 150ஆவது ஆண்டில் இளைப்பாறிய பிரதி அதிபர்கள், உபஅதிபர் | 136-138 |
| கோப்பாய் பிரதேசத்தின் சிறப்புக்கள் | 139-143 |
| நிரந்தர வைப்புக்களும் அதன் நினைவுக்குரியவர்களும் | 144 |
| பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பணிகளில் பங்காற்றியோர் | - |
| நினைவில் நிறைந்த பெரியார் அமரர் அ.வி.மயில்வாகனம் | 145 |
| கல்லூரி ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் 2002 | 146-147 |



ශ්‍රී ලංකා ජනාධිපති

இலங்கை சனாதிபதி

# President of Sri Lanka

It is my distinct Privilege to issue this message of congratulations to J/Kopay Christian College, one of the oldest academic institutions in Sri Lanka.

Education, as all of us know has a fundamental role to play in personal and social development In this regard, Christian Educational Institutions have done yeoman service to the furtherance of school education in Sri Lanka.

Throughout its history, J/Kopay Christian College, no doubt played a responsible and vibrant role in socialising the young. Jubilee celebrations give a school a rare occasion to re - visit the past and re-state its future vision. At this most important juncture, we have to be mindful of the fact that our present context is very different to that of school's pioneers.

We are at the cross roads of a social transformation. The role of education in this transformation is crucial. It can be only done through educating the students in the value of dialogue, tolerance, solidarity and peaceful co-existence, hall marks of a Democracy.

I congratulate the Principal, parents and students for making J/Kopay Christian College an Institution much sought after by the Jaffna community.

In conclusion, I felicitate you and encourage you to strive for excellence.

**Chandrika Bandaranaike Kumaratunga**
**President**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

මානව සම්පත් සංවර්ධන, අධ්‍යාපන හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
Ministry of Human Resources Development, Education and Cultural Affairs

| මගේ අංකය<br>எனது இல<br>My Number } | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. } | දිනය<br>திகதி<br>Date } |
|---|---|---|

# MESSEGE FROM HON. MINISTER OF HUMAN RESOURCE DEVELOPMENT, EDUCATION AND CULUTURAL AFFAIRS



I consider it a priviledge, to have had the opportunity of sending a message to the Souvenir that is being published by the Kopay Christian College on the occasion of its 150 years (1852-2002) of successful existence.

The Anglican Missionaries have established Kopay Christian College in 1852 Over the last one hundred and fifty years our alma mater. No doubt rendered the yeoman service to the nation.


In the field of education the students of Kopay Christian college set a high standard, which is still being maintained despite the unsettled conditions and unfortunate incidents in the recent past. All the possible steps are being taken to restore it to its original glory.

The Kopay Christian College has a proud record of having prepared several generations of students to be disciplined, honourable and respected citizens. I am made to understand that late Sir.Kandiah Vaithiyanathan, late Mr.S.Suntharalingam (Former M.P.) late Mr.S.Thiyagalingam Q.C., and late Mr.C.E.Anandarajan (Former Principa.. St.John's College,Jaffna) are some of them from this alma mater.

I wish the Principal, the Staff and Students of this college, all success in their future endeavor.

**Karunasena Kodituwakku,**
**Minister of Human Resources Development,**
**Education and Cultural Affairs.**

எமது பாடசாலை அதிபர்



திரு. ந. சிவகடாட்சம் J. P

B. SC Dip in Ed SLPS - I

# அதிபரின் செய்தி

எமது கல்லூரியின் நீண்டகால வரலாற்றில் படைக்கப்பட்ட சாதனைகள் பல. காலத்தின் சரித்திரங்களை வெளிப்படுத்தும் சான்றுகளாக விளங்கும் அவற்றைத் திரும்பிப் பார்ப்பதில் மனம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது. கிறிஸ்தவ கல்லூரியின் நிழலில் எனது அதிபர் சேவையை நான் ஆரம்பித்தபோது 150ஆவது ஆண்டு நிறைவில் அபிவிருத்தியில் எத்தகைய இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்குடன் எனது கடமையை ஏற்றுக் கொண்டேன். மாணவர்களின் கல்விச் செயற்பாடு, கல்லூரியின் அபிவிருத்திப்பணி ஆகிய இரு நோக்கங்களும் இரு சமாந்தர நோக்கில் என்னால் முன்னெடுக்கப்பட்டபோது அதற்கு எமது கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவரும் தமது ஒத்துழைப்பைப் பூரணமாக நல்கினர். கல்லூரியின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட இவர்களது உதவியுடன் நீண்டகால இலக்கையுடைய எனது பணிகள் ஓரளவு நிறைவேறியுள்ளமையை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். புதிய கட்டடங்களை அமைத்தல், மண்டபங்களைப் புனரமைத்தலுடன் விளையாட்டு மைதான விஸ்த்தரிப்பும், கல்வி, இணைபாடவிதான செயற்பாடுகளும் சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ளன. 150ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டுப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு அனைத்தும் சிறப்புற நிறைவேறியுள்ளன.


கல்லூரியினூடாக மாணவர்கள், ஆசிரியர்கள், சமூகம் என்பன இணைந்த வகையில் கடந்த 150ஆண்டுகளாகக் கல்விப்பணி புரிந்த எமது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தனது புகழை நிலைநிறுத்தும் வகையில் பல கல்விமான்களை உருவாக்கித் தலை நிமிர்ந்து நிற்கின்றது. கல்லூரி அன்னையின் அன்புச் செல்வங்கள் அனைவரும் அணிதிரண்டு 150ஆவது அகவை நிறைவு விழாவைச் சிறப்பாக நடாத்தியுள்ளனர்.

கல்வி உலகிலே செவ்விய பணியாற்றி 150 ஆண்டைக் கடந்து மேலும் தொடரவுள்ள பயணத்திலே சமூக உறவுகளை மேலும் வலுப்படுத்த விரும்புகின்றது எமது கல்லூரி. அறிவாற்றல் மிக்க மாணவச் செல்வங்களை உருவாக்குவதே எமது பெரும்பணி. 150ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளிவரும் எமது கல்லூரி மலரும் எமது சாதனைகளைத் தாங்கித் தரமுடன் வெளிவருகின்றது. கல்லூரியின் செப்பேடுகள் போல் விளங்கும் கல்லூரி மலர்கள் நறுமணத்தைப் பரப்பும் வண்ண மலர்கள். இம்மலரும் புத்தாக்கத்துடன் பொலிவுடன் வெளிவருகின்றது. இம்மலர் சிறப்புற அமைவதற்குத் தகவல்களைத்தேடி எமது பாடசாலைச் சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்தபோது எமக்குத் தகவல்கள் தந்து உதவியவர்கள் எண்ணிக்கையில் சிலர் மட்டுமே. இம்மலரைப் பலர் விமர்சிக்கப்போகின்றார்கள் என்பதையும் நான் அறிவேன். எம்மால் கோரப்பட்ட விடயங்களைத் தந்துதவாமல் காலம் கடத்தியோருக்கு அக்குறையைச் சமர்ப்பிக்கின்றேன். இம்மலர் சிறப்புற அமைய அயராது உழைத்த மலர்க் குழுவினரைப் பாராட்டுகின்றேன். எமது விழா சிறப்புற நடைபெறும் இக்காலத்தில் எமது கல்லூரியின் தேவை கருதி முச்சக்கர வண்டியொன்றை அன்பளிப்புச் செய்த இந்து கலாச்சார அமைச்சருக்கும் நூலகக் கட்டிடத்தை அமைத்துத்தந்த கல்வித் திணைக்களத்திற்கும் வகுப்பறைக் கட்டிடங்களை அமைத்துத் தந்துதவிய முன்னாள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கல்லூரியின் வளர்ச்சிப்பணி தொடரவும் கல்லூரி பல வழிகளிலும் உயர்வடையவும் கல்லூரிச் சமூகத்தவர்கள் அனைவரும் எனக்கு என்றும் பக்கபலமாக இருப்பார்கள் என்று மனப்பூர்வமாக நம்புகின்றேன். கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்து புதிய காலத்திற்கு நம்பிக்கையுடன் பயணிப்போம்.

**திரு.ந.சிவகடாட்சம்**

# CHURCH OF CEYLON

**Diocese of Colombo**



15th October 2002

oru Ret:
Your Ret:

## Message from the Bishop of Colombo

It is with great joy that I send greetings to the Principal, Staff and Students of Christian College, Kopay on the occasion of the 150th anniversary of the founding of the school. You may know that the records of many of our schools state the date of first registration as "un-known". This is because many of the modern schools were started when neither the Govemment or any other organization had the resources to carry out the all - important task of education. So, like in earlier times when education was imparted to boys in the temple, Christian missionaries filled the breach and gradually the early schools were then put on a proper footing. Christian College, Kopay (then CMS Boys' School) was, no doubt, one such institution.

The educational work of these early missionaries brought many benefits. They brought formal secular education not only to the towns but also to the villages. It is because of this network of schools, that the rate of literacy has always remained very high in our country. The schools also gave instruction through the local languages. And, in addition to the basic skills in reading, writing and arithmetic, they also taught moral values. A beginning was made in breaking down social hierarchies, as children were admitted irrespective of religion, caste or social standing; More importantly, they forged a link between home and school as the Principals and staff often visited parents in their homes.

As successor to the educational tradition of the Anglican Church, I was happy to visit your school recently and to meet with the staff and Students. You have a 150 year tradition to maintain. Under the inspired leadership of your Principal and staff, I am sure you will maintain and develop not only high educational and athletic standards but also the link between the school, home and community.

with Peace and Blesings

**Rt.Rev.Duleep de Chickera**
**Bishop of Colombo.**

# CHURCH OF CEYLON

**Diocese of Colombo**

2002 ஒக்டோபர் மாதம் 15ம் திகதி

மொழிபெயர்ப்பு

## கொழும்பு பேராயர் அவர்களின் செய்தி

பாடசாலை நிறுவப்பட்டு 150வது நிறைவாண்டைக் கொண்டாடும் இத்தருணத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபருக்கும், பணியாளர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் எனது நல்லாசியை பெருமகிழ்ச்சியுடன் வழங்குகின்றேன். எமது பாடசாலைகளில் அநேகமானவற்றில் தமது முதல் பதிவுத் திகதியை 'இன்னதென்று தெரியாது' எனப் பதிவுகளில் குறிப்பிடப்பட்டிருப்பது நீங்கள் அறிந்ததே. ஏனெனில், தற்காலத்துப் பாடசாலைகளில் அநேகமானவை அரசாங்கமோ அல்லது எந்தவொரு நிறுவனமோ கல்வி என்னும் முக்கிய பொறுப்பை ஏற்று நடத்தப் போதிய வளங்களைக் கொண்டிராதபோது தோற்றுவிக்கப்பட்டவை ஆகும். ஆகையால், முன்னைய காலங்களில் ஆண்களுக்குக் கல்வியறிவு விகாரைகளில் வழங்கப்பட்டதைப் போன்று, கிறிஸ்தவ திருப்பணியாளர்கள் தமது வீடுகளில் வகுப்புக்களை நடத்துவதன் மூலம் இடைவெளியை நிரப்பினர். சபை திருப்பணிச் சங்கம் (CMS) தமது சேவையினை 1818ம் ஆண்டளவில் ஆரம்பித்ததுடன் படிப்படியாக ஆரம்பப் பாடசாலைகள் முறையாக நிறுவப்பட்டன. கோப்பாய், கிறிஸ்தவ கல்லூரியும் (முன்னைய CMS ஆண்களின் பாடசாலை), சந்தேகமில்லாமல் அவ்வாறே நிறுவப்பட்டதாகும்.

இந்த ஆரம்பத் திருப்பணியாளர்களின் கல்விச் சேவையானது பல்வேறு பலன்களை வழங்கியது. அவர்கள் முறையான உறுதியான கல்வியை நகர் புறங்களிற்கும் மட்டுமன்றிக் கிராமப்புறங்களிற்கும் கொண்டு சென்றுள்ளனர். இந்தப் பாடசாலைகளின் வலையமைப்புக் காரணமாகவே, எமது நாட்டில் எழுத்தறிவு எப்பொழு[illegible]ந்த நிலையில் இருந்து வந்துள்ளது. பாடசாலைகள் உள்நாட்டு மொழியின் மூலமாகவும் அறிவுறுத்தல் வழங்கியது. அத்துடன், வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதம் போன்றவற்றின் அடிப்படைத் திறன்களுக்கு மேலதிகமாக, அவர்கள் ஒழுக்க நெறிகளையும் கற்றுக் கொடுத்தனர். சமயம், சாதி, சமுதாய தராதரங்களைப் பொருட்படுத்தாமல் பிள்ளைகளை அனுமதிப்பதன் மூலம், ஆரம்ப நடவடிக்கையாகச் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை உடைத்தனர். மிக முக்கியமாக, அதிபர்களும் பணியாளர்களும் அடிக்கடி பெற்றோரை வீடுகளில் சந்திப்பதன் மூலம் வீட்டிற்கும் பாடசாலைக்குமிடையேயான இணைப்பைப் படிப்படியாக முன்னேற்றினர்.

அங்கிலிக்கன் திருச்சபையின் கல்விப் பாரம்பரியத்தின் பின்னமர்வாளனாகிய நான், அண்மையில் உங்களது பாடசாலைக்கு விஜயமளித்துத் பணியாளர்களையும் மாணவர்களையும் சந்தித்ததில் பெருமகிழ்ச்சியடைந்தேன். உங்களிற்குப் பராமரிப்பதற்காக 150 வருட பாரம்பரியம் ஒன்று உண்டு. உங்களது அதிபர் மற்றும் பணியாளர்களின் தூண்டுதலின் கீழ், உயர்ந்த கல்வி மற்றும் விளையாட்டுத் தரங்களை பராமரித்து அபிவிருத்தி செய்வது மட்டுமன்றிப் பாடசாலைக்கும், வீட்டிற்கும், சமுதாயத்திற்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவீர்கள் என நான் உறுதியாயுள்ளேன்.

எனது ஆசியுடனும் சமாதானத்துடனும்

**உயர் அருள் திரு.டுலிப் டி சிக்கேரா**<br>
**கொழும்பு பேராயர்**



# நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

அன்பு நெஞ்சத்தீர்,

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவையிட்டு மனமகிழ்வடைகின்றோம். 150வது ஆண்டு நிறைவாக வெளிவரும் விசேட மலரையிட்டும் மகிழ்ச்சி. கோப்பாய்ப் பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்காக நூற்றியைம்பது ஆண்டுகள் தன்னிகரில்லாச் சேவையாற்றியது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலை சமயகலாசாரத்தையும் கல்விப்பாரம்பரியத்தையும் பேணுகின்ற தனித்துவமான பாடசாலையாக விளங்குகின்றது. மனிதவாழ்வின் விழுமியங்களை ஒழுங்குபடுத்துவது கல்வியாகும். இக்கல்வியை இளமையில் கற்க வேண்டும் என்பதை மனதிற்கொண்டு கிறிஸ்தவ மதத்தினருக்கு மட்டுமன்றி ஏனைய சமயத்தவருக்கும் சீரான கல்விப்பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. இக்கல்விப்பாதையில் பல அறிஞர்களும் மேதைகளும் பல நாடுகளுக்கும் வியாபித்து இக்கல்லூரிக்கு பெருமை சேர்க்கின்றனர். இதனைத் திருவள்ளுவரும்,


*"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்என்ப வாழும் உயிர்க்கு"*

எனக்கூறியுள்ளார். இதனை உணர்த்தும் வகையில் பல கல்வி சார்ந்த பெருமக்கள் உருவாக்கித் தருவது பெருமைக்குரியது. இக்கல்லூரி இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விக்கும் ஏனைய துறைகளுக்கும் உதவ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இச்சிறப்பு நிகழ்வினை செய்யும் பழைய மாணவர்களையும் அதிபர் ஆசிரியர் மாணவர்களையும் வாழ்த்துகின்றோம். மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஏனைய துறைகளிலும் ஓங்கி வளர்ந்து பெருமை சேர்ப்பீர்களாக.

*"வாழ்க இக்கல்லூரி"*
*"வளர்க அதன்பணி"*

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரதேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.**



**கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோவில்**
**பாரம்பரிய அத்தியட்சகுரு**
**கோப்பாய் செல்வவிநாயகர் ஆலய ஆதீனகர்த்தா அவர்களின்**

# ஆசியுரை

*"மாணவர்க்கு அறிவினை விளக்கி*
*மானமார் முத்தியில் வைக்கும் நேர்மையால்*
*தானம் எவ்வகையிலும் தக்க - வித்தியா*
*தானமே சிறந்தது சாற்றும் காலையே"*

மனிதனின் மிருகக் குணங்கள் தேய்ந்து மானிடக் குணங்கள் எழுச்சியுறுவதற்கு கல்வியும் சமய தத்துவங்களும் அத்தியாவசியமானவை ஆகும்.

சமயம் என்பது மனிதனை நல்லொழுக்கத்திலும் அறிவிலும் வளர்ச்சி அடையச் செய்கிறது. கடவுள் நம்பிக்கை உடையவர்கள் எல்லோருடைய மதிப்புக்கும் உரியவர் ஆகின்றார்கள். கல்வியானது மனிதரை இம்மை, மறுமை வாழ்க்கைகளில் உயர்நிலை அடையச் செய்கிறது.

1852ஆம் ஆண்டு கிறிஸ்தவ மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இன்று 150வது அகவையைப் பூர்த்தி செய்வதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். அன்று கிறிஸ்தவ மிஷனரிமார் தமது மதம், மொழி என்பவற்றின் வளர்ச்சியில் கொண்டிருந்த அக்கறையைப் பார்த்த எமது கீழைத்தேச மக்களும் தமது தாய்மொழியாகிய தமிழ்மொழி சைவசமயம் என்பவற்றின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தத் தொடங்கினர்.

ஆகவே எமது கீழைத்தேச மக்களிடையே தமிழ்மொழி சைவசமயம் ஆகியவற்றின் வளர்ச்சி தொடர்பான எழுச்சி உருவாவதற்கு மூலகாரணமாக இருந்த கிறிஸ்தவ மிஷனரிமார் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

எமது சமூகத்துக்குப் பல சிறந்த கல்விமான்களையும் ஒழுக்கசீலர்களையும் உருவாக்கிய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியானது மேன்மேலும் வளர்ச்சி அடைந்து உயர்நிலையை அடைய எல்லாம் வல்ல வடகோவைச் சித்திரவேலவனின் தாள் பணிந்து இறைஞ்சுகின்றோம்.

*சுபம்*

"சைவசித்தாந்த ஞானபானு"
சிவஸ்ரீ சோ.சுப்பிரமணியக் குருக்கள்

கோப்பாய் வடக்கு,
12-12-2002.



# பிரதிஷ்டாகிரியா கலாபமணி
# சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்களின்
# ஆசிச்செய்தி

கோவை நகர் மத்தியில் அமைந்திருக்கும் இக்கல்லூரி 150வது ஆண்டு நிறைவு விழாவை விழாக்கோலம் பூண்டு காண இருப்பதைக் கண்டு நான் மிகவும் பூரிப்பு அடைகிறேன்.

1852ம் ஆண்டு கிறிஸ்தவ மிஷனரிமாரின் சமயப்பணியுடன் இணைந்த கல்விப்பணியின் சின்னமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றதன் காரணமாகப் பல்வேறு இன்னல்கள், இடையூறுகளைச் சந்தித்துத் தற்போது கோவை மத்தியில் தலைநிமிர்ந்து தனக்கெனத் தனியிடத்தைப் பெற்று நிற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதையிலே அதிபரின் அயராத உழைப்பும் கல்லூரிச் சமூகத்தின் ஒத்துழைப்பும் இவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைக்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.


பல அறிவாளிகள் பல பெரியோர்கள் புத்திஜீவிகள் அனைவரையும் இவ்விழாக்கோலம் மூலம் காண இருக்கும் இக்கல்லூரி சமாதானம் ஏற்பட்ட இச்சூழ்நிலையில் இவ்விழாவைக் கொண்டாட இருப்பது ஒருவரப்பிரசாதமாகும்.

ஆகவே அனைவரையும் தலைநிமிர வைத்த இக்கல்லூரிக்கு நயினை ஸ்ரீநாகபூசணி அம்பாளின் திருவருள் கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று ஆசிகூறி அமைகின்றேன்.

நன்றி

கோப்பாய் வடக்கு,
26-12-2002

சிவாகம வித்யா ஸாகர ஞானபானு
சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக்குரு



# யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

கிறிஸ்தவ மிசனரிமாரால் சி.எம்.எஸ் ஆங்கில பாடசாலை என ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தன் பணியின் 150 ஆண்டுகளை நிறைவு செய்வதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இலங்கையின் வடபகுதி வாழ் மக்கள் கல்வியைக் கண்ணெனப் போற்றி மதித்து வருவதற்கு அடியிட்டவர்கள் கிறிஸ்தவ மிசனரிமார்கள் என்பதில் வேறு கருத்து இல்லை. திருமதி பிறேன் என்பவரின் ஆளுமையிலும் வழிநடத்துதலிலும் தூர நோக்குடன் ஆலய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று வளர்ந்து விருட்சமாகி நிறுவுனரின் நோக்கை நிறைவு செய்திருக்கின்றது.


இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் இப்போது நன்றியோடு நினைவுகூரப்பட வேண்டியவர்கள். அவர்களின் அர்ப்பணிப்பில்தான் இக்கல்லூரி இன்று உயர்ந்து நிமிர்ந்து நிற்கிறது.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவில் இவ்விழாவினை எடுக்கும் விழாச்சபையினரையும் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் அனைவரையும் மகிழ்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தமிழ் மக்கள் வாழ்வில் போர் மேகங்கள் அகன்று சமாதானம் தோன்றியுள்ள சூழலில் வன்முறையினை விடுத்துச் சமாதானத்தை விரும்பும் நாளைய நற்பிரஜைகளை உருவாக்குவதை உங்கள் முழு நோக்காகக் கொண்டு செயற்படும்படி அழைப்பு விடுக்கிறோம். உங்கள் பணி தொடர வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கின்றோம்.

இ.தோமஸ் சவுந்தரநாயகம்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
07-10-2002




METHODIST CHURCH OF SRI LANKA
- JAFFNA CIRCUIT -

**"LOCKWOOD HOUSE"**
**NO:09, VEMBADI ROAD,**
**JAFFNA.**
**SRILANKA.**
**T.P:021-2992**
**11-10-2002**


# ஆசிச்செய்தி

கல்விச்சமூகத்தில் தனக்கென ஒரு தனியிடத்தைத் தக்கவைத்துக்கொண்ட கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தனது 150 ஆண்டு காலப்பயணத்தை நிறைவு செய்து புதிய அகவையில் நுழைவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.


1852ம் ஆண்டில் கிறிஸ்தவ மிஷனரிமாரினால் ஆரம்பிக்கப்பட்ட C.M.S ஆங்கிலப் பாடசாலை பல்வேறு பரிமாண வளர்ச்சிகளுக்குட்பட்டு இன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியாகத் திகழ்கின்றது. கோப்பாய்ப் பிரதேசத்திற்கே ஒரு வரப்பிரசாதமாக அமையும் இக்கல்லூரி அப்பகுதியின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அளப்பரிய பங்கு வகிக்கின்றது.

பாடவிதானச் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு ஒரு முதலாந்தரக் கல்லூரியாக விளங்குவதுடன் நவீன உலகிற்கேற்பத் தன்னையும் வளர்த்துக்கொண்டு வருவதால் மேலும் பல நவீன துறைகளிலும் வளர்ச்சியடையும் என்பது எனது நம்பிக்கை.

தனது கடந்தகாலப் பயணத்தில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், அரச உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் எனப் பலதுறை விற்பன்னர்களை உருவாக்கி நாட்டுக்கு நல்கியமை பெருமைக்குரியதே. இப்பணியில் தம்மை இணைத்துக்கொண்ட அனைவரையும் இந்நேரத்தில் பாராட்டி நிற்கின்றேன்.

காலத்தின் தேவையறிந்து அறிவும், ஒழுக்கமும், நற்பண்புகளும் கொண்ட நல்லதொரு இளைய தலைமுறையினை உருவாக்குவதில் தொடர்ந்தும் இக்கல்லூரி ஊக்கமுடன் உழைக்க வேண்டுமெனவும், 150வது ஆண்டு நிறைவின் மகிழ்விலிருந்து உருவாகும் இம்மலர் சிறப்புறவேண்டுமெனவும் இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.



Revd.K.கருணசேகர B.D.M.Th,
சுப்பிரின்டென்ற் மந்திரி
இலங்கை மெதடிஸ்த் திருச்சபை
யாழ்ப்பாண வட்டம்.



**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
தெல்லிப்பழை, இலங்கை.
*Sri Durgadevi Devasthanam*
Tellippalai, Sri Lanka.

தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P

President:
Durgaduranthari, Sivathamilselvi
**Dr.Miss Thangammah Appacuddy, J.P.**



# ஆசிச்செய்தி

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நூற்றி ஐம்பது ஆண்டுகள் நிறைவைக் காண்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கல்வி உலகில் இக்கல்லூரிக்குத் தனிச் சிறப்புண்டு என்பதை அனைவரும் அறிவர். 1852ம் ஆண்டு கிறிஸ்தவ மிசனறியாளர்களால் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை தனது புகழால் நிலைத்து நிற்கின்றது. காலத்துக்குக்காலம் இக்கல்லூரியில் சேவையாற்றிய அதிபர்களினாலும், ஆசிரியப் பெருமக்களினாலும் இக்கல்லூரி வளர்ச்சியடைந்து கல்வியில் மேலோங்கி நிற்கின்றது. இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் சிறந்த மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், கணக்காளர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும் உலகெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எமது நாட்டில் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு மத்தியிலும் இக்கல்லூரி சிறப்பாக இயங்கி, நல்ல பெறுபேறுகளை மாணவர்கள் பெற வழி செய்து கொடுத்தது. என்பதை நாம் அனைவரும் அறிவோம். எல்லாத் துறைகளிலும் மாணவர்களை ஈடுபாடு உடையவர்களாக்கி அவர்களை ஆளுமை வளர்ச்சியிலும் உயரச் செய்தது இக்கல்லூரி. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இன்று நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட இருப்பது மகிழ்ச்சிக்குரியது. இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்கி ஆசிகூறி அமைகின்றேன்.

01-10-2002

கலாநிதி செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



## பருத்தித்துறை, ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமிகள் வழங்கிய

# ஆசிச்செய்தி

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது நிறைவு விழாவை நிலை நிறுத்தும்படியான மலர் வெளியிடப்படுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். ஆரம்பத்தில் சி.எம்.எஸ் ஆங்கிலப்பாடசாலையாகக் கிறிஸ்தவ மிசனறியாளர்களால் 1852ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுப் படிப்படியாக வளர்ந்து 1945இல் முதலாந்தரக் கல்லூரியாகப் பரிணமித்து இதுவரை காலமும் கல்வியுலகத்துக்கு அரும்பணியாற்றியமை போற்றுதற்குரியது. கடல் கடந்து வந்த மிசனறியாளர்களுக்கு நாம் என்றும் கடமைப்பூண்டுள்ளோம். இவர்களுக்குச் சமயத்திலும் கல்வியிலும் இருந்த பற்று நம்மவரிடை அவ்வளவாக இருந்ததில்லை.

இக்கல்லூரியில் கற்ற மாணவர்கள், இனிக்கற்று முடித்து வெளியேறும் மாணவர்களும் சரி சமுதாய வளர்ச்சிக்குப் பணி செய்தல் மிக மிக அவசியம் இப்பணி செய்தல் மூலம் நாம் கல்லூரியின் புகழை மேன்மேலும் வளரச் செயவோம்.

இறைபணியில்
அன்புள்ள அன்னையின் அடியவன் சித்ருபானந்தா

23.9.2002

சித்ருபானந்தா



## சிவதொண்டன் சபைத்துவைர் வழங்கிய


# ஆசிச்செய்தி

*"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"*

என வள்ளுவர் கூறிய மொழியே தமிழர் தம் கலாசாரம். மெய்யறிவினையுடைய இறைவன் திருவடியை வணங்குதலே கற்கும் கல்வியின் குறிக்கோளும் பயனுமாகும். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் யாம் கல்வி கற்ற காலத்தில் இந்தக் குறிக்கோளை வைத்தே ஆசிரியர்கள் எம்மை வளர்த்தனர். ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகள் (1924 - 1932) யான் இக்கல்லூரியில் மாணவராக இருந்தேன். எமது காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர் உயர் திரு J.P. செல்லையா ஆவர். அவரின் ஆளுகைக்குக்கீழ் யாம் கற்றமைக்கு இறைவனுக்கு அன்றும் இன்றும் என்றும் நன்றி உடையேன். நேர்மை இறையன்பு இரக்கம் எடுத்துக்காட்டான ஒழுக்கநடை முதலாய நற்பண்புகளை அவரிடமிருந்தே கற்றோம். கிறித்தவ கல்லூரியாயினும் சைவப் பிள்ளைகளுக்கு எவ்வித வற்புறுத்தலும் இன்றிப் பாரபட்சமற்ற கல்வியையே கற்பித்தனர். இப்படியான ஓர் கலாசாலையின் 150 வருட காலத் தொண்டு மேன்மேலும் நீடித்து வரவேண்டும் என இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

15-11-2002

அன்பு ஓம் சிவ
அ.செல்லத்துரை



"I am The Way The Truth And The Life"....... The Lord Jesus Christ

# CANAAN FELLOWSHIP INTERNATIONAL

## ஆசிச் செய்தி

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தனது 150 வது ஆண்டை நிறைவு செய்வதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கானான் சர்வதேச ஜக்கியத்தின் ஸ்தாபகரும், தலைவருமாகிய நானும் எனது சகோதரிமாரும் எமது ஆரம்பக்கல்வியை இக்கல்லூரியிலே கற்றோம். இக் கல்லூரி எமது பிரதேசத்திலுள்ள திறமைமிக்க கல்லூரிகளில் ஒன்றாக திகழ்ந்து, பல சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாலர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள், விளையாட்டு வீரர்கள், போன்றோரை உருவாக்கியது போன்று, வருகிற காலங்களில் மென்மேலும் திறமையாகச் செயற்பட வாழ்த்துகிறேன்.

தற்போது அதிபராகப் பணிபுரியும் திரு.ந.சிவகடாட்சம், அவரோடு பணிபுரியும் சகல ஆசிரியர்கள், ஊழியர்கள் யாவரும் ஒன்றிணைந்து போரினால் பாதிக்கப்பட்ட இக்கல்லூரியைச் சீர்திருத்தம் செய்கிறார்கள். இப்பணி மேலும் சிறப்புறச்செய்ய தேவ ஆசீர்வாதம் அவர்களுக்கு உண்டாகும்படி வாழ்த்துகிறேன்.

'நன்றி'

A.V. ஜெபநாயகம்
(போதகர்)
கானான் சர்வதேச ஐக்கியம்



## கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத் தலைவர் வழங்கிய ஆசிச் செய்தி

யாழ் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை நினைவூட்டும் முகமாக வெளியிடப்படுகின்ற சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அடியேன் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஏன் எனில்? அடியேனும் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில்.

பாடசாலை தோறும் அறநெறி தழைக்க வேண்டும். அன்பும் பண்பும் துளிர்த்தெழுந்து வளரும் சிறார்களின் மனதில் சாந்தமும் அமைதியும் ஏற்பட்டு நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்பதே எனது அவா.

கிறிஸ்தவ கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 150 ஆவது ஆண்டு பூர்த்தியாகியுள்ள இக்கால கட்டத்தில் இப்பாடசாலையின் உயர்வுக்காக அரும்பணியாற்றிவரும் அனைவரையும் மனதாரப் பாராட்டுவதுடன் எத்தகைய இடையூறுகள் நேர்கின்ற போதிலும் அவற்றை மீறி வெற்றி கண்டு கல்வியில் சிறக்க இறையருள் என்றும் கிடைத்திட வேண்டுகின்றேன்.

*நல்லறம் அறிவான்ற தலைமுறைநம்*
*நாட்டில் தோன்றிட வாழ்க! வளர்க!*

சாந்தி! சாந்தி! சாந்தி

29-09-2002

இறைசேவையிலுள்ள
ரமேஸ் தொண்டுநாதன்.

உ

கற்பகன் துணை

தென்கோவை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம் இருபாலை கோப்பாய்
பிரதமகுரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி



எமது கல்லூரித் தாயாராகிய யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படும் இன் நன்நாளில் இக்கல்லூரியின் பழைய மாணவராகிய நான் ஆசிச் செய்தி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு இந்த விழாவினை சிறப்புற நடாத்தி ஒருங்கமைத்துக் கொண்டிருக்கின்ற கல்லூரி அதிபர் திரு.ந.சிவகடாட்சம் அவர்களுடைய சேவையையும் மற்றும் 150வது நிறைவு விழாச்சபை, பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் அளப்பரிய பணியையும் வியந்து போற்றுவதோடு மேன்மேலும் இக்கல்லூரியின் செயற்பாடுகள் சிறந்து மேலோங்கி மாணவச் செல்வங்களுக்கு நல்வழி காட்டி சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு சிறந்த சாதனமாக திகழ வேண்டுமென எல்லாம் வல்ல கற்பகப் பிள்ளையாரின் பேரருள் கிடைத்திட வேண்டி இறைஞ்சி ஆசி கூறிக் கொள்கின்றேன்.

*லோகா சமஸ்தா சுகினோ பவந்து!*

**18 – 11 – 2002** சிவஸ்ரீ பா. செல்வசேனக் குருக்கள்



# 150th Anniversary Celebrations of J/ Kopay Christian College Message from Minister of School Education Hon. Suranimal Rajapaksha

It is great pleasure for me to issue this message on the occasion of J/Kopay Christian College, Kopay.

I am informed that this School has a history of more than 150 years. In the year 1817 Christian missionaries arrived in Srilanka for propagating Christianity and in 1849 Kopay was adopted as a separate mission district. Rev. Robert Bren of the United Kingdom came to Kopay with his wife in that year. In 1852 a mission house and church were bulit and a school named CMS English Boys' School was functioned in the church premises under the direction of Mrs.Bren which is later known as Kopay Christian College.

Initially classes were only up to Junior School Certificate and from 1941 classes were conducted up to the Senior School Certificate. In the year 1945 with amalgamation of C.M.S girls Tamil boarding School Kopay Christian College was graded as a Grade 1 College . The first National Principal was Mr.G.S.Chellaiya.

The College was taken over by the state in 1960 and classes were conducted for the G.C.E. Advance Level Examination.

Over the years, Kopay Christian College has produced many an out standing personality in all works of life. I sincerely thank the founder members of this school, past and present Principals and staff for their dedication for the up liftment of this school to present level.

I wish the Kopay Christian College 150th Anniversary Celebrations all success

Suranimal Rajapaksha

Suranimal Rajapaksha
Minister of School Education &
Member of Parliament for Gampaha District



# DR.JAYALATH JAYAWARDENA, M.P.

MBBS (Sri Lanka) F.I.C.S.(U.S.A.) MD.
Minister of Rehabilitation,
Resettlement & Refugees

13th November, 2002.

## MESSAGE.

### By Prof.Jayalath Jayawardena

I am delighted to send this message for the Special Souvenir of the 150th Anniversary Celebrations of J/Kopay Christian College.

I am happy to note that though this College was initially started by the Missionaries from the United Kingdom with classes only upto Junior School Certificate it is now conducting classes upto the Senior School Certificate. Also it is a great achievement that the School was graded as Grade I college after the amalgamation of the Boys' and Girls' School in 1945.

I take this opportunity to wish the staff and students all the success in all their endeavours.

**Prof. Jayalath Jayawardema**
*Minister of Rehabilitation, Resettlement and Refugees*

Ministry
248 2/1 காலி வீதி
கொழும்பு - 04
248 2/1 [illegible]
[illegible] - 04
248 2/1 Galle Road
Colombo - 04

Ministry
Telephone : 01-554801
Fax : 01-554803
E-mail : tmahesh@eureka.lk

# இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
# ඉන්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය
# MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS

Jaffna Regional Office
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்
[illegible]
District Secretariat
Jaffna

தியாகராசா மகேஸ்வரன், பா. உ.
තියාගරාජා මහේස්වරන්, පා. ම.
THIYAGARAJAH MAHESWARAN, M. P.

Jaffna Regional Office
Telephone : 021-3625
: 021-3644



## இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு திரு.தி.மகேஸ்வரன் அவர்கள் விடுக்கும் வாழ்த்துச் செய்தி.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி தனது கல்விப்பணியில் 150வது ஆண்டினை நிறைவு செய்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். தனி மனிதனுடைய வாழ்க்கை பூரணத்துவம் பெறுவதற்குக் கல்வி அறிவு மிகவும் அவசியமாகும். கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்யா விஹீன பக) என்றே வடமொழி சுலோகம் ஒன்று கூறுகிறது. "கல்வி அழகே அழகு" என்றே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நாலடியாரும் குறிப்பிடுகின்றது.


நீண்ட காலமாக யாழ்ப்பாணத்து மக்கள் கல்வியின் பெருமையை உணர்ந்துள்ளார்கள். குருகுலக்கல்வி, திண்ணைப்பள்ளி, நிலாப்பள்ளி, போன்ற பல அமைப்புக்களின் ஊடாக முற்காலத்தில் கல்வி வழங்கப்பட்டது. இந்து சமயக்கல்வி மரபில் குருவிற்கும் சிஸ்யனுக்கும் இருந்த தொடர்பு வாழ்நாட் தொடர்பாகவே இருந்தது.

குருவை மாணவன் ஞானத் தந்தையாகவே போற்றினான். குருவும் மாணவர்களைத் தனது பிள்ளைகள் போலவே மதித்தார். ஒழுக்கம், பணிவு, கடவுள் நம்பிக்கை, பெற்றோரைப் பணிதல், பெரியவர்களை மதித்தல் ஆகிய உயர் பண்புகள் குருகுலக்கல்வி முறையினால் மாணவர்களிடம் தோற்றம் பெற்றன.

இலங்கையின் கல்வி வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது ஆகும். 1852 ஆம் ஆண்டு சி.எம்.எஸ் ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கனிஷ்ட பாடசாலை 1945 ஆம் ஆண்டு முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்ற பெயரில் முதலாந்தரக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது. 1960ஆம் ஆண்டு முதல் உயர்தர வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பான முறையில் கல்விப்பணி நடைபெற்று வருகின்றன.

இக்கல்லூரியின் மைந்தர்கள் உலகின் பல பாகங்களிலும் சிறப்பான பதவிகளில் இருந்து பணியாற்றி வருகிறார்கள். கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவினை மகிழ்வுடனும், மனப்பூரிப்புடனும், கல்லூரியைச் சார்ந்த சமூகத்தினர் அனைவரும் கொண்டாடுகிறார்கள். இக்கல்லூரி பல்லாண்டு காலம் தொடர்ந்து தனது கல்விப்பணியினைச் செவ்வனே ஆற்றுவதற்கு இறைவனின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர்
27-09-2002



# வாழ்த்துச் செய்தி

யாழ் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 150 ஆண்டுகளாகக் கோப்பாய் பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சியில் இப்பாடசாலை ஆற்றியுள்ள பங்களிப்பு அளப்பரியது. யாழ் மாவட்டத்தின் கல்வி விருத்திக்காக கிறிஸ்தவ மிசனறியாளர்களின் அரும்பணிக்கு இக்கல்லூரியும் ஒரு எடுத்துக்காட்டாகும். 1852ம் ஆண்டில் அங்கிலிக்கன் கிறிஸ்தவ சபையால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை கடந்த 150 ஆண்டுகளாக நிலைத்து நின்று இப்பிரதேச மக்களுக்கு அறிவொளி ஊட்டி இன்று தரம் 01 ஏபி பாடசாலையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் பல பெரியார்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி உள்ளார்கள். இவர்களது அரும்பணியால் இன்று இக்கல்லூரி பெருவிருட்சமாக வளர்ந்து அறிவொளி பரப்புகின்றது.

இங்கு கல்வி பயின்று உயர்ந்து, தமது வாழ்க்கையை வளமாக்கிக்கொண்ட பலர் எம்மத்தியில் வாழ்கின்றார்கள். இவர்கள் எங்கிருந்தாலும் தமது கல்லூரியை மறவாது, இன்றும் அதன் வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பைச் செய்து வருவது இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைகின்றது.

அண்மைக்காலப் போர் அனர்த்தங்களால் பெரிதும் பாதிப்படைந்த இக்கல்லூரியை, மீண்டும் சீராக்கிச் செயற்பட வைத்தமை இக்கல்லூரியில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தகின்றது. இதற்காக முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர் ஆகிய அனைவரும் பாராட்டிற்குரியவர்கள்.

கடந்த 150 ஆண்டுகளாக இக்கல்லூரி சாதித்தது என்ன? என்று சிலர் சிந்திக்கலாம். கிராமியச் சூழலில் வாழ்ந்த இப்பிரதேச மக்களுக்கு அறிவொளி ஊட்டி வாழ்க்கைக்கு வேண்டிய பொதுக்கல்வியை வழங்கிப் பல நற்பிரஜைகளை உருவாக்கியுள்ளது. இதற்கு மேல் நாம் எதை எதிர்பார்க்கின்றோம்?

இக்கல்லூரி தொடர்ந்தும் வளர்ச்சிபெற்று, இப்பிரதேச மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்ட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**31-01-2002**

**இ.சிவானந்தன**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**வடக்குக் கிழக்கு மாகாணம்,**
**திருகோணமலை.**



# வாழ்த்துச் செய்தி

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 150 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இந்நாளில் எனது வாழ்த்தினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

1852ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி ஆரம்பத்தில் சி.எம்.எஸ்.ஆங்கிலப் பாடசாலையாக இருந்து சி.எம்.எஸ். மகளிர் தமிழ்ப் பாடசாலையும் இணைந்து கோப்பாய் கிறிஸ்தவ முதலாந்தரக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது. 1960ம் ஆண்டு இக்கல்லூரி அரசினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் க.பொ.த.உயர்தரப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுக் கல்விச்சேவையை ஆற்றி வருகின்றது.

இக்கல்லூரியின் வரலாற்றினை அறியும்போது இதன் ஆரம்ப அதிபராக இருந்த காலஞ்சென்ற திரு.ஜி.எஸ்.செல்லையா, திரு.ஈ.சி.ஏ.நவரட்ணராஜா என்பவர்கள் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்களாவர். இவர்களதும் இவர்களின் பின்வந்த அதிபர்களதும் அர்ப்பணிப்புடைய சேவை காரணமாகப் பிரபல்யமான அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், விளையாட்டு வீரர்கள் பெருமளவில் உருவாக இக்கல்லூரி காரணமாய் அமைந்துள்ளது.

தற்போதைய அதிபர் திரு.ந..சிவகடாட்சம் அவர்களும் அவரது ஆசிரியர் குழுவினர்களும் இக்கல்லூரியைச் சிறப்பான முறையில் வழிநடத்திச் செல்கின்றனர்.

150 வருடங்களைக் கடந்துவிட்ட இக்கல்லூரி மேலும் பற்பல சேவைகளை ஆற்றவேண்டும். இதன் பழைய மாணவர்கள் இக்கல்லூரியின் பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து நீண்டு நிலைபெற உதவ வேண்டும். இக்கல்லூரி எதிர்காலத்திலும் சாதனைகள் பல படைக்க வேண்டும். இதற்காகப் பாடுபடும் ஒவ்வொருவருக்கும் என்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**14-10-2002**

**ஐ.எம்.இஸ்ஸதீன்,**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**வடக்கு கிழக்கு மாகாணம்.**



## யாழ்ப்பாணம் – மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர், வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியைச் சேர்ந்த கல்விச் சமூகம் கல்லூரியின் 150வது வயதிலே விசேட மலரொன்றினை வெளியிடுவதனைக் கேள்வியுற்றுப் பேரானந்தம் அடைகின்றேன்.

1852ல் கிறிஸ்தவ மிசனறியாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வரலாற்று நீரோட்டத்தில் பல சவால்களைச் சந்தித்து வென்றெடுத்துப் படிப்படியாக முன்னேறிச் சாதனைகள் பலவற்றைப் படைத்து 1960இல் அரச பாடசாலையாக மாற்றமடைந்தது. இதனால் ஒருவர்க்கத்தின் கல்விச்சொத்து சமூகத்தின் சொத்தாக, சுதேசியத்தின் சொத்ததாக பரிணமித்தது.

இக்கல்லூரியின் ஆரம்பம் முதல் இன்றுவரை பலபுகழ் பூத்த, உயிரோட்டமுள்ள முகாமையாளர்கள், கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுத்துள்ளனர். அவர்களது முயற்சிகளால் கல்லூரி சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு மாணவர்களது கல்வி மேம்பாடு அடைந்தது.

1995இற்கு பின் வேதனை நிறைந்த அழிவுகளிலிருந்து இக்கல்லூரி படிப்படியாகத் தன்னை வலுப்படுத்திவருகின்றது. ஆரவாரமற்ற ஆனால் செயலூக்கமுள்ள கல்லூரியின் நல்ல முகாமைத்துவம், முகாமைத்துவத்திற்குப் பக்கபலமாகச் செயற்படும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்சங்கம் ஆகியன இக்கல்லூரியின் வளர்ச்சிப்பாதையின் அடிநாதங்களாகத் திகழ்கின்றன. இக்கவிநிலை இக்கல்லூரிக்கு மேலும் பல சிறப்புக்களைத் தேடிக்கொடுக்கும்.

150 வருடங்களாக கல்விப்பணிபுரிந்து சமூகத்திற்கு நல்வழி காட்டும் கலைக்கோயிலினை ஞாபகப்படுத்தும் விசேட மலரினை வெளியிடும் பணியிலீடுபட்ட அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

**செம்மணி வீதி**
**நல்லூர்.**
**29 – 11 – 2002.**

வீ.இராசையா,
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.




# யாழ்ப்பாணம் – வலயக்கல்விப் பணிப்பாளர் வழங்கிய வாழ்த்துச் செய்தி

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அப்பாடசாலையின் வளர்ச்சியையிட்டு கல்விச்சமூகம் மனநிறைவு அடைகின்றது. 1852ஆம் ஆண்டு கிறிஸ்தவ மிசனறிமாரால் சி.எம்.எஸ் ஆங்கிலப் பாடசாலையென்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு கிறிஸ்தவ ஆலயவளாகத்தில் இயங்கி வந்தது. கனிஷ்ட பாடசாலைப் பத்திர வகுப்பு வரையும் 1942ஆம் ஆண்டு தொடக்கம் சிரேஷ்ட பாடசாலைப் பத்திர வகுப்புக்களும் நடாத்தப்பட்டு 1945ஆம் ஆண்டு தொடக்கம் சி.எம்.எஸ்.ஆல் நடாத்தப்பட்ட மகளிர் தமிழ்ப் பாடசாலையும் ஆங்கிலப் பாடசாலையும் தன்னுள் ஈர்த்துப் பின்னர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியாகியது.

பல்வேறு அரசியல்வாதிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் உயர்பதவிகளை இன்று அலங்கரிக்கும் பலரை இக்கல்லூரி ஆளாக்கி இருக்கின்றது. கோப்பாய்க் கோட்டத்துத் தரம் பெற்ற ஒரு கல்லூரியாக விளங்கிப் பாடசாலையின் முறை, முறைசாராக் கல்வித் துறைகளில் வளர்ச்சி பெற்று வரும் இக்கல்லூரியின் வளர்ச்சியைப் பாராட்டி, எதிர்காலத்தில் அப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இக்கல்லூரியின் செயற்பாடுகள் அமைய வாழ்த்துகின்றேன்.

28-11-2002

திருமதி.செ.மகாலிங்கம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



# கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துச் செய்தி.

கோப்பாய்க் கிராமத்தில் தனக்கென ஒரு இடத்தை வகுத்து வானளாவப் புகழ் பரப்பிக் கல்விப்பணி தன்னலமற்ற புனிதப்பணி என்பதற்கு இலக்கணம் வகுத்து. அறிவு, கலை, கலாச்சாரம், ஆகியவற்றைப் பேணி வளர்த்துத் தன்னுடைய பாதையில் 150 ஆண்டுகள் கடந்து சென்று கொண்டிருக்கும் இப்பாடசாலை தனது கடந்த காலத்தை நினைவு கூர்வது இன்றியமையாதது. தனது வரலாற்றைப் பதிவு செய்வதும் காலத்தின் தேவையாகின்றது. இதனையொட்டி வெளியாகும் இம்மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன். மனம் நிறைவு அடைகின்றேன்.

பாடசாலையின் வளர்ச்சியின் சிகரமாக அமையும் இந்த மலர் தாங்கி வரும் அரும் தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பொக்கிசமாகும்.

1852இல் சி.எம்.எஸ். ஆங்கிலப் பாடசாலையாகத் தனது ஆரம்ப காலங்களைத் தொடங்கிப் பின் 1942ல் சிரேஷ்ட தராதர பாடசாலையாக வளர்ந்து 1945ஆம் ஆண்டு தமிழ். ஆங்கிலப் பிரிவுகள் இணைந்து கிறிஸ்தவ கல்லூரி என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. 1960இல் உயர்தர வகுப்புக்கள் இயங்கத் தொடங்கியதும் இதன் வளர்ச்சி மேலும் மேலும் வளர்ந்து இன்று ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றிப் பல கல்வி மான்களை உலகிற்கு வழங்கிக் கம்பீர தோற்றத்துடன் வீறுநடை போடும் இக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் இன்றைய அதிபர், ஆசிரியர் குழாம், மற்றும் உறுதுணையாகவிருக்கும் பெற்றோர். பழைய மாணவர்கள், யாவரையும் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

அத்துடன் 1999ம் ஆண்டு முதல் எனது கோட்ட அலுவலகம் இங்கு சிறப்புற இயங்குவதற்கு பல வழிகளில் ஆக்கமும், ஊக்கமும் தந்து இன்னும் என்னுடன் எனது தேவைகட்கு உதவி வரும் கிறிஸ்தவ கல்லூரிச் சமூகத்தினருக்கும், குறிப்பாக அதிபருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன.

நன்றி

கோட்டக்கல்வி அலுவலகம்,<br>
கோப்பாய்.<br>
2002-12-17.

இ. சிவஞானசுந்தரம்.<br>
கோட்டக் கல்வி அதிகாரி,<br>
கோப்பாய்.



# வாழ்த்துச் செய்தி

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரவுள்ள விசேடமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக வலிகாமம் பகுதி மக்களுக்கு சிறந்த சேவையை இக்கல்லூரி வழங்கி வருகின்றது. கடந்த காலங்களில் யுத்தத்தின் காரணமாக பல பிரச்சனைகளை எதிர்கொண்டபோதும் புதுமிடுக்குடன் அண்மைக்காலத்தில் நல்ல வளர்ச்சியை இப்பாடசாலை கண்டு வருகின்றது. மகிழ்ச்சியை அளிக்கின்றது.

கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும், மற்றும் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் இக்கல்லூரி தனக்கேயுரிய தனி அழகுடன் செயற்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இக்கல்லூரி வளர்ச்சிக்கு உழைத்து வருகின்ற அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரி நலன் விரும்பிகள் யாவரும் பாராட்டுக்குரியவர்களே.

"உண்மைக்கும் நேர்மைக்கும்" என்ற மகுட வாக்கியத்திற்கமைய இக்கல்லூரியானது மேலும், மேலும் முன்னேறி நாட்டுக்கு நற்பிரஜையுள்ள சமுதாயத்தை வழங்க வேண்டும் என வாழ்த்தி அமைகின்றேன்

19-12-2002

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



# வாழ்த்துச்செய்தி


யாழ் மாவட்டத்தில் பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்றான கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைக்கக் கிடைத்தமையையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

1852ஆம் ஆண்டு சிறிய கல்வி நிறுவனமாக மிஷனரிமார்களால் ஆரம்பிக்கப்பட்டுத் தனது கல்விப் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பி இன்று வளர்ச்சி பெற்று இம்மாவட்டத்தில் பல கண்ணியமான கல்விமான்களை உருவாக்கிய கல்லூரியை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். இக்கல்லூரியின் வளர்ச்சியில் 1957ம் ஆண்டிலிருந்து பல வருடங்கள் அதிபராகவிருந்த காலஞ்சென்ற திரு.ஈ.சி.ஏ.நவரத்தினராஜா அவர்களின் பங்களிப்பு நினைவு கூரத்தக்கது. என்பதோடு அதைத்தொடர்ந்து அதிபர்களாகவிருந்த பெரியார்களின் சேவை பாராட்டுக்குரியது.

இக்கல்லூரி தன்னுடைய கல்விப் பாரம்பரியத்தை மேலும் சிறந்த முறையில் தொடர்ந்து இம்மாவட்டத்தில் பண்புள்ள கல்விப்பரம்பரையை உருவாக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

15-12-2002

**செ. பத்மநாதன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ் மாவட்டம்.**



# கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகிய யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவர இருக்கும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிறிஸ்தவ மிசனறிமாரால் ஆரம்பிக்கப்பட்டு 150வது ஆண்டு நிறைவை கொண்டாடும் இக்கல்லூரி கல்வி அபிவிருத்தியிலும், விளையாட்டுத்துறை, ஏனைய துறைகளிலும் மாணவர்களின் முன்னேற்றத்திலும் முன்னனியில் திகழ்ந்து வந்துள்ளது. எமது பிரதேச செயற்பாடுகள் பலவற்றுக்கு அக்கல்லூரியின் வளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பல வளங்கள் அப்பாடசாலைக்கு பெற வேண்டியுள்ளன.

இக்கல்லூரி தொடர்ந்தும் தனது பணிகளை முன்னெடுக்க, இப்பகுதி வாழ் மாணவர்களில் அபிவிருத்திக்காக காலத்தின் தேவையறிந்து முன்னேற்றப்பாதையில் செல்ல என் வாழ்த்துக்கள்.

18-12-2002

**க.கேதீஸ்வரன்**
**பிரதேச செயலர்,**
**கோப்பாய்.**

# Felicitations from the former Principal, Mr.S.Kandasamy



Kopay Christian College has successfully completed a hundred and fifty years of valuable service. It is with great pleasure that I give this message on this very special occasion. We live in times of great insecurity, political turmoil and spiritual vacuum. It is the dedicated institution like yours that can bring about a real transformation in society at such a critical time.

Students may come and Students may go, teachers may come and teachers may go, principals may come and principals may go but Kopay Christian College will go on for ever radiating its light to spread "truth and justice" to the peoples of the world It does not matter how long an institution has lived, but what it matters is how it has served its society. It gives me immense pleasure to have been part and parcel in the growth of the institution as a student from 1935 to 1945 and as Principal in 1973 and 1974 during which time a middle school block and an upstair science block were built. I would like to note with pleasure that one of our students won the gold medal for Hinduism in that year.

Once again my family and I would like to say well done to all those involved in the life of Kopay Christian College for memorable achievement. We pray that God will continue to shower His blessings upon you all and we will be able to congratulate you on your further endeavor.

S.Kandasamy

Toronto District School Board

140 Borough Drive, Scarborough, Ontario M1P 4N6 • Tel: (416) 396-7100



# Felicitations from the former Principal, Mr.S.Sivanesan

August 29, 2002

I am happy to hear that Kopay Christian College is celebrating its 150 th Anniversary this year. This institution founded by the Christian missionaries has been serving the people of Kopay and its vicinity all these years. It is amazing to note that the college continued its service even during the turbulent years since 1983.

I remember very vividly when we celebrated its 125th Anniversary with the opening of a Memorial hall in 1977. I have some photographs of the ceremony still in my album. After a quarter, century I am delighted to send this message to all parents, present Principal, staff and students.

Congratulations and best wishes to all of you on this Happy and memorable occasion.

May God Bless You all.

Sinniah Sivanesan
(Emeritus Principal)



# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரி 150ஆவது ஆண்டு விழாவெடுக்கும் தருணத்தில் பாராட்டுச் செய்தி அனுப்புவதில் அகமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு கல்லூரியின் வயது 150ஆகிவிட்டது என்பதை அறியும்பொழுது பாராட்டாமலும் விழா எடுக்காமலும் இருக்க முடியாது. இவ்விழாச் சபையின் தலைவர், செயலாளர், பெருளாளர், நிர்வாக சபையினருக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்,

"உண்மையும் நீதியும்" என்ற மகுட வாக்கியத்தைக் கொண்ட கல்லூரி 150 ஆண்டுகளாக எமக்கு ஆற்றிவந்த நற்பணியை முன்னிட்டு நாம் மனமார வாழ்த்த வேண்டும். வணங்க வேண்டும். கிறிஸ்தவ மிஷனறி; கல்வி அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் இக்கல்லூரியை ஆரம்பித்தது. அவர்களை நன்றியுடன் நினைவு கொள்ள வேண்டும். இக்கல்லூரி பல்லாயிரக்கணக்கான சைவ மாணவர்களுக்கு கல்வி கற்க வாய்ப்பை அளித்தது. அவர்களை வழிப்படுத்தியது. நெறிப்படுத்தியது. ஊர் மக்களும் ஆதரவு நல்கி வந்தார்கள். நல்ல பாரம்பரியம் வளர்க்கப்பட்டது. இக்கல்லூரி இல்லாவிட்டால் என்னைப் போன்ற பலர் மேற்படிப்பை தொடர்ந்திருக்க முடியாது.

வருடங்கள் உருண்டோடின. கல்லூரியும், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஆதரவுடன் படிப்படியாக வளர்ந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. தொடர்ந்தும் நல்ல ஆதரவு கிடைக்கும் என்பதற்குச் சான்றாக இவ்வாண்டில் பல அபிவிருத்தி வேலைகளும், வைபவங்களும் இடம் பெற்றுள்ளன. அஸ்தமிக்கும் ஆதவன், "எனது கடமையை யார் செய்வார்கள்?" என்ற கேள்வியை எழுப்பியது. எரிந்து கொண்டிருந்த விளக்கு கூறியது, "நான் இயன்றவற்றைச் செய்வேன்."

இது ஒரு கிறிஸ்தவ பாடசாலையாக இருந்தாலும், சைவசமய, கலாசார வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வந்துள்ளது. உலகப்புகழ்பெற்ற சேக்ஸ்பியர் எனும் நாடக ஆசிரியர் கூறியதை இங்கு குறிப்பிடலாம். "பெயரில் என்ன தங்கியுள்ளது, ஒரு றோசாப் பூவை வேறு பெயர் சொல்லி அழைத்தாலும் அதனுடைய சிறந்த வாசனை குறையமாட்டாது."

சமயம் சமூக வளர்ச்சியின் ஒரு பிரதான அங்கம் என்பதால் இந்தப் பரிமாணங்கள் அழுத்தம் பெற்றன. இக்கல்லூரி அறியாமையை அகற்றி அறிவொளியைப் பரப்ப பல வகைகளிலும் முன்னின்று உழைத்து வருவதை யாபேரும் அறிவர். 150 வருட சேவை சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இவ்விழா எங்களைத் திரும்பிப் பார்க்கச் செய்வதுடன், சமுதாயத்தின் இன்றைய சவால்களை ஏற்கக்கூடிய முறையில் எங்களைத் தயார் செய்யத் தூண்டும் விழாவாகவும் காணப்படுகின்றது.

கல்லூரியின் சேவையை சுலபமாகக் கணிப்பிட முடியாது. கல்விக்கண் திறக்கப்பட்டது. அறிவு மலர்ந்தது. ஊக்கம் பிறந்தது. ஆற்றல் வளர்ந்தது. புத்தொளி பிறந்தது. சமூகம் வளர்ச்சியும் உயர்ச்சியும் அடைந்தது.

இவ்விழா மேலும் உற்சாகத்தை ஊட்டுவதுடன் எல்லோரையும் கல்லூரியின் விருத்தியில் ஆழ்ந்த அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் தொழிற்படச் செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இச்சந்தர்ப்பம் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். சந்தர்ப்பம் என்பது கடவுளின் புனைபெயர் எனக் கருதப்படுகிறது. கல்லூரி தொடர்ந்து வாழும் தன்மையும் சக்தியும் உடையது. மனிதர்கள் வருவார்கள், போவார்கள். ஆனால் எமது கல்லூரி தொடர்ந்தும் அறிவொளி பரப்பிய வண்ணமிருக்கும்.

இவ்விழா சிறப்பாக நடைபெறவும் கல்லூரி மேலும் உன்னத நிலையை அடையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

10-12-2002

பூ.க.இராசரத்தினம்
முன்னாள் அதிபர், கோ.கி.க.



# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவனும் முன்னாள் அதிபருமாகிய தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமியின் இதயத்திலிருந்து...........

கல்விநெறி மூலம் நாம் நம்மை, நம் சூழலை, அறிவினை, சமூகத்தை, பண்பாட்டு மரபினை ஆய்ந்து இப்பண்புகளுக்கு விமர்சனம் தந்து அதன் அடிப்படையில் எடுக்கின்ற புதுக்கருத்துக்களை தற்கால நவீன சமூகத்திற்கு ஏற்ப உருவாக்க எத்தனிக்கின்றோம். இதனை செயல் வடிவமாக்கித் தரும் நிறுவனம் பாடசாலையாகும். ஆங்கிலக் கவிவாணர் வில்லியம் வேட்ஸ்வர்த் "மனிதத் தன்மையினை மனிதர் பெற உறுதுணையாய் விளங்குவது கல்வி" என்றார். இத்தகைய கல்வியை இளம் சிறார்களுக்கு வழங்கும் உன்னத நிறுவனம் பாடசாலையாகும்.

இலங்கையின் கல்விப் பாரம்பரியம் மிக நீண்ட வரலாற்றை உடையது. இலங்கையின் கல்வி வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனறிமாரின் பங்கு மிக முக்கியமானது. அவர்கள் மதம் பரப்பும் நோக்கம் ஒரு புறம் இருக்க, இலங்கையின் பெரும்பாலான மக்கள், அதுவும் சாதாரண மக்களை கல்வி அறிவுடையவர்களாக்கிய பெருமை கிறிஸ்தவ மிஷனறிமாரைச் சார்ந்ததாகும். இந்த வரலாற்றுடன் பின்னிப்பிணைந்த எமது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. கிறிஸ்தவ மிஷனறிமார்களினால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை நீண்டகால (150 வருட) வரலாற்றைக் கொண்டது மட்டுமல்ல, குடாநாட்டில் உள்ள மாணவர்கள் மட்டுமல்ல, இலங்கையின் நாலா பக்கங்களிலுமுள்ள மாணவர்கட்கு கல்வி புகட்டிய பெருமையை உடையது. வரலாற்றுப் பெருமை மிக்க கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தனது 150வது அகவையை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். கிறிஸ்தவ கல்லூரியால் உருவாக்கப்பட்ட பல மைந்தர்கள் இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் புகழ்பரப்பி கல்லூரிக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவன் வாக்குக்கமைய இன்றுகூட கிறிஸ்தவ மிஷனறிமாரினால் உருவாக்கப்பட்டு கல்வியை வளர்த்த உயரிய நிறுவனம் கிறிஸ்தவ கல்லூரி என்ற பெயரை தாங்கி நிலைத்து இருக்கின்றது. முழுக்க முழுக்க கிறிஸ்தவ மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகள் கூட இத்தகைய பெயரை காணமுடியாத நிலையில் எமது கல்லூரி, தன்பெயரில் நிலைத்து நிற்பது நன்றிக்கும் பெருமைக்கும் உரிய விடயமாகும்.

கல்லூரியின் அழகுமிகு தோற்றம், நிலஅமைப்பு (உயர்ந்த இடம், பதிந்த இடம்) அழகிய நிழல்தரும் மரங்கள் இன்றும் என் மனக்கண்ணில் உரிய விடயமாகும்.

எமது கல்லூரியின் மாணவனாக கல்விகற்ற காலத்தையும், இக்கல்லூரியிலேயே அதிபராகக் கடமையாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தையும், 1968 - 1970களில் எனக்கு கல்வி கற்பித்த பெருமதிப்பிற்குரிய எனது ஆசான் 1991ல் இக்கல்லூரியின் அதிபராக சென்றபோது அங்கு ஆசிரியராக இருந்து என்னை வரவேற்று அரவணைத்த நிகழ்வையும் மீட்டுப் பார்க்கின்றேன். இத்தகைய ஒரு அரும் சந்தர்ப்பம் கிடைப்பது மிக அபூர்வம்.. இதனை எனக்கு அளித்த கல்லூரி அன்னையை சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி காலத்தின் கோலத்திற்கேற்பச் சகட ஓட்டங்களை பெற்றாலும் மீண்டும் தலை நிமிர்ந்து வளர்ந்து வருவதைக் கண்டு மகிழ்கின்றேன். ஒரு நாட்டின் முதுகெலும்பு கல்வி முறையாகும். இக்கல்வி முறையினை பாடசாலையில் நடாத்திச்செல்லும் நிர்வாக இயந்திரமாக விளங்கும் அதிபர் உறுதியானவராகவும், நடுநிலையாளராகவும் இருக்க வேண்டும். அத்தகைய சிறந்த அதிபராக திரு.ந.சிவகடாட்சம் விளங்குகின்றார். அவருடன் தோளோடு தோள் நின்று கல்வியை வளர்க்க சிறந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பாடசாலையில் பற்றும் பாசமும் கொண்ட மாணவ செல்வங்கள் இருக்கிறார்கள். கல்லூரி அன்னையை என்றும் நினைத்து அதன் வளர்ச்சிக்கு உதவ என்றும் தயாரான பழைய மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கிறார்கள். சிறந்த பெற்றோர்கள் இருக்கின்றார்கள். பாடசாலையின் வளர்ச்சியில் என்றும் கண்ணாக உள்ள கல்விசாரா உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். இத்தகைய சிறந்த வளம் உடைய கிறிஸ்தவ கல்லூரி என்றும் வீறு நடைபோட்டு வளரும் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்தவ கல்லூரி மென்மேலும் வளர்ந்து பல புத்திஜீவிகளை உருவாக்க அரும்பணி செய்யவேண்டும் என வாழ்த்தி வணங்குகின்றேன்.

12-12-2002

தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி
BA. Dip. in Ed. & M.Phil



# Message From a Former Deputy Principal

I send my Sincere Greetings to our Alma mater J/Kopay Christian College, on the occasion of the celebration of her 150th anniversary.

May her future progress, uplift and enlighten the spirit, knowledge and character of the future generation who walk through the portals of this noble and note worthy institution that has been producing educationists of all categoris who are serving throughout Sri Lanka as well as the whole world.

May "Truth and Justiece" prevail throughout her future existence.

08-12-2002

Mrs.P.Arulrajah



# Message from a former Deputy Principal


I have immense pleasure in sending my felicitations on this happy occasion of Kopay Christian College celebrating her 150th Anniversary. It is indeed a very rare occasion for a proud School with a noble birth to have evolved into a much respected institute of good repute. The present stature of the College is due to the intense devotion of many Principals loyelty of many past pupils. May God shower his blessings on everyone who had contributed to the development of our noble Alma mater. Let me quote a line from the hymn we learnt in our childhood at our institution. " Let the motto of our school be for us a daily rule."

I wish our Alma - mater every success in the field of Education and other activities in the years to come.

06-12-2002

Mrs.K.Ratnasabapathipillai

# A Message From Mr.A.C. Selvarajah, An Old boy, A Veteran Teacher, Of K.C.C



It is my pleasure and privilege to send greetings and felicitations on the occasion of the 150th Anniversary celebrations of my Alma Mater, Kopay Christian College. I stand in awe looking back at the achievements and accomplishments of Kopay Christian College in the life of the people of Kopay over one and a half century. I wish and pray for the continued sustenance, growth in stature and strength of this great educational institution that has moulded the lives of many sons and daughters of Kopay.

150 years ago, when formal education was not a priority in the life of the people, Christian Missionaries established Kopay Christian College, then known as CMS ENGLISH School.

This was the most important and versatile instrument of social change that was introduced in the village of Kopay. The opportunity for education was opened up not only for men but also for women. Even the idea of education for women was far fetched at that time when the woman's place in society was only in the home. Today we realize the value of the wisdom of our forefathers who accepted this institution and its objectives into our dear village of Kopay.

**08-10-2002** A.C.Selvarajah

# Message from - a Retired veteran teacher of Kopay Christian College



It is indeed a happy privilege for me to send this message of congratulations and greetings to Kopay Christian College for completing 150 years of efficient service to the young generation of Kopay and round about. It began as C.M.S. Boys' School on a very small scale with only a five students, but very soon it began to expand. Due to lack of space of building, the C.M.S. Boys School With the C.M.S. girls Boarding School in the adjoining premises in 1945, and this combination was the birth of Kopay Christian College 150 years age with Mr.G.S.Chellaiah as its first Principal of Miss M.V.Hutchins as Vice - Principal. By the steadfast efforts of all the suceeding Principals, Staff and old boys the College made rapid progress in Education and all extracurricular activities and was very soon up - graded. The present Principal, Mr.Sivakadacham has steered the College during much strain and stress or damages by the recent operations. But his undaunted courage and loyal support of the staff, old boys and friends have helped to restore Christian College to be able to celebrate its 150$^{th}$ Anniversary. As one who has served in the college for 42 years, I am thankful to be able to send my congratulations, greetings and blessings to the Principal, staffand students May the College progress forward for always. Long Live Christian Collage.

12-08-2002

mrs.S.Chellaiah

# Message to the souvenir 150 th Anniversary



It is my pride and privilege to send this congratulatory message to the souvenir to celebrate the 150th Anniversary of the foundation of Kopay Christian College. During its existence, the school has contributed to the development of the Peninsula.

It is a remarkable event to commemorate the 150 th Year of our Alma mater. Many Students who had passed out of the Institution have done yeoman service to the country thereby earned name and fame to their school. All of us are proud of the past and happy about the present. Let us hope and pray for the same in the future too.

On behalf of the Colombo O. S. A, I am glad to extend our congratulations to the energetic principal Mr.N.Sivakadachcham, and his band of dedicated Staff on their untiring service with devotion under trying conditions.

Wishing the celebrations all success and the school several decades of dedicated service.

12-12-2002

V. Ponnambalam.
President.
Kopay Christian College.
O. S. A.
Colombo.

# அதிபரின் பரிசு நாள் உரை - 2002

✣ எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பிரதம விருந்தினர் திரு.வீ.இராசையா அவர்களே!

✣ எமது விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள திரு.எஸ்.தனபாலன் அவர்களே!

✣ திருமதி.து.இராஜரட்ணம் அவர்களே!

✣ கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள திரு.செ.கௌரிகுமார் அவர்களே!

✣ பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே!

150வது வருடத்தை நிறைவு செய்யும் இச்சந்தர்ப்பத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் எமது மாணவச் செல்வங்களின் திறமைகளைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கும் இத்திருநாளில் தங்கள் யாவரையும் வரவேற்பதில் கல்லூரிச்சமூகம் பெருமகிழ்ச்சியடைகிறது. இந்த நாளில் தாங்கள் யாவரும் சமுகமளித்திருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சியளிப்பதுடன் எமது சிறார்களுக்குப் பெரும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுத்து நிற்கிறது.

### எமது பிரதம விருந்தினர் அவர்களே!

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் யாழ்மாவட்டப்பதில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராகவும் விளங்கும் தாங்கள் முன்பு வலயம் **II**ன் கல்விப்பணிப்பாளராக இருந்தபோது எமது கல்லூரிக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்துள்ளீர்கள். தற்போதும் எமது கல்லூரியின் நலனில் அக்கறை கொண்டவர் என்பதை நாம் நன்கு அறிவோம். தாங்கள் எமது கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்தமை எமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. தங்களைப் பெரும் மதிப்புடன் கல்லூரிச் சமூகம் வரவேற்றுக் கொள்கிறது. தங்கள் அரிய நேரத்தில் ஒரு பகுதியை இன்று எம்மத்தியில் செலவிட்டு நல்ல பல கருத்துக்களை வழங்கவும் இசைந்தமைக்கு நாம் பெரிதும் நன்றி கூறக் கடப்பாடுடையோம்.

### எமது சிறப்பு விருந்தினரும் யா/ பரியோவான் கல்லூரி அதிபருமாகிய திரு.எஸ்.தனபாலன் அவர்களே!

யா/ பரியோவான் கல்லூரி அதிபராக விளங்கும் தங்களைப் பெரு மகிழ்சியுடன் எமது கல்லூரிச் சமூகம் வரவேற்றுக் கொள்கிறது. தங்கள் கல்லூரிக்கும் எமது கல்லூரிக்கும் இடையே நீண்டகாலமாக நெருங்கிய தொடர்புள்ளது. எமது இரு கல்லூரிகளும் ஓரே முகாமையாளரின் கீழ் ஆரம்ப காலத்தில் நிர்வகிக்கப்பட்ட கல்லூரிகள் என்பதுடன் எமது கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களான **G.S.**செல்லையா **A.W.**இராஜசேகரம், **E.C.A.**.நவரட்ணராஜா, **E.K.**சண்முகநாதன். திரு.சின்னையா சிவனேசன் ஆகியோர் யா/ பரியோவான் கல்லூரி மாணவர்கள் என்பதுடன் இன்று அதிபராகக் கடமையாற்றும் நானும் தங்களது கல்லூரிப் பழைய மாணவன் என்பதில் பெருமையடைவதுடன் எமது கல்லூரிப் பரிசுநாள் விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள தங்களை மட்டற்ற மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொள்கின்றோம்.

### எமது சிறப்பு விருந்தினரும், யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபருமாகிய திருமதி.T. இராஜரட்ணம் அவர்களே!

யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபராக விளங்கும் தாங்கள் எமது அழைப்பை ஏற்று எமது கல்லூரிப் பரிசுநாள் விழாவிற்கு வருகை தந்துள்ளமை எமது சிறார்களுக்கும் எமக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. எமது கல்லூரி **C.M.S** பெண்கள் பாடசாலையாக இருந்த காலத்தில் இங்கு அதிபர்களாகக் கடமையாற்றிய செல்வி.**M.V.**ஹட்சின்ஸ் தங்கள் கல்லூரியிலிருந்து இங்கு வந்து கடமையாற்றியவர். செல்வி.**M.**வில்லிஸ் என்பவர் இக்கல்லூரியில் கடமையாற்றித் தங்கள் கல்லூரிக்குக் கடமையாற்ற வந்தார். எனவே எமது கல்லூரிக்கும் தங்கள் கல்லூரிக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். தாங்கள் இவ்விழாவிற்கு வருகை தந்தமை எமக்கு

மிகுந்த மகிழ்வைத் தருகிறது. தங்களை வரவேற்பதில் கல்லூரிச் சமூகம் பேருவகை கொள்கிறது.

எமது கௌரவ விருந்தினராகிய திரு.செ.கௌரிகுமார் அவர்களே! தங்களுடைய தந்தையாராகிய அமரர் சி.செல்லத்துரை அவர்கள் நினைவாக எமது கல்லூரி நிதிப்பங்காளராக விளங்கும் தங்களை இவ்விழாவிற்குக் கௌரவ விருந்தினராக அழைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். தாங்களும் தங்கள் குடும்பத்தவரும் எமது கல்லூரியின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டவர்கள். என்பதை நன்கு அறிவோம். தங்கள் தந்தையார் ஞாபகார்த்தமாக வழங்கிய நிதியின் மூலம் பெறப்படும் வட்டிப் பணம் எமது கல்லூரி மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப் பெரிதும் பயன்படுகிறது. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களை வரவேற்பதில் கல்லூரிச் சமூகம் பெருமகிழ்ச்சியடைகிறது.

எமது அன்பார்ந்த பெற்றோரே! பழைய மாணவரே! நலன்விரும்பிகளே! எமது அழைப்பினை ஏற்றுத் தாங்கள் வருகை தந்திருப்பது எம்மை மட்டற்ற மகிழ்ச்சியடைய வைப்பதுடன் எமது பணிகளுக்குப் பெரும் ஊக்கமளிப்பதாகவும் அமைந்துள்ளது. தங்கள் யாவரையும் கல்லூரி அன்புடன் வரவேற்கிறது.

எமது கல்லூரியின் வருடாந்த நிகழ்வான இப்பரிசளிப்பு விழா 150வது ஆண்டில் நடைபெறும் சிறப்பான நிகழ்வாக அமைகின்றது. இவ்விழாவில் பங்கு பெறும் அனைவரிற்கும் மறக்க முடியாத மகிழ்வான விழாவாக அமையும் என நம்புகின்றேன். எமது கல்லூரி இவ்வாண்டில் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்து நிறைவேற்றியுள்ளது. தொடர்ந்தும் எமது கல்லூரி பல முன்னேற்றமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதற்கு என்னுடன் உறுதுணையாகப் பகுதித் தலைவர்கள் திருமதி.ம.கைலைமகான், திரு.சி.சிவலிங்கம் ஆகியோரும் மண்டப இணைப்பாளர்கள் திருமதி.உ.சுரேந்திரகுமார், திரு.செ.தம்பையா ஆகியோரும். மண்டப பொறுப்பாளர்களாக திரு.பே.சா.அரியரட்ணம், திரு.செ.பகீரதன், திரு.ப.கணேசன், திரு.S.ஜெயரத்தினம், திரு.க.நித்தியானந்தன், திரு.வி.லிங்கேஸ்வரன், திரு.P. சிறீஸ்கந்தராஜா, திருமதி.இ.சிவலிங்கம், செல்வி.ம.துளசி, திருமதி.R.குகப்பிரியா ஆகிய முகாமைத்துவக் குழுவினரும் பாட இணைப்பாளர்களாக திரு.யே.அன்ரன்பிறின்ஸ், திருமதி.சா.புவனேஸ்வரன், திருமதி.இ.சிவலிங்கம், திருமதி.ய.சந்திரலிங்கம், திருமதி.R.E.ஜோர்ஜ், திருமதி.ம.சுப்பிரமணியம், திருமதி.க.குலேந்திரன், செல்வி.ம.துளசி, செல்வி.சி.பகீரதி, திருமதி.றோஸ்மேரி ஆகியோரும் தத்தம் பணிகளைச் செவ்வனே ஆற்றி வருதல் பேருதவியாக அமைந்துள்ளது. இவர்கள் நிர்வாகப் பணிகளுக்குப் பெரிதும் உதவுவதால் எனது கடமைகள் இலகுவாக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகளை விசேடமாகக் கவனித்தல் சாத்தியமாகிறது.

## 1. ஆசிரியர் விபரம்

தற்போது எமது ஆசிரியர் குழாமில் மொத்தம் 42பேர் உள்ளனர். இவர்களில் 26 பட்டதாரிகள். கல்விப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பயிற்சி பெற்றவர்கள் 10பேர். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 12பேர். பகுதி நேர ஆங்கிலம் ஒருவர். இக்காலப் பகுதியில் எமது கல்லூரியில் திருமதி.ஞா.சிவேந்திரராஜா, திருமதி.கௌ.சுசீந்திரராஜன், திருமதி.S.வெணான்சியஸ், திரு.கா.திருப்பதி, ஆகியோர் புதிதாக இணைக்கப்பட்டனர்.

மேலும் திரு.M.தேவராஜா, செல்வி.ம.சுப்பிரமணியம், ஆகியோர் தற்காலிக இடமாற்றத்தின் மூலம் எம்முடன் இணைந்து மீண்டும் தமது பாடசாலைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் எமது கல்லூரியுடன் இணைந்து செயலாற்றிய காலங்களில் அவர்கள் செய்த சேவைகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். திரு.பே.இளமுருகன் தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். திரு.லோ.கிரேதாகரன் கோட்டக்கல்வி அலுவலகத்துடன் இணைந்துள்ளார்.

இக்காலப் பகுதியில் எமது பிரதி அதிபர்களாகவிருந்த திருமதி.ச.கனகரத்தினம்., திருமதி.இ.சிவானந்தன் ஆகியோரும் உப அதிபராகக் கடமையாற்றிய திருP.T.ராஜா அவர்களும் ஓய்வு பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர செல்வி.V.T.ரதிவதனி ஆசிரியை பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவாகிச் சென்றுள்ளார். திருமதி.இ.சிவானந்தன் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக மீண்டும் எமது கல்லூரியுடன் இணைந்துள்ளார்.

## 2. காரியாலய உத்தியோகத்தர், ஊழியர் விபரம்

முகாமைத்துவ உதவியாளர் ஒருவர், அலுவலகப் பணியாளர் இருவர், நூலகத் தொழிலாளி ஒருவர், விஞ்ஞானகூட உதவியாளர் இருவர், தோட்டத் தொழிலாளி ஒருவர், காவலாளி ஒருவர் பணியாற்றுகின்றனர். அமையக்காவலாளி திரு.ச.அருந்துரை அலவலகப் பணியாளராக நிரந்தரமாக்கப்பட்டுள்ளார். நிரந்தரக் காவலாளியாக திரு.வ.தர்மரசா கடமையாற்றி வருகின்றார்.

## 3. மாணவர் விபரம்

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்கள் கொண்ட எமது கல்லூரியில் இன்றைய மாணவர் தொகை 945ஆகும்

| | |
|---|---|
| தரம் 6 - 8 | 278 |
| தரம் 9 - 11 | 457 |
| தரம் 12 - 13 | 210 |

## 4. பரீட்சைப் பெறுபேறுகள்

எமது கல்லூரியில் 2001ல் நடைபெற்ற க.பொ.த.சாதாரண பரீட்சையில் 30% மாணவர்கள் உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். 2001ல் நடைபெற்ற க.பொ.த.உயர்தர பரீட்சையில் 62% மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர். கலைப்பிரிவிற்கு 7 மாணவர்களும், மருத்துவத்துறைக்கு ஒருவரும், கணனி விஞ்ஞானப் பிரிவிற்கு ஒருவரும், நுண்கலைப் பிரிவிற்கு 3பேரும் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். 2002 சித்திரையில் நடைபெற்ற உயர்தரபரீட்சையில் 18% மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## 5. திணைக்களப் போட்டிகள், பரிசில்கள் முதலியன

திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தமிழ் மொழித் தினம், ஆங்கில மொழித் தினம் தொடர்பான போட்டிகளில் எமக்குக் கோட்டமட்ட, வலயமட்டத்தில் அதிக இடங்கள் கிடைத்தன. கட்டுரைப் போட்டியில் செல்வன்.செ.தர்மராஜ் வலயமட்டத்தில் 1ம் இடத்தையும் மாவட்டமட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். திருக்குறள் மனனப் போட்டியிலும் இசை, தமிழறிவு வினாவிடைப் போட்டிகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் வெற்றிபெற்றுப் பரிசில்களைப் பெற்றுள்ளனர். அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி வெற்றிபெற்றுப் பரிசில்கள் பெற்றுள்ளனர். சைவபரிபாலன சபையால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் எமது கல்லூரி மாணவி செல்வி.செ.சிவானதி தேசிய மட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். வணிக மட்டப் போட்டிகளிலும், சமூகக் கல்விப் போட்டிகளிலும், கோட்டமட்ட வலயமட்டங்களிலும் எமது மாணவர்கள் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளனர்.

திணைக்களம் நடாத்திய மெய்வன்மைப் போட்டிகளில் எமது கல்லூரி மாணவிகள் செல்வி.ஆ.பாமினி, செல்வி.இ.பதுசா ஆகியோர் கோட்ட, வலய, மாவட்ட மாகாணப் பரிசில்களைப் பெற்றமையைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எமது கல்லூரி மாணவிகள் அஞ்சலோட்டப்போட்டியில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுத் தேசிய மட்டத்தில் விளையாடத் தெரிவு செய்யப்பட்டமையை இச்சந்தர்ப்பத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வித் திணைக்களம் நடாத்திய போட்டிகளில் மட்டுமன்றி வேறும் பல போட்டிகளிலும் எமது மாணவர்கள் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு நடத்திய அன்பு வாரம் கட்டுரை கவிதை போட்டிகளிலும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி நிறுவுனர் மழவராயர் நினைவாக நடாத்திய திருக்குறள் மனனப் போட்டியிலும் எமது கல்லூரி மாணவி செ.சிவானதி 3ம் இடத்தைப் பெற்றுள்ளார். இவ்வாறு எமது மாணவர்கள் பலரும் ஆர்வமுடன் பங்குபற்றிச் சிறப்பாகப் பரிசில்கள் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தமைக்காக அவர்கள் யாவரையும் அவர்களை ஊக்குவித்த ஆசிரியர்களையும் இங்கு உளமாரப் பாராட்டுகின்றேன் இவர்களுடன் செல்வி.யோ.ஜெராலின் தனுசியா, விவியன் வீரசிங்க ஞாபகார்த்த கட்டுரைப் போட்டியில் 1ம் இடத்தையும், அஞ்சல் திணைக்களம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் 3ம் இடத்தையும் பெற்றுள்ளார்.

## 6. மன்றங்களும் செயற்பாடுகளும்.

கல்லூரியில் நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் மன்றங்கள் யாவும் சுறுசுறுப்பாகவும், சிறப்பாகவும் இயங்கி வருகின்றன. தினந்தோறும் ஒவ்வொரு மன்றத்தின் சார்பிலும் காலைப்பிரார்த்தனையைத் தொடர்ந்து மாணவர்கள் கருத்துக்களை வழங்கி

வருதல் மிகவும் பயனுள்ளதொரு செயலாக உள்ளது. மேலும் வகுப்பறைகளில் உள்ள செய்திப் பலகைகளில் ஒவ்வொரு மன்றத்தின் சார்பிலும் அறிவியல் சார்ந்த விடயங்கள் இணைக்கப்படுவதும் பயனுடைய செயலாக அமைகிறது. கிழமை தோறும் ஒவ்வொரு மன்றத்தின் சார்பிலும் மாணவர்கள் வகுப்பு ரீதியாக நிகழ்ச்சிகளை வழங்கித்தம் மத்தியில் அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர். தமிழ்ச்சங்கம், இந்து மன்றம், கணித, விஞ்ஞான மன்றம், உயர்தர மாணவர் மன்றம், ஆங்கில மன்றம், வணிக மன்றம் ஆகியவை தனித்தனியாக வருடாந்த விழாக்களை நடாத்தியுள்ளன.

தமிழ்ச் சங்கத்தினர் 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு எமது கல்லூரி வளவில் அமைக்கப்பட்டிருந்த போதனா வித்தியாசாலையில் ஆசிரியராக இருந்து தமிழ்ப் பணி புரிந்த சி.வை.தாமேதரம்பிள்ளையின் நினைவாக "இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு" என்ற நூலை விழாக் கொண்டாடிய வேளை வெளியிட்டதுடன் மாவட்டத்தில் கட்டுரைப் போட்டி ஒன்றையும் நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர். இத்தகைய சிறந்த பணியினை மேற்கொண்ட தமிழ்ச் சங்கத்தினரைப் பெருநன்றியுடன் பாராட்டுகின்றேன்.

இக்காலப் பகுதியில் "இன்றறக்ட் கழகம்" எமது கல்லூரி மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடனும் க.பொ.த.சாதாரண, க.பொ.த.உயர்தர மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையிலும் பரீட்சைக்கு முன் மீட்டல் வகுப்புக்களை நடாத்தி வருகின்றது. மேலும் சின்னஞ் சூட்டும் வைபவத்தின் போது கையெழுத்துப் பிரதியொன்றையும் வெளியிட்டமை இவர்களின் சிறந்த செயற்பாடுகளின் வெளிப்பாடு எனலாம். கவின் கலை மன்றமும் கல்லூரியில் பல நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது. சமூகக்கல்வி மன்றம், விவசாய மன்றம், மனையியல் மன்றம், புவியியல் மன்றம் ஆகியவை மாணவர்களின் அறிவாற்றலை நன்கு வளர்க்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன. பொதுவாக அனைத்து மன்றங்களும் சிறப்பாக இயங்கி நல்ல முறையில் செயற்பட்டு வருவதற்காக அனைத்து மன்றங்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கல்லூரியில் 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்வியியல் கண்காட்சி ஒன்று சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக நடாத்திய அனைவரையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

## 7. அபிவிருத்திப்பணிகள்

பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது பங்களிப்பைத் தொடர்ந்து செய்து வருகின்றது. உலக வங்கி உதவித் திட்டத்தால் 50 x 25 கட்டடக் கீழ்த்தளம் அமைக்கப்பட்டு 30 x 25 கட்டடப் பகுதியில் கணனிப் பயிற்சித் தொகுதியும் 20 x 35 கட்டடப் பிரிவில் தகவல் தொழில்நுட்பத் தொடர்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. 10 x 25 அடியில் நூலக கட்டிடம் புதிதாக அமைக்கப்படுகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவியுடன் 100 x 16 தற்காலிக கொட்டகை வேயப்பட்டுள்ளது. 20 x 16 அளவில் நிரந்தரக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. இந்து மாமன்ற உதவியால் பிரார்த்தனை மண்டபத்திற்கு பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ மாணவ மன்ற உதவியுடன் 150வது ஆண்டு விழாச்சபையினரால் கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபம் புனரமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினதும் வடக்கு கிழக்கு பாடசாலைப் பழைய மாணவர் சங்க ஒன்றிய நிதியுதவியாலும் கல்லூரியின் நீர்த்தாங்கி புனரமைக்கப்பட்டு பாடசாலை முழுவதற்குமான நீர் விநியோகம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. லண்டன், பிரான்ஸ் பழைய மாணவர் சங்க நிதியில் அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத்திடல் இந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. கோப்பாய் அபிவிருத்திமன்றம், கனடா வழங்கிய நிதியுதவியினால் மூன்று வழி மின்னிணைப்பு கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 8. எமது தேவைகள்

150வது வருடத்தை நிறைவு செய்யும் எமது கல்லூரியில் வகுப்பறைகள் சில தற்காலிக கொட்டகைகளிலேயே நடாத்தப்படுகின்றன. கரையோரச் சுவர்களுமில்லாது காற்று, வெயில் யாவற்றிலும் கஷ்டமான சூழ்நிலையிலேயே மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். போதிய நிதியுதவிகள் இல்லாததால் இக்குறையை நிவர்த்தி செய்ய இயலவில்லை. திணைக்கள உதவியும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியும் பெற்று எமது தேவைகளை ஓரளவாவது நிறைவு செய்ய முயன்று வருகின்றோம். பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் யாவரிடமிருந்தும் இதற்கான உதவிகளை நாம் பெரிதும் வரவேற்கின்றோம்.

இதுவரை எம்முடைய சாதனைகள், எம்மிடம் உள்ளவைகள், இல்லாதவைகள் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிட்டோம். பெற்றோரிடமும் சில கருத்துக்களை எடுத்துக்கூறுதல் இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமாக இருக்கும் என நம்புகின்றோம். தற்போது 6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரை பிரதான பாடங்கள் யாவற்றுக்கும் மாலைநேர வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. மேலும் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள், மொழித்திறன் விருத்தி குறைந்த மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இது தொடர்பாக உங்களுடன் பிள்ளைகள் மூலம் தொடர்பு கொண்டுள்ளோம். எமது ஆசிரியர்களும் உயர்தர வகுப்பு மாணவரும் பழைய மாணவரும் ஊக்கமுடனும் ஆர்வமுடனும் செயற்படுத்திவரும் இத்திட்டத்தால் உச்சப்பயனைப் பெற்றுக் கொள்ள உங்கள் பிள்ளைகளை வீடுகளிலும் ஊக்குவிப்பது உங்கள் கடமை என்பதுடன் அது எமது முயற்சிகளை மேலும் உற்சாகத்துடன் தொடர வைக்கும் என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தவணைக்கொரு முறை இடம்பெறும் பெற்றோர் சந்திப்புக்கள் பயனுள்ளவையாக அமைவதை நீங்கள் அறிவீர்கள். எனினும் இதற்கு மேலதிகமாகவும் உங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் தொடர்பாக நீங்கள் எங்களைச் சந்தித்துக் கலந்துரையாட விரும்பினால் அது வரவேற்கப்படுகிறது. கல்லூரி வாயில் எப்போதும் இத்தகைய நோக்கங்களுக்காக திறந்தே இருக்கும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இறுதிக்கட்டமாக நன்றி தெரிவிக்கும் பணிக்கு வருகின்றேன். இன்று எமது அதிமுக்கிய வைபவமாகிய பரிசு வழங்குதல் தினத்தில் எமது அழைப்பை ஏற்று வருகைதந்து எம்மை மகிழ்வித்தும் நிகழ்ச்சியைச் சிறப்பித்தும் வைத்த எமது பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர் ஆகிய யாவருக்கும் எமது கல்லூரிச் சமூகம் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

கல்லூரியின் செயற்பாடுகள் முன்னேற்றம் யாவற்றுக்கும் என்னுடன் இணைந்து செயற்படும் முகாமைத்துவக் குழுவினர், பாட இணைப்பாளர்கள், மற்றும் ஆசிரியர் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகூற விரும்புகின்றேன். கல்லூரியின் ஆசிரியரல்லாத உத்தியோகத்தர்கள், மாணவ முதல்வர்கள், சாதாரண வழிகாட்டிகள், மற்றும் மக்கள் நலன் காக்கும் படையணியினர், சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் யாவருமே சிறப்பாகப் பணியாற்றுவதையிட்டு எனது மகிழ்ச்சி கலந்த நன்றியை தெரிவித்தும் கொள்கின்றேன். அபிவிருத்திப் பணிகளில் தொண்டு புரியும் மாணவர்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள் உரியன. இச்சந்தர்ப்பத்தில் எம்முடன் பணியாற்றி ஓய்வு பெற்ற எமது முன்னாள் பிரதி அதிபர்கள் திருமதி.ச.கனகரத்தினம், திருமதி.இ.சிவானந்தன் ஆகிய இருவரின் சேவைகளையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது கல்லூரியின் உப அதிபராகக் கடமை புரிந்த திரு. P.T.ராஜா அவர்கள் எனது நிர்வாகப் பணிகளில் பெரிதும் உதவியாக இருந்து சிறப்பாக என்னுடன் இணைந்து பணியாற்றினார். அவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொண்டு அடிப்படையில் எமக்குத் தங்கள் சேவையை வழங்கும் திரு.பரஞ்சோதி, திரு.செல்வச்சந்திரன்(விளையாட்டு), திரு.அரவிந்தன், திரு.லட்சுமிகாந்தன், செல்வி.பொ.கௌரி, சிற்றுண்டிச்சாலைப் பொறுப்பாளர் திருமதி.தயாளினி, தோட்ட உதவியாளர் மகேஸ்வரன் ஆகியோரின் தன்னலமற்ற சேவைகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அதன் கொழும்பு மற்றும் வெளிநாட்டுக் கிளைகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் யாவரும் எமது அபிவிருத்திப் பணிகளுக்கும் மற்றும் சகல செயற்பாடுகளுக்கும் எப்போதும் தயங்காது ஆக்கமும், ஊக்கமும் தந்து எம்முடன் ஒத்துழைத்து ஊக்குவிப்பதற்கு என்றென்றும் பெரு நன்றியுடையோம். விளையாட்டுத் துறையில் பெரிதும் உதவி, பயிற்சிகளையும் வழங்கும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாச்சாரக் கழகத்தினருக்கும் எமது நன்றிகள் என்றும் உரியன.


கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளைப் பல வழிகளிலும் ஊக்குவித்துவரும் எமது கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் கல்லூரியின் மனப்பூர்வமான நன்றியை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

நிறைவாக, எமது அழைப்பினை ஏற்று இங்கு வருகை தந்து எமக்கு உற்சாகமளித்து நிற்கும் பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்து எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

# எங்கள் உப அதிபர்கள்



திருமதி.ம.கைலைமகான்
Sp.Trd.(Science) SLTSI



திரு.சி.சிவலிங்கம்
B.A,Dip in Ed SLTS2I


## 150 ஆவது ஆண்டு நிறைவில் ஓய்வு பெற்ற உப அதிபர்கள்



திருமதி.ச.கனகரத்தினம்
B.A,Dip.in.Ed,SLTSI



திருமதி.இ.சிவானந்தன்
B.Sc,Dip.in.Ed,SLTSI



திரு.பொ.த.இராஜா
Sp.Trd(General) SLPS 2I

# அதிபர்கள் வரிசையில்........

## அமரர் குணரத்தினம் சின்னத்துரை செல்லையா

## Sp.Trd(Eng)

**1.1.1939 – 31.12.1944 C.M.S ஆங்கிலப் பாடசாலை அதிபர்.**

**1.1.1945 – 30.04.1951 கிறிஸ்தவ கல்லூரி அதிபர்.**



சாவகச்சேரி நுணாவிலில் 20.02.1901ல் பிறந்த திரு.கு.சி.செல்லையா அவர்கள், தனது ஆரம்பக் கல்வியை நுணாவிலிலும். இடைநிலைக் கல்வியை யா/ பரியோவான் கல்லூரியிலும் கற்றார். மகரகமவில் ஆங்கிலப்பயிற்சி பெற்ற இவர் யா/ பரியோவான் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 01.01.1939ல் அப்போதிருந்த கோப்பாய் **c.m.s** ஆங்கிலப் பாடசாலையில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அப்போது அவ்வளாகத்தில் இயங்கிய பெண்கள் விடுதிப் பாடசாலையை **c.m.s** ஆங்கிலப் பாடசாலையுடன் இணைத்து, 01.04.45ல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எனப்பெயர்சூட்டி அதன் முதலாவது அதிபரானார். 30.04.51ல் இளைப்பாறும் வரை இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினார்.

அதிபராகக் கடமை புரிந்த காலத்தில் **J.S.C** வகுப்பிலிருந்து, **S.S.C** வகுப்புவரை உயர்த்திப் பாடசாலையை தரம் **II** பாடசாலையாக மாற்றியமைத்தார். ஒழுங்கு, கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்த இவர் சிறந்த ஆங்கிலப்பாட ஆசிரியராகவும் கடமையாற்றினார். தமிழ்மொழி மூலம் **S.S.C** பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் பொருட்டு ஆங்கில வகுப்பை ஆரம்பித்துச் சிறந்த தொண்டாற்றினார்.

இவரின் துணைவி திருமதி.செல்வமலர் செல்லையா அவர்கள் இக்கல்லூரியின் பிரபலம் மிக்க ஆசிரியை ஆவார். இவர் சிறந்த ஆசிரியையாகவும் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து சிறந்த பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரின் சிரேஷ்ட புதல்வன் **CW.** ஆனந்தராஜா இக்கல்லூரியின் பழைய மாணவனாகவும், பின்னர் யா/ பரியோவான் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது உடல்நலக்குறைவு காரணமாக 30.04.1951ல் இளைப்பாறிய அதிபர் **G.S.**செல்லையா அவர்கள் 27.04.1965ல் காலமானார். அவரின் சேவையை நினைவு கூருமுகமாகக் கல்லூரியின் மண்டபம் ஒன்றுக்கு **G.S.**செல்லையா மண்டபம் எனப்பெயர்சூட்டியும் கௌரவித்துள்ளோம்.



# அமரர் அருட்பிரகாசம் வில்சன் இராஜசேகரம் அவர்கள்

## BA.(Lond) Dip.in.Edu.

**(1.5.1951 – 31.7.1957)**

அமரர் **A.w.**இராஜசேகரம் அவர்கள் 26.9.1909ல் மலேசியாவில் பிறந்தார். யா/ பரி.யோவான் கல்லூரியில் தனது கல்வியைக் கற்றுக்கொண்ட இவர் வெளிவாரியாக லண்டன் **B.A** பட்டதாரியானார். 1937ல் பரி.யோவான் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டார். நல்லாசிரியராகவும், கடமையுணர்வு கொண்டவராகவும் திகழ்ந்த இவர் ஆழ்ந்த சமயப்பற்று மிக்கவர். தனது 22வருட ஆசிரிய சேவையின் பின் பரி.யோவான் கல்லூரி அதிபரை முகாமையாளராகக் கொண்ட அதன் கிளைப் பாடசாலையான கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராக 1.5.1951ல் நியமிக்கப்பட்டார். இங்கிருந்து 1957ல் நிர்வாக விடயங்களில் பயிற்சி பெற லண்டன் சென்ற இவர் திரும்பி வந்து மீண்டும் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்றார்.

1.8.57 தொடக்கம் பரி.யோவான் கல்லூரியின் உப அதிபராக நியமிக்கப்பட்டார். 1959 வைகாசியில் பரி.யோவான் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுச் சேவையிலிருந்து இளைப்பாறிய பின் 29.8.69ல் அமரத்துவமானார்.

தனது சேவைக்காலத்தில் கல்லூரியின் அபிவிருத்திக்காக நிதி சேகரிப்புக்களை மேற்கொண்டதுடன் மனையியல் கூடத்தையும் அமைத்துப் பாடசாலைக் கட்டிடங்களின் திருத்த வேலைகளையும் மேற்கொண்டார்.

இவரது காலத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன் உடற்கல்வி, சித்திரம், உயிரியல் ஆகிய பாடங்களில் விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கல்லூரியில் நியமிக்கப்பட்டனர். விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் முகமாகக் கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டு இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இரக்க சிந்தையும், எல்லோரிடமும் அன்பாகப் பழகும் இயல்பும் கொண்ட அவரது சேவையை நினைவு கூர்ந்து, பாடசாலையின் 100' x 25' மண்டபத்திற்கு அவரின் பெயரைச் சூட்டிக் கல்லூரிச் சமூகம் அன்னாரின் சேவையை நினைவு கூருகின்றது.

# அமரர் திரு. டேவிட் ஜெயசிங்கம் தம்பாப்பிள்ளை

## Sp.Trd.(Eng)

## (பதிலதிபர் 1.8.1957 - 31.8.1957)



திரு.**D.J** தம்பாப்பிள்ளை 7.7.1899இல் இருபாலையில் பிறந்தார். யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இளமையில் கல்வி பயின்று தமது ஆற்றல்களையும் திறமைகளையும் நன்கு வளர்த்துக் கொண்டார். உதவி ஆசிரியராகவும், உபஅதிபராகவும், ஒரு மாத காலம் பதில் அதிபராகவும் 1935 -1959 வரை ஏறத்தாழ 25 ஆண்டுகளாக இக்கல்லூரியில் பணியாற்றிப் பல்வேறு வகையில் அதன் மேம்பாட்டுக்கு உதவினார். கிரிக்கெட், உதைபந்து, ரெனிஸ் போன்ற விளையாட்டுக்களில் திறமைமிக்க இவர் மாணவரை அவற்றில் பெரிதும் ஊக்குவித்து வந்தார். 1959ல் ஓய்வு பெற்ற இவர் 13.12.1980ல் காலமானார். அமைதியாக வாழ்ந்து விசுவாசமான கிறிஸ்தவனாகத் தனது சேவையை அர்ப்பணிப்புடன் செய்து சிறந்த ஆசிரியராக, சிறந்த நிர்வாகியாக கடமையாற்றியவர். திரு.**A.W.**ராஜசேகரம் வெளிநாடு சென்ற வேளையிலிருந்து திரு.**E.C.A.**நவரட்ணராஜா பாடசாலையைப் பொறுப்பேற்கும் வரை பாடசாலையைச் சிறந்தமுறையில் நிர்வகித்து உதவினார். கல்லூரி அவரை நன்றியுடன் நினைவு கூருகின்றது.



# அமரர் E.C.A நவரட்ணராஜா
# B.A Dip in Edu
# (1.9.1957 - 27.12.1963)

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.**E.C.A**.நவரட்ணராஜா ஆரம்பக்கல்வியை கோப்பாய் **C.M.S** ஆங்கிலப் பாடசாலையிலும் உயர் கல்வியை யா/ பரி.யோவான் கல்லூரியிலும் பெற்றார். பட்டப்படிப்பை இலண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பயின்று ஆங்கிலத்தில் சிறப்புப் பட்டதாரியானார்.

14.1.1929இல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பின் 1939இல் யா/ பரியோவான் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றார். 1948இல் நுகேகொட பரி.யோசப் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டார். ஆரம்பப் பாடசாலையாக இருந்த அப்பாடசாலையை உயர்தரப் பாடசாலையாக உயர்த்திய பெருமை இவரையே சாரும்.

01-09-1957இல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அதிபரானார் இவரது வருகையுடன் கல்லூரியின் பொற்காலமும் ஆரம்பமாயிற்று.

இவர் காலத்திலேயே க.பொ.த.உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தொடங்கியமையும் இவர் காலத்திலேயேயாகும். ஆகவே எமது கல்லூரியைச் சிறந்த ஒரு கல்வி நிறுவனமாக ஆக்கிய பெருமை இவரையே சாரும்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபோது பாடசாலைக்கும் **C.M.S** நிர்வாகத்துக்கும் இடையில் உருவான பாகப்பிரிவு தொடர்பான பிரச்சினைகளைச் சாதுரியமாகக் கையாண்டு பாடசாலைக்கு கூடியளவு வளங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

கல்லூரிக்கு வெளியில் இருந்த விளையாட்டு மைதானத்தைக் கல்லூரி வளவில் அமைக்க முயற்சித்தார். அவ்வேளை பலரின் எதிர்ப்புக்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆனால் துணிவுடன் பல மரங்களை அகற்றியும், இரு கிணறுகளை மூடியும், கல்லூரி வளவில் விளையாட்டு மைதானத்தை அமைத்தார். இன்று சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டுள்ள கல்லூரி விளையாட்டு மைதானம் "**E.C.A** நவரட்ணராஜா விளையாட்டு மைதானம்" என அழைக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவர் காலத்திலேயே எமது கல்லூரியின் ஹொக்கி, வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய அணிகள் அகில இலங்கை போட்டிகளில் பங்குபற்றிக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தன என்பது குறிப்பிடத்தக்கது. எமது கல்லூரியின் ஹட்சின்ஸ் மண்டபம், பாக்கியம் ஞாபகார்த்த ஆசிரியர் அறை ஆகியவை இவரின் காலத்தில் கட்டப்பட்டன. கல்வி, விளையாட்டு, பௌதிகவள அபிவிருத்தி என்பவற்றில் இவரின் காலம் எமது கல்லூரியின் பொற்காலமாகும்.

எமது கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய காலத்திலேயே 27-12-1963இல் அமரரானார். அமரர் **E.C.A** நவரட்ணராஜா அவர்களின் நினைவாக பழைய மாணவர்கள் பெற்றோர்களால் மாடிக்கட்டிடத்தொகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவரின் இறந்த தினமாகிய மார்கழி 27 அமரத்துவ அதிபர்கள் தினமாகப் பழைய மாணவர் சங்கத்தால் கொண்டாடப்படுகின்றது.

கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற முத்திரை வெளியீட்டு விழாவும் அமரரின் நினைவு தினத்திலேயே நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. அவரின் சேவையை எமது கல்லூரிச் சமூகம் என்றும் நினைவு கூரும்.



# அமரர் இளையதம்பி கணபதிப்பிள்ளை சண்முகநாதன்
## B.A.B.Sc (Lon) Dip.in- Edu SLES,
## (28.12.1963 - 31.05.1971 )

திரு.இ.க.சண்முகநாதன் அவர்கள் நீர்வேலியில் 14.12.1924ல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், உயர்கல்வியை யா/ பரியோவான் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

1949ல் யா/ பரியோவான் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அதன்பின் யா/ மத்திய கல்லூரி, யா/ சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றிய இவர், 1961ல் யாழ் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்து ஆசிரியராகவும், உதவி அதிபராகவும் கடமையாற்றி வந்த வேளையில் 29.12.1963இல் அப்போது அதிபராகவிருந்த திரு.**E.C.A** நவரட்ணராஜா அவர்களின் திடீர் மறைவை அடுத்துப் பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சிறந்த சமூக சேவையாளராகவும், கூட்டுறவாளராகவும் இருந்த திரு.இ.க.சண்முகநாதன் அவர்கள் மாணவர் கூட்டுறவுச் சங்கம், ஆசிரியர் சிக்கன கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றை அமைத்த முன்னோடியாவார்.

தனது காலத்தில் ஆசிரியரின் ஓய்வறையாகிய பாக்கியம் வில்லியம்ஸ் மண்டபத்தில் இரண்டு மலசலகூட வசதிகள் செய்தும் அக்கட்டிடத்துக்குத் தெற்குப் பக்கமாக ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட ஒரு கட்டிடத் தொகுதியை அமைத்தும், பாடசாலை பௌதீக வளக் குறைபாட்டை நீக்க நடவடிக்கையெடுத்தார். அவரால் அமைக்கப்பட்ட கட்டிடத்தொகுதி இன்று “சண்முகநாதன் மண்டபம்” என அழைக்கப்படுகின்றது.

அதிபராக நிர்வாகப் பணியாற்றியதுடன் சிறந்த வரலாற்றுப்பாட ஆசிரியராகவும் கடமையாற்றி க.பொ.த.உயர்தர வகுப்பில் வராலாற்றுப் பாடத்தை கற்ற அனைத்து மாணவர்களையும் சித்தி பெறச்செய்து பல்கலைக்கழக அனுமதி பெறக்காரணமாக இருந்தார். 1971இல் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் முதலாந்தரத்தில் பதவி உயர்வு பெற்று யா/ மத்திய கல்லூரியில் அதிபராகவும். 1980ல் கல்வி அமைச்சினால் தோட்டப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். பின்னர் தமிழ் பாடசாலைகளுக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பளராகக் கடமையாற்றி 1983ல் சேவையிலிருந்து இளைப்பாறி நைஜீரியா கல்வி அமைச்சில் உயர் பதவி வகித்து வந்த காலத்தில் 04-12-1985ல் அமரரானார். அவரது சேவையை நினைவு கூரும் முகமாகக் கல்லூரியில் அமைக்கப்பட்ட இல்லங்களில் ஒன்றிற்குச் சண்முகநாதன் இல்லம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

திரு.இ.க.சண்முகநாதன் அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தவரால் பழைய மாணவர் சங்கக் கணக்கில் 30,000 ரூபாவை வங்கியில் நிரந்தர வைப்பிலிட்டு அதன் வட்டிப் பணத்தில் வருடாந்த பரிசுத் தினத்தில் பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர். ஆண்டுதோறும் நடைபெறும் அமரத்துவ அதிபர் தினத்தில் மரதன் ஓட்டப் போட்டிக்காக ஒரு தங்கப்பவுண் பரிசாகவும் வழங்கி உதவி வருகின்றனர்.

திரு.இ.க.சண்முகநாதன் அவர்களின் துணைவியார் திருமதி.ச.செல்வராணி அவர்கள் இக்கல்லூரியின் பழைய மாணவியும், லண்டன் பழைய மாணவர் சங்கக் கிளையின் தலைவியாகவும் இருந்து எமது கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகின்றார். அவர்களின் புதல்வர்களான சண்முகேந்திரன், செல்வேந்திரன், சிவேந்திரன் ஆகியோர் இக்கல்லூரியின் பழைய மாணவர்களாவர். இவர்கள் தற்பொழுது லண்டனில் வாழ்ந்து வருகின்றனர்.



# அமரர் முருகுப்பிள்ளை கார்த்திகேசன் B.A.
# (01.06.1971 – 31.12.1971)

அமரர் மு.கார்த்திகேசன் 25.06.1919இல் மலாயாவில் பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை மலேசியா "தைப்பிங்" ஆங்கிலக் கல்லூரியிலும் கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை தொடர்ந்து ஆங்கிலத்தில் கலைப்பட்டதாரி ஆனார்.

1946 -1970வரை யா/ இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1971 தை தொடக்கம் வைகாசிவரை அக்கல்லூரியின் பதில் அதிபராகவும் கடமையாற்றினார்.

1-6-1971 கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அதிபராக நியமிக்கப்பட்டார். பின்பு 01-01-1972ல் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றம் பெற்றுச்சென்றார். தொடர்ந்து அப்பாடசாலையில் அதிபராகவும் கடமையாற்றி 25.07.1977ல் ஓய்வு பெற்றார்.

10.09.1977ல் அமரரானார். அதிபர் பதவியைத் தன்னுடைய அன்பினாலும் மனித நேயத்தினாலும் பொருத்தமான அறிவுரைகளாலும் அழகுபடுத்தினார். நேர்மையுள்ளம் படைத்த ஒரு சமதர்மவாதியான அன்னார் மாணவர்களை அன்பாலும், அறிவுரை கூறுவதன் மூலமும் திருத்த முற்பட்டவர். அந்நாள் வரை நடைமுறைபடுத்திய கட்டுப்பாடுகளை தளர்த்திப் புதுவழி காட்டியவர். மாணவர்களை அடிக்காமல் அன்பால் அவர்கள் செய்யும் தவறுகளை உணரப்பண்ணித் திருத்த முற்பட்டவர்.

ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இன்றி அனைவரையும் சமமாக மதித்தவர். ஆசிரியர்கள், ஊழியர்கள் என்ற வேறுபாடில்லாதவர். தான் முதல்நாள் அதிபராகக் கடமையேற்றபோது, அனைவரிடமும் அவர்கள் பணிபுரியும் இடங்களுக்குச் சென்று தன்னை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு அறிமுகமானவர். யார் அவரின் அலுவலகத்திற்குச் சென்றாலும் தனக்கு முன்னாலிருக்கும் கதிரையில் அவர்களை அமரச் சொல்லித்தான் உரையாடுவார்.

கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியபோது 'நவரத்தினராஜா நினைவுமண்டபம்' கட்டட வேலைகளுக்கான நிதி சேகரிப்புக்கு பல வழிகளிலும் ஊக்கமளித்தார். இவரின் ஞாபகார்த்தமாக எமது கல்லூரியின் கட்டடமொன்று அவரின் பெயரைத் தாங்கி நிற்கின்றது.

# அமரர் திரு. சுப்பையா சிவசுப்பிரமணியம் B.Sc, Dip. in. Ed,SLEAS
## (01.01.1972 - 11.07.1973)



அளவெட்டியில் 20-11-1925இல் பிறந்த திரு.சு.சிவசுப்பிரமணியம் தனது ஆரம்பக்கல்வியை அருணாசலம் வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை அளவெட்டி ஆங்கிலப் பாடசாலையிலும், உயர்கல்வியை, யா/ இந்துக் கல்லூரியிலும் பெற்றார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர் 1947இல் அளவெட்டி ஆங்கிலப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையேற்றார். ஆங்கிலப்பாடசாலை பின்பு அருணோதயாக் கல்லூரியாக மாற்றம் அடைந்த காலத்தில் 1952இல் அக்கல்லூரியின் அதிபரானார். 1969இல் முதலாம்தர அதிபராகப் பதவி உயர்வு பெற்று யா/ சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபரானார். பின்பு இடமாற்றம் பெற்று 1/1/72இல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபரானார். தொடர்ந்து 11/7/73வரை கடமையாற்றி பின்னர் யா/ மகாஜனாக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி 1976ம் ஆண்டில் கல்வியதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றார். யாழ்ப்பாணம் முல்லைத்தீவு முதலிய மாவட்டங்களில் கடமை புரிந்தார். முல்லைத்தீவில் கடமையில் இருந்தபோது 7.2.84 அன்று காலமானார். எளிமையும், பணிவும், அன்பாக யாருடனும் பழகும் சுபாவமும் அவரை யாவருக்கும் ஒரு முன்மாதிரியாகக் கருத வைத்தமை குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறந்த புலமை வாய்ந்தவர். ஆழ்ந்த சமயப் பற்றுள்ள இவர் சைவப் பிள்ளைகளின் செயற்பாட்டிற்கு அதிக ஊக்கமும், உற்சாகமும் வழங்கியவர். எமது கல்லூரியில் குறுகிய காலமே கடமையாற்றியபோதும் அவரின் சேவையை மதித்து எமது கல்லூரியில் அமைக்கப்பட்டு வருகின்ற கணணிப்பயிற்சி நிலையம், ஓடியோ, வீடியோ அறை கொண்ட கட்டடத் தொகுதிக்கு அவரின் பெயரைச் சூட்டிக் கௌரவித்து அன்னாரை நினைவு கூருகின்றோம்.

# திரு.J.A செல்லையா (செல்வம்) B.A.Dip.in.Edu. (பதிலதிபர் 12.7.1973 - 31.8.1973)



திரு **J.A** செல்லையா 1922ஆம் ஆண்டு இருபாலையில் பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை இருபாலை தமிழ் ஆரம்பப் பாடசாலையில் பயின்றார். இடைநிலைக் கல்வியைக் கோப்பாய் **c.m.s** ஆங்கிலப் பாடசாலையிலும், உயர் கல்வியை யா/ பரி.யோவான் கல்லூரியிலும் கற்றார்.

சென்னை கிறிஸ்தவ கல்லூரியின் பட்டதாரியான இவர் 1930இல் ஆங்கில ஆசிரியராகக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு நியமனம் பெற்றார். 2.5.1970இல் அதிபர் தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டுப் பாடசாலையின் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார்.

1976இல் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற இவர் பின்பு செங்குந்தா இந்துக்கல்லூரியிலும் கடமையாற்றி 1980ல் ஓய்வு பெற்றார்.

ஏறத்தாழ 25வருடங்கள் எமது கல்லூரியில் பணியாற்றிய இவர் பல சந்தர்ப்பங்களில் பதில் அதிபராகக் கடமை புரிந்துள்ளார். ஆங்கிலம், குடியியல், வரலாறு, ஆகிய பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்தார். நூலகப் பொறுப்பாசிரியராகவும், இல்லங்களுக்குப் பொறுப்பாசிரியராகவும் இருந்து சிறந்த சேவையாற்றியுள்ளார். தற்போது நியூசிலாந்தில் மகிழ்வுடன் வாழ்கின்றார்.

# திரு. சேனாதிராஜா கந்தசாமி B.Sc, Dip. in. Edu
# (1.9.1973 - 26.12.1974)



கோப்பாய் மத்தியில் 1.2.1928ல் பிறந்த திரு.சே.கந்தசாமி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவகல்லூரியிலும், உயர்தரக் கல்வியை யா/ மத்திய கல்லூரியிலும் கற்று வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் வெளிவாரி மாணவனாக விஞ்ஞானப் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

விஞ்ஞானப் பட்டதாரியாகப் பட்டம் பெற்று வெளியேறிய இவர் 1951ல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து 1972ல் அதிபராக நியமனம் பெற்று உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் கடமை ஏற்றுக்கொண்டார். அங்கிருந்து கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம்பெற்றுப்பின் 1.9.73ல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

தான் கல்வி கற்ற பாடசாலையில் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கோடு பாடசாலையில் பௌதீக வளத்தை அதிகரிக்கும் நோக்குடன் கட்டிடத்தொகுதி அமைத்தல், பாடசாலை நிர்வாகக்கட்டிடத்திற்கு இருபக்கமும் ஆண்கள், பெண்களுக்கு வேறு வேறாக விளையாட்டுத்திடல் அமைத்தல் போன்ற திட்டங்களை நிறைவேற்ற எண்ணினார்.

ஆனால் செல்லையா மண்டபத்தையும், நவரட்ணராஜா மண்டப கீழ்மாடி வேலைகளையும் மட்டுமே அவரால் செய்யக்கூடியதாக இருந்தது. இளகிய மன இயல்புடைய இவர் ஆசிரியர் மாணவர்களுடன் அன்புரகப் பழகும் இயல்புடையவராக விளங்கினார். இந்த இயல்பு தனது நிர்வாகத்திற்குப் பொருத்தமில்லாமல் இருப்பதைக் கண்டு 26-12-1974இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சியரா லியோன் (Sierra Leone) நாட்டில் பாடசாலை ஒன்றில் 3வருட ஒப்பந்தத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. 75இல் அப்பாடசாலையிலும் 1977இல் நைஜீரியா பாடசாலையிலும் பணிபுரிந்தார். 1988இல் அங்கு குறித்த சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். தற்பொழுது ஐக்கிய ராச்சியத்தில் தனது ஓய்வுகால வாழ்க்கையைக் குடும்பத்தவர்களுடன் இனிதாகக் கழித்து வருகின்றனர். இவர் பழைய மாணவராக, அதிபராக பாடசாலைக்கு வழங்கிய சேவைகள் இன்றும் பாடசாலைச் சமூகத்தால் போற்றப்படுகின்றது.

# திரு. சின்னையா. சிவநேசன் B.Sc. Dip-in-Edu, SLEAS
# (3.1.1975 - 6.10.1980)



திரு.சி.சிவநேசன் அவர்கள் யாழ் கொழும்புத்துறை 1-5-1939இல் பிறந்தார். ஆரம்பக்கல்வியை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் இடைநிலை மற்றும் உயர் கல்வியை யா/ சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் பெற்றார். தனது பட்டப்படிப்பை சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலும் மேற்கொண்டு விஞ்ஞானப் பட்டதாரி ஆனார்.

1961இல் கொழும்பு அன்டேசன் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1962இல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராகச் சேர்ந்தார். 1967இல் உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாட நூல்களின் ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று பணியாற்றினார்.

1973இல் யா/ வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் அதிபரானார். 3-1-1975இல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அதிபராக நியமிக்கப்பட்டார்.

கல்லூரியில் தற்போதுள்ள நவரத்தினராஜா மண்டபத்தின் முடிக்கப்படாதிருந்த மேல்மாடி வேலைகளைப் பூரணப்படுத்தினார். கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவை விமரிசையாகக் கொண்டாடச் செய்ததுடன், 125ம் ஆண்டு நினைவு மண்டபத்தை அரச நிதியுடன் கலை நிகழ்ச்சி நடாத்தியும் பெற்றோர்களிடம் நிதி திரட்டியும் அமைத்தார்.

சண்முகநாதன் மண்டபத்துடன் மேலும் இரண்டு வகுப்பறைகள் அமைக்கும் பணியின் ஆரம்ப வேலைகள் இவர் காலத்திலேயே தொடக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த நாடக எழுத்தாளராகிய இவர் "யார் அடித்தார்"? "அலைகள் ஒய்வதில்லை", "ஒன்று பட்டால்" ஆகிய புகழ் பெற்ற நாடகங்களை எழுதினார். "யார் அடித்தார்" தாளலய நாடகம் இங்கு கலைவிழாவில் அரங்கேற்றப்பட்டது.

நீண்ட காலத்தின் பின் 1975, 1976களில் கல்லூரிச் சஞ்சிகையை "அறிவொளி" என்ற பெயரில் வெளியிட்டார். சிறந்த நிர்வாகியாக இருந்த இவர் கல்லூரியைக் கட்டுக்கோப்புடன் வழி நடத்தினார்.

நைஜீரியா கல்வி அமைச்சில் விரிவுரையாளராக நியமனம் பெற்றமையால் தமது அதிபர் சேவையிலிருந்து இளைப்பாறினார் 1986இல் கனடா சென்று சிறந்த கல்வியாளராகவும் சமூக, சமயத் தொண்டராகவும் விளங்குகின்றார். தற்போது கனடாவில் தனது குடும்பத்தினருடன் இனிதே வாழ்ந்து வருகின்றார்.

# அமரர் செல்லத்துரை செல்வரத்தினம் B.A. Dip in Ed.
# (7.10.1980 - 27.10.1983)



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் 28.10.1923இல் பிறந்த திரு.செ.செல்வரத்தினம் தனது ஆரம்பக்கல்வியை யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியில் கற்றார். இடைநிலை, உயர்நிலைக் கல்வியை மவுண்ட்லவேனியா புனித தோமயர் கல்லூரியில் கற்று கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பயின்று கலைப்பட்டதாரியானார்.

1946ல் யா/ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் பளை மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகவும் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் பதில் அதிபராகவும் கடமையாற்றினார். பின் 20.01.1968 தொடக்கம் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். தொடர்ந்து இணைப்பிரதி அதிபர், பிரதி அதிபராகவும் 06.10.1980 - 27-10-1983வரை அதிபராகவும் சிறப்பான பல பணிபுரிந்து இளைப்பாறினார்.

தனது கல்லூரியின் ஆசிரிய வாழ்க்கையில் சிறந்த பொருளியல், அரசியல் பாட ஆசிரியராகக் கடமையாற்றிப் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் புகக் காரணமாக இருந்தவர்.

முறைசாராப் பிரிவு மாணவர்களுக்காக நிரந்தரக்கட்டடம் ஒன்றின் தேவையை வலியுறுத்தி நிரந்தரக் [illegible] ஒன்று எமது பாடசாலையில் அமையக் காரணமாக இருந்தவர். அன்னாரின் காலத்தில் அத்திவாரம் இடப்பட்டுக் கட்டி எழுப்பப்பட்ட இக்கட்டடம் இன்றும் முறைசாராப் பிரிவு வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக உள்ளது.

கல்வி உபகரணங்கள் இன்றிக் கல்வி கற்கக் கஷ்டப்படும் மாணவர்களுக்கு உதவுவதை அவர் தனது பணியாகக் கொண்டிருந்தார். கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவராக இருந்தபோது அவ்வமைப்பின்னூடாக இவ்வகை மாணவர்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தார்.

இளைப்பாறிய பின் தான் உண்டு. தன் குடும்பம் உண்டு என்றில்லாமல் பாடசாலை வளர்ச்சியே தனது நினைவாகக் கொண்டு, கொழும்பு பழைய மாணவர் சங்க உப போஷகராகப் பணியாற்றி, அமரர் ஈ.கே.சண்முகநாதன் புலமைப் பரிசில் திட்டம் அமைக்கக் காரணமாக இருந்து இன்று எமது கல்லூரிப் பழைய மாணவர்கள் நால்வர் இப்புலமைப் பரிசில் பெற்றுப் பல்கலைக்கழக கல்வியை தொடர்வது அன்னாரின் வழிகாட்டலினாலாகும்.

எமது கல்லூரி என்றும் அன்னாரை நினைவு கூரும். அவர் நாமம் அவர் அமைத்த முறைசாராப்பிரிவு கட்டடத்திற்கு சூட்டப்பட்டுள்ளது. செ.செல்வரத்தினம் நினைவாக அவரின் துணைவியாரும் எமது கல்லூரிப் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமாகிய திருமதி.சிவபாக்கியம் அவர்கள் பல்கலைக்கழகம் புகும் மாணவரை ஊக்குவிக்கும் முகமாக வருடாந்தம் இரண்டு மாணவர்களுக்கு தலா 2500/= ரூபா வீதம் வழங்கி வருகின்றார். அமரர் அவர்களின் சேவையை எமது கல்லூரிச் சமூகம் என்றும் நினைவு கூரும்.

# திருமதி.பராங்தி அருள்ராஜா B.A.Dip in Edu
## (பதில் அதிபர் 28.10.1983 – 23.03.1984)



திருமதி ப.அருள்ராஜா அவர்கள் 23-03-1930இல் கொழும்பு வெள்ளவத்தையில் பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை வெள்ளவத்தை மெதடிஸ்ற் கோலிச் பாடசாலை, ஸ்ரான்லி கல்லூரி பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் பாடசாலை ஆகியவற்றிலும் இடைநிலை உயர்நிலை கல்வியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் கற்றார்.

S.S.C பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமையால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் புலமைப்பரிசில் பெற்று அங்கு கலைப்பட்டதாரியானார்.

தமது ஆசிரியத் தொழிலை திருகோணமலை மெதடிஸ்ற் பெண்கள் ஆங்கிலப் பாடசாலையில் ஆரம்பித்துப் பின் மாத்தளை பப்ரிஸ்ற் மிஷன் பாடசாலையில் கடமையாற்றி 1-5-1963ல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

எமது கல்லூரியில் 10-07-1980 தொடக்கம் பிரதி அதிபராகவும் திரு.செ.செல்வரத்தினம் அதிபர் இளைப்பாறியபோது 28-10-1983 - 21-03-1984வரை பதில் அதிபராகவும் கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் திரு.செ.செல்வரத்தினம் அதிபரால் ஆரம்பிக்கப்பட்ட முறைசாராக் கட்டடத் தொகுதியைப் பூரணப்படுத்தி உதவினார். இவர் 22-03-1990இல் தமது சேவையில் இருந்து இளைப்பாறினார். தமது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றார்.



# திரு.பூதத்தம்பி கந்தப்பு இராசரத்தினம்
# B.A. Dip-in-Edu-SLEAS
# (21.3.1984 – 7.1.1991)

மலாயாவில் 07-01-1931 இல் பிறந்து, யா/ கோப்பாய் வடக்கில் வாழ்ந்து தனது ஆரம்பக்கல்வியை (3ம் தரம் வரை) யா/ கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கற்று 1950 Senior School Certificate பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று, சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டதாரியானார். 1956-1974வரை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக, உபஅதிபராக, பதில் அதிபராகக் கடமையாற்றினார். 1974-1975 ஆம் ஆண்டுகளில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டார். 1976ல் (Grade I special post) (முதலாம் தரம் விசேட பதவி பெற்றார். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் உப அதிபராகக் கடமையாற்றினார். பின்பு வகுப்பேற்றம் பெற்று ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவையில் (SLEAS) சேர்க்கப்பட்டார். 1977-1984 வரை அத்தியார் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார். 21-03-1984ல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அதிபராகப் பெற்றோர், பழைய மாணவர் வேண்டுகோளுக்கு அமைய நியமிக்கப்பட்டார். 16-10-1985 தொடக்கம் அதிபர் கடமைக்கு மேலதிகமாகக் கோப்பாய் கொத்தணி அதிபராகக் கடமையாற்றினார்.

இவர் மாணவராக இருந்தபோது கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவராக இருந்துள்ளார். மெய்வல்லுனர் போட்டியில் சிரேஷ்ட வீரனாகத் தகைமை பெற்றார். சாரணியம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றில் அக்கறையுடன் பங்கேற்றார்.

அவர் அதிபராக இருந்த காலத்தில் மாணவர்கள் தொகை அதிகரித்தது. க.பொ.த (உ.த) வகுப்பில் வணிகத் துறையை ஆரம்பித்து வைத்தார். முறைசாராக்கல்வி (School Leaver's Programme) பிரிவில் தட்டச்சு, ஒட்டு வேலை (welding) மின்னிணைப்பு, தையற்கலை ஆகிய துறைகளை ஆரம்பித்து வைத்தார்.

"110 x 25" மாடிக்கட்டிடம், நீர்த்தாங்கி ஆகியவற்றிற்கு அத்திவாரம் இடப்பட்டு, கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் இராணுவ நடவடிக்கை காரணமாக இவ்வேலைகள் தடைப்பட்டமையால் பூர்த்தி செய்யப்படவில்லை. 06-01-1991இல் இளைப்பாறினார். அதிபராக இருந்தகாலத்தில் வடமாகாண அதிபர் சங்கச் செயலாளராக பல வருடங்கள் கடமை ஆற்றினார்.

கோப்பாய் மக்களின் ஆதரவைப்பெற்று பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வந்தார். கோப்பாய் கிராம சபைத்தலைவராக இருந்த காலத்தில் வீதிகள் அமைத்தல், சனசமூகநிலையங்களை விருத்தி செய்தல், சுகாதார வசதிகளை ஏற்படுத்தல் ஆகியவற்றோடு மின்சாரத்தைப் பெறுவதற்குக் காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் வன்னியசிங்கம் அவர்களின் உதவியுடன், காலம் சென்ற மாண்புமிகு பிரதம மந்திரி பண்டார நாயக்காவைப் பேட்டி கண்டு, மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளைச்செய்து முடித்தார். பின்பு அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கியபடியால் இவர் 16-10-1962ல் கிராம சபைத்தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார். கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் விருத்திக்கு உழைத்தார். கோப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தின் தலைவராக பல ஆண்டுகள் கடமை ஆற்றினார். விளையாட்டுக் கழகத்தை ஊக்குவித்தார். நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் நெறியாளராகவும், உப தலைவராகவும், தலைவராகவும் பணிபுரிந்தார். கோப்பாய் வடக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளராகவும் பணிபுரிந்தார்.


இவரது பாரியார் திருமதி.சரோஜினிதேவியின் ஆதரவு நிறைவாகக் கிடைத்தமையால் நற்சேவை புரியக்கூடியதாக அமைந்தது. இவருக்கு நான்கு பிள்ளைகள். கலாநிதி இ.பிரேம்ராஜ் Ph.D(Australia), திரு.இ.உதயராஜ் B.Sc Engineer (UK), திருமதி.சசிக்கலா சிறிதரன்(UK), திருமதி.மேகலா திருநாவுக்கரசு (UK)

இவர் தனது லீவு நேரங்களைப் பயன்படுத்திச் சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதினார். இவை மனித உள்ளத்தின் உணர்வுகளையும் பல்வேறு அம்சங்களையும் தழுவியிருந்தன. எமது கல்லூரியின் உபஅதிபராகக் கடமையாற்றிய இளைப்பாறிய கச்சின்ஸ் அம்மையாரைக் கதாபாத்திரமாக வைத்து "தெய்வம் யார்" என்ற சிறுகதையை எழுதி அம்மையாரின் பாராட்டைப் பெற்றார்.(1984).

ஒரு மனிதனது நலம் சமூக நலனை வளர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதற்கு அமைய அருமையாக உழைத்ததால் பலரின் பாராட்டுக்களையும் பெற்றார் என்று கூறினால் அது மிகையாகாது.

## திரு. தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி B.A, Dip-in-Ed M.phill (S.L.P.S.I)

## (8.1.1991 – 27.2.1996)



திரு.த.முத்துக்குமாரசாமி அவர்கள் 21.02.1949ல் கைதடியில் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியைக் கைதடி C.M.S ஆங்கில பாடசாலையிலும் கற்றார். உயர் கல்வியைக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் 1968 - 1970வரை கற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். 1974ல் பட்டதாரியானார். 1976ல் தி/ஆலங்கேணி ம.வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவியேற்ற இவர் தொடர்ந்து தி/திருகோணமலை மேற்கு தமிழ் மகாவித்தியாலயத்திலும், யா/ நாவற்குழி மகாவித்தியாலயத்திலும் பணியாற்றினார். 1986 தொடக்கம் யா/ நாவற்குழி மகா வித்தியாலய பதில் அதிபராகவும், அதிபராகவும் இலங்கை அதிபர் சேவை தரம் Iல் நிரந்தரமாக்கப்பட்ட இவர் 4.1.1991ல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அதிபராகப் பதவியேற்றுக் கொண்டார். 7.1.91ல் அப்போதைய அதிபராக இருந்த திரு.P.K.இராஜரட்ணம் இளைப்பாறியபோது 8.1.91 தொடக்கம் அதிபராகவும், கோப்பாய் கொத்தணி அதிபராகவும் கடமையைப் பொறுப்பேற்றார்.

இவருடைய காலம் இராணுவ நடவடிக்கை காரணமாக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாமல் போனாலும் தனது தளராத முயற்சியினால் பழைய கட்டடங்களை அகற்றித் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்து வகுப்பறைப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்தார். பாடசாலை முன்றலில் அமைக்கப்பட்டிருக்கும் குழாய்க்கிணறு இவரால் அமைக்கப்பட்டதாகும். பழைய கூடைப்பந்தாட்டத்திடல் புனரமைக்கப்பட்டு மாணவர் பயன்பாட்டுக்கு உரியதாக்கப்பட்டது.

நிதி சேகரிப்பு முயற்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நிதி சேகரிக்கப்பட்டு, நிரந்தர வைப்புக்களாக வங்கியிலிடப்பட்டன. பழைய மாணவர் சங்க ஒத்துழைப்புடன் கலைவிழா ஒன்று நடாத்தப்பட்டு மாணவர் அபிவிருத்தி நிதியம் 50,000/= (தமிழ்ச்சங்கம்), விளையாட்டு நிதியம் 50,000/= (தமிழ்ச்சங்கம்), பரிசளிப்பு நிதியம் 50,000/= (பழைய மாணவர் சங்கம்) மற்றும் பல பரிசளிப்பு நிதியங்கள் நிரந்தர வைப்பாக்கப்பட்டு பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் ஆகியனவற்றில் வைப்பிலிடப்பட்டுள்ளன. (விபரங்களை குறித்த மன்ற அறிக்கைகளில் காண்க)

மாணவர் கல்வி அபிவிருத்தி முயற்சியில் யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் இரவுநேர விசேட வகுப்புக்கள் நடாத்தியமை; தமிழ்த்திறன் போட்டியில், மாவட்டமட்ட நாடகப் போட்டியில் முதல் இடம் பெற்றமை; உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்றமை; இவரின் காலத்துச் சாதனைகளாகும்.

கல்லூரி மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட சஞ்சிகைகளை வெளியிட ஊக்குவித்து தமிழ்ச்சங்கம் 'வண்ணம்', வணிக மன்றம் 'பற்று', விஞ்ஞானமன்றம் "விந்தை' என்பன வெளிவரக் காரணமாக விளங்கியவர். ஒவ்வொரு அமைப்பும் வருடாந்தம் சஞ்சிகை வெளியிடுவதில் உள்ள சிரமத்தைக் கருத்தில் கொண்டு நீண்டகால இடைவெளியின் பின் 1993ல் கல்லூரிச் சஞ்சிகையை மீண்டும் வெளிக்கொணர்ந்தார்.

1995ல் இடப்பெயர்வுடன் திருகோணமலைக்கு இடம் பெயர்ந்து பின்னர் கொ/ பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபராக 22.07.1996 தொடக்கம் பணியாற்றி வருகின்றார். தனது கல்விபிண்டிப்ளோமா பட்டத்தை 1982 - 1983இலும் முது தத்துவமாணிப் பட்டத்தை 2000 - 2002லும் பெற்றுள்ளார்.

இவரின் துணைவி திருமதி.வசுமதி முத்துக்குமாரசாமி B.A.Dip-in-Ed- S.L.P.S.I 1992 தொடக்கம் 31-12-1995 வரையும் எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவர்கள் இக்கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் கல்லூரியைத் தங்கள் வீடாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர்கள். அவர்களால் இடப்பட்ட பலமான அத்திவாரத்திலிருந்துதான் 1995ல் இடப்பெயர்வு மற்றும் அழிவுகளிலிருந்து இன்றைய கல்லூரி மீண்டும் எழுந்து நிற்கின்றது.

# திருமதி. கனகராணி இரத்தினசபாபதிப்பிள்ளை
## B.Sc; Dip. in. Ed.SLTSI
## பதில் அதிபர் (28.2.1996 – 18.8.1996)



திருமதி கனகராணி - இரத்தினசபாபதிப்பிள்ளை அவர்கள் கோப்பாய் தெற்கில் 28.9.40இல் பிறந்தார்- இவர் தனது ஆரம்பக் கல்வியை கோப்பாய் நாவலர் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். தனது பட்டப்படிப்பை திருச்சிராப்பள்ளி(இந்தியா) கோலிகுறொஸ் கல்லூரியில் படித்து தாவரவியலில் 1ம் வகுப்பில் சித்திபெற்றுப் பட்டதாரியானார். பண்டாரவளை லிற்றிள்பிளவர். கொன்வென்ற் பாடசாலையில் 4.1.1962ல் ஆசிரியராக முதலாவது நியமனத்தைப் பெற்றுக்கொண்டார் அநுராதபுரம் திருக்குடும்ப கன்னியர் மடம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றி 21.2.1981ல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

சிறந்த தாவரவியல் விஞ்ஞான ஆசிரியரான இவர் கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவுப் பொறுப்பாளராக, விஞ்ஞான மன்றப் பொறுப்பாளராக, (உயர்தர மாணவ மன்றப் பொறுப்பாளராகப்) பன்முகப்பட்ட பணிகளை திறம்பட ஆற்றியுள்ளார். தான் ஏற்றுக் கொள்ளும் பொறுப்புக்கள் அனைத்தையும் சிறந்த முறையில் செய்து முடிக்கும் ஆற்றலுள்ள இவர் கல்லூரியின் பரிசுத்தின நிகழ்விற்குப் பொறுப்பாளராக இருந்து அந்த நிகழ்வு சிறக்க அரும்பணியாற்றியவர். 23.9.93ல் கல்லூரியின் இணைப்பிரதி அதிபராக நியமிக்கப்பட்ட இவர் தனது கற்பித்தல் பணிக்கு மேலதிகமாக நிர்வாகப் பணியிலும் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களைச் சிறப்பாக நிறைவேற்றினார். 1995 அக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின் அதிபர் திரு.த.முத்துக்குமாரசாமி அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதும், 28.2.96 தொடக்கம் பதில் அதிபராகப் பொறுப்பேற்று. பாடசாலை இடம் பெயர்ந்து கொடிகாமம் திருநாவுக்கரசு.ம.வி, வீரசிங்கம்.ம.வி, ஆகிய இடங்களில் இயங்கியபோதும் மீண்டும் 6.5.96ல் சொந்த இடத்திற்கு வந்து இயங்கியபோதும் பாடசாலையின் பெருமையும் சிறப்பும் குன்றாது சிறப்பாக நடாத்தியுள்ளார். பாடசாலையில் உடைந்த இடிபாடுகளை அகற்றியும் தற்காலிகமாகத் திருத்தக்கூடிய கட்டிடங்களைத் தனது சொந்தப் பணத்தில் முற்பணமிட்டுத் திருத்தி மிதிவெடி கண்ணிவெடி ஆகியவற்றை உரியவர்களுடன் தொடர்புகொண்டு அகற்றிப் பாடசாலையைச் சீராக இயக்க வழிவகுத்தார். மிகவும் சிக்கலான காலத்தில் துணிவுடன் பாடசாலையைப் பொறுப்பேற்று சிறந்த முறையில் நிர்வகித்துப் பாடசாலையின் பெருமையைப் பேணிக்காத்த இவரை கல்லூரிச் சமூகம் என்றும் மறக்காது திரு.ந.சிவகடாட்சம் 19.8.96ல் பாடசாலையைப் பொறுப்பேற்றதும் அவருக்கு உதவியாகச் சிறந்த முறையில் செயற்பட்ட இவர் தனது அறுபதாவது வயதில் 27.9.2000 அன்று சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். எமது கல்லூரியின் பழைய மாணவர் திரு.இரட்ணசபாபதிப்பிள்ளையவர்களின் மனைவியுமான இவர் கொழும்பில் தனது குடும்பத்தவருடன் ஓய்வுக்காலத்தை அமைதியாக கழித்துக்கொண்டிருக்கின்றார்.



150வது ஆண்டு விழா மலர்க் குழு




பாடசாலை பாண்ட் வாத்தியக் குழு



# எமது இன்றைய அதிபர்

**திரு. நடராசா சிவகடாட்சம் J.P.**
**B.Sc, Dip in Ed, SLPS I**

நல்லூர் கந்தர்மடத்தில் வாழ்ந்த திரு.நடராசா நாகரத்தினம் தம்பதிகளின் புதல்வரான திரு.ந.சிவகடாட்சம் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் பெற்றுக்கொண்டார். யா/ பரியோவான் கல்லூரியில் தன் இடைநிலை, உயர்நிலைக் கல்வியைக்கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியானார்.

02.05.1974இல் சம்மாந்துறை முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் தொடர்ந்து திரு/ கிண்ணியா முஸ்லீம் ம.ம.வித்தியாலயம், திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, திருகோணமலை இந்துக்கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். 02.05.1986இல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியரானார் 1991ம் ஆண்டில் அதிபர்தர நியமனம் பெற்று மருதனார்மடம், கோப்பாய்க் கல்விக் கோட்டங்களில் திட்டமிடல் உதவியாளராக இணைந்த சேவையில் கடமையாற்றினார். 19.08.1996இல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவியாகிய நவநீதமணி என்பவர் இவரது மனைவி. இவரது மகளாகிய சி.கிரித்திகா இக்கல்லூரியில் கல்விகற்று. தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றுக் கொண்டிருக்கின்றார். சி.கோபிகா தற்போது இக்கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருக்கின்றார். மகன் சி.நரேன் சரவணபவானந்தா பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் கல்வி பயில்கின்றார்.

கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில் இருந்து இன்றுவரை கல்விப்பணி, புனரமைப்புப்பணி ஆகிய இரண்டையும் முன்னெடுக்கும் நோக்கில் முழுநேரமும் இவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் வளர்ச்சியிலே பெரிதும் அக்கறை கொண்ட இவரது காலம் கல்லூரி வரலாற்றில் முக்கிய காலகட்டமாகும்.

மன்றங்களின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்திப்பல வேலைத்திட்டங்களை நிறைவு செய்த பெருமை இவருக்கேயுரியது. மேலும் கல்லூரி மாணவர்களின் வழிபாட்டிற்காக இந்து, கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபங்களைப் புனரமைப்புச் செய்ததுடன், 125ஆவது ஆண்டு நினைவு மண்டபத்தையும் நவரட்ணராஜா மண்டபத்தைப் புனரமைப்புச் செய்து, நவரத்தினராஜா ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தை விஸ்தீரணமாக்கி அவரது பெயரை, நிலைக்கச் செய்தமையும் குறிப்பிடத்தக்க இவரது புனரமைப்புப் பணிகள் எனலாம். சிவசுப்பிரமணியம் மண்டபம், கார்த்திகேயன் மண்டபம், இராசசேகரம் மண்டபம், புதிய நூல்நிலையம், புதிய கணனி அறை, தகவல் தொழில்நுட்பப் பூங்கா, கணனி வசதிகள், கூடைப் பந்து, வலைப் பந்து, கரப்பந்துத் திடல்கள் அமைத்தல், புதிய மலசலகூட (ஐந்து) தொகுதிகள் அமைத்தல் நீர் விநியோக வசதிகளைச் செய்து கொடுத்தல் முதலிய வேலைத்திட்டங்கள் அனைத்தையும் பூரணப்படுத்தினார்.

விளையாட்டுத்துறைக்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்துடன், பாண்ட் வாத்தியக் கருவிகளைப் பெற்றுப் பயிற்றுவித்தமையும் குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு வங்கிவைப்புக்களை மாணவர்களிடையே ஊக்குவித்தமையும், சமூக கல்வி அபிவிருத்தி நிலையம் அமைத்து முறைசாராக் கல்விப்பிரிவு வளர்ச்சிக்கு ஊக்குமளித்தமையும் இவரது பெரும் பணிகளுக்கான சான்றுகள். மேலும் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்து வகுப்பறைப்பற்றாக்குறைகளை நீக்கியமையும் குறிப்பிடத்தக்கது. கல்வித்துறைவளர்ச்சியில் க.பொ.த.(சா.த) 2001 பரீட்சையில் மாணவர்கள் 8A, 2B பெற்றமையும், மருத்துவ பீடத்திற்கு ஒருமாணவன் அனுமதி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

150ஆவது ஆண்டு நிறைவுகாலத்தில் அதிபராகவிருந்து பல்வேறு போட்டிகள், விளையாட்டு நிகழ்வுகள் விழாக்கள் என்பவற்றை நடாத்தியதுடன் முழுநிலா நிகழ்வுகளின் மூலம் பலரைக் கௌரவித்து, நிறைவு விழாவில் அஞ்சல் தினைக்களம் மூலம் முத்திரையையும் வெளியிட்டு கல்லூரிக்குப் பெருமைசேர்த்த அதிபர் திரு.ந.சிவகடாட்சத்தின் சேவையால் மேலும் பல வளர்ச்சிகளை எமது கல்லூரி பெற்றுக்கொள்ளும்.

# ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்


(எமக்குக் கிடைக்கப்பெற்றவை)



திருமதி.J.M.L.பெரேரா




திரு.A.C.செல்வராசா



திரு.சி.அழகராசா




திருமதி.G.N.சற்குணசிங்கம்




திரு.S.பொன்னுத்துரை



திரு.N.கந்தையா




திரு.அ.நடராஜா



திரு.S.துரைசிங்கம்



திரு.P.செல்வரத்தினம்





திரு.A.R.இராசையா


திரு.K.S.நடராஜா


திருமதி.T.அரிராஜசிங்கம்


திருமதி.Pபஞ்சலிங்கம்


திரு.T.தம்பித்துரை


திரு.S.K.திருச்செல்வம்


திருமதி.S.அன்னபூரணம்


திருமதி.S.தம்பிஐயா



செல்வி.P.நன்னித்தம்பி


திருமதி.K.இராசையா


திரு.P.கந்தையா


திருமதி.பூ.மகேந்திரம்


திரு.N.சிவகுமாரன்


திரு.க.சட்டநாதன்

# அமரர்களான முன்னாள் ஆசிரியர்கள்

(எமக்குக் கிடைக்கப்பெற்றவை)




திருமதி.R.R.சொலமன்ஸ்




திருமதி.F.C.டானியல்



திரு.C.M.அரியரத்தினம்



பண்டிதர் சி.கந்தையா




திரு.K.சிற்றம்பலம்




திரு.S.அரியபூசணம்



திருமதி.வேதவல்லி கந்தையா



திரு.R.சகாதேவன்



திரு.சு.யோகானந்தா



திருமதி.T.இரட்ணாதிக்கம்



திரு.M.சற்குணலிங்கம்



திருமதி.ந.பாக்கியம்



திருமதி.J.சிவலோகநாதன்

# ஓய்வுபெற்ற கல்வி சாரா ஊழியர்கள்

(எமக்குக் கிடைக்கப்பெற்றவை)




அமரர் க.வைத்தியலிங்கம்




திருமதி.த.யேசுதாசன்




திருமதி.இ.குமாரதாசன்



திரு.ஆ.செல்லையா



திரு.சோ.செல்லத்துரை



திரு.அ.மகேந்திரன்

குறிப்பு :

எமது வேண்டுகோளுக்கிணங்க புகைப்படங்களைத் தந்துதவிய அன்பர்களுக்கு எமது நன்றிகள்.



# CMS பெண்கள் விடுதிப் பாடசாலை

செல்வி M.V.ஹட்சின்ஸ்

இப்பாடசாலை நல்லூரில் 1845ல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பெண்களுக்குச் சமயக் கல்வியுடன் ஆங்கிலம், கைத்தொழில் என்பனவும் கற்பிக்கப்பட்டன. தையல் வேலை, நேந்தை பின்னுதல் ஆகியவையே முக்கியமாகக் கற்பிக்கப்பட்ட தொழில்களாகும். இந்த உற்பத்திகள் விற்பனை செய்யப்பட்டு அதன்மூலம் பெறப்பட்ட பணம் பாடசாலையை நிர்வகிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. நிதிப் பற்றாக்குறை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில், பல்வேறு வகைகளில் நிதி வசூலிக்கப்பட்டது என அறியக்கிடக்கின்றது.

1853ல் கோப்பாயில் மதபோதகர்கள், பிரசாரகர்கள், ஆசிரியர்கள் என்போர்க்கான போதனா நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அங்கு ஆண்கள் பயிற்றப்பட்டு வந்தனர். அவ்வாறு பயின்று வெளியேறுபவர்களுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணைவியராக அமையும் வகையிலேயே இப்பெண் பாடசாலையில் பயின்றோருக்குப் போதனைகள் வழங்கப்பட்டன.

இப்பாடசாலை 1923 செப்ரெம்பர் 16ல் கோப்பாய்க்கு இடம் மாற்றியமைக்கப்பட்டது. இங்கு கட்டணம் அறவிடப்பட்டு, விடுதியில் பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். அநாதைப் பிள்ளைகள் இலவசமாகச் சேர்க்கப்பட்டனர். ESLC வரையிலான வகுப்புகள் இங்கு நடைபெற்றன. இதில் சித்தி பெற்றவர்கள் அங்கே இயங்கிய பெண்கள் ஆசிரிய பயிற்சி நிலையத்திலும், கைத்தொழிற் பாடசாலையிலும் மேற்படிப்பைத் தொடர முடிந்தது. முதலாம் வருட ஆசிரிய பயிற்சியை இங்கு கற்றுச் சித்தி பெற்றவர்கள், இரண்டாம் வருடப் பயிற்சியை வேம்படி மகளிர் கல்லூரியில் அமெரிக்க மிஷனரிமாரால் நடாத்தப்பெற்ற பெண்கள் ஆசரிய பயிற்சிக் கல்லூரியில் பெற்று, ஆசிரியராக வெளியேற முடிந்தது. இங்கிருந்த ஆசிரிய பயிற்சிக் கல்லூரி பின்னர் 1923ல் இடம் மாற்றப்பட்டது. எனினும் பெண்களுக்கான பயிற்சி நிலையம் தொடர்ந்து இயங்கி 1930ல் உடுவில் மகளிர் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டது.

1945ல் செல்வி M.V.ஹட்சின்ஸ் அவர்கள் அதிபராக இருந்தபோது, இப்பாடசாலை CMS ஆங்கிலப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டுக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்று புதிய நாமம் சூட்டப்பட்டது. செல்வி.ஹட்சின்ஸ் உபஅதிபராக நியமிக்கப்பட்டார். தற்போது கூடைப் பந்தாட்டத்திடல் அமைந்துள்ள பகுதியில் அமைந்திருந்த முன்னைய ஆசிரியர் போதனா நிலையக் கட்டிடத்திலேயே இக்கல்லூரி இயங்கலாயிற்று. விடுதிகள் தற்சமயம் கிணறும் நீர்த்தாங்கியும் அமைந்துள்ள பகுதியை அடுத்தும், நவரத்தினராஜா மண்டபத்தின் கிழக்குப் பாகம் அமைந்துள்ள இடத்தில் வோட்ஸ்வேத் மண்டபத்திலும் இயங்கி வந்தன. இந்தப் பாடசாலை அதிபர்களில் செல்வி.E.விற்னி (1912ல் அதிபரானவர்) என்பவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். செல்வி.M.V.ஹட்சின்ஸ் அவர்கள் 1930 - 1954வரை இப்பாடசாலை அதிபராகப் பணியாற்றியபோது S.S.C. வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன. திருமதி.முத்தாச்சி டானியல் என்பவர் இங்கு கடமையாற்றியவர்களில் சிறப்பாகப் பலராலும் குறிப்பிடப்படுபவராவார்.

கடமையாற்றிய தலைமையாசிரியர்கள்

1846 - 1848 - Mrs. O'Neil
1868 - Mrs.Good
1897 - 1899 Mrs.Horsley
1899 - 1900 Miss.Heaney
1901 - 1903 Miss Elizabeth G.Beeching
1903-1905 Mrs.Hanan
1905-1909 Miss.A.T.Board
1909 - Miss.Young and Miss Henry
1912 - 1925 Miss.E.Whitney
1925 - 1930 Miss MMD Wills
1930 - 1954 Miss.V.Hutchins

# கோப்பாய் CMS தமிழ் பாடசாலை

இப்பாடசாலை 1853ல் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அதன் முதல் தலைமையாசிரியராகத் திருதாமோதரம்பிள்ளை கிங்ஸ்லேி அவர்கள் கடமையாற்றியதாகவும் யோன் H மாட்டின் என்பவர் எழுதிய யாழ்ப்பாணக் குறிப்புகள் என்ற நூலில் 206ம் பக்கத்தில் 108ஆவது குறிப்பில் காணப்படுகிறது. சிறுப்பிட்டித் தமிழறிஞர் சிவைதாமோதரம்பிள்ளை அவர்கள் அதேநேரம் 1853ல் ஆரம்பிக்கப்பட்ட போதனா வித்தியாசாலையில் தமிழ் கற்பித்ததாகவும், அறியக் கிடக்கிறது. இங்கே இரண்டாம் வகுப்புவரை தமிழ் கற்றவர்கள் தொடர்ந்து ஆங்கில மொழிக் கற்கைக்காக CMS ஆங்கிலப் பாடசாலைக்குச் சென்றனர். ஆண்களும் பெண்களும் கலந்து படித்த இப்பாடசாலையில் தமிழ்மொழி மூலம் கற்பித்தல் நடைபெற்று வந்தது.

இப்பாடசாலை தொடர்பாக வண A.Mநத்தானியல் தனது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பில், தான் ஆரம்பக்கல்வியை 1878ல் இப்பாடசாலையில் பெற்றதாகவும், அப்போது அதன் தலைமையாசிரியராகத் திரு.தேவதாசன் அவர்கள் கடமையாற்றி வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

திரு.க.இ.குமாரசாமி அவர்கள் தனது "கோப்பாய் வரலாறு" என்ற நூலில் தான் இப்பாடசாலையில் 1920ல் படித்ததாகவும், ஐந்தாம் வகுப்புவரை அமைந்திரு. இப்பாடசாலையில் 250 மாணவர்கள் ஆண், பெ இருபாலாருமாகப் படித்ததாகவும், தலைமையாசியராக திரு.சாலை சின்னப்பா கடமையாற்றியதாகவும், திருமதி.சின்னப்பிள்ளை, சின்னப்பா, முத்துப்பிள்ளை, பீதாம்பரம், வைத்திலிங்கம் ஆகியோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1923 செப்ரெம்பர் 16ல் CMS பெண்கள் பாடசாலை நல்லூரில் இருந்து கோப்பாய்க்கு மாற்றப்பட்டபோது இப்பாடசாலை அதனுடன் இணைக்கப்பட்டு திரு.சாலை சின்னப்பா கோப்பாய் வடக்கு C.C.பாடசாலைத் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டதாகவும், ஏனைய ஆசிரியர்கள் பெண்கள் பாடசாலையுடன் இணைக்கப்பட்டதாகவும் அறியக்கிடக்கின்றது.

# கோப்பாய் ஐக்கிய போதனா வித்தியாசாலை

இவ்வித்தியாசாலை 1853ம் ஆண்டு மதப் பிரசாரகர், ஆசிரியர்கள் ஆகியோரைப் பயிற்றுவிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்டது.

அங்கிலிக்கன், மெதடிஸ்ற், அமெரிக்க மிஷனிகள் தனித்தனியாகத் தங்களுக்கு ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் நடாத்தி வந்தபோதும் இடப் பிரச்சனை, மாணவர் எண்ணிக்கைக் குறைவு, நிதிப்பிரச்சனை போன்ற காரணங்களால் அவற்றின் செயற்பாட்டுத் திறன் குறைவடைந்ததாக இருந்தது. எனவே இந்த மூன்று மிஷனறிமாரும் தாம் தனித்தனியாக நடாத்தி வந்த ஆசிரிய பயிற்சி நிலையங்களை ஒன்றிணைத்துக் கோப்பாயில் நடாத்த முடிவு செய்தமையின் பயனாக 1916ல் ஒன்றிணைந்த பயிற்சி நிலையமாக இது கோப்பாயில் இயங்க ஆரம்பித்தது.

இதுவரை காலமும் சைவமாணவர்கள் அனுமதிக்கப்படாதிருந்த போதும், இக்காலம் தொடக்கம் சைவ மாணவரும் இங்கு அனுமதிக்கப்படலாயினர் எனினும் அவர்களுக்கு விடுதி வசதிகள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வளாகத்துக்கு வெளியே தங்கியிருந்து கற்க வேண்டியிருந்தமையால், தனியார் இடங்களில் விடுதிகள் அமைக்கப்பட்டு அங்கிருந்து வந்தே தங்கள் கற்கை நெறிகளை மேற்கொண்டனர்.

1923ல் நல்லூரில் இயங்கிய பெண்கள் பாடசாலையைக் கோப்பாய்க்கு மாற்றுவது என்ற முடிவுக்கமைய இவ்வித்தியாசாலை மூடப்பட்டது. கிறிஸ்தவ ஆசிரியர்கள் தெல்லிப்பழையில் இயங்கிய அமெரிக்கன் மிஷன் ஆசிரிய பயிற்சி நிலையத்துக்கும், சைவ மாணவர்கள் நல்லூரில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிரிய பயிற்சி நிலையத்துக்கும் இடம் மாற்றப்பட்டனர். பெண்கள் தொடர்ந்து இங்கேயே பயிற்சி பெற்றனர். 1930ல் உடுவிலில் இயங்கிய ஆசிரியர் பயிற்சி நிலையத்துக்கு பெண்கள் இடமாற்றம் பெற்றதால் இந்நிலையத்தின் செயற்பாடுகள் முடிவுக்கு வந்தன.

| | |
|---|---|
| 1853- | ஆரம்பம் |
| 1868- | Rev David wood |
| 1861- | Mr.Charles Wadsworth - தலைமை ஆசிரியர் |
| 1901- | Mr.Charls Wadsworth - மரணம் |
| | Mr.S.T.Thambapillai - தலைமை ஆசிரியர் |
| 1007-1912- | Wadsworth ஞாபகார்த்த மண்டபம் திறந்து வைத்தல் |
| 1913 - | Mr.S.T.Thambapillai - மரணம் |
| | Mr.S.T.இளையதம்பி - தலைமை ஆசிரியர் |
| | பரி.யோவான் கல்லூரி முகாமையின் கீழ் கொண்டு வரல். |

# CMS ஆங்கிலப் பாடசாலையும் இன்றைய கிறிஸ்தவ கல்லூரியும்



வண.J.S.இரட்ணாதிக்கம்



வண.A.M.நத்தானியல்

இப்பாடசாலை முதன் முதலில் 1850ல் திருமதி பிறென் அவர்களால் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்டது என அறியக் கிடக்கிறது. இலங்கை மத்திய குழுச் செயலாளரின் 1850ம் ஆண்டு வருகைக் குறிப்பில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

"இப்பொழுது இந்த நிலையத்திலுள்ள மிஷனறி Rev.Robert Bren அவர்களின் துணைவியார் திருமதி.பிறென் அவர்களுடன் 1849ம் ஆண்டு, நவம்பர் மாதம் இங்கு வருகை தந்தனர். தற்பொழுது ஒரு தேவாலயமும், குருமனை ஒன்றும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு திருமதி.பிறென் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலை ஒன்று தொடர்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கு 36 பெண்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இப்பிரதேசத்திலுள்ள தமிழ், ஆங்கிலப் பாடசாலைகளை 27ம் திகதி வெள்ளிக்கிழமை பரிசோதித்தேன். தமிழ்ப் பாடசாலைகளைவிட, ஆங்கிலப் பாடசாலைகள் மேலோங்கினவாக உள்ளன"

இதுவரை தேவாலய வளவில் இயங்கிய இப்பாடசாலை 1852ல் CMS மிஷனறிமாரால் பொறுப்பெடுக்கப்பட்டுப் புதிய கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. ஆண்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இப்பாடசாலை, கோப்பாய்ப் பிரதேசத்தில் ஆங்கிலமொழி மூலம் கல்வி வழங்கும் நிறுவனமாகப் பரிணமித்தது. 1899ம் ஆண்டுவரை தேவாலயக் குருவானவரின் மேற்பார்வையின் கீழே தனித்துவமாக இயங்கிய இப்பாடசாலை பரி.யோவான் கல்லூரி முகாமைத்துவ சபையின் பரிபாலனத்தின் கீழே கொண்டுவரப்பட்டு, அச்சபையினாலே நிர்வகிக்கப்பட்டு வந்தது. E.S.L.வரை வகுப்புகள் நடாத்தப்பட்டு வந்தன. 1928க்குப் பின்னர், தரம் IIIக்கு மேலே 4-5 வரை பெண்கள் அனுமதிக்கப்பட்டனர்.

1939ல் அமரர் G.S.செல்லையா அவர்கள் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற பின்னர் வகுப்புகள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1940ல் இருந்து S.S.C பரீட்சைக்குக்குத் தோற்ற மாணவர் அனுமதிக்கப்பட்டனர். 1945ல் ஒரே வளாகத்தில் இயங்கிய பெண்கள் விடுதிப் பாடசாலையுடன் ஒன்றிணைக்கப்பட்டுக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்று பெயர் மாற்றம் பெற்று இயங்கத் தொடங்கியது. திரு.G.S.செல்லையா அதிபராகவும், செல்வி.M.V.ஹட்சின்ஸ் உப அதிபராகவும் பணியாற்றலாயினர். ஆண்களுக்கான விடுதிகள், ஆரம்ப காலத்தில் பாடசாலைக்கு வெளியே அமைக்கப்பட்டபோதும், காலப்போக்கில் வோட்ஸ்வேத் மண்டபத்தில் அவை அமைக்கப்பட்டன.

இப்பாடசாலை அரச மானிய உதவி மாணவர்களிடம் பெறப்பட்ட கட்டணம், மற்றும் நிகழ்ச்சிகளில் சேகரிக்கப்பட்ட நிதி என்பவற்றைக் கொண்டு செயற்பட்டு வந்தது. ஆண்டு தோறும் நடாத்தப்பட்ட "சந்தை"யில் (Sale) மாணவர்கள் கொண்டுவரும் உற்பத்திகள், கைத்தொழிற் பாடசாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் என்பன விற்பனை செய்யப்பட்டு, இவற்றின் மூலம் பெறப்படும் நிதியும் பாடசாலைச் செயற்பாடுகளுக்கே பயன்படுத்தப்பட்டது. இவர் காலத்தில் விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரை கரப்பந்தாட்டமும் வலைப் பந்தாட்டமுமே காணப்பட்டன. மாணவர்கள் இல்லங்களாகப் பிரிக்கப்பட்டபோதும், மைதான வசதியின்மையால் பெரிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றதாக அறியப்படவில்லை. சிறுவருக்கான விளையாட்டுகள் மாத்திரமே இடம் பெற்று வந்துள்ளன.

அமரர் A.W.இராஜசேகரம் அதிபர் காலத்தில், தற்பொழுது கோப்பாய் அரசினர் வைத்தியசாலை அமைந்துள்ள இடத்துக்கு அண்மையில் ஒரு காணி குத்தகைக்குப் பெறப்பட்டு, அதிலே விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. இப்போட்டிகளின் பிரதான அம்சமாக "மைல்றேஸ்" இடம்பெற்று வந்ததெனவும், வருடாந்தம் அதில் வெற்றி பெறுபவர் "மைலர்" என்று அழைக்கப்பட்டு வந்தார் எனவும் கூறப்படுகிறது. மாணவர் சீருடை அணியும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமையச் சிறுவர்கள் காற்சட்டை ஷேட்டும், வயது வந்த ஆண்கள் வேட்டி ஷேட்டும், பெண்பிள்ளைகள் சிறுமிகள் சட்டையும், வயது வந்த பெண்கள் சேலை, சட்டையும் அணிந்தனர். இந்த அதிபரின் காலத்திலேயே தற்போதுள்ள மனையியற்கூடம் அமைக்கப்பட்டது.

அமரர், E.C.A. நவரட்ணராஜா அதிபர் பாடசாலையைப் பொறுப்பேற்று நடாத்தி வந்த காலத்தில் அனைத்துத் துறைகளிலும் பாடசாலை அபிவிருத்தியடைந்தது. ஆசிரியர் தங்கும் அறையாகிய "பாக்கியம் வில்லியம்ஸ் கட்டிடம், ஹட்சின்ஸ் மண்டபம்" ஆகியவை அமைக்கப்பட்டன. பாடசாலையின் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டு அதில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படலாயின. ஹொக்கி, கூடைப்பந்து, உதைபந்து முதலிய விளையாட்டுகள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டன. ஹொக்கி, கூடைப்பந்து, கரப்பந்து, வலைப்பந்து ஆகிய விளையாட்டுக் குழுக்கள், தேசிய மட்ட நிகழ்வுகளில் பங்கு கொள்ளக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் பெற்று விளங்கின.

அமரர்.E.K.சண்முகநாதன் அதிபரின் காலப்பகுதியில் வடக்குப் பக்கமாக அமைந்திருந்த பாதை மூடப்பட்டது. தற்போது சண்முகநாதன் மண்டபம் எனப்பெயரிடப்பட்டுள்ள தெற்குப்புற மண்டபம்

அமைத்கப்பட்டது. ஆசிரியர் அறைக்கு இணைந்த மலசலகூடம் அமைக்கப்பட்டது. மாணவர் கூட்டுறவுச் சங்கம், ஆசிரியர் சிக்கனக் கூட்டுறவுச் சங்கம் "நவரட்ணராஜா ஞாபகார்த்த நிதியம்" என்பவை ஆரம்பிக்கப்பட்டன.

திரு.S.கந்தசாமி அதிபர் காலத்தில் செல்லையா மண்டபம் அமைக்கப்பட்டதுடன் நவரட்ணராஜா மண்டபத்தின் கீழ்த்தள வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. இது விஞ்ஞானகூட வசதிகளை அதிகரித்தது. திரு.சி.சிவநேசன் அதிபர் காலப்பகுதியில் நவரட்ணராஜா மண்டப மேற்தள வேலைகள், அத்துடன் இணைந்த மலசலகூட வேலைகள், 125ஆவது நினைவு மண்டப அமைப்பு, தேவாலய எல்லை மதில் அமைப்பு ஆகிய வேலைகளும், சண்முகநாதன் மண்டபத்தில் மேலதிகமாக இரண்டு வகுப்பறைகளும் அமைக்கும் பணிகள் இடம்பெற்றன.

ஆரம்பகாலம் தொடக்கம் இப்பாடசாலையில் அமைந்திருந்த ஆரம்பப்பிரிவு வகுப்புகள் அக்கால அரசாங்கக் கொள்கைக்கு அமைய வருடாந்தம் ஒவ்வொரு வகுப்பாகப் படிப்படியாக நீக்கப்பட்டன. திரு.கந்தசாமி அதிபர் காலத்தில் ஆரம்பமான இச்செயற்பாடு திரு.சிவனேசன் காலத்தில் முடிவுற்றது. திரு.சிவனேசன் அவர்கள் மீண்டும் அந்த வகுப்புகளை ஏற்படுத்த முயன்றபோதும் திணைக்களம் அனுமதிக்கவில்லை. எனவே இங்கு கற்பவருக்கான அத்திவாரக்கல்வி இங்கேயே அமைவதில்லை.

அமரர் திரு.S.செல்வரத்தினம் அதிபர் காலத்தில் முன்னைய அதிபரால் ஆரம்பிக்கப்பட்ட சில கட்டிட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டதுடன், முறைசாராக் கல்விக்கான கட்டிடப் பகுதி அமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. திருமதி.P.அருள்ராஜா அவர்கள் காலத்தில் அவை பூரணப்படுத்தப்பட்டன.

திரு.P.K.இராஜரத்தினம் அதிபர் காலத்தில் க.பொ.த.(உ/த) வர்த்தகப் பிரிவு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்திய இராணுவ நடவடிக்கை காரணமாகப் பாடசாலைச் சொத்துகள் களவு போயின. மூன்றுமாத காலப் பகுதியில் பாடசாலை மூடப்பட்டுத் தற்காலிகமாக யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் இயங்கியது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 10வகுப்பறைகளுக்கான கட்டிடத்தொகுதி ஒன்றும், நீர்த்தாங்கி ஒன்றும் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

திரு.T.முத்துக்குமாரசாமி அதிபர் காலத்தில் அலுவலகம் பாக்கியம் வில்லியம்ஸ் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டது. பாடசாலை எல்லைகள் பாதுகாப்பான முறையில் பேணப்பட்டன. பழைய கட்டிடங்கள் இடித்து அழிக்கப்பட்டன.

அவற்றின் உதவியுடன் தற்காலிக வகுப்பறைகள், சைக்கிள் கொட்டகை ஆகியவை அமைக்கப்பட்டன. பாடசாலை உட்புற வீதி செப்பனிடப்பட்டது. பாடசாலைச் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் வங்கிகளில் நிரந்தர வைப்புக் கணக்குகள் பல ஆரம்பிக்கப்பட்டன. பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், தமிழ்ச் சங்கம் ஆகியவற்றுக்கு ஊடாகவே இக்கணக்கு வைப்புகள் பேணப்படலாயின.

இன்றைய அதிபர் திரு.ந.சிவகடாட்சம் அவர்களின் காலத்தில் கார்த்திகேசன் மண்டபம், இராஜசேகரம் மண்டபம், சிவசுப்பிரமணியம் மண்டபம் ஆகியவையும், இந்து, கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபங்கள், கூடைப்பந்து, வலைப்பந்து, கரப்பந்தாட்ட மைதானங்கள் என்பவையும் புதிதாக அமைக்கப்பட்டன. புதிதாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன. 125ம் ஆண்டு நினைவு மண்டபம், நவரட்ணராஜா மண்டபம், தண்ணீர்த் தாங்கி என்பவை திருத்தப்பட்டுப் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்வி அபிவிருத்திப் பணிகளும் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. அமரர் E.C.A. நவரட்ணராஜா அதிபர் காலத்தில் தொடங்கிய பல்கலைக் கழகப் பிரவேசம் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது. இன்று பேராதனை, மொறட்டுவ பல்கலைக்கழகங்களுக்குப் பொறியியல் பிரிவு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ்பல்கலைக் கழகத்தில் மருத்துவம், முகாமைத்துவம், வணிகம், விஞ்ஞானம், கலை ஆகிய பிரிவுகளுக்கும், நுண்கலைக் கல்லூரியில் சங்கீதம், நடனம் ஆகிய பிரிவுகளுக்கும் எமது மாணவர் அனுமதி பெற்றுப் படித்துவருவது கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

விளையாட்டுத்துறையும் நன்கு அபிவிருத்தி பெற்று வருகின்றது. எமது மாணவர்கள் தேசிய மட்டப்போட்டிகளில் பங்கேற்கும் தகைமை பெற்றமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். தற்காலிக வகுப்பறைக் கட்டிடங்களும், பற்றாக் குறையான தளபாடங்களும் மாணவரின் கற்றல், செயற்பாடுகளுக்குச் சாதகமாயில்லாத சூழ்நிலையிலும் கூட, அதிபர் ஆசிரியர்களின் ஊக்குவிப்புகளும் மாணவர் ஆர்வமும் கல்லூரியை முன்னேற்றி வருகின்றன. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பழைய மாணவர் சங்கமும் அதன் கொழும்பு மற்றும் வெளிநாட்டுக் கிளைகள் ஆகியவையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பனவும் மற்றும் நலன்விரும்பிகளும் பெரிதும் உதவியதால் இன்று கட்டிடப் பற்றாக்குறையும், தளபாடப் பற்றாக்குறையும் ஓரளவு நிவர்த்தி பெற்று வருதல் மகிழ்ச்சிக்குரியது. கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் 150ஆவது ஆண்டு முக்கியமானதொரு மைல் கல் எனக் குறிப்பிடலாம்.

## Headmasters

| | | |
|---|---|---|
| 1880 | | - Mr.Valippillai (Later R.V.Vathavanam) |
| 1909 | -1914 | - Rev I.S.Ratnathikkam |
| 1917 | -1920 | - Rev A.M.Nathanil |
| 1924 | -1926 | - Rev I.S.Ratnathikkam |
| 1.5.26 | - 31.12.38 | - Mr.J.P.Chelliah |
| 1.1.39 | - 31.12.44 | - Mr.G.S.Chelliah |

## Managers

| | | |
|---|---|---|
| 1899 | - 1900 | Rev R.W. Ryde |
| 1900 | - 1919 | Rev J.Thompson |
| 1919 | - | Rev K.C.Mc Pherson |
| 1920 | - 1940 | Rev Henry Peto |
| 1940 | - 1957 | Rev J.T.Arulanantham |
| 1957 | - 1960 | Mr.A.W.Rajasekaram |

# THE CEYLON GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY

No. 14,727/3 - SATURDAY, DECEMBER 24, 1966

(Pubilshed by Authorlty)

## PART I: SECTION (I) _ GENERAL

## Government Notification

### ASSISTED SCHOOLS AND TRAINING COLLEGES (SUPPLEMENTARY PROVISIONS) ACT, No. 8 OF 1961

### J/Christian College, Kopay

ORDER made by the Minister of Education and Cultural Affairs under section 4 of the Assisted Schools and Training Colleges (Supplementary Provisions) Act, No. 8 of 1961.

I. M. R. A. IRIYAGOLLE,
Minister of Education and
Cultural Affairs.

NSAD/495,
Ministry of Education and Cultural Affairs,
Malay Street,
Colombo 2, December 20, 1966.

ORDER

Vesting Order No. 2314 of December 6, 1962, relating to J/Christian College, Kopay, published in the *Ceylon Government Gazette* (*Extraordinary*) No. 13,429 of December 11, 1962, is hereby amended in the Schedule thereto, by the substitution for paragraph 1 thereof, of the following paragraph:—

" 1. The premises in which J/Christian College, Kopay, was conducted and maintained on July 21, 1960, viz., all that land situated at Kopay of Valigamam East D.R.O's Division of the District of Jaffna, Northern Province, and bounded on the—

North by lands claimed by K. Chelliah, K. Velupillai, Mrs. Richard and the lane leading to Mrs. Richard's garden;


East by parsonage and church premises as depicted in plan No. 1096B of 4.5.65 made by Mr. N. Thampoo, Licensed Surveyor and Leveller, the Jaffna-Pt. Pedro Road, and the burial ground depicted as Lot 3B in plan No. 1096A dated 23.5.64 made by the said Mr. N. Thampoo;


South by lands claimed by Naguleswara and Mrs. Subramaniyam; and

West by lands claimed by Naguleswara, S. Seeniar, S. Thamber, S. Sinnadiar and Sinnathamby,


and containing in extent about ninety-two lachams (92 lms.) V.C. allowing the right of access from the said Jaffna-Pt. Pedro Road to the cemetery along the pathway depicted as Lot 5 in the said plan No. 1096A dated 23.5.64.


# J/KOPAY CHRISTIAN COLLEGE
## IN YEAR 1952






(N. Thompson)
Licensed Surveyor & Leveller
Kopay-South


J/KOPAY CHRISTIAN COLLEGE
IN YEAR 2002
Property of E.S. Hensman and others
Property of St. Mary's Church - Kopay
Pt. Pedro - Jaffna Main Road
Play Ground
Hutchins Block
Navaratnarajah Block
Water Tank
Building under construction
G.G. Chelliah Memorial Block
Paakiammah William Memorial Block
Lot 3
Lot 2
125 th year Memorial Hall
Cemetry
Property of Ramalingam Thambithurai & others
Property of Sivaloganathan Jegatheswary
Property of Thaivendrakumarasamy Nanthakumar
Property of Thaivendrakumarasamy Jayakumar
Property of Balasubramaniam Gnanasounthary
Property of Mylvaganam Kathirgamalingam and others
Lane
Gate


J/KOPAY CHRISTIAN COLLEG
IN YEAR 2052
Property of St. Mary's Church - Kopay
Pt. Pedro - Jaffna Main Road
Play Ground
Navaratnarajah Block
Building under construction
G.S. Challiah Memorial Block
Lot 3
0A-02-01.08P
0A-0R-00-1.2P
125 th year Memorial Hall
Cemetry
Property of Kathirgamalingam and others
Property of Balasubramaniam Gnanasounthary
Property of Theivendrakumarasamy Jeyakumar
Property of Sivaloganathan Jegheswary
Property of Ramalingam Thambithurai & others
Lane
Gate

# JKOPAY CHRISTIAN COLLEGE - SCHOOL PLAN – DETAILS

## IN YEAR 1952
(Measurement in Metres)

| Index | Dexcription | Level |
|---|---|---|
| A | Upper School | Single story |
| B | Tiger Carge | Single story |
| C | Class Rooms | Single story |
| D | Principal's bungalow | Single story |
| E | Girls' comon rooms | Single story |
| F | Home Sc.Lab | Single story |
| G | Hostal block | Single story |
| H | Hostal Kitchen | Single story |
| I | Hand work room | Single story |
| J | Physics laboratory | Single story |
| K | Chemistry laboratory | Single story |
| L | Latrines | Single story |
| M | Zoology laboratory | Single story |
| N | Elotany laboratory | Single story |
| O | Wadsworth Hall | Single story |
| P | Agriculture Room | Single story |
| W | Well | Single story |


## IN YEAR - 2002

| Index | Description | Length | Breath | Height | Leval |
|---|---|---|---|---|---|
| A | 125th Year Memorial Hall | 45.85 | 16.30 | 6.35 | Single story |
| B | Motor Room | | | | |
| C | Packlammah William Hall (Staff Room) | 12.80 | 11.20 | 4.00 | Single story |
| D | Shanmuganathan Block (Principal Office and Class Rooms | 44.00 | 8.50 | 5.00 | Single story |
| E | Temporary Shed II (Class Rooms) | 33.0 | 5.15 | 5.00 | Kadlan story |
| F | Chapel | 8.65 | 5.15 | 5.00 | Single story |
| G | Chelliah Block (Class Rooms) | 28.00 | 8.50 | 4.50 | Single story |
| H | Incompleted Block | 34.20 | 9.85 | incom-plete | Double story |
| I | Sivasubramaniam Block (Computer Training Centre Audio Video Room, Libry) | 27.65 | 8.00 | 3.50 | Single story |
| J | Temporary shed1 | 33.00 | 5.15 | 5.00 | Kadlan story |
| K | Hutchins Block (HoSc Room, Class Rooms) | 34.45 | 7.00 | 5.30 | Single story |
| L | Latrines | | | | Single story |
| M | Tamil Thai Statue | | | | |
| N | Hndu prayer Hall | | | | Single story |
| O | Basket Ball Code | | | | |
| P | NetBall Code | | | | |
| Q | VollyBallCobe | | | | |
| R | Navaratnarajah BlocK (Laborately computer Room Geo Room) | 33.00 | 7.90 | 7.50 | Double story |
| S | Karthigesan Block) | 27.70 | 5.00 | 4.0 | Single story |
| T | Selvaratnam Block (Technical Rooms) | 27.50 | 6.30 | 4.15 | Single story |
| U | Rejasegaram Block (Music Dance) | 31.00 | 8.00 | 4.15 | Single story |
| V | Agriculture plot | | | | |


## IN YEAR - 2052
(Expecting)

| Index | Description | Level |
|---|---|---|
| A | 125th Year Memorial Hall | Single Storey |
| B | Principal's Office (Staff Room conference Hall & Store Room) | Double Storey |
| C | Motor Room | Single Storey |
| D | Shanmuganathan Block (Union Rooms) | Single Storey |
| E | Class Rooms | Double Storey |
| F | Chapel | Single Storey |
| G | Chelliah Block (Class Rooms) | Double Storey |
| H | Class Rooms Block | Double Storey |
| I | Sivasubramaniam Block (Computer, Audio, Video, Unit, Library) | Double Storey |
| J | Agriculture Class Rooms & Store | Single Storey |
| K | Water Tank | |
| L | Latrines | Single Storey |
| M | Class Room Block | Double Storey |
| N | Home Sc Room, Canteen, Subject Room Block | Double Storey |
| O | Navaratnarajah Block (Laborarory, Computer, Geography Rooms) | Double Storey |
| P | Pavilion, Indoor Games Room | Double Storey |
| Q | Tamil Thai Statue | |
| R | Prayer Hall | Single Storey |
| S | Badminton Code | |
| T | Karthigesan Block (Class Rooms for Non Formal Education) | Single Storey |
| U | Selvaratnam Blok (Teachinical Unit) | Single Storey |
| V | Rajasegaram Block (Music, Dance & Aesthetic) | Single Storey |
| W | Well | |
| W1 | Principal's & Teachers' Quarters | |
| X | Girl's Hostel | |
| Y | Boy's Hostel | |
| Z | Tennis Code | |
| A1 | Basket Ball Code | |
| A2 | Netball Code | |
| A3 | Volly Ball Code | |
| A4 | Agriculture Plo | |

# G.C.E. O/L EXAMINATION




| YEAR | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| PERCENTAGE | 29.7 | 19.7 | 23.7 | 23.9 | 23.9 | 44.8 | 16.7 | 25.0 | 22.3 | 18.7 | 24.7 | 25.3 | 27.3 | 32.7 | 22.9 | 45.4 | 42.0 | 22.4 | 32.0 | 29.5 |




| YEAR | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| PERCENTAGE | 18 | 33.7 | 31.2 | 8.3 | 3.7 | 39.1 | 35.7 | 38.1 | 49.0 | 40.0 | 53.1 | 41.6 | 48.0 | 81.0 | 66.6 | 75.8 | 67.3 | 71.6 | 63.9 | 61.6 | 49.1 |



மண்டபப் பொறுப்பாளர்கள்



பாட இணைப்பாளர்




அதிபர் காரியாலய ஊழியர்கள்

# மனச்சிறை

செல்வி. நி.தமிழ்ப்பிரியா
தரம் – 13

எழுந்த எண்ணங்கள் ஒளிர்ந்திட முடியா
அழிந்து போகும் அவலங் காணீர்
அழியா புகழோங்க ஆசி வழங்கி விட்டால்
ஒழியுமா மனதின் மாயை

உள்ளம் கனக்கிறது உண்மை கொதிக்கிறது
செல்லும் பாதையெல்லாம் செல்வம் மறைகிறது
துள்ளும் கனவெல்லாம் அடிமை தானென்ற
அல்லல் நிறைகிறது கண்ணில்

கட்டியள் துஞ்சக் கட்டும் புடவையென்ன
பொட்டென்ன பூவென்ன புதுச் சடங்கு தானென்ன
இட்டுக் கருக்குகின்ற இன்றைய மாதரை
முட்டும் என்றோ விடிவு

சீதனமின்றியே சிறையிட்ட மாதரை
ஆதரவென்றிட ஒருத்தருமில்லையோ
போதாத ஆதனங்கள் பொய்ப்பது புரியாதோ
ஓதாதோ கொடுமை குலைய

மெய்யான வதனத்தில் மௌனமோ மொழியாமோ
பொய்யான வாழ்விலே பொய்க்காதோ மனச்சிறை
செய்யாத கண்ணுக்கு சினந்தானோ கண்ணீர்
உய்யாதோ மனிதம் பாரில்

பள்ளிப் பருவத்தில் படிக்கவும் சிறை போட்டு
துள்ளி விளையாடத் தடியாலேயடி போட்டு
மெல்லச் சிரித்தாலும் மூளியெனின் பாவமாம்
எள்ளி நகைக்கிறது மூடம்

# விழித்தெழுவோம்

செல்வி. நி.தனஞ்சனி
தரம் – 7

மல்லிகை மணப்பதால் மாலையென முடிவோ
பள்ளந்தெரிந்தும் பாதம் புதைப்பதோ
சொல்லப்பழகியதால் சீறிப் பாய்வதோ
எல்லாம் கண்முன் நன்றோ

கொன்று குவித்திடும் கொடிய நோய்களும்
சென்று முடியும் சிறிய ஆயுளும்
என்றுமழியா ஏட்டுக்கல்வியும்
கண்டு கொள்ளல் நன்று

கற்றுணர்ந்தோரும் காவியமானோரும்
ஏற்றத்தைக் கொண்ட ஏணியில் ஏறி
அற்பர் அழிந்துவிட ஆக்கம் உயர்ந்துவிட
சுற்றம் போற்றிடச் சீறு

பட்டமரத்திலும் பச்சையுண்டென்று
திட்டவட்டமாய் தெரியப்பழகிவிடு
கெட்டசமுதாயம் கொட்டும் வார்த்தைகளை
கேட்டதும் மறந்துவிடு

விட்டியல் உண்டென்று வீறு நடைகொண்டு
தேடிப் புதுயுகம் தோட்டியாகிடு
ஆடிமுடிந்ததென அசையாதிருக்காதே
கோடிகாலம் நிலை

அற்கா இயல்பென்று அறியப்போகாதே
மறக்காலமே மாற்றம் மலர்ந்திடுமே
பற்றுக்கொண்டே படித்திடு பழமையை
கொற்றம் உனக்கே சொந்தம்

# சமயமும் சமூகமும்

செல்வன். த.தயேந்திரன்
தரம் – 10

சமயம் என்பது மனிதனது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும். சமூகத்திலே வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு சமயத்தவனாகவே இருக்க வேண்டும். சமயப் பற்று இல்லாவிட்டாலும் கூட சமயத்தை சார்ந்தவனாகவே மனித உயிர் ஒவ்வொன்றும் காணப்படுகின்றது. மனித வாழ்க்கையுடனும் சமூகத்துடனும் சமயம் பிணைக்கப்பட்டுள்ளது.

எமக்கு மேலே சர்வவல்லமை பொருந்திய இறைவன் ஒருவன் உள்ளான் என்பதை மக்கள் மனத்திலே விதைப்பதே சமயமாகும். உலகில் பல்வேறுபட்ட சமயங்கள் காணப்பட்ட போதிலும் அவை யாவும் ஆராய்கின்ற பொருள் ஒன்றேயாகும். பொதுவாக இந்து சமயத்தினை எடுத்து நோக்குவோமானால் அது மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருப்பதை காணமுடிகிறது.

இந்து சமூகமானது கோயில்களின் மூலம் கட்டியெழுப்பப்படுவதை காணலாம். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையார் வாக்காகும். கோயில்களும் அதனை சூழ உள்ள மக்களும் சிறப்பான வழியில் வாழ சமயம் வழி செய்கின்றது.

ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் சுற்றுப்புறச் சூழல் பேணப்படுவதோடு மக்கள் மாமிச போசனமின்றி உளத்தூய்மையோடும் இருக்க சமயம் வழிகோலுகின்றது. மகோற்சவங்களில் ஒன்றாகிய தேர்த்திருவிழாவன்று ஊர்மக்கள் யாவரும் ஒன்று திரண்டு செயற்படுகிறார்கள் " ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதை இம்மகோற்சவத்தின் மூலம் சமூகத்தவர்களுக்குப் புலப்படுத்துவதே சமயமாகும்.

மேலும் எமது சமயத்தவர்களால் விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் என்பன சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. பண்டிகை காலங்களிலே நண்பர்கள் உறவினர்கள் என்று தமது சுற்றத்தவர்களும் அறுசுவை உணவு உண்ணுகிறார்கள். தம்மிடத்திலே காணப்பட்ட கோப உணர்வுகள் யாவற்றினையும் மறந்து ஒரு நாளாவது மகிழ்ச்சியாக இருக்க மனிதன் பழகிக் கொள்கிறான். இவை யாவற்றிற்கும் சமயமே தூண்டுகோலாகும்.

சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பலவற்றிற்கும் சமயமே காரணமாகின்றது. சமூகத்தினைப் பிரதிபலிக்கின்ற இலக்கியங்கள் கூட சமயத்துடன் தொடர்புடையனவாக காணப்படுகின்றன. உதாரணமாக சங்கமருவிய காலத்தினை நாம் எடுத்து நோக்குவோமானால் சமண பௌத்த சமயங்களின் பரம்பல் காரணமாகவும் துறவை அவை முதன்மைப்படுத்தியதாலும் மக்கள் அவற்றின் மீது வெறுப்புக் கொண்டனர். இதனால் அக்காலத்தில் அதிகமான அறநூல்கள் தோற்றம் பெறுகின்றன. திருக்குறள் சமய சம்பந்தமற்ற சிறந்த ஓர் நூலாக காணப்படுகின்றது. சமூகத்தவரிற்கு தேவையான அறக்கருத்துக்கள் பலவற்றினை கூறும் நூலாக இது சிறந்து விளங்குகின்றது.

# எனது பாடசாலை விடுமுறையைக் கழித்த விதம்

செல்வன். செ.தர்மராஜ்
தரம் – 7

எனக்கும் எனது தங்கைக்கும் பாடசாலை விடுமுறை விட்டது. நாம் சுற்றுலாவிற்குச் செல்லப் புறப்பட்டோம்.

அன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பஸ் வண்டியில் எமது பிரயாணத்தை ஆரம்பித்தோம். சுற்றுலாவின்போது நாம் முதன் முதலாக ஒரு இடிந்த கோட்டையைக் கண்டோம். அதைச் சுற்றிவர நீர் நிரம்பிய அகழி காணப்பட்டது. அடுத்ததாக சிகிரியாக் குன்றைக் கண்டோம். பின் சிகிரியா ஓவியத்தைப் பார்த்தோம். அங்கு பல நிறங்களிலான படங்கள் காணப்பட்டன. படத்திற்கு கீழ் அதன் பெயரும் எழுதியிருந்தது. நான் அந்தப் படத்தையும் கீறி அதன் பெயர்களையும் கொப்பியில் குறித்து வைத்தேன். பின் நாம் தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொண்டோம். பல வணக்க ஸ்தலங்களையும் கண்டோம். பின் ஒரு சிறுவர் இல்லத்தைக் கண்டோம். பல சிறுவர்கள் நின்று விளையாடிக் கொண்டிருந்தார்கள். பின் ஒரு சீமெந்து தொழிற்சாலையைக் கண்டோம். அதில் சீமெந்து தயாரித்துக் கொண்டிருந்தார்கள். சீமெந்து தொழிற்சாலையினுள் நுழைந்தது சீமெந்து தயாரிக்கும் முறையை கொப்பியில் நான் படிப்படியாக எழுதினேன். பின்பு பஸ் வண்டியில் ஏறி எமது பிரயாணத்தை ஆரம்பித்தோம். அடுத்ததாக அலைமோதும் கடல்களையும் ஓடும் ஆறுகளையும் கண்டோம். இறுதியாக கதிர்காமம் கோயிலுக்குச் சென்றோம். சனக்கூட்டம் அதிகமாக இருந்தது. அந்த சன நெரிசலில் நுழைந்து சென்றோம். கதிர்காம முருகனைத் தரிசித்தோம். பின் பஸ் வண்டியில் ஏறுவதற்காகச் சென்றோம். அப்போது மக்கள் கூட்டங்கூட்டமாக திரண்டு நின்றனர். அந்த சனக்கூட்டத்தினுள் நாங்களும் நுழைந்தோம். அப்போது ஒரு கிணறுபோல் செய்து அதற்குள் ஒருவர் மோட்டார் வண்டியை வெகுவிரைவாக ஓட்டினார். ஒரு சிறுமியும் ஒரு முதியவரும் ஒரு நடனம் ஆடினார்கள். முதியவர் ஒரு கோலைப் பிடித்துக்கொண்டு நிற்க சிறுமி அக்கோலில் ஏறி நின்று நடனமாடினாள். பின் பக்கத்தில் பல நாகபாம்புகளை வைத்து மகுடி ஊதி பாம்பை ஆடச் செய்தார். அப்பாம்புகளை கையில் தூக்கி வைத்திருந்தார். அதைப் பார்க்க எங்களுக்கு மிகவும் பயமாக இருந்தது. அதற்குப் பக்கத்தில் ஒருவர் ஒரு பொம்மையை மின்கலத்தின் மூலம் இயங்கச் செய்து காட்டினார். எனது தங்கை பொம்மையை வாங்கித் தருமாறு அப்பாவைக் கேட்டார். அப்பா அதை வாங்கிக் கொடுத்தார். பின் நாம் மாலை 5.00 மணியளவில் வீடு நோக்கிச் சென்றோம்.

# எமது நாட்டில் சமாதானத்தை உருவாக்க எமது பொறுப்பு

செல்வி.யோ.ஜெராலின் தனுசியா
தரம் – 13

*(விவியன் வீரசிங்க ஞாபகார்த்த கட்டுரைப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றது)*

மலர்ந்துள்ள இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலில் கால் பதித்து நிற்கும் மனிதரிடம் "அமைதி" எனும் வாழ்த்து அர்த்தமுள்ளதா?

போரும் பூசலும், துன்பமும் பயங்கரமும் நிறைந்து, கவலையிலும் பீதியிலும், பசி பட்டிணியிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதன் எவ்வாறு சமாதானத்துடன் வாழ முடியும்? ஒவ்வொரு மனித உள்ளங்களும், அமைதிக்காகவே ஏங்குகின்றன. யுத்த எதிரொலிகள், அரசில் குழப்பங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், பிரிவினைகள் என்பன, மனித அடி மனத்தின் விரக்தி உணர்வுகளைப் பிரசவித்துக் கொண்டிருக்கின்றன. சமாதான வாக்குறுதிகள் - உடன்படிக்கைகள், இவற்றின் மத்தியிலும் சமாதானம் ஒரு வெற்றுப் பொருளாகவே தோன்றுகின்றது.

ஆம்! ஒரு மனிதனின் இயல்பு வாழ்வில் அவனது கூறுகளாயிருக்கின்ற, மொழி - மதம் - கலாச்சாரம் - பொருண்மியம் - சுகநலம் - உளவியல் இவை அனைத்தும் அவனுக்கு அமையும்போது உள்ளத்தில் அனுபவிக்கும் மகிழ்வு, பூரிப்பு சமாதானமாகின்றது. இவை பாதிக்கப்படும்போது சமாதானத்தை இழக்கச் செய்கின்றது. ஆகவே! அமைதியின் தன்மை அது என்ன? "அமைதி" என்பது போரின்மை மட்டுமல்ல. எதிரிகளின் ஆற்றல்களைச் சமநிலைக்குக் கொண்டு வருவதிலும் அது அடங்குவதில்லை. மாறாக - நீதியின் செயல் (இசையாஸ் 32:7) எனத் தகுந்த முறையில் அழைக்கப்படுகின்றது. இதனை 2ம் வர்த்திக்கான் சங்க ஏடு எமக்கு விபரிக்கின்றது. (இன்றைய உலகின் திருச்சபை. எண்.78)

உயர்ந்த நீதியைத் தேடும் மக்களால் செயற்படுத்தப்படுவதான ஒழுங்கிலிருந்து விளைவதே அமைதி. இது மட்டும் போதாது. மனிதனின் நலம் பாதுகாக்கப்பட வேண்டும். மனிதத் தன்மை, ஆன்ம செல்வம் - திறமை என்பன, நம்பிக்கையோடும், விருப்புடனும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் மனிதனின் தனித்தன்மையும், மாண்பும் மதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். சமாதானத்திற்காகப் பல அமைப்புக்கள் உலகளாவிய ரீதியில் பல முயற்சிகள் மேற்கொள்கின்றன. மனித மாண்பும், மனித சுதந்திரமும் மானிடப் பிறவிகளுக்கு இறைவன் சூடிய இரண்டடுக்கு மகுடம், அதை மாசுபடுத்தி மனிதன் மனிதனால் நசுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு மண்ணிலே புரளவிடுவது ஒரு சாபக்கேடு. அதை அடுத்தவர் பறிக்க விடுவது கோழைத்தனம். மனித சமூகம் தமது கடமையில் விழிப்புணர்வுடன் செயற்படும்போது, அது வாழ்க்கையின் இலட்சித்தைக் காக்க வழி செய்யும். வாழ்க்கைக்குத் தேவையான தத்துவத்தைக் காக்க, கடமையுணர்வை மேம்படுத்த மனிதன் முயல வேண்டும்.

கலங்காத உள்ளம், குன்றாத ஆர்வம், விடாமுயற்சி சோர்வற்ற உழைப்பு - துன்பங்களைத் தாங்கும் சகிப்புத் தன்மை ஆகியவையே இலட்சியத்திற்கான இலட்சணங்கள். சமயத்தைப் பரப்பிய மகான்கள் யாவரும் மக்களுக்குச் சேவை செய்தலையே நோக்காக் கொண்டவர்கள். "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்னும் இயேசு பெருமானின் கூற்றும், எமக்கு அன்பைப் பறைசாற்றி நிற்பதை உணர்ந்து, "நன்றே செய், அதையும் இன்றே செய்'' என்ற பொன்மொழிக்கொப்ப, சமய வழிபாடுகள் வாழ்க்கையோடு தொடர்பானது என்ற கல்வித் தத்துவத்தை வாழ்க்கை நெறியாக மாற்றி, அறநெறி நல்லொழுக்கப் பண்புகளை, சமுதாயத்தில் வளர்த்து, முழுமையான அமைதியைக் கொணர வேண்டும். அன்பு - தன்னடக்கம் - பரிவு - தியாகம் என்பவற்றைக் கிறிஸ்தவ சமய இலக்கியங்கள் ஆழ்ந்து நோக்குகின்றன. இவை அனைத்தையும் உள்ளடக்கிய ஆழ்கடலாக விளங்கும் சமயக் கல்வியின் பங்கு என்ன? என்பதை வளர்ந்து வரும்

இளைய தலை முறைகள் உயத்துயர்ந்து விளங்கிக் கொள்ள ஆக்கமும் ஊக்கமுமளித்துச் செயல்படுதல் தலையாய கடனாகும். இன்று உலாவிவரும் அமைதியின்மைக்கு முக்கிய காரணம் சமயப் பற்றின்மையே. இதை விளக்கிக் கூறிப் புரிந்துணர, மனிதனிடம் காணப்படும் சுயநலம் குறுகிய மனப்பான்மை - கட்புமனப்பான்மை - இவற்றிலிருந்து விடுதலையளித்து, ஆத்ம நீருற்றில் தாகம் தணித்து, மனித மேம்பாடு வளரச் செய்தல் வேண்டும்.

சமாதானம் எனது யாவரும் தருவதில்லை. இது எமது உரிமை, யாரும் பறிக்கவும் முடியாது, நாங்களே தேடிக்கொள்ள வேண்டும். மனிதன் இடர்ற்று வாழ மகிழ்ச்சியோடு வாழ அடிப்படையானது. ஆகவே "சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்". என்ற இயேசுவின் வார்த்தையை மத்தேயு 5 அதிகாரம் கூறுகின்றது.

எமது மக்கள் வாழ்வதற்காகவே போராடுகிறார்கள் நாம் கண்ட அழிவுகளும், அனர்த்தங்களும் இனியும் தொடரக் கூடாது. ஒரு தனி மனிதனது சுதந்திரத்தை, சமூகமோ - நாடோ - இனமோ பறித்தல் ஆகாது. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வதற்கான உரிமையுண்டு. சுருக்கமாகக் கூறினால், இயேசு பிறந்ததன் நோக்கம், மண்ணிலே நல் மனத்தோர்க்கு சமாதானத்தைக் கொண்டுவரவே என்பதை, விண்ணவர் பாடல் மூலம் நாம் அறிந்து கொள்கின்றோம்.

சீர்குலைக்கப்பட்ட சமாதானத்தைச் சிதைந்து போக விடாது. கட்டியெழுப்ப, வாழ்வின் மூச்சு சமாதானம்தான், என்ற வேட்கையுடன் எம் மண்ணையும் மக்களையும் காத்துக் கொள்வதற்கு, இறை பின்னணியில் நின்று அயராது உழைக்க வேண்டும். இறைவன்தான், நம் ஒவ்வொரு உள்ளங்களுக்கும் சமாதானம் தர வேண்டுமே மாறாக - உலகம் தரமுடியாது. சமாதானத் தேடுதலுக்குரியதாகவே இப்பூமியில் மனிதன் பிறந்துள்ளான். இன்று தனிமனிதனின் மனதில் மட்டுமல்ல, குடும்பத்தில், குழுக்களுக்கிடையில், நாட்டில், நிலவிவரும் சமாதானமற்ற போராட்டங்கள் மனமுறிவுகள் இன்னும் பலதரப்பட்ட பிரச்சினைகள் எம் கலாச்சாரத்தையே பிளவுபடுத்தி நிற்கின்றன. இவற்றிலிருந்து விலகி, மனிதன் பிறரால் நிமிர்த்தப்படாது தானாக நிமிர்ந்து வாழவும், வாழ்வின் ஆரோக்கியத்தைக் காத்து, அழகினைப் பேணவும் முன்னின்று, சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பனவற்றினை வளர்த்தெடுத்து, ஒன்றிய ஆளுமை நிறைந்த பூரண அறிவுடைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பத்தோளொடு தோள்கொடுத்து மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி, மெய்ம்மை கொண்ட ஓர் பூரண மனிதனாகப் பரிணமிக்கச் செய்வதன் மூலம், பிழையான கருதுகோள்கள், தவறான அபிப்பிராயங்கள், யாவும் அகற்றப்பட்டு, இதய ஊற்றிலிருந்து பிறக்கும் - உறவு இரக்கங்களான, அன்பு - நட்பு - பாசம் - மரியாதை - பக்தி ஈடுபாட்டை வளர்த்து, எமது மக்களின் ஒருமித்த அபிலாசையாக ஓங்கி ஒலிப்பது சமாதானமே எனும் நம்பிக்கையின் எதிரொலிகளாக, பிறர் மனதில் நல்லெண்ணங்களை ஊன்றி, ஓர் சமாதானப் புறாவாக சேவை செய்து - எமது நாட்டில் அன்பினதும், நீதியினதும் இராச்சியம் மலர்ந்திட, வளர்ந்திட, உறுதுணையாய் நிற்பதே, சமாதானத்தை உருவாக்கும் எமது பொறுப்பு என்பதை அனைவர்க்கும் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றேன்.

---

- **கல்லராகாத இதயமும் களைக்காத மனப்பாங்கும், மற்றவர்களைத் தேவையற்ற விதத்தில் நோகச் செய்யாத அணுகுமுறையும் கொண்டிரு.**

- **பரிசுத்தமான மனம் உடைய ஒருவன் எல்லாவற்றையும் பரிசுத்தமாகவே காண்கின்றான்**

- **மனிதன் எந்தளவுக்கு உயர்ந்தவன் ஆகின்றானோ அந்த அளவுக்குக் கடுமையான சோதனைகளைக் கடந்து சென்றாக வேண்டும்.**

- **மேகத்தைக் காற்று கலைப்பது போல ஆண்டவன் நாமம் உலகப்பேற்றாகிய மேகத்தைக் கலைத்துவிடும்.**

# புதியதோர் உலகம் செய்வோம்

செல்வி. சியாமினி
தரம் –13

'புதியன புகுதலும் பழையன கழிதலும்" என்பதற்கிணங்க இந்த உலகமும் பழையன கழிந்து புதியன புகுந்து பல்வேறு மாற்றங்களை ஏற்றே ஆகவேண்டும். அந்த வகையில் நிகழ்கால உலகிலும் பல ஏற்றமிகு மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பது மாணவர்களின் அவாவாக உள்ளது.

இன்று நாம் 21ம் நூற்றாண்டில் மெல்லக் காலடி வைத்துள்ளோம். சென்ற காலங்கள் யாவும் துன்பமாகிவிட்ட யுகங்கள் ஆகும்.அதனை மாற்றி இனிவரும் காலத்தில் நாம் புதுமைமிக்கதான ஓர் காலமாக மாற்றி அமைக்க வேண்டியது அவசியம். அந்த வகையில் இவ்வுலகை முற்றுமுழுதாக ஒரு புதுமைக்கோளமாக்கி எழில் கொள்ள வைக்க இன்றே நாம் திடசங்கற்பம் பூண வேண்டும். ஏனெனில் எதிர்வரும் காலம் என்பது இன்றைய மாணவர்களின் கைகளிலேயே உண்டு. அதனால்தான் போலும் ''எதிர்காலத்தின் முதுகெலும்பே இன்றைய இளைஞர்கள்" என வர்ணிக்கப்படுகின்றது. எனவேதான் ஒளிமயம் மிக்கதான சுபீட்சத்தோடு கூடிய ஒரு புதிய உலகம் செய்ய வேண்டியது எம் மாணவ சமுதாயத்தின் இன்றியமையாத் தேவையாகின்றது.

இன்றைய உலகில் போரும் அதன் விளைவுகளும் மனுக்குலத்தை ஆட்டிப் படைக்கின்றன. அங்கவீனங்களும் பொருளாதார அழிவுகளும், உயிர் அழிவுகளும் உளப்பாதிப்புக்களும் போரின் விளைவுகளாக உள்ளன. அதனால்தான் யுத்தத்தின் சத்தங்களற்ற புதியதோர் உலகை அனைவரும் அவாவி நிற்கின்றனர். இன்றைய உலகில் அறிவியலும் விஞ்ஞானமும் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் அளப்பரியன. ஆனால் இளைஞர்களிற் சிலர் இவற்றினை தவறான வழியில் உபயோகித்து பல்வேறு சீரற்ற நடைமுறைகளிலும் ஈடுபடுகின்றனர். மேலும் சிலர் நாகரீக மோகம் எனும் அலையில் அள்ளுண்டு சமூகச் சீர்கேடுகளுக்கு தூண்டுகோல்களாக விளங்குகின்றனர். மேலும் மது, மாது, போதை எனும் சீர்கேடுகளினால் உண்டாகும் விளைவுகளை அறியாதவர்களாய் அவற்றுக்கு அடிமையான பலர் தங்கள் வளம்மிக்க எதிர்காலத்தையே இழந்து தவிக்கின்றனர்.

மேலும் மாணவர்களிடையே ஒற்றுமை இன்மைக்கு காரணம் தற்போது குடும்பங்களிலே பெற்றோர் இருவருமே வேலைக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. பணம் உழைப்பதை மட்டுமே இலக்காகக் கொண்டு தமது குடும்ப சூழ்நிலையையே மறந்து வேலை செய்வோராக காணப்படுகின்றனர். மற்றும் மாணவர்களைத் தொலைக் காட்சிக்கும் கணணிக்கும் சிநேகிதர்களாக்கி விட்டு தாம் வெவ்வேறு இடங்களைச் சுற்றிப் பார்க்கத்துடிக்கும் பெற்றோர் ஓர் ரகம். இவற்றினால் மாணவர்கள் மட்டுமா பாதிக்கப்படுகிறார்கள்? இல்லை. இதனால் இளைஞர் சமுதாயமே பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இத்தகைய சூழலை மாற்றுவதற்கு பெற்றோரும் இயலுமானவரை கற்றுக் கொடுத்தல் வேண்டும். இதைத்தான் அன்றைய பாரதி

"வாழும் மனிதருக்கு எல்லாம்
பயிற்றி பல கல்வி தந்து - இந்த
பாரை உயர்த்திட வேண்டும்" என்றார்.

எமது கல்லூரியிலும் மாணவர்கள் புதியதோர் உலகத்தைப் படைப்பதில் ஆர்வமாக உள்ளார்கள். இக்கல்லூரி வளாகமானது 150 ஆண்டுகளைக் கடந்துள்ளது. அடுத்துவரும் காலங்களை புதிய துறைகளினூடாகச் செப்பனிடுவதில் எமது அதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும் முன் நின்று உழைக்கின்றார்கள். இவர்களது செயற்பாடுகளும் எமது கல்லூரியினை புதுமைக்கோலம் பூண வைப்பதோடு புதியதோர் உலகத்தினை அமைப்பதற்குரிய அத்திவாரமாக இட்டுச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இது மட்டுமன்றி எமது கல்லூரி அன்னையின் சகல செயற்பாடுகளும் புதியதோர் உலகத்தில் பரிணமிப்பதையே பறைசாற்றி நிற்கின்றது. கலைத்துறை, விஞ்ஞானத்துறை, விளையாட்டுத்துறை மற்றும் கணணி முதலிய துறைகளின் சேவைகள் பரிணமித்து புதியதோர் உலகை உருவாக்குவதில் அக்கறை கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே புதியதோர் உலகமானது "காலம் என்பது கறங்கு போற் சுழன்று மேலது கீழாய் கீழது மேலாய் மாற்றிடுந் தோற்றம்"

என்ற வாக்கை மெய்ப்பித்து நிற்கும் முகமாக எமது கல்லூரியும் மென்மேலும் சிறப்புக்களைப் பெற்று பல கல்விமான்களையும் அறிஞர்களையும் உருவாக்க மாணவர்களாகிய நாமும் ஒத்துழைப்பு வழங்குவோம்.

# நான் படித்துச் சுவைத்த இலக்கியம்

செல்வி. ச.சர்மிலா
தரம் – 11

தமிழ் மொழியில் காலத்திற்குக் காலம் பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அவை யாவும் தமிழர்களுடைய வீர வாழ்வையும் அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறையையும் கூறுவனவாக அமைந்திருக்கின்றன. காலத்தின் கண்ணாடி எனக் கூறப்படும் இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தில் காணப்பட்ட மக்களின் வாழ்க்கை முறை, சமயநிலை ஆகியவற்றைப் படம் பிடித்து காட்டுகின்றன. மறுதலையாக சமுதாயம் ஒன்றிலே நடைபெறுகின்ற நிகழ்வுகளுக்கு ஏற்ற வகையிலேயே இலக்கியங்களும் தோற்றம் பெறுகின்றன.

இவ்வாறு விளங்குகின்ற இலக்கியங்கள் வரிசையிலே என்னை மிகவும் கவர்ந்த இலக்கியம் இராமாயண இலக்கியமாகும். இதனை வடமொழியில் இயற்றியவர் வான்மீகி முனிவராவார். இக்காவியத்தினை தமிழில் எமக்கு அருளியவர் கம்பர். இக்காப்பியமானது பல காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இராமனைக் காப்பியத் தலைவனாகவும் சீதையை தலைவியாகவும் கொண்டெழுந்த காப்பியம் இதுவாகும். இக்காப்பியத்தில் வருகின்ற ஒவ்வொரு பாத்திரமும் கம்பரால் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் நல்லோராகவும் சிலர் தீயோராகவும் காட்டப்பட்டுள்ளனர். தீயோரால் ஏற்படுகின்ற விளைவுகளும் இங்கு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

உயர்தர மாணவர்களது திறன்களை வெளிக்கொணரும் வகையில் ‘வசந்தம்’ என்ற கையெழுத்துச் சஞ்சிகையினை எமது மன்றம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் கல்லூரிக்கு அவசிய தேவையாகக் கருதப்பட்ட ஒலிபெருக்கிச் சாதனம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு எமது மன்றமும் கணிசமான நிதி உதவி செய்தமையை மகிழ்வுடன் நினைவு கூருகின்றோம். தற்போதும் எமது மன்றம் கல்லூரியில் நடைபெறும் சில விழாக்களைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றது. இவ்வாண்டு நடைபெற்ற ஆசிரியர் விழாவையும் எமது மன்றமே பொறுப்பேற்று நடாத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இந்நிகழ்வில் விருந்தினராக இளைப்பாறிய எமது பிரதி அதிபர் திருமதி.ச.கனகரட்ணம், திருமதி.இ.சிவானந்தன், உப அதிபர் திரு.பொ.த.இராஜா ஆகியோர் பங்குபற்றினர்.

கடந்த காலங்களில் இம்மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக இருந்து மன்ற வளர்ச்சியில் பெரிதும் உதவிய திரு.பொ.கந்தையா, திரு.ந.சிவகடாட்சம், திரு.யே.அன்ரன் பிறின்ஸ், திரு.P.இளமுருகன் ஆகியோரின் பணிகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

150ஆவது அகவையைக் கண்ட எமது கல்லூரி அன்னையை உயர்தர மாணவர் மன்றக் குழந்தைகளாகிய நாம் மேலும் மெருகூட்டுவோம் என உறுதி கூறுகின்றோம்.

செயலாளர்.

# இந்து மாமன்றம்

| | | | |
|---|---|---|---|
| பொறுப்பாசிரியர்கள் | :- திரு.பூ.ஸ்ரீஸ்கந்தராஜா<br>திருமதி.உ.சுரேந்திரகுமார்<br>செல்வி.சி.பகீரதி | தலைவர் | :- செல்வன்.வ.அஜந்தன் |
| | | செயலாளர் | :- செல்வி.ம.நர்மதா |
| | | பொருளாளர் | :- செல்வன்.கோ.சடகோபன் |

எமது கல்லூரி பாரம்பரியமான "கிறிஸ்தவ கல்லூரி " எனும் பெயருடன் 150வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இக்காலகட்டத்தில், இக்கிறிஸ்தவ கல்லூரியில் இந்துமாமன்றத்தின் வளர்ச்சியையும், அதன் இன்றைய நிலைபற்றியும் மிக்க மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் எடுத்து கூறுதல் பொருத்தமானதாகும்.

அரசினர் பாடசாலையாக அமையுமுன் மிஷனரி நிர்வாகத்தின் கீழே சைவசமயமும் போதிக்கப் பட்டதாயினும் சைவ மாணவருக்கென ஒரு மன்றம் இருந்ததாக அறியப்படவில்லை. பிரதம பகுதியிலும் மற்றும் சிரேஷ்ட பகுதியில் பரீட்சை நோக்குடனும் சைவம் கற்பிக்கப்பட்டது. சைவ ஆசிரியர் பற்றாக்குறை இதற்குக் காரணம். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் சைவசமய ஆசிரியர்கள் போதியளவு கிடைத்தமையால், சைவப் பிள்ளைகளுக்கு அவர்களின் சமயக்கல்வி கற்பிக்கப்பட்டதுடன் வழிபாடுகள், விழாக்கள் போன்றவையும் நடாத்தும் வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளிலும், எழுபதுகளின் முற்காலப்பகுதிகளிலும் சைவசமயப் பிரார்த்தனைகளும், சமயகுரவர் குருபூசைகளும், வாணிவிழா முதலியனவும் பழைய (இடிக்கப்பட்ட) அலுவலகத்தின் முன்பாக அமைந்த பெருமரங்களின் நிழலிலேயே இடம்பெற்று வந்தன.

சைவசமய வழிபாடுகளுக்கு முன்னோடியாகப் பண்டிதர் சி.கந்தையா, திருமதி.தெ.குமாரசாமி ஆகியோர் அமைந்திருந்தனர். அவர்களுடன் திருவாளர்கள் N.S.கந்தையா, S.சிற்றம்பலம், க.விசுவநாதன், பொ.கந்தையா, த.நடராசலிங்கம், M.நடராசா ஆகியோரும் இணைந்து ஊக்குவித்ததன் பயனாக 1967ல் "இந்து மன்றம்" உருவானது. திருவாளர்கள் M.நடராசா, த.நடராசலிங்கம் ஆகியோர் எழுபதுகளின் முற்பகுதியில் இந்து மன்றத்தைச் சுறுசுறுப்புடன் இயக்கிவந்தனர். அக்காலப் பகுதியில் ஆசிரியரும் மாணவரும் இணைந்த நிர்வாகத்தில் ஆசிரியர்கள் பொறுப்பான பதவிகளையும், சிரேஷ்ட மாணவர்கள் துணைப் பொறுப்புக்களையும் ஏற்று நடாத்தி வந்தனர். பூசைகளும் விழாக்களும் நடாத்தவென மாணவரிடமிருந்து வெள்ளிக்கிழமை தோறும் உண்டியல் மூலம் நிதியும் சேகரிக்கப்பட்டு வந்தது.

இந்து மன்ற வளர்ச்சியில் குறிப்பிடத் தக்கதொரு முக்கியமான நிகழ்வு, கல்லூரியின் 125வது ஆண்டு நினைவாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் சைவசமய முறைப்படி பிரவேசம் இடம்பெற்ற சம்பவமாகும். திரு.சி.சிவநேசன் அவர்கள் அதிபராக இருந்த அக்காலத்தில் கோப்பாய் தெற்கு வெள்ளெருவை விநாயகர் ஆலயத்திலிருந்து பிள்ளையார், முருகன், சரஸ்வதி ஆகிய தெய்வங்களின் திருவுருவப் படங்கள் மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு இம்மண்டபத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுப் பிரவேசம் நடந்தமையைத் தொடர்ந்து, அம்மண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் இந்து மன்றத்தினரால் பூசையும், பிரார்த்தனையும் - குறிப்பாகச் சிவபுராணம் ஓதுதலும், நற்சிந்தனை வழங்கும் நிகழ்ச்சிகளும் இடம்பெறலாயின். அதிபர் சிவநேசன் அவர்கள் அந்தத் தெய்வப்படங்களுக்கு மஞ்சம் ஒன்று அமைத்துப் பேண வேண்டும் என்ற ஆலோசனையை இந்து மன்றத்திடம் தெரிவித்தார். இதற்கான நிதி வசதி உடனடியாகச் சாத்தியப்படாமையால் அது இலகுவானதாக இருக்கவில்லை. அக்காலத்தில் திருமதி.ச.கனகரத்தினம் தலைமையில் இயங்கிய நிர்வாகக்குழு அடையாள நிதியை ஒதுக்கிவிட்டு மேலதிக நிதி தேடும் முயற்சியில் ஈடுபட்டது. அதிபர் சிவநேசன் அவர்கள் நீங்கியபின் திரு.பூ.க.இராசரத்தினம் அவர்கள் அதிபராக பணியாற்றிய வேளை இம்முயற்சிக்கு அன்னாரின் ஆதரவும் பெருமளவில் இருந்தமையால், கல்லூரியின் பழைய மாணவனும் வெளிநாட்டில் பொறியியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவருமான திரு.தி.யோகீஸ்வரன் அவர்களிடம் கோரிக்கை விடப்பட்டு அதன் பயனாக அன்னாரின் அன்பளிப்பாக ரூ.7500/= மன்றத்துக்குக் கிடைத்தது. திருமதி.சி.இரவீந்திரன் தலைமையில் இயங்கிய செயற்குழு அத்திருப்பணியை நிறைவேற்றி, அந்தத் தெய்வப் படங்களை அத்திருமஞ்சத்தில் வைத்து நித்திய பூசை வழிபாடுகள் செய்யும் முறையை ஏற்படுத்தியது. பிரதி வெள்ளிக்கிழமையும் சகல மாணவரும் அங்கு வழிபாட்டுக்கு ஒன்று கூடுவர். நாளாந்தப் பூசைமுறை ஏற்பட்ட பின் அதே செயற்குழுவால் தோத்திரப் பாமாலை ஒன்று அச்சிடப்பட்டு இலவசமாக இந்து மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. சைவசமய அறிவினை மேம்படுத்தவும், ஆசாரமுறைகளைப் பேணிவளர்க்கவும் இந்து மன்றம் பல முக்கிய பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியது. சமய குரவர்களின் குருபூசைகளையொட்டி கட்டுரைப் போட்டிகள், பேச்சுப்போட்டிகள், திருமுறை ஓதுதல் போட்டிகள் முதலியன நடாத்திச் சான்றிதழ்கள், பரிசில்கள் என்பவற்றை வழங்கும்

பணியை ஏற்படுத்தியது. நவராத்திரி பூசை, வாணிவிழா ஆகியவை வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவதுடன் மாலை கட்டுதல், கோலம் போடுதல் முதலிய போட்டிகளும் நடாத்தப்பட்டு அத்துறைகளில் மாணவர் ஆற்றல்களும் விருத்தி செய்யப்படலாயின.

திரு.த.முத்துக்குமாரசாமி அதிபர் காலத்தில் இந்து மன்றம் சிரேஷ்ட மாணவர்களின் நிர்வாகப்பொறுப்பில் திருமதி.ம.கயிலைமகான், திருமதி.உ.சுரேந்திரகுமார் ஆகிய பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் "இந்துமாமன்றம்" என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. பல வழிகளிலும் இம்மன்றம் சிறப்புற வளர்ச்சி பெற்று வந்தது. பல்வேறு சமயப் பெரியார்கள் வருகை தந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன. 125வது நினைவு மண்டபத்தில் நாளாந்தம் பூசை வழிபாடுகள், நடாத்தப்பட்டன.

தற்போதைய அதிபர் திரு.ந.சிவகடாட்சம் அவர்கள் பதவியேற்ற பின்பு இந்துமாமன்றத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமான கட்டம் ஒன்று ஏற்பட்டது. நடைமுறையில் பிரார்த்தனைகள் இடம்பெற்று வந்த இடம் புனிதத் தன்மையைப் பேணப் பொருத்தமற்றது என்றும், அந்த நோக்கத்துக்கு அமைவாகப் பிரார்த்தனை மண்டபம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற பலத்த அபிப்பிராயம் எழுந்தது. அதிபர் அவர்கள் பெரிதும் ஊக்குவித்தமையால், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எல்லோரினதும் உதவிகள் பெறப்பட்டு இந்த நல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1997 தைப்பூச நாளில் அத்திவாரமிடப்பட்டு, அதே ஆண்டு ஆவணிச் சதுர்த்தி நாளில் இப்பிரார்த்தனை மண்டபம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, அங்கு அந்த மஞ்சம் வைத்துப் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆவணிச் சதுர்த்தித் திருநாளை நினைவு கூர்ந்து, வருடந்தோறும் குறித்த அவ்வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்கள் விசேட அபிடேகம், பொங்கல் பூசை வழிபாடுகளைச் செய்து கொண்டாடி வருகின்றனர். தினமும் காலையில் பூசை வழிபாடும், வெள்ளிக்கிழமை தோறும் காயத்ரி மந்திரம் ஓதுதல், தேவார திருவாசகம் ஓதுதல், நற்சிந்தனை வழங்குதல் முதலியவை நடாத்தப்படுகின்றன. நவராத்திரி பூசை, சமயகுரவர் பூசை, விவேகானந்தர் பூசை, கார்த்திகைத் தீபம் ஆகிய நாட்களில் சிறப்பான பூசை வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இவ்வருடத்தில் மகாசிவராத்திரி விழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த வருட ஆரம்பத்தில் 150வது ஆண்டு விழாவைக் கொண்டாட முதற்கட்ட நிகழ்வாக இப்பிரார்த்தனை மண்டபத்தில் "சரஸ்வதியாகம்" நடாத்தப் பெற்றமையும், அதில் பங்கு கொண்டோர் பலர் பழைய மாணவர்களான அந்தணர்கள் என்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்த யாகத்துக்குத் தலைமை தாங்கியவர் கோப்பாயின் பெருமைமிக்க அந்தணப் பெரியார் சிவஸ்ரீ.மு.பரமசாமிக் குருக்கள் ஆவர். பிரார்த்தனை மண்டபம் இந்துமாமன்றத்தின் பணிகளுக்கெல்லாம் சிகரமாக அமைந்தது. விடாமுயற்சியுடன் தொடர்ந்த கடந்த ஆண்டுச் செயற்குழுவும், பொறுப்பாசிரியர்களும் பல அன்பர்களின் உதவிகள் பெற்று இம்மண்டபத்தில் பல அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளனர். 1998ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வங்கிக்கணக்கில் மன்றச் செயற்பாடுகளின் பின்பு மீதமான பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. பிரார்த்தனை மண்டபத்துக்கெனப் பெறப்பட்ட நிதி உதவிகள் மற்றும் அன்பளிப்புகள் பற்றி இவ்விடத்தில் குறிப்பிடல் பொருத்தமானதாகும்.

| | | |
|---|---|---|
| 1. | அதிபர், ஆசிரியர்கள் | - ரூ. 36, 936.00 |
| 2. | மாணவர்கள் | - ரூ. 4, 083.50 |
| 3. | நலன்விரும்பிகள் | - ரூ. 4, 350.00 |
| 4. | திரு.ச.மகிந்தன் | - ரூ. 1, 500.00 |
| 5. | திரு.க.சிவகுருநாதபிள்ளை (லண்டன்) | - ரூ. 6,000.00 |
| 6. | திரு.சி.சூரியகுமார் (லண்டன்) | - ரூ. 5, 000.00 |
| 7. | திரு.ஞா.குமாரகுலேந்திரன் (சுவிஸ்) | - ரூ. 1, 000.00 |
| 8. | திரு.சி.பிரதீப்ராஜ் (அவுஸ்திரேலியா) | - ரூ. 2, 000.00 |

## *அன்பளிப்புகள் :-*

1. அமரர் க.துரைசிங்கம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தவரால் பிள்ளையார் முகப்புப்படம் வரைந்து கொடுத்தமை வரைந்தவர் ஓவியச்செல்வன் குணம் (அமரர்)

2. அதிபர் திரு.ந.சிவகடாட்சம் தமது தாயாரின் ஞாபகார்த்தமாக ரூ.7000/= பெறுமதியுள்ள இரு குத்துவிளக்குகள்.

3. மாணவர்கள் பித்தளை அன்பளிப்பு - மணி அமைத்தமை - இந்து மன்ற நிதியும் சேர்த்து உதவியது.

4. பழைய மாணவர் திரு.இ.விஜயகுமார் - ரூ.25,000/= - தூண் அமைப்பு, வர்ணம் பூசுதல், மின்னிணைப்பு என்பவற்றுக்காக அன்பளிப்புச் செய்தா் பொறுப்பாசிரியர்களின் வேண்டுதலுக்கமைவாக.

5. திருமதி.பாக்கியம் செல்லத்துரை - மண்டபவேலி அமைக்கும் கம்பிகள் அன்பளிப்பு.

இவ்வாறு அதிபர், பொறுப்பாசிரியர்கள், செயற்குழுவினர், மற்றும் உறுப்பினர் யாவரினதும் அயராத ஊக்கத்தாலும் ஒத்துழைப்பாலும் எத்தனையோ இடர்களின் மத்தியிலும் இந்துமாமன்றத்தின் இலட்சியம் பெரும்பங்கு பூர்த்தியாகியுள்ளமை இறைவன் சித்தம். இவ்வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றோர், ஊக்குவித்து உதவியோர் அனைவர்க்கும் நாம் என்றும் மிகமிக நன்றியுடையோம்.

செயலாளர்

# கிறிஸ்தவ மன்றம்

பொறுப்பாசிரியர்கள் :- திரு.B.S.A.அரியரட்ணம்
திருமதி.R.E.ஜோர்ஜ்

தலைவர் :- செல்வி யோ. ஜெரால்டின் தனுசியா
செயலாளர் :- செல்வி தா. டிலுக்ஷி அன்சியா

எமது கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் 1852ம் ஆண்டு றொபேட் பிறேன் தலைமையில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த ஆங்கிலேய ஆசிரியர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என பல ஏடுகளிலிருந்து வாசித்தறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. ஓய்வு நேரங்களிலும் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிலும் அவ்வாசிரியர்கள் தமது நேரத்தை மாணவர்களுக்கென செலவழித்து அவர்களுக்கு பல வழிகளிலும் கிறிஸ்தவ மதத்தைப்பற்றி அதிகமாகக் கூறி அவர்களுக்கு அறிவையும் ஞானத்தையும் வளர்த்தார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

கிறிஸ்தவ மன்றம் பல செயற்பாடுகளை நடாத்தி வருகின்றது. இடைக்காலத்திலும் இம்மன்றம் சிறப்புற இயங்குவதற்கு இக்கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய திரு.A.Cசெல்வராஜா, திரு.செல்வம்.செல்லையா, திருமதி.செ.செல்லையா, திருமதி.கி.கருணானந்தன், திருமதி.கி.சற்குணசிங்கம், திருமதி.ந.ஞானானந்தன், செல்வி.பூ.நவரத்தினசிங்கம், திருமதி.அருள்ராஜா, திருமதி லூயிஸ் மற்றும் காலஞ்சென்றவர்களாகிய திரு.C.M.அரியரட்ணம், திருமதி.L.T.வில்லியம்ஸ், திரு.கு.நைல்ஸ், திருமதி.றோ.இரத்தினாதிக்கம், திருமதி.சிங்கரத்தினம் போன்றோர் கடுமையாக உழைத்தனர். 1980ம் ஆண்டுக்கு முன்னர் மார்கழி மாதத்தில் நத்தார் பண்டிகைக்காலத்தில் தேவாலயத்தில் "கரோல் ஆராதனை" ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இவ்வாராதனையில் பெரும்பங்கினை மாணவர்களே அளித்து வந்தனர். ஆசிரியர்கள் அவர்களுக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருந்து வந்தனர். 1990ம் ஆண்டின் பின் "ஒளிவிழா" கொண்டாடப்பட்டு வருகிறது. சிற்றாலயம் ஒன்று கல்லூரி வளவிலேயே இயங்கி வருகிறது. இதற்கென இவ்வருடம் சுமார் 50,000 ரூபா புனரமைப்புப் பணிக்கென செலவழிக்கப்பட்டது. அங்கலிக்கன் திருச்சபை ஆயர் அதிவண டியூலிப் டிசிக்கேரா அவர்கள் எமது மன்றத்துக்கென ரூபா.10,000 அன்பளிப்பாகக் கொடுத்து உதவி செய்துள்ளார். அப்பணத்தில் ஒரு பெரிய குத்துவிளக்கும் இரண்டு பெரிய பூவாசும் சிற்றாலயப் பாவனைக்காக வாங்கியுள்ளோம். ஆண்டு தோறும் கோப்பாய் பரி கன்னிமரியாள் தேவாலயம் எமது மன்றத்துக்கென ரூபா.1000 தந்துதவுகின்றது. மேலும் வணஜோர்ஜ் அடிகளாரும் திருமதி.ஜோர்ஜ் அம்மையாரும் எமக்கு ஆண்டுதோறும் 500 ரூபா தந்துதவுவார்கள். இவ்வருடம் Dr.இராஜேந்திராவும் பாரியாரும் திரு.திருமதி.பூ.குலராஜசிங்கம் அவர்களும் தலா ரூ.1000 எமது மன்றத்துக்கென தந்து உதவிசெய்தனர். திருமதி மலர் பஞ்சதுரசிங்கம் எமது மன்றத்துக்கென ரூபா.10,000 தந்துதவினார். அப்பணத்தை வங்கியில் இட்டு அதன் வட்டியினை மாணவர்களுக்கென ஒளிவிழாப் பரிசுகளுக்காகச் செலவிட்டு வருகிறோம். இணைந்த கரோல் விழா பரியோவான் கல்லூரியில் ஆண்டுதோறும் இடம்பெற்று வருகின்றது. அதில் நாமும் பங்கேற்று வருகின்றோம். கிறிஸ்தவ மன்ற அறிக்கை எமது மன்றம் மேலும் வளர உங்கள் யாவரினதும் பங்களிப்பினை எதிர்பார்க்கின்றோம். எமது சிற்றாலயத்தை அமைப்பதற்கு எமது அதிபர்தான் மூலகாரணமாக இருந்தவர் அவர் ஒரு இந்து மகனாக இருந்த போதிலும் எமது மதத்திலும் பற்றுள்ளவர். எமது மன்றச் செயற்பாடுகள் யாவற்றுக்கும் அவர் முன்னின்று ஒத்துழைப்பு வழங்குகின்றார். அவருக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

* நன்றி *

செயலாளர்

# கவின்கலை மன்றம்

| | | | |
|---|---|---|---|
| பொறுப்பாசிரியர்கள் | :-திருமதி.ம.சுப்பிரமணியம் | தலைவர் | :- செல்வன்.ந.சயந்தன் |
| | திருமதி.சி.ஆனந்தஜோதி | செயலாளர் | :- செல்வன்.வ.அஜந்தன் |
| | திரு.ப.கணேசன் | பொருளாளர் | :- செல்வி.எ.அபிராலக்ஷாயினி |

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் முத்தமிழ் மன்றம் என்ற பெயரில் இயங்கி வந்த மன்றம் பல்வேறு கலைப்பணியாற்றி வந்தபோதும் காலச் சூழ்நிலைகளால் அது பின்பு செயலற்றுப் போனது. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாம் ஆண்டில் அதற்குப் புத்துயிர் கொடுத்ததன் விளைவே இன்றைய எமது கவின்கலை மன்றமாகும். கவின்கலைகளின் செயற்பாடுகளைச் சிறப்புற விருத்தி செய்யவும், இலைமறை காய்களாக இருக்கும் கலைத்திறன்களை வெளிக்கொணர்ந்து வளர்க்கவும் இம்மன்றம் பெரும்பணியாற்றுகின்றது. கவின்கலைகள் கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள் மாத்திரமன்றிக் கவின்கலைகளில் ஈடுபாடும் ஆர்வமும் கொண்ட மாணவர்கள் ஆசிரியர்கள் யாவருமே எம்மன்றத்துடன் இணைந்து செயற்படுகின்றனர். தவணைகள்தோறும் ஒருவிசேட நிகழ்வு ஒழுங்குசெய்து கலைத்திறன்களை வளர்த்து வருகிறோம். பாடசாலை விழாக்களில் சிறப்பான கலை நிகழ்வுகளை வழங்குவது மட்டுமன்றிப் பாடசாலைக்கு வெளியேயும் எமது மன்றம் இசை, வில்லிசை, நாடகம் முதலிய நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளது. **"சத்தியவான் சாவித்திரி"** என்ற எமது இசை நாடகம் இந்த வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுகளில் பணியாற்றிய செயற்குழுவினர் எமது மன்றப் பொறுப்பாசிரியர், மற்றும் எம்முடன் இணைந்து செயற்படும் அனைத்து ஆசிரியர்கள், எமக்கு ஊக்கமளிக்கும் அதிபர் அவர்கள் அனைவரும் என்றும் எமது பெரு நன்றிக்கு உரியவர்கள்.

செயலாளர்

# மனையியல் மன்றம்

| | | | |
|---|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : திருமதி.வி.பாலதாசன் | செயலாளர் | : செல்வி.செ.அனுஷா |
| தலைவர் | : செல்வி.ஜெ.பவித்திரா | பொருளாளர் | : இ.கோமளாதேவி |

தொழில்நுட்பப் பாடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் கல்விமுறை ஏற்படுத்தப்பட்டபின் மனைப்பொருளியல் கற்போரின் எண்ணிக்கை அதிகரித்து வந்தமையின் பயனாகத் தோற்றம் பெற்றதே எமது மன்றமாகும். திருமதி.ம.முத்துக்குமாரசாமி ஆசிரியை மனைப்பொருளியலைக் கற்பித்த காலத்திலே இது ஆரம்பிக்கப்பட்டது. மாணவிகள் பலர் இம்மன்றத்தைத் சிறந்த முறையில் செயற்படுத்த அவர் ஊக்கமளித்து வழிகாட்டி உதவினார். பல்வேறு வகையான உணவுப்பண்டங்கள், அலங்காரப்பொருட்கள் என்பவற்றை இம்மன்ற உறுப்பினர் உற்பத்தி செய்து விற்று மன்றத்துக்கு இலாபம் சேர்த்ததுடன் கல்லூரித் தேவைகளுக்கு ஏற்ற உற்பத்திகளையும் செய்து வந்தனர். பொதுவாக இதன் உறுப்பினர்கள் சுயதொழில் உற்பத்திக்குப் பயிற்சி பெற்றுக்கொண்டனர். நாட்டுச் சூழ்நிலைகளால் சற்றுச் சோர்வடைந்து இருந்த எம்மன்றம் மீண்டும் புத்தாக்கம் பெற்றுச் செயற்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

செயலாளர்.

# விஞ்ஞான மன்றம்

பொறுப்பாசிரியர்கள் :- திரு.எஸ்.சிவனேசராஜன்
செல்வி.எஸ்.சண்முகப்பிரியா
தலைவர் :- செல்வன்.என்.செந்தூரன்
செயலாளர் :- செல்வன்.பி.பார்த்தீபன்
பொருளாளர் :- செல்வி.எஸ்.கோபிகா

---

எமது கல்லூரியின் விஞ்ஞான மன்றமானது **"விஞ்ஞான கழகம்"** என்ற பெயரில் 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பொறுப்பாசிரியராக திரு.பொ.கந்தையா அவர்கள் கடமையாற்றி வந்தார். மாணவர்கள் மத்தியில் விஞ்ஞான அறிவை வளர்க்கும் நோக்குடன் கழகம் செயற்பட்டது. பாடசாலைக்கு வெளியிலிருந்து அறிஞர்களை அழைத்து மாணவர்களுடன் கலந்து ரையாடல்கள் நடாத்தப்பட்டன. 1988ல் கல்விக் கண்காட்சி ஒன்று அப்பொழுது மன்றப் பொறுப்பாசிரியர்களாக இருந்த திரு.ந.சிவகடாட்சம், திரு.ச.அருந்தவரட்ணம், திரு.தி.சோமசேகரம் ஆகியோரின் முயற்சியால் நடாத்தப்பட்டது.

விஞ்ஞானக்கழகமானது பின்னர் 1992ல் அப்போதைய அதிபர் திரு.த.முத்துக்குமாரசாமி அவர்களினால் "விஞ்ஞானமன்றம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திரு.த.முத்துக்குமாரசாமி காப்பாளராகவும், பிரதி அதிபரும் விஞ்ஞானப் பிரிவுக்குப் பகுதி தலைவருமாகிய திருமதி.க.இரத்தினசபாபதிப்பிள்ளை அவர்கள் உப காப்பாளராகவும் திரு.ஜே.அன்ரன் பிறின்ஸ் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டனர். செல்வன்.தி.மணிமாறன் தலைவராக இருந்து மன்றத்தைத் திறம்பட வழிநடத்தினார். தொடர்ந்து மன்றம் சிறப்பாக செயற்பட்டு வருடாவருடம் விஞ்ஞான தினத்தை விமரிசையாகக் கொண்டாடியது. 1992இல் இருந்து "விந்தை" என்ற விஞ்ஞான சஞ்சிகையையும் வெளியிட்டு வந்துள்ளது. வருடா வருடம் மன்றம் கொண்டாடிவரும் விஞ்ஞான தினவிழாவில் பல்கலைக்கழக மருத்துவ பீடம், விஞ்ஞான பீடம் ஆகியவற்றை சேர்ந்த பேராசிரியர்களை விருந்தினர்களாக அழைத்துச் சிறப்பித்ததுடன் அவர்களின் சிறந்த சொற்பொழிவுகளை கேட்டு மாணவர்கள் பெரிதும் பயனடைந்துமுள்ளனர்.

மேலும் விஞ்ஞான தின விழாக்களில் விஞ்ஞான வினாடிவினாப் போட்டி, பட்டிமன்றம், நாடகம் என்பனவும் சிறப்பு நிகழ்ச்சிகளாக நடைபெற்றன. இப்போட்டிகளில் எமது அயற்பாடசாலை மாணவர்களையும் இணைத்து விஞ்ஞான அறிவை வளர்க்ககூடிய நிகழ்ச்சிகளை நடாத்தியது.

இந்த வகையில் இவ்வருடமும் விஞ்ஞான தின விழாவை மன்றம் சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயிரிரசாயன மருத்துவ துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.பொ.நவரத்தினம் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண, கல்வி வலய விஞ்ஞான பாட சேவைக்கால ஆலோசகரும் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமாகிய திரு.ச.அருந்தவரட்ணம் அவர்களும் கலந்து கொண்டனர். எமது பாடசாலையின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சியாகக் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் கணித விஞ்ஞான பொது அறிவுப் போட்டி ஒன்றையும் நடாத்தியது. மூன்று பிரிவுகளாக நடாத்தப்பட்ட மேற்படி போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்ற மூன்று மாணவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் சிறப்புரையாற்றிய கலாநிதி.பொ.நவரத்தினம் அவர்கள் மருத்துவ துறைபற்றியும் உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தி சிறந்த சத்துணவுப் பண்டங்களை ஆக்குவது பற்றியும் பயனுள்ள சொற்பொழிவாற்றியது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக எமது மன்றம் தொடர்ந்து செயற்பட்டு மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதுடன் அவர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் பங்காற்றி வருகின்றது.

செயலாளர்

# புவியியல் மன்றம்

| | | | |
|---|---|---|---|
| **பொறுப்பாசிரியர்** | :- திருமதி.ஞா.சிவேந்திரராசா | **உப செயலாளர்** | :- செல்வன்.பா.திருமாறன் |
| **தலைவர்** | :- செல்வன்.த.கேமவர்த்தினி | **பொருளாளர்** | :- செல்வி.ஏ.தேன்மொழி |
| **செயலாளர்** | :- செல்வி.ந.சிந்துஜா | | |

ஆரம்ப காலங்களில் சமூகக்கல்வி மன்றம் என இயங்கிவந்த மன்றமே தற்போது விரிவுபடுத்தப் பெற்று புவியியல் மன்றமாக இயங்கி வருகின்றது. க.பொ.த. சாதாரணதர வகுப்பில் புவியியல் ஒரு விருப்பத்திற்குரிய பாடமாகக் கற்பிக்கப்பட்டதையடுத்துப் புவியியல் கற்கும் மாணவர் தொகை அதிகரித்தது. இதனால் சமூகக்கல்வி மன்றம் புவியியல் மன்றமாகப் பெயர் மாற்றப்பட்டு செயற்படத் தொடங்கியது.

எமது மன்றமானது புவியியல் கற்கும் உயர்தர வகுப்பு, சாதாரணதர வகுப்பு மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு 2001ம் ஆண்டு பங்குனி மாதம் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் புவியியல் தொடர்புள்ள ஆசிரியர்கள் அனைவருமே எம்மன்றத்துடன் இணைந்து இம்மன்றம் சிறப்புடன் செயற்பட உதவி வருகின்றனர்.

புவியியல் மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்க்கும் வகையில் விளக்கப்படங்கள், விளக்க உருவங்கள் போன்றவற்றை அமைத்துக் காட்சிப்படுத்திப் பேணுதல் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைச் சேகரித்து அனைவருக்கும் அறியத்தருதல், புவியியல் அறிவு விருத்திக்கு உதவும் களப்பயணங்களை மேற்கொண்டு தகவல்களைப் பெற்றுத் தொகுத்தல் போன்ற பணிகளை நாம் செய்து வருகின்றோம். தவணையில் இருதடவையேனும் ஒன்று கூடி எமது முன்னேற்றத்திற்கு உதவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றோம். எனவே குறுகிய காலப்பகுதி வளர்ச்சியிலும் எம்மன்றம் பயன்தரும் பல பணிகள் புரிந்துள்ளமையைப் பெருமையுடன் குறிப்பிடுகின்றோம்.

2001ம் ஆண்டு எமது பணிகள் கல்லூரியின் உள்ளேயே அமைந்தன. இவ்வருடம் கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவு என்பதுடன், காலச் சூழ்நிலையும் சாதகமாக அமைந்தமையினால் களப்பயணங்களை மேற்கொண்டு நல்ல பயன்களைப் பெற்றோம். திருநெல்வேலியில் அமைந்துள்ள வானிலை அவதான நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம் என்பவற்றைப் பார்வையிட்டுப் பயன் பெற்றோம். வலிகாமம் மேற்குப் பகுதி, காரைநகர் கசூரினா பீச். கந்தரோடை புதைபொருள் ஆய்வு நிலையம் புத்தூர் நிலாவரை வற்றாத கிணறு, வழுக்கியாறு, பழமை வாய்ந்த பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயம், காரைநகர் சிவன் ஆலயம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைச் சென்று பார்த்துப் பல தகவல்களைச் சேகரித்தோம்.

150வது ஆண்டு நிறைவையொட்டி எமது மன்றம் கல்லூரியில் பெரியதொரு இலங்கைப் படத்தினையும் உலகப்படத்தினையும் நிரந்தரமாகச் சுவர்களில் அமைந்துள்ளது. யாவரும் பொதுவான தகவல்களை இலகுவாகப் பார்த்து அறிந்து கொள்ள உதவியுள்ளது. மேலும் கல்லூரியில் நடந்த கல்விக் கண்காட்சியில் பயனுள்ள பல கற்பித்தல் சாதனங்களை ஆக்கிக் காட்சிப்படுத்தியதுடன் அவற்றைப் பேணியும் வைத்துள்ளது.

எமது மன்றத்தின் ஆரம்ப நிர்வாகிகளான செல்விகள் இ.ரஜனிகா, த,எந்துஜா, த.சௌரியா மற்றும் செயற்குழுவினர்களுக்கும் 2001 - 2002 காலப்பகுதி நிர்வாகிகள் செல்வன்.அ.கஜன், செல்விகள்.சி.நிஷாந்தினி, மோ.பிரகீதா, த.தர்சினி மற்றும் குழுவினர்க்கும் அவர்களின் பணிக்காக நாம் நன்றி கூறுகின்றோம். எமது பொறுப்பாசிரியர்கள் மற்றும் எமக்கு ஊக்கமளிக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் அனைவரிலும் மேலாக என்றும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து நிற்கும் அதிபர் அவர்கள் அனைவருக்கும் மன்றம் என்றும் மிக்க நன்றியுடையது.

**செயலாளர்.**

# வணிக மன்றம்

பொறுப்பாசிரியர்கள் :- திரு.செ.தம்பையா
திருமதி.சா.புவனேஸ்வரன்
செல்வி.சொ.ரதீஸ்வரி.

தலைவர் :- செல்வி.நி.தமிழ்ப்பிரியா
செயலாளர் :- செல்வி.இ.அஜிந்தா
பொருளாளர் :- செல்வன்.ந.தவச்செல்வம்

அதிபர் திரு.த.முத்துக்குமாரசாமி அவர்களின் ஊக்குவிப்பால் வணிகமன்றம் 1992ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி செல்வன்.ஆ.ஜெயபாலசிங்கம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. எமது மன்றம் தனது கன்னி மலரான "பற்று" இதழினை 1992 / 1993 காலப்பகுதியில் வெளியிட்டது. இரண்டாவது "பற்று" இதழினை வெளியிடுவதற்கு முயற்சி எடுத்த பொழுதிலும் 1995 காலப்பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக அம்முயற்சி நிறைவேற முடியவில்லை.

எமது மன்றம் வணிகத்துறை சார்ந்த அறிவினை வளர்ப்பதற்காகப் பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன் அளிக்கத்தக்க வகையில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல், மாணவரிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக மக்கள் வங்கியின் "சிசுஉதான", ஹற்றன் தேசிய வங்கியின் "சிங்கிதி", தேசிய சேமிப்பு வங்கியின் ''ஹப்பன்'' சேமிப்புக் கணக்குகளைச் சம்பந்தப்பட்ட வங்கிகளின் உதவியுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

25.10.2000இல் எமது மன்றம் பாடசாலையில் மாதிரித் தபால் நிலையம் ஒன்றையும், வங்கிச் செயற்பாடு ஒன்றையும் ஆரம்பித்து அதனூடாகச் பாடசாலைச் சமூகத்திற்குச் சேவை ஆற்றி வருவதுடன் மாணவருக்கு நடைமுறை அறிவையும் அளிக்கின்றது. பாடசாலைச் சிற்றுண்டிச் சாலையைத் திறம்பட நடத்துவதற்குத் தனது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் வணிக விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. இவ்விழாவின் ஊடாக வணிகத்துறை சார்ந்த விநாடி வினாப் போட்டிகள், குறுவினாவிடைப் போட்டிகள், கற்றல் கற்பித்தல் சாதன ஆக்கப் போட்டிகள் என்பவற்றை நடாத்தி மாணவர்களின் வணிகத்துறை சார்ந்த அறிவினை வளர்த்து வருகின்றது. அத்துடன் வர்த்தகத்துறை சார்ந்த பயனுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளையும் வணிக விழாவின் ஊடாக வழங்கி வருகின்றது.

29-10-2001 அன்று நடைபெற்ற வணிக விழாவில் விசேட நிகழ்வாக மாணவர்களால் கற்றல், கற்பித்தல் சாதனக் கண்காட்சி நடாத்தப்பெற்றது. கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் 25.10.2002 அன்று செல்வி.நி.தமிழ்ப்பிரியா தலைமையில் வணிக விழா வெகுசிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.நா.வரதராசா அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணக் கல்வி வலய வர்த்தக பாட சேவைக்கால ஆலோசகராக கடமையாற்றி ஓய்வு பெற்ற செல்வி.நா.வேலுப்பிள்ளை, தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் எமது கல்லூரி முன்னாள் வணிக ஆசிரியருமாகிய திரு.சி.மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக்கவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்பு இம்மன்றம் சிறப்பாக இயங்குவதற்கு வழிவகுத்த முன்னாள் ஆசிரியர்களான திரு.S.சந்திரன், திரு.V.தவராசா, திருமதி.உ.தவலிங்கரத்தினம் திருமதி.பா.நந்தகிருஷ்ணகுமார் ஆகியோர் ஆற்றிய பணிகளை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். எமது மன்றம் மேலும் சிறந்த முறையில் செயற்படுவதற்கு அனைவரதும் உதவியை வேண்டி நிற்கின்றோம்.

செயலாளர்

# ENGLISH UNION - REPORT

Staff advisers : Mr.B.S.A.Ariaratnam
Mrs.R.E.George

President : M.Narmatha
Secretary : T.Yaliny

It gives me great pleasure to submit this Report. Our English Union Come into being in 1990. The main aim of our union is to improve The Standard of English . Our English teachers try their best in this regard. They couluet extra closess with a view to devalop the standard of English Day competitions conoluted by the Depurthent of Eblucetism.They show their tolents in Reveling, Recitution orutory, spelling, creetive writing, copy writing and plays. Our Englesh techers always give us encouragement and guidane which raturally push us forwurd. We are greutly incelted to them.

I am proud to mention here that our students first well at the Divisional English Day Competition which was held during the Second tern of the Year 2002

In addition to the competitions, many more activities are also held every Wednesday. A Pupil is allowed to take part in the Thought for the day activity during the assembly time. Quotations. Proverbs and other important Features are put up on the notice board in every classroom to make the children improve their knowledge of English. Moreover Proverbs and quotations are written on the notice board. Furthe, English classes are conducted on weekdays after school times. Englisg Literary meetings are also the school hours once a month. All these activities help the students to improve their knowledge of English.

I take this opportunity to thank our Principal, the staff advisers and the members of our union for their co-operation and guidance.

Secretary.

# விவசாய மன்றம்

பொறுப்பாசிரியர் :- திரு.பூ.ஸ்ரீஸ்கந்தராசா
தலைவர் :- செல்வன்.ஜெ.விஜயகிருஷ்ணன்

செயலாளர் :- செல்வன்.மா.ஜெயகிருஷ்ணன்
பொருளாளர் :- செல்வி.இ.கஜேந்தினி

எமது கல்லூரி விவசாய மன்றம் நெடுங்கால வளர்ச்சி கொண்டது. ஆரம்ப காலத்தில் பெரிய அளவில் மன்றமாக இயங்காவிடினும், விவசாயம் கற்ற மாணவர்கள் இணைந்து அறுபதுகளின் பிற்பகதியின் ஆசிரியர் திர.N.S.கந்தையா அவர்களின் வழிகாட்டலில் ஒரு சங்கமமாக இயங்கி வந்ததாக அறிய முடிகின்றது. விவசாயம் கற்போர் தொகை குறைவாக இருந்தபோதும், அவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் உற்பத்தி செய்யவும், உற்பத்திகளை விற்பனை செய்து பணம் சேகரிக்கவும் ஊக்குவிக்கப்பட்டனர். எழுபதுகளில், விவசாய மாணவர் தொகை சற்று அதிகரித்துக் காணப்பட்டதுடன் *உற்பத்திகளும் அதிகரித்தன. பொறுப்பாசியர்* திருமதி.E.S.லூயிஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் விவசாய மன்றம் தமது உற்பத்திகளை விற்பனை செய்து, அதிக நிதி சம்பாதித்து லாபகரமாக இயங்கி வந்தது. இதே நிலைமை தொடர்ந்து வந்தபோது, நாட்டின் காலச் சூழ்நிலையால் சிலகாலம் உற்பத்திகளின் போக்குப் பாதிக்கப்பட்டு, மன்ற வளர்ச்சி மந்தமாகவே காணப்பட்டது. பொறுப்பாசிரியர் திருமதி.S.திருச்சிற்றம்பலம் ஊக்குவித்து உற்பத்திகளைப் பாடசாலைச் சமூகத்திலேயே சந்தைப் படுத்தக் கூடியதான வாய்ப்பை ஏற்படுத்தி மன்றத்தைச் சோர்வடையாது பேணி வந்தார். பாரிய இடம்பெயர்வுக் காலத்தின் பின் படிப்படியாப் புத்துயிர் பெற்ற எமது மன்றம், இன்றைய அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோரின் சிறந்த வழிகாட்டலையும் ஒத்துழைப்பையும் பெற்று *மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றது.*

செயலாளர்

# மாணவர் கூட்டுறவுச் சங்கம்

தலைவர் :- செல்வி.சொ.ரதீஸ்வரி

செயலாளர் :- செல்வன்.ந.தவச்செல்வம்

பொருளாளர் :- திரு.வி.லிங்கேஸ்வரன்

J 1477 இலக்கத்தின் கீழ் 77. 1961ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் எமது கல்லூரி மாணவர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டது. இது, பிரபல கூட்டுறவாளர், முன்னாள் அதிபர் ஈ.கே.சண்முகநாதன் அவர்கள் ஆசிரியராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது கல்லூரியின் மிகப் பழைமை வாய்ந்த சங்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சங்கம் 1960 - 1970 காலப்பகுதிகளில் பாடசாலை விடுதிச் சாலையைப் பொறுப்பெடுத்தது. ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் கல்லூரிக்கு வரும் விருந்தினர்கள் முதலியோரது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தது. அத்துடன் பாடசாலை ஒப்பந்த வேலைகளிலும் ஈடுபட்டு, அவற்றைச் சிறந்த முறையில் முடித்துக் கொடுத்தது. விழாக்கள், இராப்போசனம், விசேட கூட்டங்கள் முதலியவற்றிற்கு மின்சார வசதி செய்து கொடுத்துதவியது. கல்லூரியில் விவசாயப்பகுதி விருத்தியடையத் தேவையான உதவிகளையும் செய்து கொடுத்தது. சங்கம் இலாபத்தை விசேட நோக்கமாகக் கொள்ளாது, மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், கல்லூரியினதும் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது.

கல்லூரி ஆசிரியர், மாணவர்களுக்குத் தேவையான அனைத்துக் கல்விசார் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கித் தனது சேவையை ஆற்றி வருகின்றது.

கல்லூரியின் சேவையை நோக்கமாகக் கொண்டு இயங்குகின்ற சங்கம், தனது திறமையான செயற்பாட்டின் மூலம் தொடர்ந்து இலாபத்தினை அடைந்து வருகின்றது. இதனைப் பின்வரும் தரவுகள் உறுதியாக்குகின்றன.

| | ருபா | . | சதம் |
|---|---|---|---|
| 1970 | 1349 | . | 02 |
| 1998 | 1867 | . | 04 |
| 1999 | 11,357 | . | 46 |
| 2000 | 12,447 | . | 76 |
| 2001 | 14,214 | . | 45 |

மேலும், 2001ம் ஆண்டு கணக்காய்வு அறிக்கையின்படி, காசு மீதியாக ரூ. 11,548/30 உம், மக்கள் வங்கிக் கணக்கில் சேமிப்புக் கணக்கு மீதியாக, ரூ. 89,465/37 உம் நடைமுறைக் கணக்கு மீதியாக, 143/77 உம் உள்ளது.

இச்சங்க வளர்ச்சிக்கு முன்னோடிகளாக உழைத்த திரு.சந்திரன், திரு.இ.செந்தில்குமரன் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

'கூட்டுறவே நாட்டின் உயர்வு'

செயலாளர்

- **செயல் இல்லாக்கல்வி. நட்டகத்தில் ஏற்றப்பட்ட சுமையைப் போன்றது.**
- **"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்**

# சாரணர் குழு

| | | | |
|---|---|---|---|
| பொறுப்பாசிரியர்கள் : | திருவிலிங்கேஸ்வரன் | அணித்தலைவர் | :- |
| | திரு.வி.சுதாகரன் | வெண்புறா | : செல்வன்.ந.பிரசன்னா |
| | திரு.க.நித்தியானந்தன் | கழுகுஅணி | : செல்வன்.ம.கதீஜன் |
| | திரு.செ.ஜெயரட்ணம் | மயில்அணி | : செல்வன்.சி.ஜெகதீசன் |
| | | அன்னப்பட்சிஅணி | : செல்வன்.நா.யதீசன் |

எமது கல்லூரியின் முன்னால் அதிபர் G.S.செல்லையா காலம் முதல் சாரணர்குழு இயங்கி வருகின்றது. கடந்துவந்த காலங்களில் எமது சாரணர் குழு பல்வேறு பாசறை நிகழ்வுகள், சாரணர் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை பெற்றுள்ளது. ஒரு சிரேஷ்ட சாரணர் பெறக்கூடிய மிகவும் உயர்ந்த சின்னமாகிய ''இராணி சின்னத்தையும்'' (Queen Scout Badge) எமது சாரணர் குழுவைச் சேர்ந்த ஆறு சாரணர்கள் பெற்றுள்ளார்கள் அதே போல் கனிஷ்ட சாரணர் பெறக்கூடிய மிகவும் உயர்ந்த சின்னமாகிய கிறின்கோட் (Green cord) என்னும் சின்னத்தை த.வரதரஜன் பெற்றுள்ளார். மேலும் 1968 ஐப்பசி மாதம் 27-30ம் திகதி வரை நடைபெற்ற கொறோ பொறியில் (Coro boree) எமது சாரணர் குழு பங்குபற்றி பொதுநல அரசுகளின் பிரதம சாரணரான சேர்.சாள்ஸ் மக்வின் அவர்களுடன் கைகுலுக்கியமை குறிப்பிடத்தக்கதாகும். வருடாந்தம் பழைய பூங்காவில் நடைபெறும் சாரணர் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் பங்கேற்று பல சாதனைகள் புரிந்துள்ளார்கள்.

மேலும் எமது சாரணர்குழு எமது பாடசாலையில் நடைபெறும் விழாக்களிலும், பாடசாலை விளையாட்டுப் போட்டியிலும் தமது பணிகளை செவ்வனே ஆற்றிவருகின்றனர். பாடசாலையில் மட்டும் அன்றி எமது கிராமத்திலும், அயற்கிராமங்களிலும் நடைபெறும் கோவில் உற்ச்வங்கள், சிரமதான வைபவங்கள் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி தமது சேவைகளை ஆற்றி வருகின்றனர். அத்துடன் கடந்த பல வருடங்களாக வேலை வாரத்தை மிகவும் சிறப்பாக அனுசரித்து அதன் மூலம் சேகரிக்கப்பட்ட பணம் ரூ.12,375/= கோப்பாய் கிராமிய வங்கியில் வைப்பில் இடப்பட்டுள்ளது. இந்த வருடமும் (2002) புதிய சாரணர் குழு ஆரம்பிக்கப்பட்டதுடன் அவர்களிற்கான சின்னம் சூட்டும் வைபவத்தில்

யாழ் கல்வியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணியிலும் ஈடுபட்டு உள்ளனர்.

இவ்வாறு பல்வேறு வெற்றிகளை பெற்றுவரும் சாரணர் குழுவிற்கு கடந்து வந்த காலங்களில் திரு.T.செல்வராசா, திரு.S.அழகராசா, திரு.S.தம்பு, திரு.J.A.செல்லையா, திரு.E.R.வில்லியம், திரு.வீ.சோமசுந்தரம் திரு.பொ.கந்தையா, திரு.எஸ்.என்கணேசன், திரு.I.S.S.லாட்ஸ்வேர், திரு.ந.சிவகடாட்சம், திரு.மு.தேவராசா, திரு.செ.ஜெயக்குமார், திரு.பே.இளமுருகன் ஆகியோரும் எம்மால் அறியப்பாடாத பலரும் பொறுப்பாசிரியர்களாக எமது சாரணர் குழுவிற்கு வழிகாட்டி வந்துள்ளனர்.

அப்போதைய யாழ்மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு.J.G.அரசரட்ணம், திரு.R.E இராசநாயகம், எமது கல்லூரியின் பழைய மாணவரும், கிளிநொச்சி மாவட்ட சாரணர் அணியாளருமாகிய திரு.புவனேந்திரன், முன்னாள் பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு.கோ.செல்வவிநாயகம், ஆகியோர் எமது சாரணர் குழுவை வழிநடத்தத் தேவையான ஆலோசனைகளை வழங்கி உதவி வந்துள்ளனர். 1961-1970 ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய சாரணர் பொறுப்பாசிரியர் திரு.வீ.சோமசுந்தரம் அவர்களின் வழிகாட்டல் எமது சாரணர் அணியின் பொற்காலம் ஆகும். நாலாவது அகில இந்திய ஜம்போறியில் எமது கல்லூரியின் ஐந்து சாரணர்கள் பங்கேற்று சிறப்பித்துள்ளனர். மேலும் எமது கல்லூரி அதிபர் திரு.ந.சிவகடாட்சம் அவர்கள் பருத்தித்துறை பிரிவு உதவி மாவட்ட ஆணையாளராக பதவி வகிக்கின்றார். எனவே எமது அதிபர் எமது சாரணர் குழுவிற்கு தேவையான வழிகாட்டல்களையும் உதவிகளையும் செய்து எமது சாரணர்குழு வளர்ச்சியடைய வழிகாட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பொறுப்பாசிரியர்.

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நலன்புரிக்கழகம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் : | திரு.ப.கணேசன் | செயலாளர் : | திரு.வி.லிங்கேஸ்வரன் |
| உபதலைவர் : | திருமதி.உ.சுரேந்திரகுமார் | பொருளாளர் : | செல்வி.து.மயில்வாகனம் |

கல்லூரியின் அதிபர், ஆசிரியர், கல்வி சாரா உத்தியோகத்தர் அனைவரையும் அங்கத்தவராகக் கொண்டதாக 2001ம் ஆண்டு அமைக்கப்பெற்ற இச்சங்கம் முன்பு "ஆசிரியர்கழகம்" என வழங்கப்பட்டு வந்த சங்கத்தின் புனரமைப்பு வடிவமேயாகும். அங்கத்துவத்தை விரிவுபடுத்தி, கல்லூரி உத்தியோகத்தர் அனைவரையும் உள்வாங்கிய காரணத்தால் பெயரில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதே தவிர, இதன் நோக்கங்களும் செயற்பாடுகளும் 'ஆசிரியர் கழகத்தை' ஒத்ததாகவே அமைந்துள்ளன. கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவில் இக்கழகத்தை பற்றிக் கூறும் போது முன்னைய ஆசிரியர் கழகத்தின் செயற்பாடுகளையும் சேர்த்தே இங்கு குறிப்பிடுகின்றோம்.

ஆசிரியர் கழகமானது ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் பெருமையுடையது. சகல ஆசிரியர்களையும் நிர்வாகத்திற்குப் புறம்பான வகையில், நட்புறவு மனப்பாங்குடன் ஒன்றிணைத்து, அவர்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டு, கல்லூரி நிர்வாகச் செயற்பாடுகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது, வரையறுக்கப்பட்ட கட்டுக்கோப்புகளுக்கமையச் சிறப்புடன் செயற்பட்டு வந்துள்ளது. எமது கழகத்தின் செயற்பாடுகள் ஒவ்வொரு அங்கத்தவரினதும் உத்தியோக ரீதியான வாழ்வுடன் மாத்திரமன்றி, அவர்களின் சொந்த வாழ்க்கையுடனும் தொடர்புபட்டதாகப் பரந்த அடிப்படையில் இடம்பெறுகிறது; பெற்றுவந்துள்ளது.

1. கழகமானது கல்லூரியில் ஆசிரியர்கள் தங்குமறையில் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறது.

உதாரணம் : இருக்கைகள் திருத்துதல், குடிநீர் வசதிகள்; ஆசிரியர்களின் புத்தகங்கள் கொப்பிகளைப் பேணிவைக்கும் வசதிகளை அமைத்தல்; ஓய்வு நேரத்தில் பயனுள்ள வகையில் வாசிக்கப் பத்திரிகைகள் வாங்கி வைத்தலும் பேணுதலும் போன்றவை.

2. அங்கத்தவர்கள் இடமாற்றலாகிச் செல்லும் போது அவர்களின் சேவை நலன் பாராட்டிப் பிரியாவிடை வைபவம் நடாத்துகின்றோம். அங்கத்தவர் ஓய்வு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் மாணவருடன் இணைந்த வகையில் குறித்த அங்கத்தவரின் சேவைநலன் பாராட்டிப் பிரியாவிடை வைபவத்தை நடாத்துகிறோம்.

3. அங்கத்தவரின் திருமண வைபவங்களில் உறுப்பினர் யாவரும் கலந்து சிறப்பித்து. அன்பளிப்புகளையும் வழங்குகிறோம். அதேபோல அங்கத்தவர்களின் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு வைபவம் போன்றவற்றிலும் கலந்து சிறப்பித்து அன்பளிப்பு வழங்குகிறோம்.

4. அங்கத்தவரின் வீடுகளில் இடம் பெறும் அமங்கல நிகழ்வுகளிலும் யாவரும் கலந்து, துயரில் பங்கு கொண்டு, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறோம். அது சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் பத்திரிகை மூலம் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்தல் வழக்கம்.

5. வருடாந்த மதிய போசன விருந்து வைபவம் ஒன்றினையும் நாம் ஒழுங்கு செய்து நடாத்தி நட்புறவைப்பேணி வருகின்றோம் அக்காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள், ஓய்வு பெற்றவர்கள் ஆகியோரையும் இவ்வைபவத்தில் பங்கு கொள்ளச் செய்வது வழக்கம்.

6. பாடசாலை அபிவிருத்தியுடன் தொடர்பான பல்வேறு பணிகளையும், எமது கழகம் ஆற்றிவருகின்றது. கழக உறுப்பினர்கள் பிரார்த்தனை மண்டப அமைப்புக்கு ரூ.36,936/-ஐ அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

நாம் மாணவருடன் இணைந்து ஒலிபெருக்கிச் சாதனம் ஒன்று ரூ.40,000/- பெறுமதியானதைக் கல்லூரிக்கு வழங்கியுள்ளோம். பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க விளையாட்டு மைதான புனரமைப்பிற்கு என ரூ.40.000/-ஐ கழக உறுப்பினர்கள் வழங்கியுள்ளமை எமது கல்லூரியின் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களான பாடசாலை முகப்பு வளைவு அமைத்தல், தமிழ்த்தாய் சிலை அமைத்தல், போன்றவற்றில் கழக உறுப்பினர்கள் தமது பங்களிப்பை செய்துள்ளனர். மேலும் பாடசாலையில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிற்கும் கழகம் உதவி புரிந்துள்ளது. இவ்வருடம் 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு எமது கழகம் ரூ. 60,000/- பெறுமதியான தகரப்பந்தல் ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளமையையும் மகிழ்வுடன் குறிப்பிடுகின்றோம். பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்கு முற்பணம் வழங்கி உதவி வருகின்றோம்.

எமது கழகமானது சிறப்புடன் செயற்படுவதற்குப் பயனுள்ள ஆலோசனைகளை வழங்கி அதிபர் அவர்கள் ஊக்கமும், ஒத்துழைப்பும் நல்கி வருவதை நன்றியுடன் குறிப்பிடுகிறோம். உறுப்பினர் ஒவ்வொருவரும் கழகத்துக்குப் பூரண ஒத்துழைப்பை நல்கி வருவதால் கழகம் நலிவுறாது செயற்படுகின்றது. அனைவரும் எமது பெருநன்றிக்குரியவர்கள்.

செயலாளர்




கல்லூரி நலன்


MEMORIAL

# ஆசிரியர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்

**தலைவர் :- திரு.செ.தம்பையா**
**செயலாளர் :- செல்வி.சொ.ரதீஸ்வரி**
**பொருளாளர் :- செல்வி.ம.துளசி**

இச்சங்கம் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் 07.07.1961ம் ஆண்டு சிறந்த கூட்டுறவாளராக இருந்த எமது பாடசாலையின் முன்னாள் அதிபராகிய அமரர்.E.K.சண்முகநாதன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தின் பதிவிலக்கம் யா/1489 ஆகும். இச்சங்கத்தின் பதிவிலக்கில் பாடசாலையில் அரசாங்க ஊதியம் பெறும் எவரும் அங்கத்துவம் பெற உரிமையுடையவராவர். அங்கத்தவரிடையே சிக்கன மனப்பான்மையை வளர்ப்பதும் பணத்தேவை ஏற்படும்போது கடன் வழங்கி அங்கத்தவர் கஷ்டங்களைப் போக்குவதும் சங்கத்தின் நோக்கமாகும்.

அங்கத்தவர்களுக்கு சங்க விதிகளுக்கமையச் சாதாரணகடன், விசேட கடன், ஆதனக் கடன், என்பவற்றைக் குறைந்த வட்டி வீதத்திற்கு நீண்ட காலமாக வழங்கி அதிக இலாபத்துடன் இயங்கி வந்துள்ளது. தற்போது சாதாரண கடன், விசேடகடன், மட்டும் வழங்கப்படுகின்றது. சங்கமானது திரு.பொ.கந்தையா, திருமதி.வேதவல்லி கந்தையா ஆகியோரால் நிர்வகிக்கப்பட்ட காலப்பகுதியில் (எழுபதுகளில்) மிக இலாபகரமாக இயங்கி வந்தது. அதிபர் திரு.த.முத்துக்குமாரசாமி காலத்தில் திரு.N.சிவகடாட்சம், திரு.M.சற்குணலிங்கம், திரு.எஸ்.வினோதராசா, திரு.இ.செந்தில்குமரன் ஆகியோரின் நிர்வாகக் காலங்களிலும் சிறப்பாக இயங்கி வந்தது. எதிர்பாராத அசாதாரண சூழ்நிலை காரணமாக 1995ம் ஆண்டில் நலிவடைந்திருந்தது. மீண்டும் 1996ல் திருமதி.க.இரத்தினசபாதிப்பிள்ளை அவர்கள் பதில் அதிபராக இருந்த காலத்தில் தனது சேவையைச் சிறப்பாக ஆற்றத் தொடங்கியதும் குறிப்பிடத்தக்கது.

எமது கல்லூரி 150ஆவது ஆண்டு விழா நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வருடத்தில் பெருமதிப்பிற்குரிய அதிபரான திரு.ந.சிவகடாட்சம் அவர்கள் கடமையாற்றும் இக்காலத்தில் சங்கம் தனது பணிகளைக் கடமை உணர்வோடும், பற்றோடும் இலாப அதிகரிப்பைக் கொண்டுள்ள நிலையில் வெகு சிறப்பாக இயங்குகிறது. சங்கம் மேலும் வளர்ந்து செல்ல அதிபர் அவர்கள் வழிகாட்டுகின்றார்.

மேலும் தற்போது ஒரு அங்கத்தவர் 100ரூபா செலுத்தி அங்கத்தவராகலாம். ஒரு வருட அங்கத்துவத்தின் பின்னர் தனது கடன் விண்ணப்பத்தை மனுச் செய்யலாம்.

## கடன்கள் இருவகையாக வழங்கப்படும்.

(i) சாதாரணகடன்

அங்கத்தவரின் மொத்த வைப்பில் 90% கடனாகவும் அக்கடனுக்கு வருட வட்டியாக 3% அறவிடப்படும்.

அங்கத்தவரின் திரட்டிய சம்பளத்தில் 90% கடனாகவும் அக்கடனுக்கு வருட வட்டியாக 9% அறவிடப்படும்.

அங்கத்தவர்களின் மொத்தச் சேமிப்பிற்கு ஒவ்வொரு வருட எண் பார்வையின்போது 7% வட்டி வழங்கப்படுகிறது. எண் பார்வை அறிக்கை ஒவ்வொரு வருடமும் அவ்வருடப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுக் கோரிக்கைகள் கலந்தாலோசிக்கப்படும். இவ்வருடம் சங்கம் 46 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இச்சங்கம் இரு வங்கிகளில் தனது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது.

## வங்கி இருப்பு விபரம் 15.07.2002 வரை

| வங்கி | க/கு இல | தொகை |
|---|---|---|
| 1) தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் (சேமிப்பு க/கு) | 1005 | ரூ.15836.36 சதம் |
| 2) மக்கள் வங்கி பிராதானவீதி, யாழ்ப்பாணம் (நடைமுறைக் க/கு) | 5049 | ரூ.4311.79 சதம் |

இச்சங்கம் 2001ம் ஆண்டு சுத்த இலாபமாக ரூ.2769.42 ஐப் பெற்றுள்ளது.

1993ம் ஆண்டிலிருந்து இன்றுவரை சாதாரண கடனாக ரூபா 406180 ஐயும், விசேட கடனாக ரூபா 532030 ஐயும் அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**செயலாளர்.**

## ஆசிரியர் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்



## மனையியல் மன்றம்




## நலன்புரிக்கழகம்







இந்து மாமன்றம்



கிறிஸ்தவ மன்றம்




கவின்கலை மன்றம்




விஞ்ஞான மன்றம்



புவியியல் மன்றம்








17 வயதின் கீழ் வலைப்பந்தாட்ட அணி



19 வயதின் கீழ் துடுப்பாட்ட அணி




17 வயதின் கீழ் கரப்பந்தாட்ட அணி



19 வயதின் கீழ் கரப்பந்தாட்ட அணி (ஆண்க



18 வயதின் கீழ் உதைபந்தாட்ட அணி



கல்லூரி மெய்வல்லுனர் அணி (பெண்கள்)



19 வயதின் கீழ் வலைப்பந்தாட்ட அணி



கல்லூரி மெய்வல்லுனர் அணி (ஆண்கள்)

# கல்லூரியின் விளையாட்டுத் துறை

எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சி அமரர் G.S.செல்லையா காலம்தொட்டு 1939ம் ஆண்டு தொடக்கம் விரிவடைந்து வந்துள்ளது. ஆண்களுக்கான கரப்பந்தாட்டமும் சாரணியமும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், பெண்சாரணியம், குருளைச் சாரணியம் ஆகியனவே அன்றைய மாணவர்களின் விளையாட்டுத் துறைகளாகும். பெண்களுக்காக வலைப்பந்தாட்டமைதானம் ஒன்று பெண்கள் விடுதியை அண்டிபழைய அலுவலகக் கட்டிடப்பின் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ஆண்களுக்கான கரப்பந்தாட்டமைதானம் தற்போதைய மைதானத்தின் முன்பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அப்போது பெரிய விளையாட்டு மைதான வசதி இல்லாத போதிலும் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டு வந்தன. ஆங்கிலப் பாடசாலையில் 1939ம் ஆண்டு யூன் மாதம் பீற்றோ, தொம்சன், செல்லையா என்றும் இல்லங்கள் அமைக்கப்பட்டு மாணவர்கள் பிரிக்கப்பட்டு இல்ல ரீதியாகப் போட்டிகள், நிதி சேகரிப்பு போன்றவை நடாத்தப்பட்டு வந்தன. பீற்றோ, தொம்சன் ஆகியோர் கல்லூரி முகாமையாளர்களாக இருந்தவர்கள். திரு.**J.P.**செல்லையா அவர்களின் சேவையை நினைவு கூருமுகமாக இல்லங்கள் அமைக்கப்பட்டன.

1945 இல் ஆங்கிலப்பாடசாலையும் பெண்கள் பாடசாலையும் ஒன்றிணைக்கப்பட்டபோது பெண்கள் பாடசாலை அதிபராக இருந்து அமரரான விற்னி அவர்களின் பெயரிலும் இல்லம் அமைக்கப்பட்டு நான்கு இல்லங்கள் இயங்கி வந்தன.

அதிபர் ECA நவரட்ணராசா அவர்கள். அமரரான போது தொம்சன் இல்லம் நவரட்ணராசா இல்லம் என மாற்றம் பெற்றது. மாணவர் எண்ணிக்கை குறைவடைந்த போது விற்னி இல்லமும் நீக்கப்பட்டு ஏனைய மூன்று இல்லங்களும் செயற்பட்டு வந்தன. அதிபர் E.K.சண்முகநாதன் இல்லம் அவர் அமரராகிய பின் அவரின் நினைவாக பீற்றோ இல்லம் சண்முகநாதன் இல்லம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

இன்று நவரட்ணராசா இல்லம் (சிவப்பு) சண்முக நாதன் இல்லம் (நீலம்) செல்லையா இல்லம் (பச்சை) ஆகிய இல்லங்கள் செயற்பட்டு வருகின்றன.

காலத்துக்குக் காலம் கனிஷ்ட விளையாட்டுப் போட்டிகள், சிரேஷ்ட விளையாட்டுப் போட்டிகள் எனத்தனித்தனியாகவும் சில காலத்தில் ஒன்றாகவும் நடாத்தப்பட்டு வந்துள்ளன. 1975ம் ஆண்டிற்குப் பின்னர் கீழ்ப்பிரிவு எமது பாடசாலையில் மூடப்பட்டதால் சிரேஷ்டமாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளே நடாத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்ப காலத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதற்கு போதிய இடவசதி இல்லாத படியால் A.W.இராச சேகரம் அதிபர் காலத்தில் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் புரியடிக் காணி என்னும் காணியில் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு வந்தன. 1960ம் ஆண்டு ECA நவரட்ணராசா அவர்களின் பெருமுயற்சியால் இன்றைய விளையாட்டுமைதானம் அமைக்கப்பட்டது. அன்னாரின் நினைவாக மேற்படி விளையாட்டுமைதானம் ECA நவரட்ணராசா விளையாட்டுத்திடல் என அழைக்கப்படுகிறது.

திரு.த.முத்துக்குமாரசாமி காலத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த மைதானத்தில் அமைந்திருந்த விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், வோட்ஸ் வேத் மண்டபம் ஆகியன இடித்து அப்புறப்படுத்தப்பட்டு விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இன்று லண்டன் பழைய மாணவர் சங்க உதவியுடன் மைதானம் கிழக்குமேற்காகவும், வடக்குத் தெற்காகவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. படிகள் கட்டப்பட்டுள்ளது திரு.க.விநாயகலிங்கம், திரு.ச.விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பளிப்பாக பெறப்பட்ட 100 லோட் செம்மண் போடப்பட்டு மட்டப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பழைய மாணவர்சங்கம், கல்லூரி அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்புடன் மைதானம் புனரமைக்கப்பட்டுள்ளது. 100மீற்றர் நீளமும் 60மீற்றர் அகலமும் கொண்டதாக விஸ்தரிக்கப்பட்ட இம்மைதானத்தில் லண்டனில் வாழும் அட்வகேட் சுபத்மநாதன் அவர்களின் முயற்சியாலும் பிரான்சில் வசிக்கும் சபாபூரணானந்தன் அவர்களின் முயற்சியாலும் கிறிக்கட் திடல் அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் பழைய மாணவர்கள், லண்டன் பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் முயற்சியால் கூடைப்பந்தாட்டத்திடல், கரப்பந்தாட்டத்திடல், வலைப்பந்தாட்டத்திடல் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. பட்மின்ரன், ரெனிஸ் விளையாட்டுத்திடல் ஆகியன அமைப்பதற்காக முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளக விளையாட்டு வசதிகளுடன் (Pavilian) பார்வையாளர் அரங்கு அமைக்க முயற்சிக்கப்படுகின்றது. திட்டமிட்டவாறு எமது செயல்கள் முன்னேறுமாயின் 200ம் ஆண்டாகிய 2052இல் எமது கல்லூரிமைதானம் பூரணத்துவமான விளையாட்டு வசதிகளைக் கொண்ட விளையாட்டு மைதானமாக விளங்கும்.

விளையாட்டுத்துறைச் சாதனைகளைப் பொறுத்தளவில் காலத்துக்குக் காலம் தங்கள் முத்திரையைப் பதித்தவர்கள் பலர் 1960ம் ஆண்டுக்குப் பின் அமரர் ECA நவரட்ணராசாவின் காலம் எமது கல்லூரியைப் பொறுத்தளவில் ஒரு பொற்காலமாகும். அவரின் காலத்தில் ஹொக்கி, கூடைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம் ஆகியன பாடசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டது. மிகக் குறுகிய காலத்தில் அகில இலங்கை மட்டத்தில் கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த காலமாகும்.

## ஹொக்கி :-

திரு.A.R.இராசையா அவர்களின் பயிற்சியில் எமது கல்லூரி மாணவர்கள் திறமையாகப்பயின்று அகில இலங்கை மட்டத்தில் பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்தவர்கள் பலர் உள்ளனர். 1963, 1968ம் ஆண்டுகளில் யாழ் மாவட்டப் பாடசாலைக் குழுக்களின் சம்பியனாக விளங்கிய இவ்வணியில் ந.ஜெயரட்ணம், K.அரியரட்ணம், R.அம்பலவாணர், R.தங்கராசா, S.தங்கரத்தினம், P.சுந்தரலிங்கம், R.செல்வராசா, R.ராஜதுரை. ஆகியோர் சிறந்த வீரர்களாக விளங்கினர். 1964இல் S.குலேந்திரனும் 1968இல்R.அம்பலவாணரும் யாழ் மாவட்ட அணியில் உபதலைவராகக் கடமையாற்றி உள்ளனர்.

## கரப்பந்து :-

1926ம் ஆண்டு தொடக்கம் கரப்பந்து இன்று வரை சிறந்த விளையாட்டாக இருந்து வருகின்றது. காலத்திற்குக் காலம் சிறந்த விளையாட்டு வீரர்கள் எமது கல்லூரிக்கு பெருமை தேடித்தந்தனர். இவர்களில் S.அருணாசலம், P.விக்னேஸ்வரலிங்கம், S.தேவராயேந்திரன், M.சண்முகராசா, R.இராசதுரை, S.சரவணமுத்து M.சிவராசா, P.தியாகராசா, R.அம்பலவாணர், T.சிறிரங்கன், R.தங்கராசா, N.விவேகானந்தன் ஆகியோர் நினைவு கூரக்கூடியவர்கள். இவ்வாண்டு பெண்களின் கரப்பந்தாட்டக் குழு பொலிஸ் திணைக்கள கிண்ணத்தை சுவீகரித்தது குறிப்பிடத்தக்கது.

## வலைப்பந்து :-

1930ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இவ்விளையாட்டு இருந்து வருகின்றது. 1960, 1972, 1976, 1997, ஆகிய காலங்களில் யாழ் மாவட்ட சம்பியனாகவும், பெரும்பாலான காலங்களில் இரண்டாம் இடத்தையும் பெற்றது பெருமைக்குரியது.

1960ம் ஆண்டில் N.வசந்தா (தலைவி) K.அரவிந்தகுமாரி(உ.தலைவி) V.யோகேஸ்வரி, R.அற்புதமலர், V.சிவபாக்கியம், V.பரமேஸ்வரி, N.மோகனா, S.மல்லிகா ஆகியோரைக் கொண்டகுழு திரு.P.R.அரியபூசனம், திரு.T.செல்வராசா செல்வி.R.அப்பாத்துரை ஆகியோரின் வழிகாட்டலில் கொழும்பு சென்று கொழும்பின் பிரபல பாடசாலைகளுடன் விளையாடி வெற்றிவாகை சூடியதும், அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த அணியினரை வெற்றி கொண்டமையும் கல்லூரிச் சரித்திரத்தில் பதிந்துள்ளது.

## கூடைப்பந்தாட்டம் :-

1960இல் ஆரம்பிக்கப்பட்டு திருவீ.சோமசுந்தரம் அவர்களின் சிறந்த பயிற்சியால் மிகக் குறுகிய காலத்தில் யாழ் மாவட்ட முன்னணி அணியாக விளங்கி அகில இலங்கை மட்டப் பாடசாலை அணியிலும் எம் வீரர்கள் விளையாடிப் பெருமை சேர்த்தமை குறிப்பிட்டுக் கூறக்கூடியது.

1962, 1963இல் யாழ் மாவட்டபாடசாலைகளின் சம்பியனாக "Ivor Van Twest" வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த பாடசாலைச் சிரேஷ்ட குழுவும் 1963இல் சம்பியனான கனிஷ்ட விளையாட்டுக்குழுவும் பாராட்டப்பட வேண்டியன.

எமது கல்லூரிக்கு P.விக்னேஸ்வரலிங்கம், V.இரட்ணஜோதி ஆகியோர் இலங்கைப் பாடசாலை அணியிலும் விளையாடிப் பெருமை சேர்த்தவர்கள். பவுன் ஜேகப், D.R.லோறன்ஸ், K.சோதிலிங்கம், திரு.R.நவராசா, R.சுகுணசபேசன், V.பால்கிருஸ்ணராஜா,C.நவரட்ணம், S.தேவராஜேந்திரன் ஆகியோர் கல்லூரியின் சிறந்த கூடைப்பந்து வீரர்களாவர். இவர்களில் திரு.தேவராஜேந்திரன் பிரான்சில் இருந்து. பணம் அனுப்பி தற்போதைய கூடைப்பந்தாட்டதிடல் வேலைகள் ஆரம்பிக்க உதவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.வீ.சோமசுந்தரம் ஆசிரியரைப் பற்றி இவ்விடத்தில் சில வார்த்தை சொல்ல வேண்டும். அப்பொழுது அவர் பிரமச்சாரியாக இருந்தார். மாணவர்களுடன் மாணவராக பிற்பகல் 7.00மணி வரை மைதானத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிக் கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தவர். இங்கு ஒரு துக்ககரமான நிகழ்வையும். நினைவூட்ட வேண்டும்.

T.திருப்பதிநாதன் என்னும் மாணவன் 11.5.1964இல் பி.ப. 6மணியளவில் பயிற்சி முடிந்து பிரதான வீதியூடாக வெளியேறும் போது பஸ் வண்டியில் மோதுண்டு யாழ் வைத்தியசாலையில் இரவு 11மணியளவில் மரணமானார்.

திருவீசோமசுந்தரம் அவர்கள் பெயரில் அவரின் அன்புக்குரிய மாணவர் திரு.A.M தனநாயகம் அவர்களின் முயற்சியால் நிரந்தர வைப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட்டு அப்பணம் கூடைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட உள்ளது.

## விளையாட்டின் வெற்றிக் களிப்பில் அன்று



யாழ் மாவட்ட வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற ஹொக்கி அணி



யாழ் மாவட்ட வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற வலைப்பந்தாட்ட அணி



தேசியமட்ட அஞ்சலோட்டத்தில் பங்குபற்றிய வீராங்கனைகள்

# வளையாடடுக குழுககள



13 வயதின் கீழ் தாச்சி அணி (ஆண்கள்)



13 வயதின் கீழ் தாச்சி அணி (பெண்கள்)



14 வயதின் கீழ் உதைபந்தாட்ட அணி



15 வயதின் கீழ் கரப்பந்தாட்ட அணி (பெண்கள்)



15 வயதின் கீழ் கரப்பந்தாட்ட அணி (ஆண்க



15 வயதின் கீழ் கூடைப்பந்தாட்ட அணி (பெண்



15 வயதின் கீழ் கூடைப்பந்தாட்ட அணி (ஆண்க



15 வயதின் கீழ் வலைப்பந்தாட்ட அணி

## உதைப்பந்து :-

1960ம் ஆண்டில் உதைப்பந்து விளையாட்டு பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. R.நவராசா, S.குலேந்திரன், தி.கியூபேட் ஆனந்தராசா ஆகியோர் தங்கள் திறமையை இவ் விளையாட்டிலும் காட்டினர். இன்றும் எமது பாடசாலையில் எமது வீரர்கள் இவ்விளையாட்டில் முன்னனியில் நிற்கின்றனர்

## பட்மின்ரன் :-

1966இல் திரு.R.S.கந்தசாமி ஆசிரியர் அவர்களின் ஊக்கத்தால் இவ்விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டு திரு.R.இராமநாதன்,P.B.சதாசீவன், K.கமலசந்திரன், T.ருத்திரமாணிக்கர் ஆகியோர் இவ்விளையாட்டில் சிறந்த வீரர்களாக இருந்தனர்.

## குருளை சாரணர் :-

திரு.E.R.வில்லியம்ஸ், திருமதி.L.T.வில்லியம்ஸ், திருமதி.வேதவல்லி கந்தையா திருமதி.ஆ.சிவமணி ஆகிய ஆசிரியர்களின் வழிகாட்டலில் செயற்பட்ட இக்குழுவினர் யாழ் மாவட்டத்தில் பல சாதனைகள் நிகழ்த்தியவர்கள். கனிஷ்ட பிரிவு எமது பாடசாலையில் நிற்பாட்டப்பட்ட பின் இவ்வமைப்பு செயல் இழந்தது.

## உடற்பயிற்சி :-

எமது கல்லூரியில் பெண்கள், ஆண்கள் உடற்பயிற்சிக்குழுக்கள் காலத்துக்குக் காலம் பல முறை கோட்ட, வலய, மாவட்ட சம்பியனாக வெற்றிவாகை சூடியுள்ளனர்.

## உள்ளக விளையாட்டு :-

கரம், ரேபிள்ரெனிஸ் ஆகிய விளையாட்டுக்கள் ஊக்குவிக்கப்பட்டு வலய மட்டப் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்கேற்று வருகின்றனர்.

## மெய்வல்லுநர் போட்டிகள் :-

மெய்வல்லுநர் போட்டிகள் கோட்ட, வலய, மாவட்ட, தேசிய நிலைகளில் எமது மாணவர்கள் காலத்துக்குக் காலம் சாதனை நிகழ்த்தி உள்ளனர். 64 - 69ம் ஆண்டு காலத்தில் R.அம்பலவானர், S.செல்வராசா ஆகியோரும் மாகாணமட்டத்தில் திரு.R.பிரபாகரன், திரு.S.தர்மராசா ஆகியோரும் அன்று இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். 2001இல் செல்வி.ஆ.பாமினி தேசியமட்டத்திலும் 2002இல் எமது பாடசாலை அஞ்சல் குழு தேசியமட்டப் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளனர்.

1972ம் ஆண்டுக்கால கட்டத்தில் பரமேஸ்வராக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, எமது பாடசாலை ஆகிய கல்லூரிகள் பங்கேற்ற முக்கோண விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டுள்ளது.

அன்றைய காலத்தில் விளையாட்டு நிகழ்வில் முக்கிய அம்சமாக உள்ளது மைல் ஓட்டப்போட்டியாகும் இப்போட்டியில் வெற்றியீட்டுபவர் "மைலர்" என அழைக்கப்பட்டனர். இன்றும் இவர்களில் சிலர் திரு.குமாரசாமி, திரு.அங்கமுத்து போன்றவர்கள் தங்கள் கடந்த கால அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதற்கு கடந்தகாலங்களில் திரு.A.R.இராசையா, திருமதி.R.ஞானானந்தன், திரு.T.செல்வராசா, திருமதி.S.C.கருணானந்தன், திருமதி.P.அருள்ராசா, திருமதி.A.நேசதுரை, திருமதி.K.சாமுவேல் திரு.S.நம்பியாரூரன், திரு.M.தங்கராசா. திரு.ஆ.தேவராசா, திரு.v.தவராசா, திருமதி.S.சகுந்தலாதேவி, திரு.இளமுருகன் ஆகியோரும், கூடைப்பந்தாட்டத்தில் திரு.வி.சோமசுந்தரம், திரு.செ.செல்வச்சந்திரன், கரப்பந்தாட்டம் திரு.M.A.J.இரட்ணம், திரு.S.சேவற்கொடியோன் திரு.V.தெய்வேந்திரம், திரு.S.கதிர்காமநாதன், திரு.S.சிவசுப்ரமணியம், திரு.மு.தேவராசா, திரு.V.தவராசா, திரு.இ.கிருபராசா, செல்வி.L.நவரட்ணசிங்கம் ஆகியோரும், வலைப்பந்தாட்டத்தில். செல்வி.R.அப்பாத்துரை, திருமதிகிருபா இராசையா, திருமதி.S.சகுந்தலாதேவியும் உதைப்பந்தாட்டத்தில் திரு.S.கதிர்காமநாதன், திரு.S.சச்சிதானந்தன், திரு.செ.செல்வரட்ணம், திரு.M.தங்கராசா, திரு.ரஞ்சித் சைலேந்திரகுமார், திரு.F.A.சில்வெஸ்ரர், திரு.செ.செல்வச்சந்திரன் பட்மின்ரனில் திரு.R.S.கந்தசாமி என்பவர் கடந்த காலங்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர்.

இக்கட்டுரை தொடர்பாக பல முன்னாள் விளையாட்டு வீரர்களிடமும், பயிற்சி ஆசிரியர்களிடமும் தகவல் கேட்டிருந்தோம் தகவல் தந்தவர்களின் கட்டுரைகள் இம்மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை வீரர்கள் முன்னாள் ஆசிரியர்கள் தங்கள் நினைவுகளை எழுதி அனுப்புவார்களாயின் கிடைக்கப்பெறும் மேலதிக தகவல்களும் விடுபட்ட விடயங்களும் இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டு அடுத்து வெளிவர இருக்கும் சஞ்சிகையில் வெளியிடப்படும் எமது வேண்டுகோளிற்கு இணைங்கத் தகவல் தந்துதவியவர்களிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு தங்கள் உபகரணங்களை வழங்கி உதவும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கழகத்தினருக்கும் எமது நன்றிகள்.

அதிபர்

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

***நிர்வாகிகள் – 2001 – 2002***

| | | |
|---|---|---|
| **தலைவர்** | :- | **அதிபர்** |
| **உபதலைவர்** | :- | **திருமதி.ச.கனகரட்ணம்** |
| **செயலாளர்** | :- | **திரு.யோசப்தாவீது** |
| **உபசெயலாளர்** | :- | **திரு.ஆ.சக்திவடிவேல்** |
| **பொருளாளர்** | :- | **திரு.செ.பகீரதன்** |
| **கணக்காய்வாளர்** | :- | **திரு.வ.முருகேசு** |
| | | **திருமதி.ம.சிவபாதம்** |
| | | **செல்வி.சொ.ரதீஸ்வரி** |

**குழு உறுப்பினர்:- பெற்றோர்**

1. திரு.க.விஸ்வலிங்கம்
2. திரு.க.இராசதுரை
3. திரு.சி.சண்முகநாதக்குருக்கள்
4. திரு.சி.சண்முகம்
5. திரு.செ.நாகமணி
6. திரு.க.செல்லத்துரை
7. திருமதி.த.சுகந்தி
8. திருமதி.ம.கனகலிங்கம்

நலன்விரும்பி திரு.S.K.தங்கவடிவேல்

**ஆசிரியர்கள்**

1. திரு.செ.தம்பையா
2. திரு.வி.லிங்கேஸ்வரன்
3. திரு.செ.ஜெயரட்ணம்
4. திரு.சு.சிவனேசராசன்

பாடசாலை அபிவிருத்தியில் பெற்றோரை இணைக்கும் முகமாக 1955ம் ஆண்டில் இருந்து பெற்றோர் ஆசிரியர்கள் இணைந்த அமைப்பாக பெற்றோர் ஆசிரியர் சங்கம் இயங்கி வந்துள்ளது. இச்சங்கச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்யும் முகமாக காலத்துக்குக் காலம் கல்வித்திணைக்களத்தால் வழிகாட்டல் சுற்றிக்கைகள் வெளியிடப்பட்டு வந்துள்ளன. 31-01-1979ல் வெளியிடப்பட்ட சுற்றுநிக்கைகளின் படி சங்கத்தின் பெயர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரை உள்ளடக்கும் வகையில் பாடசாலை அபிவிருத்திச் சபைகள் 1990ம் ஆண்டு தொடக்கம் இயங்கத் தொடங்கின. இவ்வகையில் பாடசாலை அபிவிருத்தியில் பாடசாலைச் சமூகத்தை இணைக்கும் வகையில் அதிபர் தலைமையில் இவ்வகை அமைப்புக்கள் இயங்கிவந்துள்ளன.

இவை பாடசாலை அபிவிருத்தியை மையமாகக் கொண்டு இயங்கிவந்த போதும், பாடசாலையில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவியுள்ளன. ஆசிரியர் பற்றாக்குறையின்போது தொண்டராசிரியர்களை நியமித்தும், அலுவலகப் பணியாளர் வெற்றிடங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு பதிலாட்களை நியமித்தும், பாடசாலை மின் கட்டணத்தைச் செலுத்தியும், வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்வி உபகரணம் மற்றும் நிதி அன்பளிப்புகள். செய்தும், பௌதீக அபிவிருத்திக்கு அப்பால் செயலாற்றியுள்ளன. பாடசாலை விவசாயத்தோட்டம் பராமரித்தல், பாடசாலை எல்லைகள் பராமரித்தல், பாடசாலையைத்தரம் உயர்த்தல், பாடசாலைக் குறைபாடுகளை உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டுவருதல், போன்றவை அவற்றின் மேலதிக பணிகளாகும் பெற்றோர் சந்திப்புக்கள் நடாத்தி மாணவர்களின் குறை நிறைகளைப் பற்றிக் கலந்துரையாடி அவர்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தும், பாடசாலைத் தேவைகள் தொடர்பாக அவர்களுக்கு பெற்றோர்களிடம் நிதி, கட்டிடத்துக்கு தேவையான பனை மரங்கள், மைதான விருத்திக்கு செம்மணல் போன்றவை பெறப்பட்டுள்ளன. காலத்துக்குக் காலம் இவ்வகை உதவிகள் பெறப்பட்டுள்ளதால் இவ்வகை உதவி புரிந்த அனைவரையும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

1954 - 1955ம் ஆண்டு காலகட்டத்தில் திரு.A.W.இராஜசேகரம் அதிபர் காலத்தில் மனையியல் கூடமும், தற்பொழுது உள்ள கிணறும் அமைக்கப்பட்டன. அக்காலத்தில் இவ்வமைப்பு இயங்காத போதிலும் பெற்றோர்களின் முழுமையான ஒத்துழைப்பு இவ்வேலைத்திட்டத்திற்கு பெறப்பட்டுள்ளது. அக்காலத்தில் கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் இல்லை. கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள ஒரு நிலம் குத்தகைக்குப் பெறப்பட்டே விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்டது இதற்கும் பெற்றோரின் ஒத்துழைப்பு பெறப்பட்டது.

1957ல் பாடசாலையில் நிலவிய சீர்கேடுகளைக்களையும் முகமாக பாடசாலைக்கு வெளியே 15-04-1957ல் கிராமச் சங்கத் தலைவர் திரு.நா.அருளம்பலம் தலைமையில் பெற்றோர், ஆசிரியர் இணைந்து கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. இதன் தலைவராக திரு.க.நாகலிங்கமும் இணைச் செயலாளர்களாக திரு.மு.குமரையா திரு.க.இ.குமாரசாமி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வமைப்பு கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு.M.S.இராசசிங்கம், செயலாளர் டானியல் ஜெயரட்ணம் அவர்களுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் அதிபர் E.C.A நவரட்ணராஜா 1957ல் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவர் காலத்தில் இச்சங்கம் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து பல பணிகளை ஆற்றியுள்ளது. ஹட்சின் மண்டபம், பாக்கியம் வில்லியம்ஸ் மண்டபம், விளையாட்டு

மைதானம் அமைப்பு ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டன. இவரின் பணிக்குத் தேவையான பனை மரங்கள் வைத்தியர் பொன்னையா அன்று பெற்றோரால் வழங்கப்பட்டதாகவும்; அவரே ஹட்சின் மண்டபத்தை 1958ம் ஆண்டு மார்கழி மாதம் திறந்து வைத்த தாகவும் தெரியவருகின்றது பாக்கியம் வில்லியம்ஸ் மண்டபம் அவர்களின் பிள்ளைகள் Dr.(செல்வி) வில்லியம்ஸ் Dr.துரையப்பா ஆகியோரின் உதவியால் அமைக்கப்பட்டு 16.02.1960ல் திறந்து வைக்கப்பட்டது. 9.07.1960ம் ஆண்டு இல்ல விளையாட்டுப் போட்டிகள் புனரமைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின.

1960ம் ஆண்டில் கல்லூரியை அரசினர் பொறுப்பேற்கும்போது தேவாலயநிர்வாகத்துடன் எல்லை தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டன அவ்வேளையில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. திரு.க.நாகலிங்கம் தலைமையில் திரு.S.J.குணசேகரம், திரு.M.S.இராசசிங்கம் திரு.க.இ.குமாரசாமி, திரு.K.S.முத்துவேற்பிள்ளை திரு.K.இரட்ணசபாபதி போன்றோர் அதிபர் E.C.A.நவரட்ணராசா அவர்களுக்கு பக்க பலமாக நின்று பாடசாலைக்கு நன்மை அளிக்கக் கூடியதாக அதிக நிலத்தைப் பெற்றுக் கொள்ள உதவியுள்ளனர்.

திரு.E.K சண்முகநாதன் அவர்கள் பெற்றோர் ஆசிரியசங்கத்தைப் புனரமைத்தார். செயலாளராக திரு.M.Sஇராசசிங்கம் தெரிவு செய்யப்பட்டு அதிபர் தலைமையில் சங்கம் புதிய உத்வேகத்துடன் செயல்பட ஆரம்பித்தது அமரர் நவரட்ணராசா நினைவாக ஆய்வுகூடம் அமைக்கும் திட்டத்திற்கு தேவையான நிதி சேகரிப்பிலும், சண்முகநாதன் மண்டபத்தை அமைப்பதிலும், பாக்கியம் வில்லியம்ஸ் மண்டபத்தில் ஆசிரியர் பாவனைக்கு இரண்டு மலசலகூடம் அமைத்ததும், ஆசிரியர்களின் சைக்கிள் தரிப்பிடத்திற்காக விறாந்தையை அமைத்தும் மேற்கொண்ட பணிகளுக்கு கலைவிழாக்கள் நடாத்தி அட்டைகளில் புள்ளடி இட்டு பணம் சேகரித்தும், பனை மரங்கள் பல அன்பளிப்பாகப் பெற்றும், தனது பங்களிப்பைச் செய்தது. மாணவர் கூட்டுறவு சங்கத்திற்காக நிரந்தர கட்டிட மொன்று அமைக்குமுகமாக நவரட்ணராசா மண்டபத்திற்கு முன்னால் அத்திவாரம் போட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இக்கட்டிடம் பூரணப்படுத்தப்பட முடியாமல் போய்விட்டது.

இவரைத் தொடர்ந்து அதிபர் பதவியேற்ற திரு.மு.கார்த்திகேயன் குறுகிய காலம் பதவி வகித்தபோதிலும் நவரட்ணராசா மண்டப நிதி சேகரிப்புக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தூடாக பெரும் பணியாற்றியுள்ளார்.

அடுத்து அதிபர் பதவியேற்ற திரு.S.சிவசுப்பிரமணியம் காலத்தில் அபிவிருத்தி வேலைகளில் கவனம் செலுத்தாது பாடசாலையின் பெயரை மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

திரு.சே.கந்தசாமி அதிபர் காலத்தில் பெயர் மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் முன் எடுத்த போதிலும் செல்லையா மண்டபம் அமைக்கப்பட்டு 25.10.74ல் வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு கந்தப்பிள்ளையால் திறந்து வைக்கப்பட்டது. அமரர் G.S.செல்லையாவின் உருவப்படம் திரு.E.K.சண்முக நாதனால் திரை நீக்கம் செய்யப்பட்டது. E.C.A.நவரட்ணராசா மண்டப கீழ்த்தள வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட நிலையில் அவர் வெளிநாடு சென்றதால்; அவரால் தொடங்கப்பட்ட பணிகள் திரு.சி.சிவநேசன் அவர்களால் தொடரப்பட்டது.

05.06.75ல் இக்கீழ் மாடி திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடத்தை கல்வி அதிகாரி திரு.N.R.பாலசிங்கம் திறந்து வைக்க, E.K சண்முகநாதன் உயிரியல் ஆய்வு கூடத்தையும் திரு.க.கனகலிங்கம் இரசாயன ஆய்வு கூடத்தையும் அமரர் E.C.A.நவரட்ணராசாவின் படத்தை திரு. P.விக்னேஸ்வரலிங்கமும் திறந்து வைத்தனர்.

இத்னைத் தொடர்ந்து மேல்மாடி அமைக்கும் வேலைகள் தொடரப்பட்டு அதனுடன் இணைந்ததாக ஆண், பெண்களுக்காக இரண்டு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு 23.07.76அன்று அமெரிக்க தூதரக கலாசார அதிகாரி றிச்சாட் குரோஸ் என்பவரால் திறந்து வைக்கப்பட்டன

18.06.1976 அன்று திட்டமிடல் பணிப்பாளர் திரு.K.லோகேஸ்வரன் அவர்களால், பிரார்த்தனை மண்டபத்தின் அடிக்கல் நாட்டப்பட்டு 01.06.77ல் இக்கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பால் காய்ச்சப்பட்டு 17.06.77ல் அப்போது யாழ் அரச அதிபராக இருந்த திரு.W.A.L விஜயபாலர் அவர்களால் 125ம் ஆண்டு நினைவாக கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சுவாமிப் படங்கள் வெள்ளாளருவைப் பிள்ளையார் கோயிலில் இருந்து மங்கள வாத்தியம் முழங்க ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து சண்முகநாதன் மண்டபத்தில் மேலும் இரண்டு வகுப்பறைகளை அமைக்கும் முகமாக 09-02-79ல் பிரபல தொழிலதிபர் திரு.சின்னத்துரை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அவ்வேலைகள் ஆரம்பமாகி குறுகிய காலத்தில் கட்டட வேலைகள் முடிக்கப்பட்டது. முழுநேர முறைசாரா பயிற்சி வகுப்புக்கள். ஆரம்பிக்கப்பட்டு தையல் உடையமைப்பு ஆங்கிலப் பயிற்சி நெறி என்பன ஆரம்பிக்கப்பட்டன. 20.06.79ல் மனையியல் கூடம் மீண்டும் திருத்தப்பட்டு பாவனைக்கு விடப்பட்டது.

1977ல் ஆரம்ப பிரிவுகள் திணைக்களத்தால் படிப்படியாக மூடப்பட்டபோது அதனை எதிர்த்து பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மீண்டும் வகுப்புக்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தபோதும் எமது கிராமத்தின் கோப்பாய் நாவலர் பாடசாலை கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் ஆகியவற்றின் வளர்ச்சி கருதி இம்முயற்சிகள் கைவிடப்பட்டன. இவ்வாறே கல்லூரியின் பெயர் மாற்றும் தொடர்பான முயற்சிகளும் இவர் காலத்தில் கைவிடப்பட்டன.

இவரை அடுத்து பதவியேற்ற திரு.செ.செல்வரட்ணம் வெல்டிங், மின்னிணைப்பு போன்ற முறைசாரப்பிரிவு கற்கை நெறிகளை ஆரம்பித்து அதற்கு வேண்டிய நிரந்தரக் கட்டிடம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதற்கான அத்திவார வேலைகள் ஆரம்பித்த நிலையில் இளைப்பாறினார் இவரை அடுத்து பதவியேற்ற திருமதி.ப.அருள்ராஜா அவர்கள் முறைசாராப் பிரிவு கட்டிட வேலைகளை பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் உதவியுடன் மேற்கொண்டார்.

திரு.P.K.இராஜரட்ணம் முறைசாராப் பிரிவு கட்டிட வேலைகளைத் துரிதப்படுத்தி அதனை நிறைவு செய்தார். இவர் காலத்தில் இந்திய இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலையில் தங்கியிருந்ததால் பாடசாலை உடமைகள் பல களவாடப்பட்டன சேதமாக்கப்பட்டன. பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவியுடன் அவற்றை புனரமைத்து பாடசாலையை இயங்கச் செய்தார் க.பொ.த.(உ/த) வர்த்தகப் பிரிவை பாடசாலை அபிவிருத்திச்சங்க வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கை எடுத்து வர்த்தகப் பிரிவை ஆரம்பித்தார். கட்டிடப்பற்றாக் குறையைத் தீர்க்க 10 வகுப்பறை கொண்ட மாடிக் கட்டடத்தை அமைக்கவும், 2000, கலன் நீர் கொள்ளக் கூடியதாக நீர் தாங்கியினை அமைக்கவும் நடவடிக்கை எடுத்தார். நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலைகளால் இவை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டன. மீண்டும் வடக்குப்பக்கப் பாதை திரு.சி.க.திருச்செல்வம், செல்வி.ந.பாக்கியம் திரு.ந.சிவகடாட்சம் ஆகியோரின் முயற்சியால் திறக்கப்பட்டது. பாதைக்கான காணிகள் திரு.ந.சிவகடாட்சம் திரு.அ.சுப்பிரமணியம் திரு.மு.சிவபாதம் திருமதி.பே.ரட்ணசிங்கம், சிங்கப்பூர் செல்லையா ஆகியோரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. கேற்று திரு.சு.முத்துக்குமாரசாமியால் அன்பளிப்பு செய்யப்பட்டது. மாணவர்களின் நிதி அன்பளிப்பும் பெறப்பட்டு கேற்று நிறுவப்பட்டது.

இவரைத் தொடர்ந்து பதவி ஏற்ற திரு.த.முத்துக்குமாரசாமி அவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் அழிக்கப்பட்ட பழைய கட்டடங்களிலிருந்து பெறப்பட்ட மரம், ஓடு, ஆகியவற்றைக் கொண்டு பல தற்காலிக வகுப்பறைகளை அமைந்தார். எல்லைகள் பேணப்பட்டன. அலுவலகத்தின் முன்னால் குழாய்க்கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டது. கட்டடங்களில் பெரும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்காலிக கொட்டகைகள் திணைக்கள நிதி உதவியில் மேற்கொள்ளப்பட்டன பழைய மாணவர்களினூடாக மேற்கொள்ளப்பட்ட நிதி சேகரிக்கும் நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து செயற்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக, தமிழ்ச்சங்கத்தின் ஊடாக 40,000 ரூபாவை நிரந்தர வைப்பில் இட்டது. அரசாங்க அதிபர் கா.மாணிக்கவாசகர் தனது மாமனார் பரமலிங்கம் நினைவாக வழங்கிய 10,000 /= பரிசளிப்பு நிதியாக நிரந்தர வைப்பில் இட்டும், பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி சங்கத்தினர் வறிய மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு நிதியாக வழங்கிய 20,000 ரூபாவை நிரந்தர வைப்பிலிட்டும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளை பௌதீக வள அபிவிருத்திநோக்கில் இருந்து கல்வி அபிவிருத்தியை நோக்கி செல்வதற்குரிய மாற்றங்களை ஏற்படுத்தினார். 1995ம் ஆண்டு இடம் பெயர்வின் பின் பாடசாலையை பொறுப்பேற்று நடாத்திய திருமதி.க.இரத்தினசபாபதிப்பிள்ளை அவர்கள் உடைந்த கட்டடங்களைத் திருத்தி பாடசாலையை மீளவும் இயங்க ஆரம்பித்த போது நாம் எம்மாலான உதவிகள் வழங்கி உதவியுள்ளோம்.

இன்றைய அதிபர் நடைபெறுகின்றன. கல்வி அபிவிருத்தி, பௌதீகவள அபிவிருத்தி இரண்டையும் சமாந்தர நோக்கில் முன்னெடுத்துச் செல்கின்றார். மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் பாடசாலை விட்டதும் நடைபெறுகின்றன. மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. திரு.செ.தம்பையா ஆசிரியர் மாதாந்தம் வழங்கும் 200 ரூபா நிதியுடன், நிரந்தர வைப்பில் இருந்து பெறப்படும் வட்டிப் பணத்தின் உதவியுடன் தரம் 11 வரை ஐந்து மாணவர்களுக்கு தலா 100/= படியும் க.பொ.த (உ/த) வகுப்பு இரண்டு மாணவர்களுக்கு தலா 200 /= படியும் மாதாந்த கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டு வருகிறது.

பாடசாலை அபிவிருத்திப் பணிகளில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. G.T.Z நிறுவன உதவியுடன் 125வது நினைவு மண்டப் புனரமைப்பும் அதனை பாடசாலைத் தேவைக்கேற்ப மாற்றியமைத்து முன் மண்டபமும் அமைக்கப்பட்டது. நவரட்ணராசா மண்டபம் புனரமைக்கப்பட்டு மேல்மாடி

விறாந்தையின் கூரை அமைக்கப்பட்டது. இவை 26.09.1998அன்று திறந்து வைக்கப்பட்டன. மேலும் முன்பக்கம் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டது அத்துடன் மண்டப முன்பக்க வீதி தார் வீதியாக்கப்பட்டது. தளபாடவசதிகள் செய்யப்பட்டன.

கார்த்திகேசன் மண்டபம், இராஜசேகரம் மண்டபம், சிவசுப்பிரமணியம் மண்டபம் ஆகியன 20.02.2002 அன்றும் புதிய நூலகம் 27.12.2002 அன்றும் திறந்து வைக்கப்பட்டன. இக்கட்டடத் தொகுதியில் கணணிப் பயிற்சி நிலையம், ஓடியோ வீடியோ அறை ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. நவரட்ணராசா மண்டபத்தில் கணணி அறை அமைக்கப்பட்டது. இந்து, கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபங்கள் அமைக்கப்படும்போது எமது சங்கமும் அதற்கு உதவியது. கூடைப் பந்தாட்டத்திடல் கரப்பந்து, வலைப்பந்து திடல் அமைப்பு வேலைகளையும் எமது அமைப்பு பொறுப்பேற்று செய்து முடித்து 20.02.2002 அன்று திறந்து வைத்தது. கனடாவில் இயங்கும் கோப்பாய் அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடன் மூன்று நிலை மின்னிணைப்பு வேலையிலும் எமது அமைப்பு பங்கேற்றுச் செய்தது. குழாய்க் கிணற்றுக்கு மோட்டர் அறை கட்டியதுடன் கொழும்பு பழைய மாணவர் சங்க உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நீர்த்தாங்கி புனரமைப்புப் பணிகளையும் பாடசாலைக்கான நீர் விநியோக வேலைகளையும் பொறுப்பேற்றுச் செய்தது. G.T.Z நிறுவன உதவியுடன் மேற் கொள்ளப்பட்ட 6 தொகுதி மலசலகூட அமைப்பு வேலைகளை பொறுப் பேற்றுப் பணியாற்றியது. இரண்டு வருடங்களிற்கு ஒரு தடவை தற்காலிக கொட்டகை வேய்ந்து பராமரிப்பதுடன் மின்சாரக் கட்டணங்களையும் செலுத்தி உதவியதுடன் தளபாட பராமரிப்பு வேலைகளையும் மேற் கொண்டு வந்துள்ளது. U.N.H.C.R உதவியுடன் முறைசாராப் பிரிவு தளபாடவசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன TRRO உதவியுடன் தற்காலிக கொட்டகைகளின் தூண்கள் நிரந்தரமாக்கப்பட்டன.

பாடசாலையின் மைதான, தேவாலய எல்லைகள் திருமதி.ஜெகதீஸ்வரி சிவலோகநாதனின் எல்லைகள் ஆகியன சீர்செய்யப்பட்டன.

மேலும் பல வேலைத்திட்டங்கள் பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

1. பாடசாலை எல்லை மதில் கட்டல்
2. உள்ளக வீதிகளுக்கு தார் இடல்
3. கரப்பந்து வலைப்பந்து விளையாட்டு மைதானம் சீராக்கல்
4. தற்காலிக வகுப்பறைகளை நிரந்தரமாக்கல்
5. விவசாயக் காணிகளை புனரமைத்தல்.
6. உள்ளக விளையாட்டு வசதிகளும் பார்வையாளர் அரங்கும் அமைத்தல்.
7. பட்மின்டன் ரெனிஸ் கிறிக்கட் கோட் அமைத்தல்
8. கல்லூரிக்கான தொலைபேசி பக்ஸ் இன்ரநெற் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்
9. அச்சக வசதி ஏற்படுத்தல்.
10. மாணவர்களை வெளிப்புறச் செயற்பாடுகளுக்காக அழைத்துச் செல்ல வாகன வசதி பெறல்.
11. அதிபர் அலுவலகம் ஆசிரியர் அதிபர் விடுதிகள் அமைத்தல்
12. பாடசாலைக் கட்டடங்கள் அனைத்திலும் பாது காப்பான தாக மின்வசதி செய்தல்
13. வறிய மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கல், உபகரணம் வழங்கல் ஆகிய வற்றை விஸ்தரித்து

மேலும் எதிர்காலத் தேவைக்கேற்ப பாடசாலை வளர்ச்சிக்கு தேவையான அனைத்தையும் முன்னெடுக்க ஆயத்தமாக உள்ளோம்.

எமது கடந்தகால செயற்பாடுகளில் பங்கேற்று பணிசெய்த பலர் நினைவு கூரத்தக்கவர்கள். பெற்றார் ஆசிரியர் சங்க தலைவராக கடமையாற்றிய அமரர் க.நாகலிங்கம், மற்றும் Dr.பொன்னையா, S.J.குணசேகரம், K.இரட்ணசபாபதி, செ.சபாரத்தினம், சே.சேனாதிராஜா அ.வி.மயில்வாகனம், குமரையா, கபிரியேல் பிள்ளை, அ.சங்கரப்பிள்ளை, மற்றும் திருவாளர்கள் க.இ.குமாரசாமி, A.C.செல்வராசா, அ.ஜெயரத்தினம், S.பஞ்சாட்சரசர்மா மற்றும் செயலாளராக கடமையாற்றிய அமரர்கள்; M.S. இராஜசிங்கம், கவைத்திலிங்கம், K.S.முத்துவேற்பிள்ளை, க.கனகலிங்கம் K.S.அழகரட்ணம் பொ.குணசிங்கம் ச.விக்னேஸ்வரன் ஆகியோரும் மற்றும் வ.செல்லத்துரை தி.செல்லப்பா பொ.இராமலிங்கமூர்த்தி திருமதி.செ.சிவஞானரட்ணம் திரு.யோசப்தாவீது ஆகியோரையும், பொருளாளராகக் கடமையாற்றிய திருவாளர்.ஆ.கனகலிங்கம் S. நம்பியாரூரன் அமரர் மு.சற்குணலிங்கம் திரு.செ.செந்தில்குமரன் திரு.செ.பகீரதன் ஆகியோரையும், பாடசாலை அபிவிருத்திக்கு உதவிய பொறியியலாளர்கள் கல்விப் பணிப்பாளர்கள், கல்வித் திணைக்களம், G.T.Z.நிறுவனம் UNHCR, TRRO மற்றும் பிரதேச செயலகம், பிரதேசசபை ஆகியவற்றுக்கும், கொழும்பு பழையமாணவர் சங்கக்கிளை லண்டன், பிரான்ஸ், கனடா பழைய மாணவர்கள் எமது கல்லூரி அபிவிருத்திக்கு பனை வழங்கியோர் நீர் விநியோக வேலைகளில் உதவிய திரு.க.விநாயகலிங்கம், திரு.இ.மனோகரன் மற்றும் செம்மயல் அன்பளிப்புச் செய்த திரு.ச.விக்னேஸ்வரன் திரு.க.விநாயகலிங்கம் ஆகியோருக்கும் மற்றும் எமது முயற்சிகளுக்கு ஒத்தாசை வழங்கிய ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பெயர் குறித்து நன்றி தெரிவிக்காத அனைத்து பாடசாலையை நேசிக்கும் இனிய உள்ளங்களுக்கும் எமது 150ஆவது ஆண்டு நிறைவு நன்றிகள் உரித்தாகுக, எமது செயற்குழு உறுப்பினர் திருமதி.செ.சிவஞானரட்ணம் அவர்களின் கணவரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர் (தலைவர்)

# யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கம்

| | | |
|---|---|---|
| போசகர் | : | திரு.வி. சோமசுந்தரம் |
| தலைவர் | : | திருந.சிவகடாட்சம் (அதிபர்) |
| செயலாளர் | : | திரு.F.A.சில்வெஸ்டர் (27.10.2002 வரை)<br>திரு.ஆ.ஜெயபாலசிங்கம் (28.10.2002 தொடக்கம்) |
| உப செயலாளர் | : | திரு.ஆ . ஜெயபாலசிங்கம் (26.10.2002 வரையும்) |
| பொருளாளர் | : | திரு.வ. சுப்பிரமணியம் |
| உப பொருளாளர் | : | திரு.செ. செல்வச்சந்திரன் |
| உப தலைவர்கள் | : | திரு.S.K தங்கவடிவேல்<br>திரு.G.T ஞானசேகரவேல்<br>திருமதி. ச. கனகரத்தினம்<br>திரு. க. விநாயகலிங்கம்<br>திரு. த. வரதராஜா |
| குழு உறுப்பினர்கள் | : | 1.திரு.செ.செல்வரட்ணம்<br>2.திரு.க. முத்துக்குமாரசாமி<br>3. திரு.ச.பரமானந்தம்<br>4. திரு.வே.மகாலிங்கம்<br>5.திரு.நா.சுந்தரலிங்கம்<br>6. திரு.க.சிறிஸ்கந்தராசா<br>7. திரு.கியூபேட் ஆனந்தராசா<br>8. திரு.இ.கிருஸ்ணகுமார்<br>9. திரு . செ. காண்டீபன்<br>10.திரு.கி. தங்கவடிவேல் |
| பத்திராதிபர் | : | திரு.இ ரகுமார் |

கல்லூரிப் பழைய மாணவர்களைப் பாடசாலை அபிவிருத்தி முயற்சிகளில் இணைப்பதற்கும், பழைய மாணவர்களைப் பாடசாலையுடன் தொடர்புபடுத்துவதை உறுதிப்படுத்துவதற்குமென அமைப்பு ஒன்றின் தேவை கருதி யா/பரியோவான் கல்லூரியில் இயங்கி வந்த பழைய மாணவர் சங்கத்தின் யாப்பை அடிப்படையாகக் கொண்டு, எமது பழைய மாணவர்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரி அதிபரைத் ,தலைவராகக் கொண்ட பழைய மாணவர்சங்கத்தின் முதலாவது கூட்டம் 7.2.1948 அன்று அதிபர் G.S.செல்லையா தலைமையில் நடைபெற்றது. முதல் செயலாளராக திரு.E.K.சண்முகநாதன் அவர்களும், முதல் பொருளாளராக திரு.K.S.அழகரட்ணம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுக் கூட்டம் நடைபெறும் நாட்கள் பழைய மாணவர் தினமாகக் கொண்டாடப்படும். அன்றைய தினத்தில் கல்லூரி மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் இடையே சிநேக பூர்வமான கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அதிபரின் தேநீர் விருந்துடன் பொதுக்கூட்டம் நடைபெறும் ஆரம்பத்தில் ரூ.10/-வாக இருந்த அங்கத்துவப்பணம் 2/=ஆல் குறைக்கப்பட்டது.

அமரர் A.W.இராஜசேகரம் காலத்தில் பொதுக் கூட்டங்கள் இரண்டு வருடங்களிற்கு ஒரு முறை ஒழுங்காகக் கூட்டப்பட்டு நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது. இவரது காலத்தில், பிற்காலத்தில் அதிபர்களாகக் கடமையாற்றிய திரு.E.K.சண்முகநாதன், திரு.S.கந்தசாமி ஆகியோர் செயலாளர்களாகக் கடமையாற்றியுள்ளனர். செல்வி ஹட்சின்ஸ் அவர்கள் இளைப்பாறியமையை முன்னிட்டு பழைய மாணவர் சங்கம் பெருவிழா ஒன்றை நடாத்தி அவரைக் கௌரவித்துள்ளதுடன் அவரின் நினைவாக வகுப்பறைக் கட்டடம் ஒன்றை அமைக்கும் முகமாக நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இதற்குக் கொழும்புக்கிளையும் பெரிதும் உதவியுள்ளது.

அமரர் E.C.A.நவரத்தினராஜா காலத்தில் ஹட்கின்ஸ் மண்டபத்தைக் கட்டி முடிக்கவும், பாக்கியம் வில்லியம்ஸ் நினைவுக்கட்டிட அமைப்புக்கும், மற்றும் பாடசாலை மைதான அபிவிருத்திக்கும் இச்சங்கம் பாரிய பங்களிப்பை வழங்கியது.

இவரைத் தொடர்ந்து அதிபரான திரு.E.K.சண்முகநாதன் அவர்கள் அமரர் நவரட்ணராஜா மண்டபம் அமைப்பதற்கான திட்டங்களை வகுத்து, அதற்கான நிதி சேகரிப்புக் குழுக்களை அமைத்தும், அதிஷ்டலாபச் சீட்டு. கலைவிழா என்பவற்றின்

150ஆவது ஆண்டு விழாச்சபை



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



பழைய மாணவர் சங்கம்



[redacted]

# ஆடவர்களுக்கான

சேட்டிங் சூட்டிங் வகைகளும்

பெண்களுக்கான திருமணப்பட்டுச் சேலை

பஞ்சாபி வகைகளுக்கும்



* புதிய அபிராமி புடவைமாளிகை

பிரதான வீதி,

சங்கானை.


* கிருஷ்ணா ரெக்ஸ்



# விஜய் போட்டோ அன்ட் வீடியோ

உங்கள் வைபவங்களுக்கு சிறந்த மிக்சிங் முறையில் படம் பிடித்திடவும் வீடியோ பிடித்திடவும் மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும்





விஜய் போட்டோ,
கோண்டாவில் ரோட்,
இருபாலை.


# சாரங்கா நகை மாடம்



❁ தங்கப்பவுண் நகை வியாபாரம் ❁

SARANGA NAGAI MADAM

MANUFACTURERS OF GOLD JEWELS



157/1, Kasthuriar Road,
NA,



T.P:- 2480
Fax:- 2480

157/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்;
அருள்முருகன் நகைஅகம்,
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்.

கிளை:
சாரங்கன் நகைமாடம் அன் சென்ஸ்
45C கஸ்தூரியார் வீதி.

# வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம் நீர்வேலி.

- ❋ சிறுவர், ஆடவர், பெண்கள் - துணி வகைகள்
- ❋ பாடசாலை உபகரணங்கள்
- ❋ அலங்காரப் பொருட்கள்
- ❋ கனரகப் பொருள், கட்டிடப் பொருள்
- ❋ விவசாய உபகரணங்கள்
- ❋ ஏசியன் பெயின்ற் வகைகள்
- ❋ பொதிசெய்த அயடீன் கலந்த உப்பு
- ❋ சகலவித நுகர்வுப் பொருட்கள்

பெற்றுக் கொள்ளலாம்

மொத்தசில்லறை விற்பனை நிலையங்கள் ❋ கோப்பாய்
❋ நீர்வேலி ❋ உரும்பிராய்
❋ ஊரெழு ❋ அச்செழு

சேவைகள்

- வாகன சேவைகள்
- கதிரைகள்
- நிழற்படப்பிரதி
- தொலைத்தொடர்பு
- எரிபொருள்

மக்கள் சேவையே வலிகிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கச் சேவை.

மூலம் நிதி சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது இவ் அமைப்பு பெரும் பணியாற்றியமை குறிப்பிடத் தக்கது. 17.7.68ல் அமரர் C.சுந்தரலிங்கம் அவர்களுக்கு இராப்போசன விருந்தளித்துக் கௌரவித்தது. அதிபர் S.கந்தசாமி காலத்தில் செல்லையா மண்டபம் அமைக்கும் முயற்சியின் போது அச்சுவேலியில் இருந்து திரு.S.Kதங்கவடிவேலின் தலைமையில் பழைய மாணவர்கள் கட்டிட உபகரணங்களைக் கொண்டு வந்து சேர்த்துச் சிரமதானப் பணிகளில் ஆர்வமுடன் பங்கேற்றனர். நவரட்ணராஜா மண்டப கீழ் மாடிவேலைகள் ஆரம்பித்து, வேலைகளை முன்னெடுக்கும் போது தனது பங்களிப்பை வழங்கி உதவியது.

எமது சங்கம் அதிபர் சி.சிவநேசன் அவர்கள் காலத்தில் கல்லூரி அபிவிருத்திப் பணிகளில் மேலும் ஊக்கமுடன் செயற்பட்டது நவரட்ணராஜா மண்டபம் அமைக்கும் பணியில், பாடசாலை அபிவிருத்திச்சங்கம். நவரட்ணராஜா ஞாபகாரத்த நிதிக்குழு ஆகியவற்றை ஒன்றிணைத்து அவர்களின் ஒத்துழைப்புடன் மண்டப வேலைகள் பூரணப்படுத்த உதவியதுடன், தேவாலய மதிலைக் கட்டுவதற்குக் கல்லூரியின் பழைய மாணவன் சிறாப்பர் T.Rசெல்வரட்ணம் அவர்களினூடாக திணைக்கள உதவியைப் பெற்று மதில் வேலைகளைப் பூரணப்படுத்தியது இந்தக் காலத்தில் (1975) அங்கத்தவர் பட்டியல் மீள ஆரம்பிக்கப்பட்டது. திரு.சு.கணேஷ் 25/- செலுத்தி முதலாவது ஆயுட்கால அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டார் அதைத் தொடர்ந்து வ.ராஜசிங்கம், K.பத்மநாதன், K.ஜெகநாதன் ஆகியோர் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர் சாதாரண அங்கத்துவக் கட்டணமாக 2/- பெறப்பட்டது.

14.04.76 அன்று நடைபெற்ற பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்ட நிகழ்வு அமரர் நவரட்ணராஜா நினைவு நிகழ்வாக நடைபெற்றது. திரு.க.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் திரு.S.K.தங்கவடிவேல் அவர்கள் அமரர் நவரட்ணராஜா நினைவு உரையை வழங்க அப்துல் ஹமீட், பொப்ஸண், கு.உருத்திரகுமார் (ஈழத்துயேசுதாஸ்) ஆகிய முன்னணிப்பாடகர்கள் பங்கேற்ற இசை நிகழ்வும் நடைபெற்றது இக்காலத்திலேயே பழைய மாணவர் சங்கமுத்திரை, கடிதத் தலைப்புக்கள் அச்சடிக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் பெருளாளராகப் பதவி வகித்த திரு.சு.கணேஸ் என்பவரே இன்றைய பதிவேடுகளின்படி முதலாவது ஆயுட்கால அங்கத்தவரானார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு.செ.செல்வரட்ணம் அவர்கள் காலத்தில் 18.5.81ல் புனரமைக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்காக நிதி ஆரம்பிக்கும் முகமாக 82ம் ஆண்டு அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தியது. அமரர் A.V.மயில்வாகனம் அவர்கள் முயற்சியால் மூன்று பரிசில்கள் பெறப்பட்டன. ஆறுதல் பரிசுகள் திருவாளர்கள் கே.முத்துலிங்கம், மாணிக்கவாசகம், எஸ்.கணேஸ், R.இராஜதுரை ஆகியோர் வழங்கிய நிதியுதவியில் இருந்து பெறப்பட்டன. இச்சீட்டிழுப்பின் மூலம் பெறப்பட்ட 3000/- யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பில் 10.12.82ல் வைக்கப்பட்டு பழைய மாணவர் சங்கத்தினூடாக முதலாவது சேமிப்புக் கணக்கு (இல.744) யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் 600/- வைப்பிலிட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. 3000/- நிரந்தரவைப்பு 99ம் ஆண்டு வட்டியுடன் 26,686/-24சதம் மீளப்பெறப்பட்டு 3313/- 76சதம் சேர்க்கப்பட்டு தற்சமயம் 30,000/- மீளவும் நிரந்தர வைப்பில் இடப்பட்டு அதன் வருடாந்த வட்டிப்பணம் பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு பரிசுத்தினத்தில் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

திரு. P.K.இராஜரட்ணம் அதிபர் காலத்தில் மீளவும் புனரமைக்கப்பட்டு பொதுக்கூட்டம் 18.3.90ல் நடாத்தப்பட்டது திரு.பொ.விக்னேஸ்வரலிங்கம் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின் சங்கம் செயற்பட ஆரம்பித்தது. ஆயுட்கால அங்கத்துவப்பணம் 100/- ஆகவும் சாதாரண அங்கத்துவப் பணம் 10/-ஆகவும் அதிகரிக் கப்பட்டது அங்கத்தவர் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. 27.12.90 அன்று முன்னர் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் பிரியாவிடை நிகழ்வும் அமரத்துவமடைந்த அதிபர்கள் நினைவு தினமும் கொண்டாடப்பட்டது. திரு.ஏ.சி.செல்வராஜா, திருமதி.G.N.சற்குணசிங்கம், திருமதி.S.செல்லையா, திருமதி.குணரத்தினம், திருமதி.ந.பாக்கியம், திருமதிK.சாமுவேல், திரு.J.A.செல்லையா திருமதி.T.ரட்ணாதிக்கம், திரு.செ.செல்வரட்ணம், திரு.K.S.நடராசா, திருமதி.சி.செல்வரட்ணம், ஆகியோரின் சேவை பாராட்டப்பட்டது.

அமரர் G.S.செல்லையா நினைவு உரையை திருமதி.T.ரட்ணாதிக்கம், திருமதி.ச.கனகரத்தினம் ஆகியோரும், அமரர் E.C.A.நவரட்ணராஜா நினைவு உரையை திரு.K.S.முத்துவேற்பிள்ளை, திருமதி.J.சிவலோகநாதன் அவர்களும், அமரர் E.K.சண்முகநாதன் நினைவு உரையை திரு.E.குணபாலசிங்கம், திரு.A.V.மயில்வாகனம் ஆகியோரும் நிகழ்த்தினர். 1990 இறுதியில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டும் நிகழ்வு அதிபர் திரு.த.முத்துக்குமாரசாமி தலைமையில் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது. திரு.P.K.ராஜரத்தினம், திரு.V.சோமசுந்தரம், திரு.S.K.திருச்செல்வம், திரு.த.தம்பித்துரை, திருமதி.S.தம்பிஜயா, திருமதி.S.பாலசிங்கம், திருமதி.S.ரவீந்திரன், செல்வி.ந.பாக்கியம் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

27.12.91 அன்று நடைபெற்ற அமரத்துவமடைந்த அதிபர்கள் நினைவு நிகழ்வில் Dr.v.தியாகராஜா, திரு.K.கணேசலிங்கம், திரு.சு.முத்துக் குமாரசாமி ஆகியோர் அன்பளிப்புச்செய்த அதிபர் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

பாக்கியம் வில்லியம்ஸ் நினைவுக் கட்டடம் பின்பு அலுவலகமாக மாற்றியமைக்கப் பழைய மாணவர் திரு.த.வரதராசா உதவியுள்ளார். உள்ளக வீதி தார்போட திரு.மா.தங்கராசா என்பவரின் உதவி பெறப்பட்டது. 22.3.92ல் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களால் நடாத்தப்பட்ட கலைவிழா வெற்றிகரமாக நடைபெற உதவி செய்யப்பட்டது. இதில் எமது அமைப்பில் பரிசளிப்பு நிதியமாக 52,200/-வும் பாடசாலைத் தமிழ்ச்சங்கத்தினூடாக 40,000/-வும் வறிய மாணவர் உதவிக்கும் நிரந்தர வைப்பிலிடப்பட்டது.

க.பொ.த (உயர்தர) வகுப்பில் படிக்கும் 2மாணவர்களுக்கு Dr.V தியாகராஜா அவர்களால் 14000/- உதவி வழங்கப்பட்டது. வறிய மாணவர்களின் கல்வி ஊக்குவிப்புக்காக வலிகிழக்கு பனை, தென்னைக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக Dr.v.தியாகராஜா மூலம் 20,000/- பெறப்பட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கில் நிரந்தரவைப்பிலிடப்பட்டது. கொழும்புக்கிளை 2.5.92ல் உபதலைவர் திரு.V.சோமசுந்தரத்தாலும், செயலாளர் திரு.விக்கினேஸ்வரலிங்கத்தாலும் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டது.

27.5.92ல் 5Dக்கு மேல் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடாத்தப்பட்டு இதற்கான நிதி உதவிகளை திரு.த.வரதராஜா, திரு.சு.சோதிலிங்கம், தி.க.பரமானந்தராஜா, திரு.சு.இரத்தினராஜா (முன்னாள் ஆசிரியர் பிரதிக்கல்விப்பணிப்பாளர்) ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

விளையாட்டு மைதான அபிவிருத்திக்கான திட்டம் திரு.ஐ.சிவலோகநாதனூடாகத் தயாரிக்கப்பட்டது. வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்கில் லண்டன் திருமதி.செ.சண்முகநாதன், கனடா திரு.சி.சிவனேசன் பிரான்ஸ் திரு.சே.தேவராஜேந்திரன் ஆகியோருடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன.

கூடைப்பந்தாட்டத் திடலில் சேதமடைந்த பைப் உடைந்த பலகைகள் திரு.க.பரமானந்தராஜா அவர்களின் நிதி உதவியால் சீர்செய்யப்பட்டன.

27.12.1992 அன்று அமரத்துவமடைந்த அதிபர்கள் தினம் கொண்டாடப்பட்டது. அதிபர்தின உரையை திரு.பூ.க.ராஜரட்ணமும், "நாவலரும் சமூகப்பணியும்" என்னும் தலைப்பில் நினைவுப்பேருரையை யாழ் பல்கலைக்கழக மெய்யியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க.சிவானந்தமூர்த்தியும் வழங்கினர். கோப்பாய் செஞ்சிலுவைச்சங்க உதவியுடன் ஜெனரேற்றர் பெற்று இரவு நேரக்கற்கைக்கு உதவினோம். இதற்கான உதவிகளை எமது பழைய மாணவர்கள் திரு.S.மனோகரநேருவும் Dr.v.தியாகராஜாவும் வழங்கினர்.

20.6.93 அன்று நடைபெற்ற பழைய மாணவர்தினத்தில் க.பொ.த. (சாதாரண) திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கான அன்பளிப்பு திரு.க.வரதராஜாவினாலும், பல்கலைக்கழகம் சென்ற ஆறு மாணவர்களுக்கான அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

இத்தினத்தில் தெரிவு செய்யப்பட்ட செயலாளர் திரு.S.K.தங்கவடிவேல் பொருளாளர் திரு.விஜேந்திரசர்மா ஆகியோர் மீண்டும் 10.7.94ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர் பாரிய இடப்பெயர்வின் பின் 20.4.97வரை இவர்கள் பதவியில் இருந்த காலம் பழைய மாணவர் சங்கத்தின் பொற்காலமாகும். இக்காலத்தில் பழைய கட்டிடங்கள் அகற்றுவதற்கான சிரமதான நிகழ்வுகள், நிரந்தர வைப்புகள் ஆரம்பித்தல், பழைய மாணவர் சங்கச் செயற்பாட்டிற்கான கலைவிழா, நூலக அபிவிருத்திக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டினால் நிதி சேகரித்தல், வெளிநாடுகளில் இதற்கான உதவிகள் கிடைக்கப்பெற்று எமது சங்கச் செயற்பாடுகள் தனிநபர்களின் அன்பளிப்புக்களில் தங்கியிராது சங்கநிதியில் செயற்படும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. இன்று எமது சங்கம் இந்த அத்திவாரத்தில் உறுதியாக நின்று செயற்படுகின்றது இவற்றின் செயற்பாட்டை திகதி வாரியாக நோக்கினால்

25.07.1993 - பழைய கட்டடங்களை இடித்தல் Dr.v தியாகராஜாவின் நிதியுதவியில் சிரமதானம் நடாத்தப்பட்டது.

08.08.1993 - திரு.K.இராஜரட்ணம், திரு.மோகன், திரு.க.விநாயகலிங்கம், திரு.த.குமாரசாமி, திரு.க.மார்க்கண்டு, திரு.வி.பி.செல்லையா ஆகியோர்களின் நிதியுதவியுடன் சிரமதான நிகழ்வு நடாத்தப்பட்டது.

29.08.1993 - திரு.பொ.நல்லதம்பி, திரு.பொ.கந்தையா, திரு.சி.கா.திருச்செல்வம், திரு.செ.தெய்வேந்திரன் , திரு.செ.தம்பிராஜா திரு.பொ.சதானந்தன், திரு.பா.நந்தகிருஷ்ணகுமார், திரு.த.முத்துக்குமாரசாமி ஆகியோரின் நிதி உதவியில் சிரமதான நிகழ்வு நடாத்தப்பட்டது.

12.09-1993 - கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் நிதிஉதவியுடன் சிரமதானம் நடாத்தப்பட்டது.

03-10-1993 - திரு.S.தனபாலசிங்கம் திரு.K.தில்லைதுரை, திரு.ஐ.சிவலோகநாதன், திரு.யோ.புண்ணியமூர்த்தி, திரு.வி.சுப்பிரமணியம், திரு.செல்லக்கிளி ஆகியோரின் நிதியுதவியில் சிரமதான நிகழ்வு நடைபெற்றது.

இச்சிரமதான நிகழ்வுகளில் எமது பிரதேசத்தில் செயற்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களும் பங்கேற்றுப் பணியாற்றியுள்ளதுடன் செல்வி.ந.பாக்கியம் உணவு தயாரிக்கும் பணியில் பொறுப்பாக நின்று உதவியுள்ளார்.

25.12.1993 - பல்கலைக்கழக அனுமதி தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கிற்கு செலவு தொகையாக 5000/- வழங்கப்பட்டது.

27.12.1993 - அமரத்துவ அதிபர் தினம் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக Dr.v.தியாகராஜா அவர்களும் பாரியாரும் பங்கேற்றனர் அதிபர் ஞாபகார்த்த உரையை S.K.தங்கவடிவேல் வழங்கினார் நினைவுப் பேருரையை "சுவாமி விவேகானந்தர்" என்னும் தலைப்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் வழங்கினார்.

21.01.1994 - கல்லூரி பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதற்கான செலவுகள் முதல் தடவையாக எமது சங்கத்தால் வழங்கப்பட்டது.

21.05.1994 - க.பொ.த (சாதாரணம்) க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவரைக் கௌரவித்தல், பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவரைக் கௌரவித்தல், பழைய மாணவர் சங்கம் முன்னெடுக்கும் சிரமதான நிகழ்வு, ஆசிரியர் தினவிழா, அமரத்துவமடைந்த அதிபர்தினவிழா, அதிபருடாக மாணவர்களால் விடுக்கப்படும் நிதி வேண்டுகோளுக்கான உதவி ஆகியவற்றை மேற்கொள்ள நிதி சேகரிக்கும் முகமாக திரு.S.K.தங்கவடிவேல் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தக்கலை நிகழ்வில் அவரால் நெறியாள்கை செய்யப்பட்ட "மலராத மொட்டுகள்" நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன் நிகரலாபமாக 55,000 ரூபா பெறப்பட்டுபழைய மாணவர் சங்கத்தேவைக்கான நிரந்தரவைப்பாக இலங்கை வங்கியில்வைப்பில் இடப்பட்டது. இதே காலப்பகுதியில் திரு.S.K.திருச்செல்வம் அவர்களின் முயற்சியால் பண்டிதர் கந்தையா நிதி திரட்டப்பட்டு 22,000- நிரந்தர வைப்பில் இடப்பட்டது.

03.10.94 - லண்டன் பழைய மாணவர் சங்கம் அனுப்பிய வறிய மாணவர்கள் உபகரண அன்பளிப்பிற்கான 18,512.50 சதம் கிடைத்தது.

06.10.94 - பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது.

27.12.94 - அமரத்துவ அதிபர் தினத்தில் அதிபர்கள் பற்றிய உரை திரு.P.K.இராசரட்ணம் அவர்களாலும் நினைவு உரை கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன் அவர்களாலும் "மனித மேம்பாட்டுக்கான ஆன்மீக வழிகள்" எனும் தலைப்பில் நிகழ்த்தப்பட்டது.

12.03.95 - மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற உடற்பயிற்சிக்குழு மாணவர்களுக்கான பாராட்டும், தேநீர் விருந்தும் வைக்கப்பட்டது.

12.06.95- அபிவிருத்திச் சீட்டிழுப்பும் கலைவிழாவும் நடாத்தி நிகர இலாபமாக 45000ரூபா பெறப்பட்டது. இந்நிகழ்வின் சீட்டுக்களைத் தனது செலவில் திரு.ந.சிவகடாட்சம் அச்சடித்துக் கொடுத்தார் திரு.F.Aசில்வெஸ்ரர் முதல் மூன்று பரிசுகள் பெற்றுத் தந்தார் திரு.ஸ்ரீரங்கன் 2000 ரூபா செலவில் 10 ஆறுதல் பரிசுகள் அன்பளிப்புச் செய்தார். இடம் பெயர்ந்து வந்ததன் பின் நூலக தளபாடங்களைத் திருத்தம். செய்வதற்கும், நூல் கொள்வனவு செய்வதற்கும் 15,000 ரூபா செலவு போக மீதி 30,000 ரூபா நூலக நிரந்தர வைப்பாக வங்கியில் வைப்பில் இடப்பட்டது. இடம் பெயர்வுகளின் பின்னர் 28.8.96 தொடக்கம் திரு.ந.சிவகடாட்சம் அவர்களின் தலைமையில் எமது அமைப்பு இயங்கத்தொடங்கியது. இக்காலத்தில் இலண்டனில் இருந்து 119,563 ரூபாவும் பிரான்சில் இருந்து 1,28,907 ரூபாவும் கிடைக்கப் பெற்றன.

09.11.96 - உபதலைவர் திரு.வீ.சோமசுந்தரம் தலைமையில் எமது சங்கம் புதிய அதிபருக்கு வரவேற்பு நிகழ்வு நடாத்தியது. 24.12.96ல் இடமாற்றம் பெற்ற அதிபர் திருத.முத்துக்குமாரசாமிக்குப் பிரியாவிடை வைபவத்தை நடாத்தியது.

27.12.96 - இத்தினத்தில் நடைபெற்ற அதிபர் தின வைபவத்தில் பழைய மாணவர் சங்க காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. பழைய கட்டிடங்கள் இடிப்பதற்கும் சண்முகநாதன் மண்டபம் திருத்து வதற்கும் 4500ரூபா செலவிடப்பட்டது. திரு.F.A.சில்வெஸ்ரர் அவர்களால் ஸ்ரான்லி பெயின்ற் கவுஸ் உரிமையாளர் திரு.S.நந்தகுமார் அவர்களிடம் பெற்றுத்தந்த 10,000ரூபாவிற்கு கல்லூரிக்கான வெற்றிக்கேடயம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

10.02.97 - 14.2.97வரை நூலக வாரம் முதன்முறையாக அனுஷ்டிக்கப்பட்டது. 14.02.97ல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கொழும்பு பழைய மாணவர் சங்கத்துக் கூடாக திரு.R.விஜயகுமார் அன்பளிப்புச் செய்த 50,220 ரூபாவும் பெண்களுக்கான 1000கழுத்துப்பட்டிகளும்(ரை), ஆண்களுக்கான 100கழுத்துப்பட்டிகளும், மேடைக்கான திரைச்சீலை ஆகியனவும், செய்யப்பட்டு அதிபரிடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இலண்டனிலிருந்து வருகை தந்த இலண்டன் பழைய மாணவர் சங்கத்தலைவர் திருமதி.செ.சண்முகநாதன் அவர்கள் மதியபோசனம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இலண்டன் பழைய மாணவர் சங்கம், மாணவருக்கான உபகரணங்கள் அன்பளிப்புச் செய்வதற்கென வழங்கிய பணத்தில் 34மாணவர்களுக்கு உபகரணப்பெட்டிகளும், 35மாணவர்களுக்கு பாடசாலைப்பையும், 5மாணவர்களுக்குக் காலணிகளும் வழங்கப்பட்டன.

01.04.97 - விளையாட்டு மைதானப் புனரமைப்பு ஆரம்பம். பாடசாலைச் சஞ்சிகைகளுக்கான விளம்பரங்கள் திரு.S.K.தங்கவடிவேல் திரு.F.A.சில்வெஸ்டர் ஆகியோரால் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

04.05.97 - இலண்டன் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.S.சற்குணன் அவர்கள் தேநீர் விருந்தளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

27.12.97 - அமரத்துவ அதிபர்கள் நினைவு தினத்தில் பழைய மாணவசங்க ஏடாகிய "சுவடு" முதல் இதழ் வெளியிடப்பட்டது. தேவாலயமதில் எல்லைகள் நேராக்கப்பட்டு அத்திவார வேலைகள் செய்யப்பட்டன.

27.12.98 - அமரத்துவ அதிபர் தினத்தில் கல்லூரியில் பணியாற்றிய அனைத்து அதிபர்களின் படங்களும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

24.04.99ல் - விளையாட்டு மைதானம் விஸ்தரிப்புக்கான நிதி உதவி Dr.v. தியாகராஜா 5000ரூபா வழங்கி ஆரம்பித்து வைத்தார். கல்லூரியின் அதிபர்,ஆசிரியர்கள் 23,200 ரூபாவை இந்நிகழ்விற்குத் தமது பங்களிப்பாக வழங்கினார். நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 1000/= வீதம் 12,000ரூபாவையும், பழைய மாணவர்கள் 6,000ரூபாவையும், வழங்கி உதவினர்.

13.05.99ல் - "அவிழாத முடிச்சு" சிறுகதை எழுதிப் பரிசுபெற்ற திரு.வை.குணசேகரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

16.10.99ல் - கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினூடாகக் கனடாவைச் சேர்ந்த திரு.சி.கருணானந்தன் அன்பளிப்புச்செய்த 50,000 ரூபாவில் சண்முகநாதன் மண்டபத்தில் புனரமைக்கப்பட்ட கணனி அறை கொழும்பு பழைய மாணவர் சங்கப் பொருளாளர் திரு.R.விஜயகுமார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

08.11.99ல் - கூடைப்பந்தாட்ட மைதான அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலையில் G.T.Z நிறுவனம் மேற்கொண்ட வேலைகளை மேற்பார்வை செய்த பழையமாணவர் திரு.ஆ.இராஜபாலசிங்கத்திற்கு 4500ரூபா வழங்கப்பட்டது.

27.12.99ல் - நடைபெற்ற அமரத்துவ அதிபர் தினத்தில் விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்டது.

27.12.2000 - அன்று நடைபெற்ற அமரத்துவ அதிபர் தினத்தில் அமரர் செல்வரட்ணம் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் பழைய மாணவர்சங்க யாப்புத் திருத்தப்பட்டது. போசகர் நியமனம் செயலாளர் செயற்படாதபோது தலைவருக்கு அந்த அதிகாரத்தை வழங்கல், பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகக் குழுக்களை அமைத்தல், ஆயுட்கால அங்கத்துவப் பணம் 200ரூபாவாகவும் சாதாரண அங்கத்துவப்பணம் 20ரூபாவாகவும் இருக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

27.12.2001ல் - இலண்டன் பழைய மாணவர் சங்கத்தின் உதவியால் அமைக்கப்பட்ட தேவாலய மதில் திறந்து வைக்கப்பட்டது.

20.2.2002ல் - 150ஆவது ஆண்டு நிறைவுதின நினைவாக கூடைப்பந்தாட்டதிடல் திறந்து வைக்கப்பட்டது.

22.07.2002ல் - வெளிநாட்டிலிருந்து வருகைதந்த ரமேஷ் தொண்டுநாதன் (ஹவாய்) திரு.சி.பிரதீப்ராஜ் (அவுஸ்ரேலியா) திரு.ஆ.செந்தில்குமரன் (நோர்வே) திரு.T.ரூபன் (கொலன்ட்) ஆகியோர் வரவேற்கப்பட்டனர் க.பொ.த.உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரைத் தொடர்ந்து கல்வி கற்பதற்கு உதவியளிக்க உறுதியளித்தனர்.

27.12.2002 - கொழும்பு பிரபல தொழிலதிபர் A.M.தனநாயகம் அன்பளிப்புச்செய்த 150ஆவது ஆண்டு நிறைவு பெனியன் விற்பனை செய்து பெறப்பட்ட பணத்தை திரு.வீ.சோமசுந்தரம் நிதியம் ஆரம்பிக்க அடையாள நிதி 150ஆவது ஆண்டு நிறைவு முதல் நாள் நிகழ்வில் கொழும்பு பழைய மாணவர் சங்கப் பொருளாளர் திரு.R.விஜயகுமார் அவர்களால் எமது சங்கப் பொருளாளர் திரு.வ.சுப்பிரமணியம் அவர்களிடம் வழங்கி ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்தியை மையமாகக் கொண்ட வேலைத்திட்டத்தில் எமது சங்கம் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளது.

எமது கல்லூரியில் விளையாட்டு மைதானப்படிகள் சீமெந்து பூசப்பட வேண்டும். உள்ளக விளையாட்டு வசதிகளுடன் பார்வையாளர் அரங்கு அமைக்கப்படல் விளையாட்டு மைதானம் செம்மண் இட்டு மட்டப்படுத்தப்படல் கல்விக்கான விளையாட்டு உபகரணம் பெற ஆவன செய்தல் கிரிக்கெட், டெனிஸ், பட்மின்ரன், திடல்கள் அமைக்கப்படல் கல்வி ஊக்குவிப்பு நிதியங்கள் ஆரம்பித்தல் போன்ற பணிகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது தங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றோம். இதுவரை எமது செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து அனைத்து பழைய மாணவர்களுக்கும் நன்றிகள் இக்காலத்தில் எமக்கு உதவிய அமரர்கள் A.V.மயில்வாகனம், திருமதி.கோகிலம் இராசதுரை ஆகியோரின் பிரிவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது கல்லூரியின் தேவைகளை நிறைவு செய்ய மைந்தர்களாகிய நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்.


# பழைய மாணவர் சங்கச் செயலாளர்கள்


அமரர் E.K.சண்முகநாதன்



அமரர் A.C.கனகராசா



திரு. எஸ். கந்தசாமி



திரு. P.K.இராஜரட்ணம்


அமரர் G.முத்துலிங்கம்


திரு. க. ரமேஸ்குமார்


அமரா T.R.செல்வரட்ணம்


திரு. ஆ. ஜெயபாலசிங்கம்


திரு. G.T.ஞானசேகரவேல்


திரு. F.A.சில்வெஸ்ரர்


# பழைய மாணவர் சங்கம் பொருளாளர்கள்




அமரர் T.D.குமாரசாமி




திருமதி.யேசுதாசன்



திரு.சீ.கா.திருச்செல்வம்



திரு.சி.ரவீந்திரசர்மா



திரு.சி.விஜேந்திரசர்மா



திரு.வ.சுப்பிரமணியம்

# செயலாளராகவும் பொருளாளராகவும் கடமையாற்றியோர்



அமரர் G.S.அழகரட்ணம்



திரு.P.விக்னேஸ்வரலிங்கம்



திரு.S.K.தங்கவடிவேல்

# பழைய மாணவர் சங்க பணிகளில் உழைத்தோர்



DR.வை.தியாகராஜா



திரு. வீ. சோமசுந்தரம் போஷகர்



அமரர் வே. பே. செல்லையா



அமரர் J.S.S.ஆனந்தன்



திரு. நா. சிவநாதன்

# கல்லூரிக்கு உதவிய பழைய மாணவர்கள்



திரு. அ. றஞ்சித் சைவேந்திரகுமார்



திருமதி. ருக்மணி ஆனந்தவேல்



திரு. சு. பிரபாகரன் (கனடா)




திரு. சண்முகநாதன் (டென்மார்க்)




திரு. G.T.ஞானஇந்திரவேல்

# நிகழ்வுகள்




கணனி அறையைக் கொழும்பு
ப. மா. சங்கப் பொருளாளர்
திரு. இ. விஜயகுமார்
திறந்து வைக்கின்றார்.



லண்டன் பழைய மாணவர்
சங்கச் செயலாளர்
திரு. ச. சற்குணன்
வரவேற்கப்படுகின்றார்.



லண்டன் பழைய மாணவர்
சங்கத் தலைவி
திருமதி. செ. சண்முகநாதன்
வரவேற்கப்படுகின்றார்.



வெளிநாடுகளிலிருந்து
வருகை தந்த கல்லூரிப்
பழைய மாணவர்கள்
வரவேற்கப்படுதல்.

| பொதுக்கூட்டத்திகதி | செயளாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 7.2.1948 | திருE.Kசண்முகநாதன் | திருK.S.அழகரட்ணம் |
| 7.10.1953 | திருE.Kசண்முகநாதன் | திருK.S.அழகரட்ணம் |
| 20.2.1955 | திரு.A.C.கனகராசா | திரு.V.சிவப்பிரகாசம் |
| 1956 | திரு.S.கந்தசாமி | திருK.S.அழகரட்ணம் |
| 1958 | திருK.S.அழகரட்ணம் | திரு.T.D.குமாரசாமி |
| 1962 | திருP.K.இராஜரட்ணம் | திரு.T.Dகுமாரசாமி |
| 1965 | திரு.G.முத்துலிங்கம் | திரு.T.D.குமாரசாமி |
| 17.7.1968 | திரு.P.K.இராஜரட்ணம் | திரு.T.D.குமாரசாமி |
| 30.3.1974 | திரு.பொ.விக்கினேஸ்வரலிங்கம் | |
| | | திருS.Kதங்கவடிவேல் |
| 14.4.1976 | செல்வி.இ.வசந்தமாலினி | |
| | | திரு.சு.கணேஸ் |

22-06-1975 திரு.S.K.தங்கவடிவேல்,
திரு.பொ.விக்கினேஸ்வரலிங்கம்

| பொதுக்கூட்டத்திகதி | செயளாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 18.5.1981 | திருசுறமேஸ்குமர் | திருS.Kதங்கவடிவேல் (21282)வரை |
| | திருமதித.யேசுதாசன் | (22.2.82)தொட |
| 18.12.1982 | திருT.Rசெல்வரட்ணம் | திருசிகா.திருச்செல்வம் |
| 18.3.1990 | திரு.பொ.விக்னேஸ்வரலிங்கம் | |
| | | திரு.சி.ரவீந்திரசர்மா |
| 20.6.1993 | திருS.Kதங்கவடிவேல் | திரு.விஜேந்திரசர்மா |
| 20.4.1994 | திருS.Kதங்கவடிவேல் | |
| | | திருபொவிக்னேஸ்வரலிங்கம் |
| 16.8.1998 | திரு.ஆ.ஜெபாலசிங்கம் | திருவ.சுப்பிரமணியம் |
| 9.4.2000 | திருG.T.ஞானசேகரவேல் | திருS.Kதங்கவடிவேல் |
| 22.7.2001 | திரு.F.A.சில்வெஸ்ரர் | (27.10.02வரை) |
| | திரு.ஆ.ஜெயபாலசிங்கம் | |
| | | திருவசுப்பிரமணியம் |

அதிபர்(தலைவர்)

# பழைய மாணவர் சங்கம் - கொழும்பு

கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகளுக்கு உதவுமுகமாகச் கொழும்பில் வதியும் பழைய மாணவர்களை ஒன்று திரட்டி, அவர்களைப் பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்கு பெறச் செய்வதற்காக இக்கிளை 1950ம் ஆண்டு கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

போசகராக சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்களையும், தலைவராக திரு.M.S.இராசசிங்கம் அவர்களையும்உபதலைவர்களாக திருE.C.A.நவரட்ணராஜா, திருG.J.இரட்ணநாயகம் அவர்களையும் செயலாளராக திரு.G.J.டானியல் அவர்களையும் மற்றும் சில குழு உறுப்பினர்களையும் கொண்டு இவ் அமைப்பு செயற்பட்டு வந்துள்ளது. செல்வி.M.V.ஹட்சின்ஸ் இளைப்பாறி லண்டன் சென்ற பொழுது கொழும்பில் அவரின் பிரியாவிடைவைபவம் ஒன்றை நடாத்தியது. கல்லூரியில் படிக்கும் அனாதைப் பிள்ளைகளுக்கு உதவும்படி நிதி சேகரிப்பதற்கு ஒரு படக்காட்சியை நடாத்தி சேகரிக்கப்பட்ட நிதி, பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக, 55ம் ஆண்டு கல்லூரிச் சஞ்சிகையில் இருந்து அறிய முடிகின்றது. அங்கத்தவர்களை ஒன்று திரட்டிச் செயற்படுத்துவதில் உள்ள சிரமங்களையும், அவர் குறிப்பிட்டுள்ளார். இக்கிளை 1959ம் ஆண்டு வரை இயங்கியது பின்னர் செயல் இழந்தது. திரு.E.K.சண்முகநாதன் அவர்களின் முயற்சியால் மீண்டும் 31.10.1969இல் பம்பலப்பிட்டி இந்து கனிஸ்ட வித்தியாலயத்தில் ஒரு கூட்டம்கூட்டப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. போசகர் கேட் முதலியார் N.கனகநாயகம், தலைவர் திரு.E.K.சண்முகநாதன், உபதலைவர் திரு.S.தில்லைராஜா, திரு.V.இரட்ணம், திரு.S.தவராஜா, செயலாளர், திரு.S.சிவநாதன், உப செயலாளர் திரு.S.குமாரசாமி, பொருளாளர் திரு.P.விக்னேஸ்வரலிங்கம்.

**குழு உறுப்பினர்களாக :-**

திருவாளர்கள் - J.S.S.ஆனந்தம், N.சிவஞானபிரகாசம், K.துரைராஜா, V.சிவலிங்கம், S.செல்வேந்திரன், V.நடராஜா, K.சிவஜோதி, T.ஆனந்தராஜா, R.A.கந்தசாமி, S.M.குலேந்திரன்

கணக்காய்வாளராக S.கணேசலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

12.11.1970 அன்று பொதுக்கூட்டம் பம்பலப்பிட்டி இந்துக் கனிஸ்ட வித்தியாலயத்தில் திரு.A.V.மயில்வாகனம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளக் கூட்டப்பட்டது. கடந்தகால நிர்வாகிகளே மீண்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

திரு.E.K.சண்முகநாதன் இடமாற்றப்பட்டு இடைக்காலத்தில் அதிபர்கள் பலர் பதவியேற்றமையாலும், நிர்வாக குழுவில் பணியாற்றிய பலர் இடமாற்றம் பெற்று கொழும்பில் இருந்து வெளியேறியதாலும், 25.12.1973ல் அப்போதைய செயலாளர் திரு.நா.சிவநாதன் இடமாற்றம் பெற்ற காரணத்தால் தனது பதவியை இராஜினாமா செய்தமையாலும் கொழும்புக் கிளையின் செயற்பாடு மீண்டும் செயல் இழந்தது.

திரு.த.முத்துக்குமாரசாமி அவர்கள் கிறிஸ்தவ கல்லூரி அதிபரானதும் மீண்டும் கொழும்புக் கிளையை புனரமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உப.தலைவர் திரு.V.சோமசுந்தரம். செயலாளர் பொ.விக்னேஸ்வரலிங்கம் ஆகியோரைக் கொழும்புக்கு அனுப்பி கிளையைப் புனரமைப்பித்தார் 2.5.92இல் இக்கிளை மீண்டும் புனரமைக்கப்பட்டது. தலைவராக க.ஜெகநாதனும், செயலாளராக க.இராமநாதனும் பொருளாளராக திரு.C.சிவசாமியும் மற்றும் நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டு இயங்கிவந்தது. அதிபர் திரு.த.முத்துக்குமாரசாமி அவர்கள் கொழும்பு இந்துக் கல்லூரி அதிபரானதும் முன்னாள் அதிபர்கள் S.செல்வரட்ணம் P.K.இராஜரட்ணம் ஆகியோரின் அனுசரணையுடன் மீண்டும் புத்துயிர் பெற்றுச் சிறப்பாக இயங்கத் தொடங்கியது.

7.12.96ல் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போசகர் :- அதிபர்! தலைவர் திரு.க.ஜெகநாதன் உபதலைவர் திரு.P.K.இராசரட்ணம், திரு.த.முத்துக்குமாரசாமி, இணைச் செயலாளர்கள் திரு.சு.செல்வேந்திரன், திரு.து.சிறீதரன் பொருளாளர் திரு.R.விஜயகுமார் உப பொருளாளர் திரு.கு.உருத்திரகுமார், குழு உறுப்பினர்கள் திரு.S.செல்வரட்ணம் திரு.S.தேவானந்தன், திரு.P.ஜெகதீஸ்வரன் திரு.V.இராஜேந்திரன் திரு.N.சதானந்தயோகிஸ்வரன், திரு.T.அறிவழகன், திரு.V.பொன்னம்பலம், கலாநிதி தசிறீதரன் இவர்கள் 20.7.97ல் இளைப்பாறிய மேல் முறையீட்டு நீதிபதி K.பாலகிருஸ்ணரைப் பிரதம விருந்தினராகக் கொண்டு அதிஸ்டலாபச் சீட்டிழுப்பினையும், கலைவிழாவையும் நடாத்தி பரிசுக்கான உதவிகளைப் பழைய மாணவர்களிடம் இருந்து பெற்று 37,262 ரூபா மட்டில் செலவு செய்து பாடசாலைக்கு 1000 பெண்கள் 'ரை' 100 ஆண்கள் 'ரை', மண்டபமேடை திரைச்சீலை மாணவமுதல்வர், மாணவத்தலைவர் சின்னம் ஆகியவற்றுக்கு 59600/- செலவு செய்தபின் 433,395/-மீதப்படுத்தி இலங்கை வங்கி, வெள்ளவத்தை கிளையில் 400,000/- ரூபாவை வைப்பிலிட்டு. அதன் வருடாந்த வட்டிப்பணத்தில் மாதாந்தம் 750/- வீதம் நான்கு, பல்கலைக்கழக (கல்லூரியின் பழைய மாணவர்களுக்கு) E.K.சண்முகநாதன் புலமைப்பரிசில் கொடுப்பனவாக வழங்க வழி செய்துள்ளனர்.

கணணி அறை கல்லூரியில் அமைக்க கனடா சி.கருணானந்தன் அவர்களிடம் 50.000/- பெற்று உதவியுள்ளனர். 14708/- ரூபா செலவில் விஞ்ஞானக் கல்விக்கு உதவக்கூடிய "Oph cart" என்னும் கருவியை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

1998ல் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு தற்போதைய நிர்வாகக் குழு செயற்பட்டு வருகின்றது. தலைவர் V.பொன்னம்பலம் பெருளாளர் R. விஜயகுமார் ஆகியோரின் முயற்சியால் 150வது ஆண்டு நிறைவில் கல்லூரிக்கு நினைவு முத்திரை வெளியிட்டும், தண்ணீர் தாங்கியைப் புனரமைத்தும் பெரும் பணியாற்றியுள்ளனர்.

அதிபர்

✠ நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது என்பது சுலபம் ஆனால் உயிரைக் கொடுப்பதற்கான நண்பன் கிடைப்பதுதான் கடினம்.

✠ கல்வி என்பது ஒருவன் அறியாத பொருளை அறியவைப்பதில்லை ஒருவனுக்குத் தெரியாத பண்புகளைத் தெரியவைப்பது.

✠ "நட்பு ஒரு நளினமானகலை ஒரு சிலரே அந்த வரப்பிரசாதத்துடன் பிறந்திருக்கிறார்கள்.



முழுநிலாநாள் கலை விழாவில் கல்லூரி முன்னாள்
ஆசிரியர் திரு.க. சட்டநாதன் அவர்கள்
பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார்



கல்லூரிக்கான ஓட்டோ கையளிப்பு நிகழ்வில் இந்துகலாச்சார அமைச்சு
அதிகாரியிடமிருந்துகொழும்பு பழையமாணவர்சங்க பொருளாளர்
திரு. ச. விஜயகுமார் அவர்கள் ஓட்டோவை பெற்றுக் கொள்கின்றார்




கல்லூரி 150ஆவது ஆண்டு நிறைவு விழாவின்
இசையரங்கில் பழையமாணவி
செல்வி. க. சுதர்சினி பாடுகின்றார்

# யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளையின் அறிக்கை

போசகர் : அதிபர்
தலைவர் : திரு.வி.பொன்னம்பலம்
உபதலைவர் : திரு.எஸ்.செல்வேந்திரன்
திரு.பி.கே.ராஜரட்ணம்
செயலாளர் : திரு.தி.அறிவழகன்
பொருளாளர் : திரு.ஆர்.விஜயகுமார்
உப பொருளாளர்: திரு.எஸ்.கே.திருவருட்செல்வன்

குழு உறுப்பினர்கள் : திரு.பி.ஜெயதீஸ்வரன்
திரு.கே.ஜெயபாலன்
திரு.ஆர்.இராமநாதன்
திரு.கே.உருத்திரகுமார்
திரு.எஸ்.எச்.சேதுகாவலர்
கலாநிதி.ரி.சிறிதரன்

எமது கல்லூரியின் கொழும்பு கிளையானது தனது செயற்பாடுகளை 1990வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரம் ஆற்றக்கூடியதாக இருந்தது. 1991ம் ஆண்டளவில் திரு.க.ஜெகநாதன் அவர்கள் தலைமையில் ஓர் நிர்வாககுழு தெரிவாகியது. நாட்டில் நிலவிய அசாதாரண நிலை காரணமாகவும், நிர்வாகக்குழுவில் இருந்த சில உறுப்பினர்கள் வெளிநாடு சென்றமையாலும் நிறைவான சேவையைச் செய்யமுடியவில்லை. இந்நிலையில் 1996ம் ஆண்டு எமது கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் அதிபருமான திரு.த.முத்துக்குமாரசுவாமி அவர்கள் கொழும்பு இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தபின், அவரின் முயற்சியாலும் திரு.சு.செல்வேந்திரன் - செயலாளரின் ஊக்கத்தாலும் சங்கம் புத்தூக்கம் பெற்றது. இதற்கு எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்களான திரு.எஸ்.செல்வரத்தினம், திரு.பூ.க.இராசரத்தினம் அவர்களின் ஆலோசனையும் வழிகாட்டலும் கிடைத்தமை மேலும் உதவிகரமாக அமைந்தது. திரு.க.ஜெகநாதன் ஐக்கிய அமெரிக்கா சென்றமையால் மேற்கூறப்பட்ட நிர்வாக சபை தெரிவு 1998ல் செயற்பட்டது.

## எமது சங்கத்தின் செயற்பாடுகள்

1. நிதிசேகரித்தல் - நிர்வாக சபையின் முயற்சியாலும் குறிப்பாக பொருளாளர் திரு.ஆர்.விஜயகுமாரின் ஊக்கத்தாலும் ரூபா நான்கு இலட்சத்தை சேகரித்துள்ளோம்.

2. அமரர். E.K.சண்முகநாதன் (முன்னாள் அதிபர்) அவர்களின் ஞாபகார்த்தமாக புலமை பரிசில் நிதியம் ஒன்றை ஏற்படுத்தி கடந்த மூன்று வருடகாலமாக எமது கல்லூரியிலிருந்து யாழ் பல்கலைகழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களில் வசதி குறைந்த மாணவர்கள் நால்வருக்கு தலா ரூபா. 750/- மாதாந்தம் வழங்கி வருகின்றோம்.

3. கல்லூரியின் கணனிஅறை அமைப்பதற்கு ரூபா.50,000/- வழங்கியுள்ளோம்.

4. கற்பித்தலுக்கும் பயன்படும் **KALEDOSCOPE** கருவியை அன்பளிப்புச் செய்துள்ளோம்.

5. தண்ணீர் தாங்கியைத் திருத்துவதற்கு வடகீழ் பிராந்திய பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியத்திடமிருந்து ரூபா.34.000/- பெற்று, எமது சங்க நிதியத்திலிருந்து ரூபா.51,000/- சேர்த்து மொத்தமாக ரூபா.85.000/- வழங்கியுள்ளோம்.

6. 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாண்புமிகு கல்வி மந்திரி அவர்களால் வெளியிடப்படவுள்ள முத்திரை வெளியீட்டுக்கான பொறுப்புக்கள் அனைத்தையும் எமது சங்கம் பொறுப்பேற்றுச் செய்துள்ளது. இச்செயற்பாட்டிற்கு ரூபா 35,000 செலவு செய்துள்ளது. விழாச்சபை கேட்டதற்கமைய எமது சங்கத் தலைவர் திரு.வ.பொன்னம்பலம் தலைமையில் வெளியீட்டுவிழா நடைபெற்றது. குறிப்பிடத்தக்கது.

7. கல்லூரிக்கு அருகாமையில் உள்ள காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கியுள்ளோம். கல்லூரியின் பெயரில் காணியை பதிவு செய்வதற்கு முயற்சி எடுத்து வருகிறோம்.

8. இந்து - கலாசார அமைச்சரோடு தொடர்பு கொண்டு எமது பழைய மாணவர்களான திரு.வீவிக்கிரமராஜா, திரு.த.முத்துக்குமாரசுவாமி ஆகியோர் முச்சக்கர வண்டி **(Tricycle)** ஒன்றை கல்லூரிக்கு பெற்றுக் கொடுத்துள்ளோம்.

எமது கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பாக எமது சங்கத்திற்கு பல வழிகளிலும் உதவி வந்த எமது முன்னாள் அதிபர் அமரர் எஸ்.செல்வரத்தினம் அவர்கள் கடந்த ஆண்டு சிவபதம் அடைந்துள்ளமை எமக்கு பேரிழப்பாகும். அவரின் மறைவின்போது எமது சங்கம் வீரகேசரிப் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டதோடு, எமது பழைய மாணவர் பலரும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டார்கள்.

எமது கல்லூரியின் அபிவிருத்திக்கு சிறந்த வகையில் பணிகளை ஆற்றுவதற்கு பழைய மாணவர்கள் முன்வருகிறார்கள். முன்னாள் அதிபர் திரு.பூ.க.இராசரத்தினம் தனது பெயரில் கல்லூரியின் விளையாட்டுத்துறைத் தேவைக்கு பயன்படுத்த ரூபா ஒரு இலட்சம் நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்வந்துள்ளார். இதற்கு முதற் தடவைப் பணமாக ரூபா.25.000/- வழங்கியுள்ளார்.

அதிபர் திரு.என்.சிவகடாட்சம் அவர்களின் உற்சாகத்தாலும், உப அதிபர், ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பாலும் எமது கல்லூரி சிறப்பாக இயங்கி வருவதையிட்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

150ஆவது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் எங்கள் கல்லூரியை வாழ்த்துவதுடன் தொடர்ந்து எமது அன்னையின் வளர்ச்சிக்கு பணிபுரிவோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளர்
29 - 12 - 2002

# பழையமாணவர்கள் பிரான்ஸ்

எமது கல்லூரியின் பிரபல கூடைப்பந்தாட்ட வீரர் திரு.சே.தேவராஜேந்திரன் அவர்களுடன், எமது பழைய மாணவர் சங்கமுன்னாள் செயலாளர்களான திரு.பொ.விக்னேஸ்வரலிங்கம் (1993), திரு.S.K.தங்கவடிவேல் (1994) ஆகியோர் தொடர்பு கொண்டதற்கிணங்க திரு.சே.தேவராஜேந்திரன், திரு.க.சிங்கராசா திரு.சி.விக்கினகுமார் ஆகியோர் 27.04.1995இல் 128,907/= ரூபாவைச் சேகரித்து அனுப்பி உதவினர். இந்நிதி உதவியுடன் பாடசாலை கூடைப்பந்தாட்டமைதானம் புனரமைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் திட்டமிட்டபடி குறிப்பிட்ட வேலையைக், குறித்தகாலத்தில் பூரணப்படுத்த முடியவில்லை. எனவே இப்பணம் வங்கியில் நிரந்தரவைப்பில் இடப்பட்டது. பின்பு 1999 ஆவணிமாதம் வங்கியில் இருந்து மீளப்பெறப்பட்டு கூடைப்பந்தாட்டத்தூண்கள் 90,000/= ரூபா செலவில் அமைக்கப்பட்டன. லண்டன் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்கள், புனர்வாழ்வு அமைச்சு ஆகியவற்றின் நிதி உதவிகளுடன் குறிக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட வேலைத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டது. அத்துடன் திரு.சே.தேவராஜேந்திரன் தொடர்ந்தும் பாடசாலை அபிவிருத்திப் பணிகளுக்கு நிதியுதவி புரிவதாக கூறியுள்ளார்.

திரு.இ.குணரட்ணராசா அவர்கள் 2500/= ரூபாவை நிரந்தர வைப்பில் இட்டு வட்டிப்பணம் வறிய மாணவர்களுக்கு உதவ ஆவன செய்துள்ளார்.

திரு.ச.பரிபூரணானந்தம், அவரது சகோதரி தயாநிதி நித்தியானந்தா ஆகியோரும் 5000/= ரூபாவை நிரந்தர வைப்பில் இட்டு விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான பணிகளுக்கு வட்டிப்பணத்தைப்பயன் படுத்த ஒழுங்கு செய்துள்ளனர். அத்துடன் கிறிக்கெற் விளையாட்டுக்கும் உதவிகள் செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

அண்மையில் பிரான்சில் இருந்து இங்குவந்த திரு. சிங்கராசா அவர்கள் கல்லூரி வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் செய்வதாக உறுதியளித்துள்ளார்.

இவர்களின் முயற்சிக்கு. எமதுகல்லூரிப் பழைய மாணவர்கள் தங்கள் ஆதரவை வழங்கி உதவ வேண்டுகின்றேன்.

அதிபர்

# பழையமாணவர்கள் கனடா

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.சி.சிவநேசன் அவர்களுடன் தொடர்பு கொண்டு கனடாவில் பழைய மாணவர்சங்கக் கிளை ஒன்றை அமைத்து உதவும் படி எமது சங்கம் கேட்டுக் கொண்டது. இதற்கமைய எமது பழைய மாணவர்கள் பலருடன் அவர் தொடர்பு கொண்ட போதிலும் இம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

எமது கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து கனடாவுக்கு. குடிபெயர்ந்த திரு.இ.சகாதேவன் அவர்களின் முயற்சியால் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் 26-02-1995 அகளின்ரன் அலெனியுலிலுள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் ஒன்று கூடல் ஒன்றை நடாத்தி ஒரு நிர்வாகத்தை தெரிவு செய்தனர்.

| | |
|---|---|
| போசகர் | :~ திரு.சி.சிவநேசன் |
| தலைவர் | :~ திரு.சி.நம்பியாரூரன் |
| உபதலைவர் | :~ திரு.S.சதானந்தன் |
| செயலாளர் | :~ திரு.ஜெயக்குமார் |
| பொருளாளர் | :~ திரு.மகேஸ்வரன் |

திரு.S.கணபதி, திருமதி.ஆ.வைத்தியநாதன் உட்பட 9பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இக்குழு கலை நிகழ்ச்சி ஒன்றை நடாத்தி நிதிசேர்த்து பாடசாலைத் தளபாடத் தேவையை பூர்த்தி செய்யவும், கணணி வசதியை ஏற்படுத்தவும் தீர்மானித்த போதிலும் பின் அவை நிறைவேறவில்லை. திரு.இ.சகாதேவன் அமரரான பின்னர் இவ்வமைப்பு இயங்கவில்லை. 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திரு.சி.சிவநேசன் பழைய மாணவர்களை ஒன்றிணைக்க முயற்சித்தபோதிலும் அது சாத்தியமாகவில்லை. அவர் நேரடியாக 150வது ஆண்டு நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பித்தமை எமக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதுகின்றோம். தான் எழுதி வெளியிட்ட சிறுவர் பாடல் எனும் நூலின் 200பிரதிகளைக் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கி, அதனை விற்று, அப்பணத்தை விழாச்செலவுகளுக்குப் பயன்படுத்த அனுமதியளித்துள்ளார்.

அமைப்பு ரீதியாக இல்லாவிட்டாலும் தனிப்பட்ட முறையில் சிலர் எமக்கு உதவியுள்ளனர். திரு.A.C.செல்வராசா ஆசிரியர் 15 டொலர், திரு.சி.கருணானந்தன் கணனி அறை அமைப்பதற்காக கொழும்பு பழைய மாணவர் சங்கமூடாக 50,000/=,வும் திரு.த.தவராசா, பழைய மாணவர் சங்க பொதுக்கூட்ட செலவிற்காக 5000/=ஐ நிரந்தர வைப்பிலிட்டும், கோப்பாய் அபிவிருத்தி கழகம், கனடா 118,600/= கல்லூரிக்கு மூன்று வழி மின்னிணைப்புக்கு உதவியளித்துள்ளது. இந்த உதவியை செய்யத் தூண்டு கோலாக இருந்த எமது கல்லூரி பழைய மாணவர்கள் திரு.இ.யோகராஜன் திரு.இ.எல்லாளன் மற்றும் பெயர் அறியாத பாசமுள்ள பழைய மாணவர்கள் எல்லோருக்கும் எமது நன்றி, கல்லூரி வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் ஒன்றித்துச் செயற்பட்டுப் பாடசாலையை மேம்படுத்த முன்வருமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

அதிபர்

# பழைய மாணவர் சங்கம் - லண்டன்

## JAFFNA/KOPAY CHIRISTIAN COLLEGE OLD STUDENTS ASSOCIATION UK BRANCH

**90 Central Avenue, Hounslow, Middx, TW3 2QL**
**Telephone: 020 87370885**

**President**
**Mrs.S.Shanmuganathan**

**Secretary**
**Mr.S.Satkunam**

**Treasurer**
**Mr.S.Selvadurai**

## Committee Members :

**Mr.K.Kandasamy**
Mr.K.Pathmanataha
Mr.A.Pakianathan
Mr.Shirane Elango
Mrs.Racanayaki Anandam
Mrs.Rajani Indran
Mr.S.Thiruvasagam
Mr.C.M.Karunarajah
Mr.S.Skanthatheven
Mr.Sam.Salman
Mr.Sri Theivendran
Mrs.Kiriraja Jayaratnam

திரு.த.முத்துக்குமாரசுவாமி அவர்கள் அதிபர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டதும் நிர்வாக சபைக்கூட்டத் தீர்மானத்திற்கிணங்க வெளிநாட்டில் வாழும் பழைய மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியது. இந்தவகையில் லண்டனில் வதியும் முன்னாள் அதிபர் E.K.சண்முகநாதன் அவர்களின் துணைவி திருமதி.செ.சண்முகநாதனுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, லண்டனில் வாழும் பழைய மாணவர்களை ஒன்றுதிரட்டிக்கிளை ஒன்று அமைத்து பாடசாலைக்கான விளையாட்டு மைதான புனரமைப்புக்கனான நிதி உதவிகளை பெற்றுத் தருமாறு வேண்டியது. அவர் 16.09.93இல் தனது கணவர் நினைவாக புலமைப்பரிசில் நிதியத்திற்கு 30,000ரூபாவை அனுப்பி வைத்தார். இதன் வட்டிப்பணம் ஒவ்வொரு வருடமும் அவரின் நினைவாக கல்லூரிப் பரிசளிப்பு வைபவத்தில் பரிசில்கள் வழங்கப் பயன்படுகிறது.

லண்டனில் வதியும் பழைய மாணவர்களை ஒன்றுதிரட்டி நடைபெற்ற கூட்டத்தில் சேகரிக்கப்பட்ட பணம் 18,512/= ரூபா வறிய மாணவர்களுக்கு உதவ்வதற்காக எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆண்டுதோறும் ஒன்று கூடல்கள் நடாத்தப்பட்டு கல்லூரிக்காகப் பணம் சேகரிக்கப்பட்டது. 1997இல் 1,19,563/= ரூபா கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணம் விளையாட்டு மைதானம் புனரமைக்க உதவியது.

10.04.99 அன்று இரவு "Dinner of Dance" எனும் நிகழ்வு Isle worth Blue school new Hall இல் நடாத்தப்பட்டு 225, 369.32சதம் சேகரிக்கப்பட்டு கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 100,000ரூபா தேவாலய மதில் அமைக்கவும் 125,000/- கூடைப்பந்தாட்ட மைதானம் அமைக்கவும் பயன்படுத்தப்பட்டது. எமது கல்லூரிக்கு அண்மையில் சமூகம் தந்த அட்வகேட் திரு.க.பத்மநாதன் கிரிக்கெட் மைதானம் நிர்மாணிக்கவும் கிரிக்கெட் உபகரணங்களைப் பெற்றுதரவும் உறுதியளித்துள்ளார். திரு.சு.ஸ்கந்ததேவன் கல்லூரிக் கணணிப் பிரிவை அபிவிருத்தி செய்ய உதவுவதாக உறுதியளித்துள்ளார்.

150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டி ஆண், பெண், கழகம், பாடசாலை என நான்கு பிரிவாக நடாத்தப்பட்டது. இதற்கான முதல் பரிசான 1/4பவுண் பதக்கம் நான்கு(4) அமரர் E.K.சண்முகநாதன் நினைவாக அவரின் துணைவியார் திருமதி.செ.சண்முகநாதனாலும், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் ஆறு(06) 10,000/= செலவில் அமரர் ECA நவரட்ணராஜா நினைவாக அட்வகேட் க.பத்மநாதனாலும் வழங்கப்பட்டன.

2003ஆம் ஆண்டு அரை மரதன் ஓட்டப்போட்டி ஒன்று அமரர் ECA நவரட்ணராஜா நினைவாக நடாத்த ஒழுங்கு செய்யுமாறும், இதற்கான முழுச்செலவையும் தான் பொறுப்பேற்பதாகவும் திரு.க.பத்மநாதன் உறுதியளித்துள்ளார். தரம் 10,11 இல் கல்வி பயிலும் மாணவர்கள் நால்வருக்கு புலமைப்பரிசில் நிதியாக மாதாந்தம் 250/= வீதம் வழங்க இருப்பதாகவும் இதற்கான தனியான 2000ரூபாவை அடையாளமாக வழங்கி இதற்கான தனியான வங்கிக் கணக்குத் திறந்து மாதாந்தம் இவ்வுதவி கிடைக்க வழிசெய்வதாகவும் இப்பிள்ளைகள் தொடர்ந்து படித்து உயர்தர தகமை பெறுவார்களாயின் மாதாந்தம் 500/= அவர்களுக்கு வழங்க உள்ளதாகவும் அறியத்தந்துள்ளார். லண்டனில் உள்ள எமது பழைய மாணவர் சங்க செயற்பாட்டிற்கு அனைத்து பழைய மாணவர்களும் தங்கள் ஆதரவை வழங்கி உதவுங்கள்.

அதிபர்

# உ௨௦௦௨இல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு

02.02.2002 - உயர்தர மாணவ மன்ற ஒன்றுகூடல் விருந்தினர்.திரு.ஆ.சி.நடராசா (இளைப்பாறிய அதிபர் வசாவிளான் ம.ம.வி) திரு.வ.சிவலிங்கம் (பழையமாணவர்)

20.02.2002 - கட்டிட விளையாட்டுத்திடல் திறந்து வைத்தல் A.W.இராஜசேகரம் மண்டபம் திறந்து வைத்தல் திரு.க.மணிபல்லவராஜன் (பிரதேச சபைத்தலைவர், நல்லூர்) S.சிவசுப்பிரமணிய மண்டபம் திறந்து வைத்தல், மு.கார்த்திகேசன் மண்டபம் திறந்து வைத்தல், திரு.இ.சிவஞானசுந்தரம் (கோட்டக்கல்விப்பணிப்பாளர், கோப்பாய்) மு.கார்த்திகேசன் மண்டபம் திறந்து வைத்தல். திரு.U.L.Aரவி (உபதலைவர், பிரதேசசபை, வலி கிழக்கு) விளையாட்டுத்திடல் பொதுப் பெயர்ப் பலகை திரைநீக்கம். திரு.மு.குணசிங்கம் (தலைவர் பிரதேசசபை, வலி கிழக்கு) கூடைப்பந்தாட்டத்திடல் பெயர்ப்பலகை நீக்கம்) வைத்திய கலாநிதி வை.தியாகராசா (பழைய மாணவர்) கூடைப்பந்தாட்ட மைதானம் அங்குரார்ப்பணம் திரு.வீ.சோமசுந்தரம் (பழைய மாணவர், இளைப்பாறிய பிரதி அதிபர்) வலைப்பந்தாட்ட மைதானம் அங்குரார்ப்பணம் திரு.க.இ.குமாரசுவாமி (பழைய மாணவர்) கரப்பந்தாட்ட மைதானம் அங்குரார்ப்பணம் திரு.A.பாலசுப்பிரமணியம் (பழைய மாணவர்) வலைப்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பித்தல். திருமதி.R.ஞானானந்தன் (முன்னாள் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்) கூடைப்பந்தாட்டம் ஆரம்பித்தல். திரு.இ.நவராசா (பழைய மாணவர்) கரப்பந்தாட்டம் ஆரம்பித்தல் வைத்தல் திரு.சு.முத்துக்குமாரசாமி (பழைய மாணவர்)

வரவேற்புரை - திரு.F.A.சில்வெஸ்ரர் (பழைய மாணவர் சங்கச் செயலாளர்)

நன்றியுரை - திரு.யோசப்தாவீது (பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்).

02.03.2002 - இல்ல மெய்வல்லுனர் போட்டி. விருந்தினர். திரு.இ.கணேசன் (பழைய மாணவர்) திரு.மு.தேவராசா (முன்னாள் ஆசிரியர் திரு.வே.திருநாவுக்கரசு (பழைய மாணவர்)

01.04.2002 - புனரமைக்கப்பட்ட கிறிஸ்தவ பிரார்த்தனை மண்டபத்தில் வணபிதா தோமஸ்யோர்ஜ் அவர்களால் உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடு நடாத்தப்பட்டது.

21.6.2002 - இன்ரறெக்ட் கழக சின்னம் சூட்டல் நடைபெற்றது. Rt.T.வாமதேவன் Rt.அபஞ்சலிங்கம் கலந்து கொண்டனர் வானவில் சஞ்சிகை வெளியீடு.

28.06.2002 - பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளர் திரு.க.றமேஸ்குமார்(தொண்டுநாதன்) கல்லூரிக்குச் சமுகமளித்து உரையாற்றினார்.

30.06.2002 - தமிழ்ச்சங்கத்தால் முத்தமிழ்விழா நடாத்தப்பட்டது "சி.வை.தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு" என்னும் நூல் வெளியிடப்பட்டது. தென் இந்திய திருச்சபை பேராயர் அருட்கலாநிதி S.ஜெபநேசன், சைவப்புலவர் சிறுப்பிட்டி இ.செல்லத்துரை, கலாநிதி திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் விருந்தினராகப் பங்கேற்றனர். நூல் ஆய்வுரையை திரு.க.சட்டநாதன் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் சிறுப்பிட்டி சைவப்புலவர் இ.செல்லத்துரை அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். யாழ்மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.


**22.07.2002** அன்று பாடசாலைக்கு அங்கிலிக்கன் பேராயர் அதிவணக்கத்திற்குரிய டியூப் டீ சிகேரா விஜயம் செய்து சிற்றாலயத்தில் விசேட வழிபாடும், ஆசி வழங்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்திலும் நடைபெற்றது. யாழ் குரு முதல்வர் வண. S.P.நேசகுமார், திருமதி.சிகேரா அவர்களும் உடன் இருந்தனர். கிறிஸ்தவ மன்றம் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களிற்கு திருமதி.சிகேரா பரிசில்கள் வழங்கினார் வரவேற்புரையை திரு.B.S.A.அரியரட்ணம் அவர்களும், நன்றியுரையை திரு.யோசப்தாவீதும் வழங்கினர்.



கிறிஸ்தவ சமய ஆரம்ப நிகழ்வு




இந்துசமய ஆரம்ப நிகழ்வு.




மலேசியா குருநாத சுவாமிகளின் வருகை




ஆசி வழங்கும் நிகழ்வில் கொழும்பு பேராயர் ம.சி.காரோ



விவேகானந்தர் விழாவில் சுவாமி சித்ருபானந்தா



ஒளி விழா

**24.7.2002** - வெளிநாட்டில் வதியும் பழைய மாணவர்களின் உதவியால் க.பொ.த(உ.த) வகுப்பில் படிக்கும் நான்கு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. திரு.ரமேஷ் தொண்டநாதன் வழங்கப்பட்ட பரிசு அவரால் செல்வி.ந.கேமவர்த்தனிக்கும் திரு.பிரதீபராஜ் வழங்கிய பரிசு அவரின் தந்தை சிவகுரு அவர்களால் செல்வன்.ந.திருச்செல்வம் அவர்களுக்கும் திரு.தர்மரூபனால் வழங்கிய பரிசு அவரின் தந்தை திரு.தர்மரட்னத்தால் செல்வி.நி.தமிழ்பிரியாவுக்கும் திரு.செந்தில்குமாரன் வழங்கும் பரிசு அவரின் மாமனார் திரு.சரவணபவனால் செல்வி.த.உதயராகினிக்கும் வழங்கப்பட்டது.

**28.7.2002** - இளைஞர் செஞ்சிலுவைக்கழக ஆதரவில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. Dr.R.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 11பெண்களும் 16ஆண்கள் பங்கேற்றனர்.

**14.8.2002** - இந்து மாமன்றத்தினால் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடாத்தப்பட்டது. திரு.ஜெயரட்ணம் கோசல பங்குபற்றி சிறப்புரை ஆற்றினார்.

**14.8.2002** - சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு இடம் பெற்றது. யாழ்ப்பாணத் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி Dr.கமலநாதன், விரிரையாளர் திரு.கமலநாதனும் கலந்து கொண்டனர். 25சாரணர்கள் சின்னம் சூட்டப்பட்டனர். இந்நிகழ்வில் மக்கள் நலன்காக்கும் பிரிவுப்படை அணித்தொண்டர்களின் சேவை பாராட்டப்பட்டது, சான்றிதழ் வழங்கப்பட்டது.

**10.9.2002** - சைவப் பிரார்த்தனை மண்டப அங்குரார்ப்பண தினம் கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களால் பொங்கல் நிகழ்வுகள் நடாத்தப்பெற்றன.

**15.10.2002** - வாணிவிழா இந்துமாமன்றத்தின் முன்னேற்பாட்டில் நடைபெற்றது. திரு.ச.லலீசன் ஆசிரியர் சிறப்பு பேச்சாளராகப் பங்குபற்றினார்.

**18.10.2002** - விஞ்ஞான தினவிழா விஞ்ஞானமன்றத்தினால் கொண்டாடப்பட்டது. பிரதமவிருந்தினராக கலாநிதி பொ.நாகரட்ணம் (சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவ பீடம் யாழ் பல்கலைக்கழகம்) சிறப்பு விருந்தினராக ச.அருந்தவரட்ணம் (ப.மா) பங்குபற்றினர்.

**25.10.2002** - வணிகமன்ற விழா நடைபெற்றது. பிரதம விருந்தினர் திரு.ந.வரதராஜன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ்வலயம்) சிறப்பு விருந்தினர்கள் செல்வி.பொ.வேலுப்பிள்ளை (சேவைக்கால ஆலோசகர்) திரு.சி.மகேஸ்வரன் (உதவிக்கல்விப் பணிப்பாளர் முன்னாள் ஆசிரியர்) பங்கேற்றனர்.

**1.11.2002** - கல்விக்கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதமவிருந்தினராக திரு.யோ.ரவீந்திரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ்வலயம்) சிறப்பு விருந்தினராக, திரு.மா.புவனேந்திரன் (பழைய மாணவர்) திரு.யோ.தாவீது (பாடசாலை அபிவிருத்தி சங்கச்செயலாளர்) திரு.R.நவரட்ணசிங்கம் (பழைய மாணவர்) திரு.வி.துஷ்யந்தன் (மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணியும்) ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

**2.11.2002** - கல்விக் கண்காட்சி இரண்டாம் நாள் நிகழ்வு நடைபெற்றது. திரு.த.இராசலிங்கம் (பிரதிக்கல்விப்பணிப்பாளர் யாழ்வலயம்) திரு.S.K.தங்கவடிவேல் (விழாச்சபைச் செயலாளர்) திரு.நா.சுந்தரலிங்கம் (பழைய மாணவர், ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) திரு.இ.கிருஷ்ணகுமார் (பழைய மாணவர், ஆசிரியர் கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

**8.11.2002** - இப்பாடசாலையில் மூன்று வழி மின்னிணைப்பு வழங்கப்பட்டது. கனடா அபிவிருத்தி மன்றம் இதற்கான நிதியில் பெரும்பகுதியை வழங்கியது.

**28.11.2002** - கிறிஸ்தவ மன்றம் முன்னெடுத்த ஒளிவிழா நடைபெற்றது. வணபிதா A.E.செல்வராசா (குரு முதல்வன், கத்தோலிக்க திருச்சபை, யாழ்ப்பாணம்) வணபிதா J.ஜெபரட்ணம் (புனித மரியாள் ஆலயம், கோப்பாய்) திரு.கியூபேட் ஆனந்தராஜா (ப.மா.கிராமஅலுவர்) வணபிதா தோமஸ்யோர்ஜ் (புனித யாக்கோப்பு தேவாலயம், நல்லூர்) திருமதி.பஞ்சதிருசிங்கம் (பழைய மாணவி) ஆகியோர் பங்கேற்றனர்.

**29.11.2002** - பரிசளிப்பு விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு.வீ.இராசையா (வலிகாமம் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர்) சிறப்பு விருந்தினாராக திரு.S.தனபாலன் (அதிபர், யாழ் பரியோவான் கல்லூரி) திருமதி.இ.இராசரட்ணம் (அதிபர், யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோர் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

# 150 ஆவது ஆண்டு விழாச்சபை

**போசகர் :-** திரு.க.இ.குமாரசாமி, திரு.வி.சோமசுந்தரம், Dr.வை.தியாகராஜா

**தலைவர் :-** திருநசிவகடாட்சம் (அதிபர்)

**உப தலைவர்கள் :-** திருமதி.ச.கனகரத்தினம், திருமதி.இ.சிவானந்தன்

**செயலாளர் :-** திரு.S.K.தங்கவடிவேல்

**உப செயலாளர்கள் :-** திருயோசப்தாவீது (பா.அச), திருF.Aசில்வெஸ்ரர் (பமாச), திரு.வி.லிங்கேஸ்வரன் (நலன்புரிக் கழகம்)

**பொருளாளர் :-** திரு.ப.கணேசன்.

**நிதிக்குழு :-**
திரு.வ.சுப்பிரமணியம்
திரு.செ.பகீரதன்.
செல்வி.துளசி மயில்வாகனம்
திரு.க.விநாயகலிங்கம்.
திரு.ச.பரமானந்தன்
திரு.ஆ.சக்திவடிவேல்

**கலை நிகழ்ச்சிக் குழு :-**
திரு.G.Tஞானசேகரவேல்
திரு.செ.செல்வரட்ணம்
திரு.செ.தம்பையா.
திரு.இ.கிருஷ்ணகுமார்.

**நினைவு முத்திரை:-**
திரு.நா.சிவநாதன்.
திரு.ஐ.சிவலோகநாதன்
திரு.P.Tராஜா
திரு.க.ஸ்ரீஸ்கந்தராஜா

**மலர்க்குழு :-**
திருமதி.ச.கனகரத்தினம்
திரு.சி.சிவலிங்கம்
திருமதி.செ.சிவஞானரட்னம்.
திரு.சு.சண்முகதாசக்குருக்கள்.
திரு.வே.மகாலிங்கம்
திரு.சு.சிவனேசராசன்
திரு.BSA.அரியரட்ணம்.

**விளையாட்டு :-**
திரு.செ.செல்வச்சந்திரன்
திரு.இ.கிருபராசா
திரு.சு.முத்துக்குமாரசாமி
திரு.செ.ஜெயரட்ணம்.
திரு.கியூபேட் ஆனந்தராசா

## சமய நிகழ்வுகள் :-

**கிறிஸ்தவ வழிபாடு :-**

03.01.2002 கிறிஸ்தவ மன்ற ஆதரவில் கல்லூரி சிற்றாலயத்தில் ஜெப வழிபாடு வணபிதா செபஸ்ரியன் அடிகளார் நடாத்திய பின்னர் பாண்ட் வாத்தியம் இசைக்க அனைவரும் சென்மேரிஸ் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தேவாலயத்தில் விசேட நன்றி ஆராதனை வணபிதா S.P நேசகுமார், வணபிதா. J.N.ஞானபொன்ராசா, வணபிதா. தோமஸ் ஜோர்ஜ் ஆகியோரால் நடாத்தப்பட்டு பின்னர் அனைவரும் கல்லூரி மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு அங்கு 150 மெழுகுதிரிகள் கொழுத்தப்பட்டு நிகழவுகள் ஆரம்பமாயின. செயலாளர் திரு.S.K தங்கவடிவேல் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து ஆசிஉரைகள் அங்கிலிக்கன் தேவாலயத்தைச் சேர்ந்த வணபிதா S.P.நேசகுமார், வண.J.N.ஞானபொன்ராசா, தோமஸ் ஜோர்ஜ் வணக்கத்திற்குரிய செவஸ்ரின் அடிகள் (அம.தி) கானான் தேவாலயம் போதகர் ஈ ஒபிரகாஷ், அசம்பிளி ஓப் கோட் போதகர் P றொபேட், இலங்கை பெந்திக் கோஸ்சபை வணக்கத்திற்குரிய சகோதரர் றிட்டோ வின்சன் ஆகியோர்களால் வழங்கப்பட்டது. நன்றி உரை உபசெயலாளர் திரு.ஜோசப்தாவீது அவர்களால் வழங்கப்பட்டது.

**இந்து சமய வழிபாடு :-**

**04.01.2002** சிவஸ்ரீ.வை.மு.பரமசாமிக்குருக்கள் தலைமையில் கல்லூரிப் பிராத்தனை மண்டபத்தில் சரஸ்வதி யாகமும், விசேட பூசை வழிபாடும் நடாத்தப்பட்டது. இந்து மாமன்ற ஆதரவில் நடைபெற்ற இந்நிகழ்வில் அனைவரும் நாதஸ்வர இசையுடன் கல்லூரி மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு திரு.S.K.தங்கவடிவேலின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள், பிரணவநாதிக் குருக்கள் (ப.மா), சண்முகரத்தினசர்மா (ப.மா), சண்முகதாசக் குருக்கள் (பெற்றோர்), சண்முகராஜேஸ்வரக் குருக்கள் (ப.மா), செம்புராஜேஸ்வரக் குருக்கள் (ப.மா), பசுபதீஸ்வரக் குருக்கள் (ப.மா), சோமசுந்தரக் குருக்கள் (ப.மா), தானேஸ்வரக் குருக்கள் (நலன்விரும்பி), விஜயேந்திரசர்மா (ப.மா), பாலசுப்பிரமணியக் குருக்கள் (பெற்றோர்), சண்முகராசக் குருக்கள் (ப.மா), சாந்தரூபசர்மா (பழைய மாணவர்), ஆகியோரால் ஆசியுரை வழங்கப்பட்டது. திரு.வி.லிங்கேஸ்வரன் (உப செயலாளர்) அவர்களின் நன்றி உரையுடன் நிகழ்வுகள் முடிவுபெற்றன.



நினைவு முத்திரையை வெளியிட்டு வைக்கின்றார் முன்னாள் கல்வி அமைச்சர் திருமதி.இ.புலேந்திரன



முத்திரை விற்பனை





அதிபர் கௌரவிக்கப்படுகின்றார்

# எமது நினைவில்.........

## அன்று



125 ஆவது ஆண்டு நினைவு மண்டப் அடிக்கல் நாட்டும் நிகழ்வு




1989ல் இரு மாடிக்கட்டிடத்திற்கா அடிக்கல் நாட்டும் நிகழ்வு


## இன்று.........



125 ஆவது ஆண்டு நினைவு மண்டபத்தில் இருந்து பிரார்த்தனை மண்டபத்திற்கு சுவாமிப்படங்களை கொண்டு வருதல்



கல்லூரி மணியை பிரார்த்தனை மண்டபத்திற்கு அருகில் ஏற்றுதல்



எமது கல்லூரியின் கணனி அமைப்பு

## ஏனைய நிகழ்வுகள் :-

**11.01.2002 :-** அன்று சுவாமி விவேகானந்தரின் நினைவுத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. பருத்தித்துறை, சாரதா சேவாச்சிரமம் சுவாமிகள் சித்ருபானந்தா அன்பளிப்புச்செய்த சுவாமி விவேகானந்தர் படம் பிரார்த்தனை மண்டபத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கல்லூரி மண்டபத்தில் வைக்கப்பட்டு விசேட சொற்பொழிவு நிகழ்வுகள் நடைபெற்றன. திரு.வி.லிங்கேஸ்வரன் வரவேற்புரையையும், திரு.S.K.தங்கவடிவேல் நன்றியுரையையும் வழங்கினர்.

**11.03.2002 :-** சிவராத்திரிதினம் இந்து மாமன்றத்தால் முன்னெடுக்கப்பட்டு திரு.ந.விஜயசுந்தரம், சிறப்புப் பேச்சாளராகப் பங்கேற்றார்.

**14.08.2002 :-** இந்து மாமன்றத்தினால் சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை நடாத்தப்பட்டு திரு.ஜெயரட்ணம் கோசல சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

## 150ஆவது ஆண்டு ஒன்று கூடல்

**21.07.2002 :-** சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்நிகழ்வின் விசேட விருந்தினர்களாக திரு.ரமேஸ்குமார் தொண்டுநாதன் இளைப்பாறிய பிரதி அதிபர்கள் திருமதி.ச.கனகரத்தினம், திருமதி.இ.சிவானந்தன் ஆகியோர் பங்கேற்றனர். பழைய மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களிற் கிடையே சிநேக பூர்வமாக கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கிறிக்கெற் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. பிரான்சில் இருந்து வருகை தந்த பழைய மாணவர் திரு.ச.பரிபூரணானந்தனும் பங்கேற்றார்.

## நூலக வாரம்

### (07.10.2002 - 11.10.2002வரை)

### 07.10.2002 :-

**வரவேற்புரை :-** திரு.S.K.தங்கவடிவேல்

**ஆசியுரை :-** ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
வணக்கத்திற்குரிய S.போல் நட்சத்திரம் (குருமடம் கொழும்புத்துறை)

**விருந்தினர்கள் :-** பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை (உபவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)
கவிஞர்.இ.முருகையன்
திரு.ஆ.இராசநாயகம்(ப.மா)
திரு.ஆனந்தகுமாரசாமி (வசந்தம் புத்தகசாலை)
கலாநிதி பொன்.சக்திவேல் (பிறைற் நிறுவனம்)

**நன்றியுரை :-** செல்வி.நி.தமிழ்ப்பிரியா

### 08.10.2002 :-

**ஆசியுரை :-** சிவபதீஸ்வரக்குருக்கள்(ப.மா)

**விருந்தினர்கள் :-** சு.தர்மலிங்கம் (ப.மா)

**வரவேற்புரை :-** திரு.செ.பகீரதன்(ஆசிரியர்)

**சிறப்புரை :-** திரு.சு.சிவனேசராசன்(ஆசிரியர்)

**நன்றியுரை :-** செல்வன்.வ.சயந்தன்

### 9.10.2002 :-

**ஆசியுரை :-** சிவஸ்ரீ.சண்முகராசக் குருக்கள்(ப.மா)
வணபிதா.Rcx.நேசராசா (சபைக்குரு, அடைக்கலமாதா ஆலயம்)

**விருந்தினர்கள் :-** திரு.இ.இராஜரட்ணம்(ப.மா)
திருமதி.கருணானந்தராஜா (உதவிநூலகர், யாழ் பல்கலைக்கழகம்)

**சிறப்புரை :-** திரு.கா.திருப்பதி(ஆசிரியர்)
திரு.சி.சிவலிங்கம்(ஆசிரியர்)

**வரவேற்புரை :-** S.K.தங்கவடிவேல்

**நன்றியுரை :-** செல்வன்.வ.அயந்தன்.

### 10.10.2002 :-

**ஆசியுரை :-** சிவஸ்ரீ.சண்முகராஜேஸ்வரக் குருக்கள்(ப.மா)
வண.பிதா.ஜெபமோகன் (புனிதமரியாள் ஆலயம்)

**விருந்தினர்கள் :-** திரு.ஆ.சி.நடராஜா (இளைப்பாறிய அதிபர்)
திரு.ஐயா.சச்சிதானந்தம் (ஆசிரியர், தினக்குரல்)

**வரவேற்புரை :-** திரு.S.Kதங்கவடிவேல்

**நன்றியுரை :-** செல்வி.சி.கோபிகா.

*பாடசாலைத் தகவல் அடங்கிய விசேட பதிப்பு. தினக்குரல் வெளியீடு வெளியிடப்பட்டது.*

**11.10.2002 :-**

| | |
|---|---|
| **ஆசியுரை :-** | சுவாமி சித்ருபானந்தா (ஸ்ரீசாரதாசேவாச்சிரமம், பருத்தித்துறை) கலாநிதி அன்ரன்மத்தாயஸ் (தலைவர் கிறிஸ்தவ நாகரிகத் துறை யாழ் பல்கலைக்கழகம்) |
| **விருந்தினர்கள் :-** | திரு.க.விநாயகலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) திரு.வேமகாலிங்கம்(பமா) அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை (எழுத்தாளர்) |
| **சிறப்புரை :-** | திரு.ப.கணேசன்(ஆசிரியர்) |
| **வரவேற்புரை :-** | திரு.S.K.தங்கவடிவேல் |
| **நன்றியுரை :-** | செல்வி.அ.அகல்யா |

# விளையாட்டு நிகழ்வுகள்

**26.07.2002 :-** கிரிக்கெட் இறுதிப்போட்டி நடைபெற்று விருந்தினர்களாக திரு.செ.தயானந்தன் (ப.மா,தயாநகைப் பூங்காவின் உரிமையாளர்), திரு.S.ஸ்கோட் (ப.மா), திரு.ம.செல்வராஜா (ப.மா) ஆகியோர் பங்கேற்றனர். வரவேற்புரையை திரு.செல்வசுந்தரனும் நன்றியுரையை திரு.S.K.தங்கவடிவேலும் நிகழ்த்தினர்.

**18.08.2002 :-** ஹொக்கி சுற்றுப் போட்டிகள் நடை பெற்றன. விருந்தினர்களாக வைத்திய கலாநிதி இராஜராஜேஸ்வரனும், திரு.சி.மணியம் (ப.மா), திரு.கெ.காண்டீபன் (ப.மா) பங்கேற்றனர். அமரர் ஜெகதீஸ்வரி சிவலோகநாதன் குடும்ப ஆதரவில் நடைபெற்றன. வரவேற்புரையை திரு.இ.கிருபராஜாவும், நன்றியுரையை திரு.S.K.தங்கவடிவேலும் நிகழ்த்தினர்.

**31.08.2002 :-** அன்று மின்னொளியில் திரு.த.வரதராஜா (ப.மா), அவர்களின் ஆதரவில் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதி நிகழ்ச்சி நடைபெற்றது. விருந்தினர்களாக திரு.த.வரதராஜா (ப.மா), திரு.இ.நவராசா (ப.மா), திரு.S.தங்கராஜா (ப.மா) ஆகியோர் பங்கேற்றனர் வரவேற்புரையை திரு.இ.கிருபராஜாவும் நன்றியுரையை திரு.S.Kதங்கவடிவேலும் நிகழ்த்தினார்.

**04.08.2002 :-** அன்று மின்னொளியில் கூடைப் பந்தாட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. விருந்தினர்களாக திரு.ப.கார்த்திகேசு (ப.மா), திரு.செ.தர்மராஜா(ப.மா) ஆகியோர் பங்கேற்றனர். வரவேற்புரையை திரு.இ.கிருபராஜாவும் நன்றியுரையை திரு.S.Kதங்கவடிவேலும் நிகழ்த்தினர்.

**19.10.2002 :-** ஆண், பெண்களிற்கான சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெற்றன. யாழ் மாநகரமேயர் திரு.செல்லன்.கந்தையன் ஆரம்பித்து வைத்தார்.

**150 ஆவது ஆண்டு நிறைவு உதைப்பந்தாட்டப் போட்டி வலைப்பந்தாட்டப் போட்டி இறுதி நிகழ்வு :-**

**29.1.2003:-** யாழ்மாவட்ட கழகங்களுக்குடையே நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்ட போட்டிகளும் (கழகம் , பாடசாலை) அமரர் ம.இரவீந்திரன் நினைவு வலைப்பந்தாட்ட போட்டிகள் நடைபெற்றன. விருந்தினராக பிரதேச செயலகம் , கோப்பாய் விளையாட்டு அதிகாரி திரு.க.சுதாகரனும் சிறுவர் பாதுகாப்புக்குரிய நிகழ்ச்சித்திட்ட அதிகாரியும், பழைய மாணவனுமாகிய திரு.ஆ.ரஞ்சித் சைவேந்திரகுமாரும் பங்கேற்றனர். விளையாட்டு போட்டிகளை யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி.ருபசிங்கம் ஆரம்பித்து வைத்தார் வரவேற்புரையை திரு.இ.கிருபராசா நன்றியுரையை திரு.S.K.தங்கவடிவேலும் கூறினர.

# முழு நிலா கலைவிழா

அமரத்துவம் அடைந்தவர்களை நினைவு கூர்ந்து அரங்கம் அமைத்து, கல்லூரி பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் விருந்தினர்களாக அழைத்துக் கௌரவிக்கப்பட்டு, எமது பிரதேச கலைஞர்களின் நிகழ்வுக்கும் இடம் கொடுத்து இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொரு முழுநிலா நாளிலும் நடாத்தப்பட்டது.

**28.01.2002:-** சிறுப்பிட்டி "சிவைதாமோதரம்பிள்ளை அரங்கு'' விருந்தினர்களாக பிரமஸ்ரீ ப.ஸ்கந்தராஜேஸ்வரசர்மா (ப.மா), திரு.ஐ.சிவலோகநாதன் (ப.மா) ஆகியோர் பங்கேற்றனர்.

| | |
|---|---|
| **கௌரவிப்பு** | :- இருபாலையூர் தவில் வித்துவான் திருசமுருகையா |
| **நிகழ்ச்சிகள்** | :- செல்வன்.டினேஷ்ஷாந் யோகராஜன் (தனி நடனம்) முருகன் அவதாரம் (கண்ணகை அம்மன் முன்பள்ளி சிறுவர்கள்) |


# வினோ

## நகைப் பூங்கா

தங்க, வைர
நகை வியாபாரம்

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

Phone - Fax
2222824



குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# VINO

## NAKAI POONKA

GOLD & JEWEL MERCHANT

For
Modern and
Distinctive



Articles are all
Guaranteed &
Genuine for
Guality Jewels

185, KASTHURIAR ROAD, JAFFNA.

இம் மலரை வாழ்த்துகின்றோம்

## மக்கள் மனமறிந்த வங்கியாம்

## மக்கள் வங்கியின் ஜெயஸ்ரீ

## மாபெரும் அதிஷ்டச் சீட்டிழுப்பு

ஆரம்பம் :- ஜனவரி 2002ல் இருந்து

வைப்பிற்கான தகைமை :- ஓர் வாடிக்கையாளர் நடப்பு மாதத்தில் ஆகக் குறைந்த மீதியாக

1. சேமிப்புக் கணக்கொன்றில் ரூ. 10000/- பேணுதல் அல்லது
2. நடப்புக் கணக்கொன்றில் ரூ. 5000/-பேணுதல் இக் கணக்கொன்றில் மேலதிகமாகவுள்ள ஒவ்வொரு ரூ. 5000/- மீதிக்கும் இன்னொரு குலுக்கல் தகைமையைப் பெறமுடியும்.

பரிசுகளின் விபரம்

*நாளாந்தப் பரிசுகள்*

தினமும் 24 பரிசுகள் ஒவ்வொன்றும் 1/2 தங்கப்பவுன்(ரூ.3250)

*மாதாந்தப் பரிசுகள்*

| | |
|---|---|
| 1ம் பரிசு - கார் | 700000/- |
| 2ம் பரிசு - கொம்பியூட்டர் | 100000/- |
| 3ம் பரிசு - கொம்பியூட்டர் | 100000/- |
| 4ம் பரிசு - நடமாடும் தொலைபேசி | 10000/- |
| 5ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |
| 6ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |
| 7ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |
| 8ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |

*கால்வருடப் பரிசுகள்*

| | |
|---|---|
| 1ம் பரிசு - கார் | 1800000/- |
| 2ம் பரிசு - கொம்பியூட்டர் | 100000/- |
| 3ம் பரிசு - கொம்பியூட்டர் | 100000/- |
| 4ம் பரிசு - நடமாடும் தொலைபேசி | 10000/- |
| 5ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |
| 6ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |
| 7ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |
| 8ம் பரிசு - நடமாடும் தொலை பேசி | 10000/- |

*வருடாந்தப் பரிசு*

ஒரு வீடு 4000000/-

மாதாந்த, கால்வருட, வருடாந்த சீட்டிழுப்பில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் பணமாகவும் பரிசைப் பெறமுடியும்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

செல்வி.ந.சிந்துஜா குழுவின்ரின் நடனம்.
சூசையப்பர் தேவாலய சிறுவர்கள் நடனம்
(கோப்பாய் மத்தி)

திகதி :- 27.02.2002

அரங்கு :- சோமசுந்தரப்புலவர் / வைத்தியநாதன் அரங்கு

பிரதம விருந்தினர் :- திரு.S.அழகராசா (இளைப்பாறிய ஆசிரியர்)

சிறப்பு விருந்தினர் :- திரு.S.ஆறுமுகநாதன்(பமா)

கௌரவிப்பு :- திருசண்முகம் குணசிங்கம் (பிரபல மிருதங்க வித்துவான்)

நிகழ்ச்சிகள் :-

*பாலர் பகல் விடுதிச் சிறுவர் கோப்பாய் வடக்கு.

*இலட்சுமி புத்திரனின், சுதேசியக் கலாமன்றத்தினரின் "விதைப்பு" நாடகம்.

திகதி :- 28.03.2002

அரங்கு :- வடகோவை சபாபதி நாவலர் அரங்கு.

பிரதம விருந்தினர் :- திருசி.பொன்னுத்துரை (இளைப்பாறியஆசிரியர்)

சிறப்பு விருந்தினர் :- திருதிவரதராஜன் (கிராம அலுவலர்)
திரு.ஆ.செல்லையா (இளைப்பாறிய ஆய்வுகூட உதவியாளர்)

கௌரவிப்பு :- கல்வியூர் கவிஞர் திரு.பூ.புலேந்திரராஜா (நல்லை அமிழ்தன்)

நிகழ்ச்சிகள் :- தென்கோவை. திருநாபாலசுப்பிரமணியம் குழுவின் நாதஸ்வரக் கச்சேரி
வெள்ளெருவைப்பிள்ளையார் சனசமூகநிலைய சிறார்கள் நடனம்
வில்லிசை
கோப்பாய் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சமித்தியினர்.

திகதி :- 26.04.2002

அரங்கு :- M.V.ஹட்சின்ஸ் அரங்கு

பிரதம விருந்தினர் :- திருமதி.செல்வமலர் சிவஞானரட்ணம் (பமா, நிதி உதவியாளர் பிரதேசசெயலகம்) கோப்பாய்.

கௌரவிப்பு :- இலக்கிய கர்த்தா யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

நிகழ்ச்சிகள் :- *மிருதங்க வித்துவான் சா.குணசிங்கம் அவர்களின் மாணவர்களின் நிகழ்ச்சி
*கட்டப்பிராய் மாதர் பாலர்பாடசாலை சிறார்கள் தாளம்யும் பணைவளம் என்ற நிகழ்ச்சி

திகதி :- 26.05.2002

அரங்கு :- "கோவை மகேசன்" அரங்கு

பிரதம விருந்தினர் :- திரு.க.சட்டநாதன் (முன்னாள் ஆசிரியர்)

சிறப்பு விருந்தினர் :- திருசபரமானந்தம் (பமா)

கௌரவ விருந்தினர் :- திரு.அ.இரத்தினம் (ப.மா)
திரு.த.கதிர்காமநாதன் (ப.மா,விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)

கௌரவிப்பு :- இலக்கிய கர்த்தா கௌரவிப்பு தாயகம் ஆசிரியர் திருகதணிகாசலம்

நிகழ்ச்சிகள் :- கல்லூரி மாணவர்களின் இசையரங்கு

திகதி :- 24.06.2002

அரங்கு :- திருசிசுந்தரலிங்கம் அரங்கு

பிரதம விருந்தினர் :-
சிவஸ்ரீ.செல்வனேசக் குருக்கள் (பமா,பிரதமகுரு கற்பகப்பிள்ளையார் கோயில், இருபாலை)

சிறப்பு விருந்தினர் :- திரு.ஐ.சிவராஜா (பமா, ஆசிரியர் அத்தியார் இந்துக்கல்லூரி)
திரு.தி.பிரபாகரன் (ப.மா,ஆசிரியர் பரியோவான் கல்லூரி)

கௌரவிப்பு :- இலக்கியத்தென்றல் சிவஸ்ரீ கோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிகள் | :- | நாடகம் - இலட்சுமி புத்திரனின் சுதேசிய கலாமன்றத்தின் "விழிப்பு" |
| திகதி | :- | **23.07.2002** |
| அரங்கு | :- | உவிற்னி அரங்கு |
| பிரதம விருந்தினர் | :- | திருமதி.யோகமலர் புண்ணியமூர்த்தி (பமா, ஆசிரியை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி) |
| சிறப்பு விருந்தினர் | :- | திருமதி.புஸ்பம் சந்திரசேகரம் (ப.மா, ஆசிரியை சிதகபாடசாலை) திருமதி.கமலாதேவி பாலச்சந்திரா (பமா, ஆசிரியை கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) |
| கௌரவிப்பு | :- | திருமதிமகேஸ்வரி சுப்பிரமணியம் (இசை ஆசிரியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) |
| நிகழ்ச்சிகள் | :- | குழுப்பாடல் கல்லூரி மாணவர்கள் கௌதமன் தயாநிதி (நடனம் பிரான்ஸ்) |
| திகதி | :- | **22.08.2002** |
| அரங்கு | :- | பீற்றோ அரங்கு |
| பிரதம விருந்தினர் | :- | திரு.த.நடராசா (ப.மா, பதவிநிலை உத்தியோகத்தர் பிரதேசசெயலகம், கோப்பாய்) |
| சிறப்பு விருந்தினர் | :- | திரு.மா.கருணானந்தன் (பமா, கிராம அலுவலர்) திரு.சு.மகேந்திரன் (ப.மா, பிரதம எழுதுவினைஞர் பிரதேச செயலகம், கோப்பாய்) |
| கௌரவிப்பு | :- | இலக்கிய கர்த்தா கோப்பாய் சிவம் திரு.பசிவானந்தசர்மா |
| நிகழ்ச்சிகள் | :- | ஓகன் இசை - கலைஞானகேசரி S.பொன்னுத்துரையின் மாணவர்கள் செல்வன்சிவபாலன் கௌசல்யன் (பரியோவான் கல்லூரி) செல்வன்சிறிதரன்ரகுராம் (இந்து ஆரம்பபாடசாலை) |
| திகதி | :- | **20.09.2002** |
| அரங்கு | :- | இந்து போட் இராஜரட்ணம் அரங்கு |
| பிரதம விருந்தினர் | :- | திரு.ப.நடராசா (பமா, இளைப்பாறிய தபால் அதிபர்) திரு.K.தில்லைத்துரை (பமா, இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்) |
| கௌரவிப்பு | :- | செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுகன் |
| நிகழ்ச்சிகள் | :- | நடனம் கல்லூரி மாணவர்கள் |
| திகதி | :- | **20.10.2002** |
| அரங்கு | :- | பண்டிதர் கந்தையா அரங்கு |
| பிரதம விருந்தினர் | :- | திரு.பொ.கந்தையா (பமா, இளைப்பாறிய ஆசிரியர்) |
| சிறப்பு விருந்தினர் | :- | திரு.வி.குமாரசாமி (முன்னாள் சிரேஷ்ட மாணவத் தலைவன்) திருமதி.சிவாயினி செல்லத்துரை (ப.மா, பிறப்பு, இறப்பு, பதிவாளர், திருநெல்வேலி) திரு.க.சோமஸ்கந்தமூர்த்தி (ப.மா,பண்டிதர் கந்தையாவின் மகன்) |
| கௌரவிப்பு | :- | கலாநிதி கா.சொக்கலிங்கம்(சொக்கன்) |
| கலை நிகழ்ச்சிகள் | :- | நாதஸ்வர இசை இருபாலையூர் நாபாலசுப்பிரமணியம் குழுவினர் |
| திகதி | :- | **19.11.2002** |
| அரங்கு | :- | சுவாமிநாதன் அரங்கு. |
| பிரதம விருந்தினர் | :- | திரு.பொ.செல்வரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர்) திரு.அ.நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்) |
| சிறப்பு விருந்தினர் | :- | திரு.ந.விஜயசுந்தரம் (பத்திரிகையாளர்) திரு.தி.வரதராஜன் (கிராம அலுவலர்) |

கௌரவிப்பு :- இலக்கியகர்த்தா k.v.குணசேகரம் (பழைய மாணவர், அதிபர் கோப்பாய் நாவலர் வித்தியாலயம்)

கலைநிகழ்ச்சிகள் :- கவியரங்கு கல்லூரி மாணவிகள்

திகதி :- 19.12.2002

அரங்கு :- S.J.குணசேகரம் அரங்கு

பிரதம விருந்தினர் :- திரு.இ.இராஜரட்ணம்(ப.மா)

சிறப்பு விருந்தினர் :- திரு.செ.செல்வரட்ணம் (ப.மா, செயலர்பிரதேசசபை நல்லூர்)

கௌரவவிருந்தினர் :-திரு.க.தணிகாசலம் (ஆசிரியர், தாயகம்)

கௌரவிப்பு :-இலக்கியகர்த்தா திரு.க.சட்டநாதன்

கலைநிகழ்ச்சிகள் :-தனிநடிப்பு திரு.S.K.தங்கவடிவேல்

திரு.ப.கணேசன் (ஆசிரியர்)

திரு.ச.அரவிந்தன் (ஆசிரியர்)

**150 ஆவது ஆண்டு நிகழ்வு – அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு :-**

7.2.2003 அன்று விழாச்சபை உபதலைவர் திருமதி ச.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது . விருந்தினராக திரு.த.ரவீந்திரராசா(விமாகி யாழ்ப்பாணம் பழைய மாணவர்) திரு.செ.தெய்வேந்திரம் (கணக்காளர், ப.நோ.கூ சங்கம் நீர்வேலி பழைய மாணவர் ஆகியோர் கலந்து கொண்டனர் 150 ஆண்டு இறுதி நிகழ்ச்சி வீடியோ தொகுப்பு காண்பிக்கப்பட்டு பி.ப 7.00 மணிக்கு அதிஸ்லாபசீட்டுக்கள் குலுக்கப்பட்டு பரிசுக்குரிய சீட்டுக்கள் தெரிவுசெய்யப்பட்டன திரு.S.K.தங்கவடிவேல் நன்றியுரை கூறினார்.

விழா சிறக்க உதவியோர்

விளையாட்டு போட்டிகள்

**கூடைப்பந்தாட்ட போட்டிகள்:-**

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் கோப்பாய்

கிரிக்கெட் போட்டிகள் திரு.செ.தயானாந்தன் (பழையமாணவர்)

தயாநகைப் பூங்கா, யாழ்பாணம்.

**உதைப்பந்தாட்டப் போட்டிகள்:-**

திரு.E.S.P.நாகரட்ணம், உரிமையாளர் E.S.பேரம்பலம் சகமைந்தர்கள் நிறுவனம், யாழ்ப்பாணம்.

திரு.P.சூரியகுமார் (பழையமாணவர்) கட்டிட ஒப்பந்தக்காரர், கற்பகப் பிள்ளையார் கோவில் கோப்பாய் தெற்கு.

**ஹொக்கி போட்டிகள் :–**

திருமதி.ஜெகதீஸ்வரி சிவலோகநாதன் (பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை) நினைவாக திரு.சு.தயானந்தேஸ்வரன்

**வலைப்பந்தாட்டப் போட்டிகள் :-.**

அமரர் ம.இரவீந்திரன் நினைவாக திரு.ம.மனோகரன் (கந்தசாமி கோயிலடி, கோப்பாய் வடக்கு)

**கரப்பந்தாட்ட போட்டிகள்:-**

திரு.த.வரதராசா (பழைய மாணவர்) ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி.

**அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு :-**

**(பரிசுகள் அன்பளிப்புச் செய்தோர் விபரம்)**

1ம் பரிசு 1தங்கப்பவுண்

திரு.த.குகதாசன் (பழைய மாணவர், பிரபல கண்வைத்தியர்)

2ம் பரிசு 1/2 தங்கப்பவுண்

திருமதி.மகேஸ்வரி கந்தையாவும், திரு.க.சிறிஸ்கந்தராசா (அமரர்கள் க.தியாகராசா, க.கந்தசாமி நினைவாக)

3ம் பரிசு 1/4 தங்கப்பவுண்

திரு.த.மணிவண்ணன்

(உரிமையாளர், சிறிமுருகன் நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**பணப்பரிசு அன்பளிப்பு செய்தோர்:-**

ஆறுதல் பரிசுகள் தலா ஆயிரம்(1000)ரூபா

1. திருமதி.உ.யோகானந்தா - நீர்வேலி (அமரர் சு.யோகானந்தா நினைவாக)
2. திரு.ஆ.இராசாநாயகம் (பழைய மாணவன்), திரு.மு.லிங்கவர்மன் (பழைய மாணவன்) நீர்வேலி தெற்கு.
3. திரு.அ.சற்குணநாதன், செல்வன்ஸ் டீசல்ஸ் கோப்பாய் வடக்கு.
4. திரு.P.கார்த்திகேசு (பழைய மாணவர்) கோப்பாய் மத்தி. (அமரர் பொ.சுப்பிரமணியம் நினைவாக)
5. திரு.க.சின்னராசா சுதா அப்பளத் தொழிலகம் கோப்பாய் மத்தி.
6. திருமதி.செல்லையா இருபாலை (அமரர் V.P.செல்லையா நினைவாக)

7,8,9 திருமதி.ப.சற்குணலிங்கம் கோப்பாய் வடக்கு (அமரர் மு.சற்குணலிங்கம் நினைவாக)

10. திருமதி.பொ.தம்பிராசா இலகடி, கோப்பாய் வடக்கு. (அமரர் செ.தம்பிராசா நினைவாக)

## மரதன் ஓட்டம்

**பரிசுகள் அன்பளிப்புச் செய்தோர் விபரம்**

**கழகம்(ஆண் பெண்), பாடசாலை(ஆண் பெண்),**

1ம்பரிசு அமரர் E.K.சண்முகநாதன் நினைவாக திருமதி.செ.சண்முகநாதன்(லண்டன்), நான்கு 1/4பவுண்

2ம்பரிசு நான்கு,1/8பவுண் பதக்கம்

3ம்பரிசு நான்கு 1000ரூபாப்படியும்

2ம், 3ம் பரிசு அமரர் E.C.A.நவரட்ணராசா நினைவாக அட்வகேட் திரு.க.பத்மநாதன் லண்டன்.

**மாணவர் கல்வி ஊக்குவிப்பு நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்**

1. அட்வகேட் திரு.க.பத்மநாதன் (லண்டன்)
2. திரு.ரமேஷ் தொண்டுநாதன் (ஹவாய்)
3. திரு.சி.பிரதீப்ராஜ் (அவுஸ்ரேலியா)
4. திரு.A.செந்தில்குமரன் (நோர்வே)
5. திரு.த.தர்மருபன் (ஹொலன்ட்)

**150ஆவது நிறைவு விழா சிறப்புற உதவியோர்**

1. அலங்கார மாலைகள் - ராஜ்மணி பந்தல் நீர்வேலி, காளியம்மன் தேவஸ்தானம் கோப்பாய் மத்தி, வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில், கோப்பாய் மத்தி.
2. பிளாஸ்ரிக் கதிரைகள் - பிரதேசசபை நல்லூர்.
3. போட்டோ - கோல்டன் டக், இருபாலைச்சந்தி, கல்யாணி போட்டோ, கோப்பாய்,
4. வீடியோ - விஜி போட்டோ & வீடியோ இருபாலைச் சந்தி.
5. ஒலி - F.A.சேவியர் & மைந்தர்கள் திருநெல்வேலி.
6. ஒளி - மனோ லைட், கோப்பாய் வடக்கு.

**பத்திரிகை விளம்பர உதவி**

1. பழைய மாணவர்கள் பிரதேச செயலகம் கோப்பாய்
2. கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம்
3. காளியம்மன் சனசமூக நிலையம் கோப்பாய் மத்தி
4. வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடி சனசமூக நிலையம்
5. பலாணை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
6. மகிழடி வைரவர் தேவஸ்தானம் கோப்பாய் வடக்கு
7. தென்கோவை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான நிர்வாகமும் பிரதமகுரு சிவஸ்ரீ செல்வசேனக்குருக்களும்
8. கோப்பாய் தெற்கு இருபாலை லிங்கப்பிள்ளையார் (பழம் பிள்ளையார்) கோவில் தேவஸ்தானமும் பிரதமகுரு திரு.வைத்தியநாதன் ஐயாவும்
9. கோப்பாய் சைவ நற்சிந்தனைக் கழகம் கந்தசாமி கோவிலடி கோப்பாய் மத்தி

## மரதன், சைக்கிள் ஓட்டம்

போட்டிகளை ஆரம்பித்து வைத்த யாழ் நகர முதல்வர் கௌரவ செல்லன் கந்தையா, முதலுதவி, அம்புலன்ஸ் வழங்கிய செஞ்சிலுவைச் சங்க தலைமை காரியாலயம் யாழ்ப்பாணம், மத்தியஸ்தம் வழங்கி உதவிய யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி.ரூபசிங்கம் மற்றும் அவரின் உதவியாளர்கள், கப்டன் சோமசுந்தரம் வாகனங்கள் தந்துதவிய திரு.த.சற்குணநாதன் (செல்வன்.டீசல்ஸ், கோப்பாய் வடக்கு) ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி, கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாசார கழகம், அம்மன் கோவிலடி சனசமூக நிலைய உறுப்பினர்கள் ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது சபை செயற்பாடுகள் வெற்றியடைய ஒத்துழைத்த அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளிற்கும், சிறப்பாக முத்திரை வெளியீட்டில் உதவிய திருவாளர்.நா.சிவநாதன், வி.பொன்னம்பலம், சு.விஜயகுமார் ஆகியோருக்கும். கொழும்புத் தொடர்பிற்கு உதவிய முன்னாள் அதிபர் திரு.த.முத்துக்குமாரசாமி, திருமதி.த.யேசுதாசன் ஆகியோருக்கும், விளையாட்டுப் போட்டிகள் நடாத்த உதவிய திரு.செ.செல்வச்சந்திரன், திரு.இ.கிருபராஜா ஆகியோருக்கும், நான் விபத்தில் சிக்கி கைகழன்ற நிலையில் இருந்தபோது என்னுடன் உடன் உதவிக்கு வந்து செயற்பட்ட திரு.க.விநாயலிங்கம் அவர்களிற்கும், மற்றும் கலைநிகழ்ச்சிகள் வழங்கிய கலைஞர்கள், எமது அழைப்பை ஏற்றுபிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டோருக்கும், குழுக்களாக இயங்கி ஒத்துழைத்த மலர், கலை, விளையாட்டு, நிதி நினைவு முத்திரை உறுப்பினர்களிற்கும், விளம்பரங்கள், கட்டுரைகள், வாழ்த்துக்கள் என்பவற்றினைத் தந்துதவியவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**S.K.தங்கவடிவேல்**
**செயலாளர்**

> **"உயர்ந்த இடத்தில் இருக்கும்போது உலகம் உன்னை மதிக்கும் உன் நிலமை கொஞ்சம் இறங்கி வந்தால் நிழலும் கூட மிதிக்கும்"**

# கௌரவிப்பு நிகழ்வுகள்



தவில் வித்துவான்
ச.முருகையா



இலக்கிய கர்த்தா
திருமதி.யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



மிருதங்க வித்துவான்
ச.குணசிங்கம்



தாயகம் ஆசிரியர்
க.தணிகாசலம்



இலக்கிய கர்த்தா
திரு.பூ.புலேந்திரராஜா (நல்லை அமிழ்தன்)



இலக்கிய கர்த்தா
பிரம்மஸ்ரீ பிரணதர்ந்திஹரக் குருக்கள்

# முழுநிலா நாள் கலைவிழா கௌரவிப்பு



சைவப்புலவர் இ.செல்லத்துரை




செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்



ஆசிரியை திருமதி.ம.சுப்பிரமணியம்



வித்துவான் க.சொக்கலிங்கம்(சொக்கன்)



கோப்பாய் சிவம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா



சிறுகதை எழுத்தாளர் திரு.K.V.குணசேகரம்

## 29.12.2002 மூன்றாம் நாள்

150ஆவது ஆண்டு நிறைவு மூன்றாம் நாள் நிகழ்வுகள் அமரர் E.K.சண்முகநாதன் அரங்கில் காலை நிகழ்வுகள் 10.00மணிக்கு இளைப்பாறிய அதிபர் திரு.க.விநாயகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் அதிபர் ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர் கௌரவிக்கப்பட்டனர். பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.சின்னையா சிவநேசன் அவர்களும் கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு.இ.சிவஞானசுந்தரம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரையை திரு.S.K.தங்கவடிவேல் அவர்கள் நிகழ்த்த ஆசியுரையை சிவஸ்ரீ.பூகீதச்சந்திர குருக்கள் (சித்திர வேலாயுதர் கோயில் பிரதம குருக்கள்) வழங்கினார். தலைமை உரையை தொடர்ந்து பின்வருவோரின் வாழ்த்துக்கள் இடம்பெற்றன.

திரு.க.இ.குமாரசாமி (பழைய மாணவர்) திரு.S.செல்லத்துரை ((முன்னாள் பா.அ.சங்கம்) திரு.ஆ.சக்திவடிவேல் (உப தலைவர் பா.அ.சங்கம்) திருமதி.ச.கனகரத்தினம் (பழைய மாணவி இளைப்பாறிய பிரதி அதிபர்) செல்வி.ம.கொலஸ்ரீனா (பழைய மாணவி) செல்வி.சீ.மகிந்தினி (பழைய மாணவி) செல்வந்தவச்செல்வம் (சிரேஷ்ட மாணவ தலைவன்) செல்வி.சி.யாழினி (மாணவ முதல்வர்சபை)

இதைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் திரு.ந.சிவகடாட்சம் அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பின்பு கல்விசாரா ஊழியர் சார்பில் திரு.இ.கிருபராஜாவும்,ஆசிரியர்கள் சார்பில் திரு.சி.சிவலிங்கம் அவர்களும், கல்லூரி அதிபரும் பதிலுரை வழங்கினர். திரு.ஜோசப்தாவீது நன்றியுரை வழங்க மதிய போசன விருந்துடன் காலை நிகழ்வுகள் முடிவடைந்தன.

மாலை நிகழ்வு பிப.4.00மணிக்கு அதிபர் தலைமையில் ஆரம்பமாகியது. இருபாலையூர் நா.பாலசுப்பிரமணியம் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் திரு.சின்னையா சிவநேசனும், கொழும்பு ப.மா.சங்க தலைவர் திரு.வி.பொன்னம்பலம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக திரு.பொ.விக்கினேஸ்வரலிங்கம், திருமதி.தவபத்திரி யேசுதாசன், திருமதி.ச.கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர். திரு.ஜோசப்தாவீது அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து அகில இலங்கை சைவகுருமார் அச்சகசபை செயலாளர் சிவஸ்ரீ.மகாலிங்கசிவக்குருக்கள் அவர்கள், மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்திரு ஜோன் மவுலின் அவர்களும் ஆசியுரை நல்கினார். திரு.க.இ.குமாரசுவாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதிபரின் தலைமையுரையை அடுத்து கௌரவிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. பாடசாலை வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கத்தினூடாக பணியாற்றிய திருமதி.த.யேசுதாசன், திரு.S.K.தங்கவடிவேல் திரு.பொ.விக்கினேஸ்வரலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். விழாச்சபை செயற்பாடுகளில் வாழ்த்துப்பா ஆக்கம் திருமதி.ச.கனகரத்தினம் அவர்களும், நடன நிகழ்ச்சி ஒழுங்கமைப்பில் உதவிய செல்வி தர்ஷினி தர்மகுலசிங்கம் அவர்களும் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இருபாலையூர் தவில் மேதை நா.பாலசுப்பிரமணியம் குழுவினரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். நாதஸ்வர வித்துவான் திரு.S.V.முருகையா "நாதஸ்வர வேந்தன்" என்று பட்டம் வழங்கியும், தவில் மேதை திரு.நா.பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கம் சூட்டியும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் சின்னையா சிவநேசன் அவர்கள் இயற்றிய "சிறுவர் பாடல்கள்" என்னும் நூல் திரு.முருகையனால் அறிமுகம் செய்யப்பட்டு நிகழ்வின்போது வெளியிடப்பட்டது. முதல் பிரதியை லண்டனில் இருந்து சமுகமளித்த திரு.க.பத்மநாதன் (அட்வகேட்) அவர்களும் இரண்டாம் பிரதியை சட்டத்தரணி சோ.தேவராஜா அவர்களும், மூன்றாம் பிரதியை இளைப்பாறிய அதிபர் திரு.க.விநாயகலிங்கமும் பெற்றுக்கொண்டனர். விருந்தினர் மற்றும் கௌரவிப்பாளர்கள் உரையைத் தொடர்ந்து திரு.S.K.தங்கவடிவேலால் நன்றியுரை வழங்கப்பட்டது. அடுத்து இசை அரங்கில் திருமதி.குஞ்சலம்மா பசுபதீஸ்வரன் (இசை ஆசிரியை யா/ மங்கையர்கரசி வித்தியாலயம் நல்லூர்) அவர்களின் இன்னிசையும் நடன அரங்கில் செல்வி.தர்சினி தர்மகுலசிங்கம் அவர்களின் மாணவிகளின் நடன நிகழ்ச்சியும் நாடக அரங்கில் இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர்கள் வழங்கிய "அரிச்சந்திர மயான காண்டம்" என்ற இசை நாடகமும் அரங்கேறியது. நிகழ்வுகள் அனைத்தும் இரவு 12.00மணிக்கு நிறைவெய்தியது.

அதிபர்.

# கண்களைப் பாதுகாப்பதற்கான சில அடிப்படைக் கோட்பாடுகள்

Dr.S.குகதாசன் கண்வைத்திய நிபுணர் (பழைய மாணவர்)

1. குறைந்த ஒளியில் வாசிப்பது கண்களுக்கு ஆபத்தாக அமையாது.

குறைந்த ஒளியில் வாசிப்பதால் தலையிடி, வாசிப்பதில் கஷ்டங்கள் போன்ற சில அசௌகரியங்கள் ஏற்படலாம். ஆனால் இது கண்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது.

2. கண்களிற்கு அளவுக்கதிகமான வேலை கொடுப்பதால் கண்பார்வை பாதிக்கப்படமாட்டாது.

3. தொலைக்காட்சிப் பெட்டிக்கு மிக அருகில் இருந்து பார்வையிடுவது கண்களிற்கு தீமையை ஏற்படுத்தாது.

4. பிழையான மூக்குக்கண்ணாடிகளை உபயோகிப்பதால் தலையிடி போன்ற அசௌகரியங்கள் ஏற்படலாமேயொழிய கண் பார்வையில் பாதிப்பு ஏற்படாது.

5. சாதாரணமாக கண்களில் இருந்து சுரக்கப்படும் கண்ணீர் கண்களைச் சுத்திகரிக்கப் போதுமானது. இதற்கு மேலதிக கண் துளிமருந்துகள் தேவைப்படமாட்டாது.

6. கண்வில்லையில் தோன்றும் வெண்படலம் அ+து "கட்டராக்கி"னால் ஒருவரது சாதாரண தொழிற்பாடுகளுக்கு தடங்கல் அல்லது குறுக்கீடு ஏற்படும் பட்சத்தில் மட்டும் கட்டராக் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளலாம்.

7. இரசாயனப்பதார்த்தங்களினால் கண்களில் ஏற்படும் எரிகாயங்களிற்கு எதுவித தயக்கமுமின்றி சுத்தமான தண்ணீரினால் உடனடியாக கண்களை நன்கு கழுவுதல் வேண்டும். அத்துடன் கண் பார்வை வீச்சத்தையும் மதிப்பிட்டு அறிதல் வேண்டும்.

8. கண்களில் படிப்படியாக அமுக்கம் அதிகரித்துச் செல்லல் chronic glaucoma என்பர். இவ்வகை உயர் கண் அமுக்கம் ஒருவருடைய பார்வையை முற்றாக இழக்கச் செய்யும்வரை எதுவித முன் எச்சரிக்கை அறிகுறிகளையும் தோற்றுவிக்காது. இந்நோயினால் மற்றைய கண்ணிலும் பார்வை இழப்பு ஏற்படலாம்.

ஒருவருடைய கண்பார்வையை அவரது அறிவிற்கு எட்டாமலே திருடிச்செல்லும் வல்லமை கொண்ட கொடிய நோயே இவ்வுயர் கண் அமுக்க நோயாகும்.

இதற்கு நேர்மாறாக கண்களில் சடுதியாக உயர் கண் அமுக்கம் அ+து acute glaucoma ஏற்படலாம். இங்கு அறிகுறிகளாக நோயாளியின் கண்கள் சிவக்கும், தாங்கமுடியாத கண்நோவ் ஏற்படும் வெளிச்சத்தைப் பார்க்க கஷ்டமாக இருக்கும். அத்துடன் ஒரு சில மணித்தியாலத்திலேயே கண்பார்வையை இழக்கலாம். இவ்வகை உயர் கண் அமுக்கம் ஒருவரது கண் பார்வையை ஓரிரு மணித்தியாலத்தில் சூறையாடிச் செல்லக்கூடிய ஓர் பயங்கர நோயாகும். மேற்கூறிய அறிகுறிகள் ஒருவருக்குத் தோன்றும் போது உடனடியாக கண் வைத்தியரை நாடி தகுந்த ஆலோசனைகளையும் சிகிச்சையையும் பெறுதல் நன்று.

9. சிறுகுழந்தைகளின் கண்களில் இருந்து தொடர்ச்சியாக கண்ணீர் வடிதல் இரு காரணங்களால் ஏற்படலாம்.

1. பிறப்புடன் கூடிய உயர் கண் அமுக்கம் (congenital glaucoma )
2. கண்ணீர் கான் அடைபட்டிருத்தல் இத்தகைய அறிகுறிகள் தென்படினும் தகுந்த வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும்.

10. குழந்தை பிறந்து முதல் ஆறுமாத காலத்துள் கண் வாக்குத்தன்மை தென்பட்டால் அதை ஒருகுறைபாடாக கருத முடியாது. ஆறுமாத கால வயதின் பின்பும் வாக்குத்தன்மை தொடர்ந்து இருந்தால் கண் வைத்திய நிபுணரை நாடி கண்களைப் பரிசோதித்தறிதல் வேண்டும்.

11. 50வயதிற்கு மேற்பட்டவர்கள் வாசித்தல், எழுதுதல் போன்ற கிட்டிய வேலைகள் செய்யும்போது வயதிற்கேற்ற மூக்குக்கண்ணாடி அணிதல் வேண்டும். இவ்வாறு கண்ணாடி அணியாமல் கிட்டிய வேலைகள் செய்வாராயின் அவர் ஏற்கனவே கண்ணில் குறும்பார்வை குறைபாடு உள்ளவராக இருந்திருக்கலாம் அல்லது கண்ணில் கட்டராக் ஆரம்பித்திருக்கலாம்.

12. ஒருவருக்கு அடிக்கடி மூக்குக்கண்ணாடி மாற்ற வேண்டி ஏற்படின் அவரது கண்களில் "கட்டராக்" (Cataract) அல்லது உயர் கண் அமுக்கம் அல்லது நரம்புத் தளர்ச்சிக்குரிய அறிகுறிகள் இருக்கலாம்.


13. பிறப்புடன் சம்பந்தப்பட்ட நிறக்குருடு நோய் இரு கண்களிலும் ஏற்படும். இது அண்ணளவாக 7%ஆண்களிலும் 0.5%பெண்களிலும் ஏற்படலாம். இவர்களுக்கு கண்பார்வை வீச்சில் குறைபாடு இருக்காது. நிறத்தைப் பிரித்தறிதல் கஷ்டம் இதை சிகிச்சை மூலம் மாற்றமுடியாது.

இடையிட்டு ஏற்படும் நிறக்குருடு ஒரு கண்ணில் மட்டும் ஏற்படலாம் அல்லது இரு கண்களிலும் ஏற்படலாம். ஒரு கண்ணில் ஏற்படும் இடையிட்ட நிறக்குருடு, அக்கண்ணில் அல்லது கண் நரம்பில் ஏற்படும் நோயினால் ஏற்படலாம். இரு கண்களிலும் ஏற்படும் இடையிட்ட நிறக்குருடு போஷணைக் குறைபாட்டால் அல்லது சில மருந்து வகைகளை உட்கொள்வதால் ஏற்படலாம். இதில் நோய்க் காரணிகளைச் சீர்செய்து காலப்போக்கில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம்.


14. இராக்குருடு நோய் இரு வகைப்படும். ஒன்று பிறப்புடன் சம்பந்தப்பட்ட இராக்குருடு. இது விழித்திரையில் ஏற்படும் குறைபாட்டால் ஏற்படும். மற்றையது இடையிட்டு ஏற்படும் இராக்குருடு, இது விற்றமின் A குறைபாடு, போஷணைக் குறைபாடு, வயிற்றோட்டம், உயர் கண் அமுக்கம், மதுபானம் அருந்துபவர்களில் ஈரல் பாதிப்படைதல் போன்றவற்றால் ஏற்படலாம். மேற்குறிப்பிட்ட நோய்க் காரணிகளுக்கு தகுந்த சிகிச்சை செய்து இராக்குருட்டுத் தன்மையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம்.

15. பகலில் ஏற்படும் குருட்டுத் தன்மை, கண் வில்லையின் மத்தியில் உருவாகும் "கட்டராக்"ஆல் அல்லது விழித்திரையின் மஞ்சட்பொட்டிலுள்ள உணர்ச்சி கலங்கள் சிதைந்து தொழிலற்றுப்போவதால் ஏற்படலாம்.

"கட்டராக்"கால் ஏற்படும் பகல் பார்வை குறையை நிழற்றப்பட்ட மூக்குக் கண்ணாடி அணிவதன் மூலம் தற்காலிகமாக குறைத்துக் கொள்ளலாம். மஞ்சட்பொட்டு சிதைவால் உருவாகும் பார்வைக் குறைபாட்டை மருந்தினால் மாற்ற முடியாது.




சாரணியம் (ஆண்)




செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிச்சங்கம்



சாரணியம் (பெண்)




மக்கள் நலன் புரிச்சங்கம்



இன்றறக்ட கழகம்



உயர்தர மாணவர் மன்றம்



தமிழ்ச் சங்கம்



ஆங்கில மன்றம்

**27, 28, 29-12-2002** ஆகிய தினங்களில் நடைபெற்ற விழாக்களில் கௌரவிக்கப்பட்



நவாலியூர் செல்லத்துரை




நாடகக் கலைஞர் மகாலிங்கம்




திருமதி.த.யேசுதாசன்




திருமதி.ச.கனகரத்தினம்




திரு.பொ.விக்னேஸ்வரலிங்கம்




திரு.S.K.தங்கவடிவேல்



நாடகக் கலைஞர் வே.பாலசிங்கம்




தவில் வித்துவான் நா.பாலசுப்பிரமண



மரம் நடுகை நிகழ்வில் பெரியோர்கள்





அதிபர் கௌரவிப்பு நிகழ்வில் நினைவுச்சின்னம் வழங்கல்




சிறுவர் பாடல் வெளியீட்டில் அட்வகேட் பத்மநாதன் (லண்டன்)

## 150 ஆவது ஆண்டு ஏனைய நிகழ்வுகள்



தமிழ் விழாவில் கலாநிதி ஜெபநேசன் அவர்கள்



நூலகவார நிகழ்வில் பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை



நூலக வார நிகழ்வில் புத்தக கண்காட்சி




உயர்தர மாணவர் ஒன்றுகூடலில் விருந்தினர்கள்



ஆசிரியர்தின நிகழ்வு

## 150 ஆவது ஆண்டு ஏனைய நிகழ்வு



அதிஷ்ட இலாபச்சீட்டு விற்பனை நிகழ்
சிவசிஹி தானேஸ்வரக்குருக்கள் முதல
ரிக்கற்றைப் பெறுகின்றார்



கல்விக் கண்காட்சியில் விருந்தினர்



விஞ்ஞானதின நிகழ்வில்
விருந்தினர்கள்



150 ஆவது ஆண்டு நிறைவு
விழாச்சபை ஒன்றுகூடலில்
பிரதமவிருந்தினர்

# கிறிஸ்தவ கல்லூரியின் வளர்ச்சியில் கட்டடக்கலை

(எந்திரி.க.ஸ்ரீஸ்கந்தராஜா - பழைய மாணவர்)

இலங்கையின் பண்டைய வரலாற்றிலே, மேலைத்தேசத்தவரின் சமயப் பணியுடன் இணைந்த கல்விப் பணியின் பயனாகத் தோன்றிய பாடசாலைகளுள் எமது பாடசாலையும் ஒன்றாகும். இப்பாடசாலை இன்றுவரை கிறிஸ்தவ கல்லூரி என்னும் பெயரைத் தாங்கி நிற்பதும், செய்ந்நன்றி மறவாமல் இப்பெயரையே கல்லூரியின் பெயராக இச்சமூகம் ஏற்றுக் கொண்டிருப்பதும் இதற்கான சான்றாகும்.

இக்கல்லூரியானது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் 1852ம் ஆண்டில் உருவானதாகக் கூறப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இப்பாடசாலை CMS கொலிஜ் என்று அழைக்கப்பட்டது. இப்பாடசாலை ஒரு தேவாலயத்தின் அருகே அமைக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது. இப்பாடசாலை ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்டதனால் இவற்றின் கட்டடங்கள் செங்கல்லினாலேயே கட்டப்பட்டிருந்தன. பழைமையான கட்டடக்கலையின் சின்னங்களாக அன்று இருந்த அதிபர் அவர்களின் காரியாலயமும் அதை அண்டிய வதிவிடமும், நூல் நிலையமும் (வோட்ஸ்வேத் மண்டபம்) இன்றும் என் நினைவை விட்டகலாதிருக்கின்றன. இவற்றுடன் பெண்களுக்கான விடுதிகளும் பின்புறத்தில் (வடமேற்கில்) அமைந்திருந்தன. அதிபரின் வதிவிடத்திற்குப் பின்னால் ஆரம்பப்பிரிவு வகுப்புகளும் வலைப்பந்தாட்டத்திடலும் அமைந்திருந்தன.

இக்கட்டடங்கள் யாவும் அவை கட்டப்பட்ட காலத்திலிருந்த கட்டடக்கலை முறைப்படி கண்டகற்களையும் சுண்ணாம்பையும் கொண்டு கட்டப்பட்டிருந்தனவெனினும் அவை இக்கல்லூரிக்கு ஒரு கம்பீரமான தோற்றத்தைக் கொடுத்தனவென்றால் மிகையாகாது.

கல்லூரியின் வடக்குப் புறமாகப் பல வகுப்புத் தொடர்கள் அமைந்திருந்தன. அவையும் ஆலயங்களில் காணப்படுபவை போன்ற பெரிய தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கூரைபோட்ட வகுப்பறைகளேயாகும்.

இக்கட்டிடங்களிலெல்லாம் மிகவும் பிரமாண்டமாக அமைந்திருந்தது. வோட்ஸ்வேத் மண்டபமும் அங்கிருந்த நூலகமுமேயாகும். 5அடி உயரமானதும் மிக விசாலமானதுமான ஓர் மேடையில் நூலகர் தனது கடமைகளைச் செய்த காலம் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரே தடவையில் அமர்ந்திருந்து படிக்கும் வசதிகளும் பலநூறு நூல் வகைகளையும் உள்நாட்டு வெளிநாட்டுச் சஞ்சிகைகளையும் கொண்ட அலுமாரிகளுடன் நீளமான படிக்கும் மேசைகளையும் கொண்ட மிகப்பெரிய கட்டடமாக, கல்லூரியின் வடகிழக்குப் பகுதியில் அமைந்திருந்த இந்தக் கட்டடமும் ஒரு சுண்ணாம்புக் கட்டடமேயானாலும் காற்றோட்டமான, வெளிச்சமான கட்டடமாக அமைந்திருந்தது அக்காலக் கட்டடக் கலையின் பெருமையாகும்.

இவற்றை விடவும் யான் அறிந்த காலத்தில், கல்லூரியின் தென்கிழக்கே, பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் (தற்போது 125ஆவது நினைவு மண்டபம் அமைந்துள்ள இடத்தில்) தூண்களினால் ஆக்கப்பட்ட கிடுகுக் கொட்டில்களும் அத்துடன் பனஞ் சலாகைகளால் சுற்றியடைக்கப்பட்ட வகுப்பறைகளுமே மேல் வகுப்புகளாக இயங்கின. பனஞ் சலாகைகளினால் சுற்றியடைக்கப்பட்ட வகுப்பறை 'புலிக்கூடு' என்று மாணவர்களால் குறிப்பிடப்பட்டமை மறக்கமுடியாத ஒன்றாகும். (Upper School) மேல் வகுப்பு மண்டப அமைப்பு சிலுவை வடிவம் ஒன்றின் கீழ் கோடிட்டது போன்றிருந்ததும் இது ஒரு கிறிஸ்தவ கல்லூரி என்று பறைசாற்றும், பழைய கட்டடமாக அமைந்திருந்தது எனலாம். அக்காலத்தில் இக்கட்டடத்திற்கும் ஏனைய கட்டடங்களுக்கும் இடையில் இருந்த காணியில் தென்னை மரங்கள் உட்பட மரங்களும் பற்றைகளுமே காணப்பட்டன.

கால ஓட்டத்தில் இக்கல்லூரியின் அதிர்ஷ்டமாகக் கல்லூரியை வழிநடத்திய அதிபர்கள் எல்லோருமே கல்லூரியின் வளர்ச்சியில் மிகவும் ஆர்வமுள்ளவர்களாகவும், சிறந்த முயற்சியாளர்களாகவும் இருந்தமையினால் கல்வித்துறையில் மட்டுமன்றிக் கல்லூரியின் கட்டடங்கள் புனரமைப்பிலும் வசதிகளைப் பெருக்குவதிலும் தமது கவனத்தைக் காட்டி வந்தனர்.

இதன் பலனாகச் சில தூண்களில் மட்டும் எழும்பி நின்ற கிடுகுக் கொட்டில்கள் மறையத் தொடங்கின. சுண்ணாம்புக் கட்டடங்களுக்குப் பதிலாக, வசதியான வகுப்பறைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டது. தென்பகுதியில் சீமெந்தினால் ஆன TYPE buildings முறையில் வகுப்பறைகள்

அமைக்கப்பட்டன. அதே முறையில் வடக்குப் பகுதியில் மேல் மாடியுடன் கூடிய வகுப்பறைகளும் அமைக்கப்பட்டன எனினும் இவையும் இடைப்பட்ட காலத்து வடிவமைப்பிலேயே அமைக்கப்பட்டுவிட்டன.

கல்லூரியின் தேவைக்கென மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் புனரமைக்கப்பட்ட மைதானம் இங்குள்ள பாடசாலைகளின் மைதானங்களை விடவும் விசாலமானதாக அமைந்திருப்பதனால், கோட்ட மட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் கூட இங்கு நடாத்தப்படுவது பெருமைக்குரியதே.

கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக துணைப்பாட விதானமாகக் கலைகளுக்கும் இடமளிக்கப்பட்டிருப்பதனால் மாணவர்களின் திறமையை வெளிக்கொணரவும் ஆளுமையை வளர்க்கவும் கல்லூரி தனக்கென ஒரு கலையரங்கை 1977ம் ஆண்டில் அமைத்துக் கொண்டது. எனினும் இக்கலையரங்கில் பல விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியிருந்தன. யுத்த அனர்த்தங்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இக்கலையரங்கு G.T.Z இன் நிதியுதவியுடன், சம்பந்தப்பட்ட துறை சார்ந்த வல்லுநர்களின் அறிவுரைகளும் பெறப்பட்டுப் புனரமைக்கப்பட்டு, இப்பொழுது புதுப்பொலிவு பெற்று விளங்குவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இக்கலையரங்கு பாடசாலை நிகழ்ச்சிகளுக்கு மட்டுமன்றி ஏனைய பொது நிகழ்வுகளுக்கும் களமாக விளங்குவது கண்கூடு.

இதேபோன்று வடபகுதியிலுள்ள Type bulldings முறையிலான வகுப்பறைகள் புனரமைக்கப்பட்டு இந்து பிரார்த்தனை மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் நூல் நிலையம், ஆய்வு கூடங்களின் வளர்ச்சி குன்றியதாகவே காணப்படுகின்றது. மாற்றமடைந்துவரும் கல்வித்துறையில் கற்பித்தலில் தேடல் முக்கிய இடம்பிடித்துள்ளது. ஆகையால் தேடலுக்கு ஏற்ற நூல் நிலையம் கல்வி வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாகின்றது. அதேபோன்று செயன்முறைகளும் கற்பித்தலில் பெரும்பங்காற்றுகின்றன என்று கவனத்திற் கொள்ள வேண்டியதொன்று.

தனது 150 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து தலைநிமிர்ந்து நிற்கும் இக்கல்லூரி ஏனைய துறைகள் போன்று அதன் கட்டட வளர்ச்சியிலும் முன்னேற்றம் கண்டுள்ளமை கண்கூடு. எனினும் எனது மனதை நெருடும் ஒரு விடயமும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதே.

இக்கல்லூரி 150 ஆண்டுகள் பழமை வாய்ந்ததென்றோ, அக்காலத்திலேயே அழகான, கம்பீரமான கலைவடிவமான கட்டடங்களைக் கொண்டு நின்றது என்று செல்லுவதற்கோ எந்தவிதமான சான்றுகளோ, நினைவுச் சின்னங்களோ விட்டு வைக்கப்படவில்லையென்பது மிகவும் வேதனைக்குரியது.

குறிப்பாக அதிபர் காரியாலயம் அமைந்திருந்த கட்டடமானது பழைய பாணியிலானது எனினும், அதன் நிலத்தின் வேலைப்பாட்டிலிருந்து அதன் கூரையில் போடப்பட்டிருந்த வளைந்த ஓடுகள் வரை, இன்றைய கட்டிடங்களில் காணமுடியாத, போற்றத்தகு அமைப்புகள். அன்றியும், பழைமையிலும் ஒரு அமைதி, ஒரு பயபக்தி, அருகிருந்த அகன்ற விருட்சங்களின் குளிர்மை, அக்குளிர்மையில் நாம் நின்றிருந்த காலைப் பிரார்த்தனை நேரங்கள் இன்றும் எம்மனதில் அழியாமல் பசுமையாக இருக்கின்றதெனின், அது அந்தக் கட்டடத்தினதும், சூழலினதும் மகிமைதான். எமது கல்லூரியின் பழைமையையும் எழிலையும் எடுத்துக்காட்ட அந்தக் கட்டடமும் சூழலும் பேணப்பட்டிருந்தால், அவையே கல்லூரியின் கதையைச் சொல்லிவிடும். கல்லூரியின் பழைமையைப் பறைசாற்றும்.

ஒரு கல்லூரியின் பெரும் புகழும் வளர்வதற்கு அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள்தான் முதன்மைக் காரணிகள் என்றாலும், கலையம்சம் உடைய கட்டடங்களின் கம்பீரமான தோற்றமும், கலையார்வத்துடன் சேர்ந்த சுற்றுப்புற அழகும், கற்பித்தல் வசதிகளும் கூடக் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. கம்பீரமான, அழகான, அமைதியான, வசதியான கல்லூரியினுள் நுழையும் போதே மனதில் பயபக்தி உண்டாகின்றது. மாணவரிடையே தன்னம்பிக்கை, Forwardness, உற்சாகம், ஊக்கமென்பவற்றை ஊர்ஜிதாகத் தூண்டிவிடும் தன்மை பாடசாலைக் கட்டிடங்களுக்கு உண்டு என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதிலும் எமது கல்லூரி நகர்ப்புறப் பாடசாலைகளோடு போட்டியிட்டு, மாணவர்களைக் கவர வேண்டியிருப்பதனால் நாம் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும்போது மிகுந்த கவனத்துடனும் தீர்க்க தரிசனத்துடனும் நடந்து கொள்ள வேண்டியவர்களாகின்றோம்.

கற்பித்தல் முறையானது மிகவும் வேகமாக மாற்றமடைந்து வருவதனை நாம் எல்லோரும் உணர முடிகின்றது. திண்ணைப் பள்ளிக் கூடங்களாக ஆரம்பித்த கற்பித்தல் முறைகள் இப்பொழுது பல நவீன விஞ்ஞான முறையில்

வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. வளர்ந்து வரும் விஞ்ஞான முறைகளினால் சிறிதாகிக் கொண்டு வருகின்ற இவ்வுலகில் கணனிகள் மனித வாழ்க்கையில் மிக நெருக்கமாகி வருகின்றன. தகவல் தொழில் நுட்பத்துறை மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. இதனால் கற்பித்தல் முறைகளில் கூடக் கணனிகள் பெரும்பங்கு வகிக்கும் காலம் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. கற்பித்தலுக்குக் கரும்பலகையும் வெண்கட்டியும் என்ற நிலைமை விரைவில் மாறிக் கணனிகளும் தொலைக்காட்சிகளும் இடம்பிடிக்கப் போகின்றன. ஆசிரியரும் மாணவரும் எதிர்எதிராக இருந்து கற்பிக்கும் நிலை மாறிக் கலந்திருந்து கற்கும் கற்பிற்கும் நிலை தோன்றிக் கொண்டிருக்கின்றது. மாணவர்களிடம் மொழித் திறமைகளுக்குப் பதிலாக ஆக்கத் திறமைகள் வளர்க்கப்படுகின்றன.

ஆகையில் எமது கல்லூரியின் வளர்ச்சியில் பின்னடைவுகள் ஏற்படாதவாறு தூர நோக்கில், தீர்க்கதரிசனத்துடன் செயற்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

எமது கல்லூரி, தனது கட்டிட வளர்ச்சிக்காக நிதியினைப் பெறும் முயற்சிகளில் இன்னும் போராடிக் கொண்டேயிருக்கின்றது. எமக்குக் கிடைக்கப்பெறும் நிதிவளங்களைக் கொண்டு நாம் உச்சக்கட்டப் பயனைப் பெற வேண்டுமாயின், தூர நோக்கோடு, கற்றல், கற்பித்தல் துறையில் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் கவனத்துடன் ஆராய்ந்து கட்டடங்களை வடிவமைத்துக் கொண்டு, பின்னர் தேவைக்கேற்ப முன்னுரிமை முறையில் கட்டடங்களைக் கட்டுவதே சாலச் சிறந்தது.

இந்நோக்கில் பார்க்கும்போது ஒரு மாணவனுக்கு ஒரு சதுர மீற்றர் அளவு இடம் என்ற தற்போதைய கொள்கையை மாற்றி 11/2-2சதுர மீற்றர் என்ற அளவில் வகுப்பறைகளை விசாலமானதாக அமைப்பதுடன், அமைக்கப்படும் கட்டடங்களில் கட்டடக்கலை (Architectural View)யும் சேர்க்கப்பட்டு, மூடிய வகுப்பறைகளாக அமைக்கப்படுவது சாலச் சிறந்ததாகும். அத்துடன் வகுப்பறைச் சூழலும் தோட்டக் கலை மூலம் அழகுபடுத்தப்படுவதும் மன அமைதியையும் மகிழ்ச்சியான சூழலையும் கற்கும் மாணவர்களுக்குச் கொடுக்கும் என்பதும் கவனிக்கப்பட வேண்டியது ஆகும்.

அது மட்டுமன்றி ஆய்வுகூடங்கள் யாவும் நவீன முறைப்படி திட்டமிடப்பட்டு, விசாலமானதாக அமைக்கப்பட வேண்டும் வசதியுள்ள ஆய்வுகூடங்களும், சிறந்த நூல்களையும் வசதிகளையும் கொண்ட நூல் நிலையமும் மாணவர்களைக் கவரும் என்பதில் ஐயமில்லை. இக்கல்லூரி மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் நலன் கருதிச் சிற்றுண்டிச்சாலை ஓரளவேனும் நவீன முறையில் அமைக்கப்பட வேண்டியது அவசியம். அத்துடன் சிறந்த ஓய்வறைகளும் வசதிகளும் சிறு சுகவீனம் ஏற்படும் நேரங்களில் மிகுந்த பயனளிப்பவையாகும். அத்துடன் தற்போது மீண்டும் Fully residential School. system சிபார்சு செய்யப்படுவதனால் தங்குமிட வசதிகளும் எமது திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியவையாகும்.

கல்வித்துறையில் விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதனால் எமது கல்லூரியில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்யவேண்டியது மிகவும் அவசியம். முக்கியமாக உள்ளக விளையாட்டுக் களங்களை அமைப்பதும், அவ்விளையாட்டுக்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதும் எமது கல்லூரி செய்யவேண்டிய முக்கிய பணியாகும். இதனால் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு எமது பாடசாலை சளைக்காமல் பெயர் பெறலாம். விளையாட்டு மைதானமும், மேலும் சில புனரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுத் தரம் வாய்ந்த மைதானமாக்கப்படின் இது மிகவும் நன்று.

எமது பாடத்திட்டத்தில் கணனிக் கல்வி மிகவிரைவில் உள்ளடக்கப்படவுள்ளது. அதற்கான ஆரம்பக் கட்டச் செயற்பாடுகள் ஆரம்பித்து விட்ட நிலையில் ஒரு கணனி ஆய்வுகூடம் எமது அத்தியாவசிய தேவையாகிவிட்டது. இவ்வாய்வு கூடம் ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் இருக்க வேண்டுமானதால் காரியாலயத்திற்கு அண்மையில் அமைவதே சிறந்தது.

மொத்தத்தில் கல்வி வளத்தில் மட்டுமல்லாது, கட்டடக்கலைகூடச் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டு, வசதிகளும் கூட்டப்படுமாயின் எமது கல்லூரி மேலும் சிறப்பாக வளர்ச்சியடைவது திண்ணம்.

* "தாயிற் சிறந்ததோர் கோயிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமும் இல்லை

* "யாதும் ஊரே யாவரும் கேளிர்.

* "கற்க கசடறக் கறபவை கற்ற பின் நிற்க அதற்குத் தக

# பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்த பெரியார் வடகோவைச் சபாபதி நாவலர்

(திருமதி.ச.கனகரத்தினம், கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் ஆசிரியர் பழைய மாணவி)

பிறந்த மண்ணின் பெயராலே பெருமை பெறுபவர் பலர்; பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்ப்பவர் வெகுசிலர். இந்த அடிப்படையிலே, தாம் பிறந்த மண்ணாகிய கோப்பாய்க்குப் பெருமை சேர்த்த பெரியார் சபாபதி நாவலரை, எமது ஊர் இலகுவில் மறந்துவிடுவதற்கில்லை. தமிழிலக்கிய வரலாற்றில், ஐரோப்பியர் காலப் பகுதியில் ஏற்பட்ட உரைநடை இலக்கிய வளர்ச்சியின் பயனாகத் தமிழ்ப் பணிகள் செய்து, இலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாணத்தவரும் தம் பெயர்களை நிலைக்க வைத்தனர். அத்தகையவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒருவர் எமது ஊரவராகிய சபாபதி நாவலர் எனலாம். அவரது பணிகள் நமது நாட்டிலும் பார்க்கத் தமிழ் நாட்டிலேயே இடம்பெற்றன, என்பதால் சிறப்பாகப் போற்றப்படுகின்றார். 'ஆறுமுகநாவலரும், சபாபதி நாவலரும் யாழ்ப்பாணம் எனும் ஞானபூமியில் அவதரித்த போதிலும், அவர்களைத் தமிழ்நாடே சிறப்பாகப் பயன்படுத்தியது' என்று பொதுவாக அறிஞர்கள் குறிப்பிடும் வழக்கமுண்டு.

'வடகோவை' எனப் பெருவழக்காகக் குறிப்பிடப்படும் கோப்பாய் வடக்கில், பூதர்மடம் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் வாழ்ந்த சுயம்புநாதபிள்ளை - தெய்வானை தம்பதிகளின் தவப்புதல்வராக 1845ல் அவதரித்த இப்பெரியார், வடகோவை ஜகந்நாதையர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர் ஆகியோரிடம் சிறந்த முறையில் கற்றுத் தேர்ந்தார் என அறியக் கிடக்கின்றது. அவரின் திறமையையறிந்த ஆறுமுகநாவலர் அவர்கள், தமது நிறுவனமாகிய சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில், தலைமைத் தமிழ்ப் போதனாசிரியராக, அவரை நியமித்தார். இதன் பயனாக அன்னாரின் பணிகள் தமிழ்நாட்டில் பரந்து விரிந்தன. திருவாவடுதுறை ஆதீனத்தில் விசேட தீட்சை பெற்றதுடன் பன்னிரண்டு ஆண்டுகள் சமயசாத்திரங்களிலும் பயிற்சி பெற்றுச் சிறந்த புலவராகத் திகழ்ந்தார். நியாயவாதச் சொற்போரில் அவரின் திறமையை வியந்து சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் "நாவலர்" எனும் பட்டத்தைச் சூட்டினார். ஞானசம்பந்த தேசிக சுவாமிகளால் "மகாவித்துவான்" என்ற பட்டமும் சூட்டிக் கௌரவிப்புப் பெற்றார். ஆதீன மடாதிபதிகள், இராமநாதபுரம் மகாராஜா ஆகியோரினதும் பாராட்டுகளைப் பெரிதும் பெற்றிருந்தார். ஆதீனத்தார் இவரது அதிதீவிர பக்குவத்தை உணர்ந்து திராவிட மாபாடியத்தை இவரிடம் கொடுத்து வைத்திருந்தமை அவருக்கு வழங்கப்பட்ட ஒரு கௌரவமாகக் கொள்ளப்படுகிறது. தமிழ் நாட்டின் பேரறிஞர் பலரும் இப்பெரியாரைப் புகழ்ந்து பாராட்டி வந்தனர் என்று கூறப்படுகிறது. டாக்டர். உ.வே.சாமிநாதையர் என்பவர் "யாழ்ப்பாணத்துப் பெருநகரைச் சார்ந்ததொரு வடகோவைப் பதியனாகிய சபாபதி நாவலர்" என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளமை எமது ஊருக்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

தமிழிலக்கிய வரலாற்றில், ஐரோப்பியர் காலப்பகுதி 'மறுமலர்ச்சிக்காலம்' என்று சிறப்பித்துக் கூறப்படுவதற்கு உரைநடையிலக்கிய விருத்தியும் அச்சியந்திரப் பாவனை வளர்ச்சியுமே வழிவகுத்தன. இந்த இரண்டு பணிகளிலும் சபாபதி நாவலர் அவர்களுக்கு முக்கிய பங்கு காணப்பட்டது. அவருடைய உரைநடை மிக மிடுக்கானது என்றும் அது "திராவிடப் பிரகாசிகை" எனும் அவருடை நூலில் சிறப்பாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த நூல் தமிழில் இலக்கியம், இலக்கணம், சாத்திரம் முதலியன சம்பந்தமாக நிலவிய பிழையான கொள்கைகள் பலவற்றைக் கண்டிக்க எழுந்த நூல் என்பதால் தர்க்க முறையான வசன அமைப்பைப் பழைய உரைநடை முறையில் கொண்டுள்ளதாக இலக்கிய வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த நூல் பண்டிதர் பரீட்சை, பட்டப் படிப்பு என்பவற்றுக்குப் பாடநூலாகக் கொள்ளப்பட்டு வந்துள்ள சிறப்புப் பொருந்தியது. சபாபதி நாவலர் என்ற பெயர் "திராவிடப் பிரகாசிகை" எனும் நூலையே சிறப்பாக நினைவூட்டுவதாயினும், அப்பெரியார் ஏறத்தாழ இருபத்து மூன்று நூல்களைச் செய்தருளியுள்ளார். இவற்றுள் பல, அக்காலச் சமயச் சூழலின் பிரதிபலிப்பாக எழுந்தவை எனலாம். ஐரோப்பியர் வருகையின் விளைவாகப் பரப்பப்பட்ட கிறிஸ்தவ சமயமும், அவர்கள் தொடர்பான மேலைத்தேசக் கலாசாரமும் தமிழ் நாட்டவரைப் பெரிதும் கவர்ந்துவிட்டிருந்த ஒரு காலகட்டத்தில், சபாபதி நாவலர் அவர்கள் சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்து வளர்க்கும் ஒரு கைங்கரியத்தை மேற்கொண்டிருந்தார் என்று கொள்ளுவது மிகையாகாது. அவரின் நூல்களான ஞானாமிர்தம், ஞானசூடாமணி, சிவகர்ணாமிர்தம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் ஆகியவை இத்தகைய கருத்துக்கு ஆதாரங்களாகக் குறிப்பிடக்கூடியவை.

வைதிக காவிய தூஷண மறுப்பு, யேசுமத சங்கற்ப நிராகரணம் ஆகிய நூல்கள் கிறிஸ்தவ மதக் கருத்துகள் தீவிரமாகப் பரவுதலைக் குறைக்க அல்லது தடுக்க எழுந்தவை எனக்கொள்ள இடமுண்டு. பதிகம், கோவை, மாலை, அந்தாதி போன்ற பிரபந்த வகைகளைப் பயன்படுத்திப்பல நூல்கள் செய்தருளி இலக்கியத்தையும் சமயத்தையும் இணைத்து வளர்ந்துள்ளார்.

உ-ம்: சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் பதிற்றுப் பந்தாதி முதலியன.

இவ்வாறு பல நூல்களைச் செய்தருளிய நாவலர் அவர்கள் தமது தாயகமான ஈழநாட்டையும், அங்கு உறைந்தருளும் தெய்வங்களையும் மறந்து விடவில்லை. நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், வடகோவைச் செல்வவிநாயகர் இரட்டை மணிமாலை ஆகியவற்றை இத்தகைய நூல்களாகக் குறிப்பிடலாம். தமது மனையின் அயலில் அமைந்திருந்த வடகோவைச் செல்வ விநாயகர் குறித்து இரட்டை மணிமாலை பாடியருளியமை அன்னாரின் ஊர்ப் பற்றினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இளமைக் காலத்தில் அவர் குன்ம நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும், நல்லைக் கந்தனை வழிபட்டு அவனருளால் அந்நோய் தீர்க்கப் பெற்றதாகவும் கூறப்படுவதால், அதுவே இவரை ஊக்குவித்து நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம் பாட வைத்தது எனவும் கொள்ளக் கிடக்கின்றது. எவ்வாறாயினும், தமிழ்நாட்டிலே பெரும்பணியாற்றி வந்த போதும், தமது தாயகத்தையும் கடவுளரையும் மறந்துவிடாது போற்றிய இவரின் விசுவாசம் மெச்சத் தகுந்தது.

சபாபதி நாவலர் அவர்கள் தமிழ் நாட்டில் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கித் தமிழுடன் சைவத்தையும் அழிந்துவிடாது பாதுகாத்தார். 1882 - 1899 காலப்பகுதியில் சென்னையில் வித்தியானுபாலன அச்சியந்திரசாலையை அமைத்து, இலக்கியம், சமயம் ஆகிய நூல்களையும், கண்டன நூல்களையும், 'ஞானாமிர்தம்' எனும் பத்திரிகையையும் வெளியிட்டார். இக்கால முடிவில் அச்சகத்தைச் சிதம்பரத்துக்கு மாற்றினார். சேதுபதி மன்னரிடம் பத்திரிகைக்குப் பொருளுதவி பெற்றார். 1901ல் "சுதேச வர்த்தமானி" எனும் பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பணிகளின் பயனாகச் "சைவ சூளாமணி", "நாவலரேறு" எனும் சிறப்பு விருதுகளும் பெற்றார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தென்னாட்டுத் தலயாத்திரையுடன் சமயப் பிரசங்கங்கள் பல செய்து வந்தார். சென்னை ஆயிரங்கால் மண்டபத்தில் அரசரின் தலைமையில் பிரசங்கங்கள் பல செய்து அரசனின் உதவியும் பெற்றுச் சமயத்தை நலிவுறாது பேணி நின்றார். அரசனின் விருந்தினராக இருந்தமையும், அவரின் சன்மானம் பெற்றமையும் அவரின் பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி நிற்கின்றன. சிறந்த தமிழ் அறிஞரான இவர், தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் தமது சீடர் பலரைச் சிறந்த தமிழறிஞர்களாக உருவாக்கி வைத்தார்.

உ-ம்:- சிதம்பரம் சோமசுந்தரம் முதலியார், திருமயிலை பாலசுந்தர முதலியார்; மாதகல் கார்த்திகேசபிள்ளை, சுழிபுரம் சிவப்பிரகாச பண்டிதர்.

சுழிபுரம் எனும் ஊரில் மாமன் மகளை விவாகம் செய்திருந்த இவர் சுழிபுரம் பறாளை விநாயகர் பள்ளு எனும் இலக்கிய நூலில் முதலாம் பதிப்பைச் செய்ததாகவும் அறியப்படுகிறது. 'திருமந்திரம்' முதலாய முக்கிய சமய நூல்களையும் பதிப்பித்த இவரைத் தமிழுலகம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும் என்பதில் ஐயமில்லை.

திருவாவடுதுறை ஆதீனத்தில் இவர் செய்த அரிய பணிகள் காரணமாக 1903ல் இடம்பெற்ற அன்னாரின் உத்தரகிரியைக்கு அவர்கள் பீதாம்பரம், மாலை, பரிவட்டம் என்பன அனுப்பி வைத்து அஞ்சலி செலுத்தினர் எனத்தெரிய வருகின்றது. மேலும் 1960 ஆனி மாதம் 5,6ந் திகதிகளில் வடகோவை ஞான பண்டித சைவ விருத்திச் சங்கத்தினரால் அவ்வூர்ச் சித்திர வேலாயுதசுவாமி கோவில் முன்றிலில், சபாபதி நாவலர் விழா கொண்டாடப்பட்டபோது திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் வந்து இரண்டு நாட்களும் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர் என்பதும் ஈண்டு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

நாவலர் அவர்களை நினைவு கூரும் முகமாக அவர் வாழ்ந்த சூழலில் அமைந்திருந்த வராம்பற்றை சனசமூக நிலையத்தை வடகோவைச் செல்வவிநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் புனர்நிர்மாணம் செய்து அப்பகுதி மக்கள் "ஸ்ரீ சபாபதி நாவலர் சனசமூக நிலையம்" எனப் பெயரிட்டுச் சிறப்புறப் பேணி வருகின்றனர். அப்பெரியாரின் ஞாபகார்த்தமாக நந்தவனம் ஒன்று அமைக்க அவரின் மருமகன் உறவு முறையினரான அமரர் சிவகுருநாதன் அவர்கள் எழுதிய நன்கொடை உறுதி ஒன்றும், ஞாபக மண்டபம் அமைக்க எழுதிய தருமசாதனம் ஒன்றும் உள்ளதாகவும் அறியப்படுகிறது. எவ்வாறாயினும் எம்மண்ணுக்குப் பெருமை சேர்த்த இப்பெரியாரை இவ்வூர் என்றும் நினைவு கூரும்.

**உசாத்துணை :-**


1."சித்தாந்தபானு சுப்பிரமணியக் குருக்கள் பாராட்டுவிழா மலர் 1971

2. ம.லோகேஸ்வரன் - கோவைப்பதியில் சைவமும் தமிழும்

3. க.இ.குமாரசாமி - கோப்பாய் - வரலாறு - கூட்டுறவு

4. தமிழ் இலக்கிய வரலாறு - வி.செல்வநாயகம்

# 'உண்மைக்கும் நேர்மைக்கும்''

(திருமதி.இ.சிவலிங்கம் ஆசிரியர் யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பதற்கிணங்கச் செயற்கரிய செய்த பெரியவர்களையும் அறிவு நலன் படைத்த சான்றோர்களையும் குறித்து நிற்கும் சொல்லே 'உலகம்' என்ற கருத்துக்குரியது. இத்தகைய பெரியோர்களும் சான்றோர்களும் உள்ளத்தில் உண்மை ஒளி படைத்தவர்கள். இதனாலேதான் அவர்களது வாக்கிலும் அந்த உண்மை ஒளி பிரவகித்து அந்த உண்மையையும் அவர்களின் நேர்மையையும் பின்பற்ற உள்ளம் விழைகின்றது. ஆன்மீக நாட்டமுள்ள ரிஷிகளும், சமயப் பெரியோர்களும், ஞானிகளும், சித்தர்களும் மறந்தும் பொய் பேசாத சிந்தனையாளர்கள். இதன் காரணமாகவே இவர்கள் ஞானக் கண்களுக்கு இறைவன் காட்சி கொடுத்தான். ஆன்மீக ஞானம் பெறுவதற்கும் உள்ளத்திலுள்ள உண்மை ஒளியே காரணம் எனலாம்.

இந்துக்களால் போற்றப்படும் உபநிடதங்களிலே உண்மையின் தத்துவம் வலியுறுத்தப்பட்டது. குருகுலக் கல்வி முறை நிலவிய அக்காலத்தில் குருவின் இருப்பிடம் நாடிச்சென்று அவருடன் உறைந்து அவருக்குப் பணிவிடை செய்து கல்வியைக் கற்கும் மாணவன் தன் குலத்தைக் கூற வேண்டும். சத்தியகாமன் என்பவன் தன் குலத்தையே அறியாதவன். அவன் தன் குருவிடம் பொய் உரைக்காது தன் குலம் யாது என்பது தெரியாதெனக் கூறுகின்றான். அவன் உண்மை கூறியதால் உள்ளம் மகிழ்ந்த குரு "நீயே உண்மையான அந்தணன்" என்று கூறித் தனது சீடனாக ஏற்றுக்கொள்கிறார். இதன் மூலம் உண்மையும், நேர்மையும் நிறைந்த குரு தன் மாணவர்களிடம் அந்த நற்பண்புகளை எதிர்பார்த்தார் என்பது புலனாகின்றது. உபநிடத சுலோகங்களும் இதனையே வலியுறுத்துகின்றன.

இதிகாசங்கள், அறநூல்கள், சங்க இலக்கியங்கள் யாவும் சமுதாயத்திற்கு அறத்தைப் போதிக்கின்றன. உண்மை, நேர்மை என்ற உயர்ந்த விழுமியங்களைப் போற்றி வாழ்ந்தவர்கள் அடைந்த மேன்மையைப் பாத்திரங்களின் வாயிலாகச் சமுதாயத்திற்குப் போதிக்கின்றன. வாழ்ந்து காட்டியவர்கள் எமக்கு வழி காட்டிச் சென்றவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டியது நமது கடமையாகும். சங்கப் புலவர்கள் பொய் பேசும் இயல்பு சிறிதேனும் இல்லாதவர்கள், உள்ளதை உள்ளவாறு நேர்மையுடன் பாடும் இயல்புடையவர்கள், ஒன்றும் கொடாதானைக் "கோ" வென்றும், "கா"வென்றும் பாடாதவர்கள். இத்தகைய இயல்புடைய புலவர்களால் பாடப் பெறுவதைப் பெரும் பேறெனக் கருதிய அக்கால மன்னர்களும் உண்மையும், நேர்மையும், வீரமும் நிறைந்து காணப்பட்டனர்.

உண்மை, நேர்மை ஆகிய நற்பண்புகளைப் போதிக்கும் நிலையங்களாகக் கல்விச்சாலைகள் செயலாற்றுகின்றன. இவ்வரிய பண்புகள் வீட்டிலே விதைக்கப்பட்டுப் பாடசாலைகளில் நன்கு வளர்க்கப் படவேண்டும். எம் முன்னோர்கள் பேணிய இந்நற்பண்புகளை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கிச் சமுதாயத்திற்கு அவர்களை வழங்க வேண்டும். இவ்வரும் பணியினை எடுத்துக் காட்டும் முகமாகவே எமது கல்லூரியின் மகுட வாக்கியமாக "உண்மைக்கும் நேர்மைக்கும்" என்பது விளங்குகின்றது.

இவ்வாக்கியம் சிறு பராயத்திலிருந்தே கல்வி கற்கும் யாவர் மனதிலும் பதிக்கப்படும் நல்வாக்கியமாக விளங்குவதுடன் கல்லூரியின் இலச்சினையிலும் பொறிக்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த வாக்கியமாக விளங்குகின்றது. "உண்மையே உயர்த்தும் ஏணி", "நேர்மையே நிறைந்த செல்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாக்கியத்தின் படி மாணவர்கள் உண்மை பேசுபவர்களாக உருவாக வேண்டும், நேர்மைக்கு இலக்கணமாக விளங்க வேண்டும், என்ற குறிக்கோளுடன் மாணவர்கள் நடமாடும் இடங்களிலும், மாணவ முதல்வர்களின் இலச்சினைகளிலும் இம் மகுட வாக்கியம் பொறிக்கப்பட்டுள்ளது. வாழ்வின் சிறப்புக்கு முக்கிய அங்கமாக விளங்குவது பெருமக்களின் அறிவு; அறிவுடையவன் நல்லவற்றைப் பின்பற்றுவான். சத்தியம்

மனிதனைத் தெய்வமாக்கும். "அரிச்சந்திரன் நாடகம்" பார்த்த காந்தியடிகள் உண்மையின் தத்துவத்தைப் புரிந்து வாழ்ந்து மகாத்மாவானார். சுவாமி இராமகிருஷ்ணரின் உள்ளத்து உண்மை ஒளியே அவரைத் தெய்வீக புருஷனாக உயர்த்தியது. அவரது சீடரான நரேந்திரன் குருவின் வழிகாட்டலால் ஆன்மீக ஞானம் பெற்றார், உலகம் வியக்கும் விவேகானந்தராக மாறினார், துறவுக்கும் தொண்டிற்கும் அடிப்படை "உண்மையும் நேர்மையும்" என்பதை எடுத்துக்காட்டினார். அவரது பேராற்றலுக்கும், ஆளுமைக்கும், கம்பீர தோற்றத்திற்கும் அடித்தளமிட்டது. அவரது உள்ளத்தில் உறைந்திருந்த உண்மையும், நேர்மையும் என்ற உயர்ந்த பண்புகள் தான் என்பதில் ஐயமில்லை. இத்தகைய பெரியோர்களின் வாழ்க்கையை எமது மாணவர் சமுதாயம் பின்பற்ற வேண்டும் கல்வியின் பயன் உண்மையுள்ளவர்களாகவும் நேர்மையுள்ளவர்களாகவும் வாழ்வதே ஆகும்.

மழை நீரானது நிறமும் குணமும் அற்றது, ஆனால் நிலத்தில் விழுந்த பின் நிலத்தினியல்பைத் தன்பியல்பாக்கிக் கொள்ளுகின்றது. இதே போன்று நல்ல பண்புள்ளவர்களின் உறவும் நல்ல வழி காட்டலும் மாணவ சமுதாயத்தை நற்பண்புடையவர்களாக உருவாக்க முடியும் என்பதை மனங் கொண்டும் நாட்டின் எதிர்காலம் மாணவர் கையிலேயே தங்கியுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டும் கிறிஸ்தவ மிஷனரிமார்களால் கொண்டு வரப்பட்டதே இம்மகுட வாக்கியம். உலகப் பொதுமறை போல் இதுவும் பொதுவானது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் மிஷனரிமார்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது எமது நாட்டிலே வாழ்கின்ற மக்கள் கல்வியறிவுடையவர்களாக வாழ வேண்டும். அவர்கள் மாக்களாக இருக்காமல் மக்களாக வாழ்வதற்கு அவர்களுக்குக் கல்வியை கொடுக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு அவர்களால் பல பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு மிஷனரிமார்களால் உருவாக்கப்பட்ட கல்லூரிகளில் ஒன்றுதான் எமது கல்லூரியாகிய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கல்வியைப் பெற்றுக்கொள்வதுடன் நல்ல பண்புடையவர்களாகவும் விளங்க வேண்டும் என்ற நோக்குடன் கல்லூரியின் மகுட வாக்கியமாக "உண்மைக்கும், நேர்மைக்கும்" என்ற வாக்கியத்தைத் தெரிந்தெடுத்துள்ளனர்.

நேர்மை இனியதொரு அறம். பாடசாலை ஒரு பாற்கடல் போன்றது. முறையாக வாழ்வதற்கு அது அமுதத்தை நல்கும். உண்மை, நேர்மை என்பவற்றிற்கு மாறாக வாழத் தலைப்பட்டால் அது நஞ்சை வெளிப்படுத்தும். மாணவர்களுக்கு நல்ல அறிவையும் அனுபவ ஞானத்தையும் கொடுத்து அமுதத்தைக் கடையவேண்டிய கடமையை உணர்த்துவதாக எமது கல்லூரி மகுட வாக்கியம் "உண்மைக்கும் நேர்மைக்கும்" விளங்குகின்றதெனலாம்.

✣ கல்வி என்பதை கற்க வேண்டிய நேரத்தில் கற்று விடல் சுவையானது. எனக்கூறப்படுகின்றது. சுவையாகச் சாப்பிடும் நேரத்தில் நல்ல உணவைச் சாப்பிடாமல் மிச்சம்பிடித்து சுவையற்ற நேரத்தில் அதிக மருந்தைச் சாப்பிடுதல் போன்றதாக கல்வி இருக்கக் கூடாது.

✣ ஒரு நாட்டின் தனிநபர்கள் சமூகங்கள் தமது சமூக கலாசார பொருளாதார அரசியல் முன்னேற்றங்களைப் பெறுவதற்கும் அவற்றைத் தொடர்ந்து பேணுவதற்கும் ஏற்றதான கல்வி ஏற்பாடுகளை வளர்ப்பதற்கு உரிய விஞ்ஞான ரீதியில் அமைந்த செயற்பாடு கல்வித் திட்டமிடல் எனக்கொள்ளப்படும்.

# தகவல் தொழில்நுட்பத்திற்கு ஓர் அறிமுகம்
# INTRODUCTION TO INFORMATION TECHNOLOGY

(திரு.ஜே.அன்ரன் பிறின்ஸ் கணணிப் பிரிவு பொறுப்பாசிரியர் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

தகவல் தொழில்நுட்பத்தில் பின்வருவன உள்ளடக்கியுள்ளன.

1. கணனி வன்பொருள் (Hard ware), மென்பொருள் (Soft ware), ஒரு மென்பொருளுக்குத் தேவையான வன்பொருட்கூறுகள் பற்றிய விடயங்களும்.

2. கைத்தொழில் வாணிபநுட்பத்தில் (Industrial & Commercial Information Technology System)

2.1 கைத்தொழில் தொகுதியில் : Design Process Production Control, Robotics Benefits Cost Limitations எனவும்

2.2 வாணிபத் தொகுதியில் Booking Systems, Electronic Funds Transfer, Stock Control, Order Processing Payroll Processing என்பனவும்.

3. தொடர்பு தகவல் தொழில்நுட்பத்தில் (Communication & Information Technology) Electronic Communication System, Computer Networks எனும் பகுதிகளும் அடங்கும்.

**இக்கட்டுரையில் வன்பொருட்கூறுகளைப் பற்றி சற்று ஆராய்வோம்.**

கணனியானது மின்னிணைப்பு (Power on) செய்யப்பட்டவுடன் FC00 எனும் புரோக்கராம் ஆனது மைக்கிறோ புரோசசருக்கு (CPU) ஓர் இலத்திரனில் தூண்டலைக் கொடுக்கும். இதே நேரத்தில் நினைவகத்தில் உள்ள எல்லாத் தரவுகளும் அழிக்கப்படும். இப் புறோக்கிராமானது கணனியின் மிக முக்கிய பாகமான மதபோட்டில் (Mother Board or Main Board) நிரந்தரமாகப் பதியப்பட்டுள்ள BIOS ல் (Basic Input Output System) உள்ளது. தொடர்ந்து CPU ஆனது எல்லாப் பாகங்களுக்கும் தூண்டலைச் செலுத்தி எல்லாப்பாகங்களையும் இனங்கண்டு கொள்ளும். CPU ஆனது கணனியின் மூளை என வர்ணிக்கப்படும். மேலும் CPU ஆனது System Timer எனப்படும். RTC (Real Time Clock) யினை இயங்கும் நிலைக்குக் கொண்டுவரும். அத்துடன் கீபோட், மவுஸ் என்பன முறையாக இணைக்கப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சித்துப்பார்க்கும். இத்தொழிற்பாடானது POST ( Power On Self Test) எனப்படும்.

POST ஐத் தொடர்ந்து Booting எனப்படும் தொழிற்பாடானது நடைபெறுவதற்கு Iosys, Ms Dos ஆகியவை நினைவகத்திற்கு(RAM) ஏற்றப்படும். (Leading) இத்தைத் தொடர்ந்து இறுதியாக COMMAND. COM, AUTOEXEC. BAT எனும் கோப்புகள் நினைவகத்தில் ஏற்றப்படும். இந்நிலை தான் கணனியானது ஒரு பாவனையாளரின் உபயோகத்திற்கான ஆயத்தநிலை எனப்படும்.

மைக்கிறோ புரோசசர் CPU ஆனது,
* Control Unit
* A.L Unit ( Arithmetic Logical Unit)
* Register, என மூன்று பகுதிகளைக் கொண்டது.

Control Unit ஆனது உள்ளீட்டு உபகரணங்களில் இருந்து நினைவகத்திற்கு மாற்றவும், நினைவகத்திலிருந்து தரவுகளை வெளியீட்டு உபகரணங்களுக்கு மாற்றவும் உதவுகின்றது. A.L Unit ஆனது கணித தர்க்க ரீதியான செயற்பாடுகளையும் தீர்வுகளையும் தருகின்றது. Register என்பது CPU வுடன் அமைந்துள்ள விஷேடமானதும், தற்காலிகமானதுமான சேமிப்பகமாகும். இதன் மூலமாக தரவுகளும் கட்டளைகளும் விரைவாக மாற்றீடு செய்யப்படும். இது பதுக்கு நினைவகம் (Cache Memory) எனப்படும்.

ஒரு கணனிக்கு பொருத்தமான CPU ஆனது அதன் மதபோட்டுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படும். அதாவது மதபோட்டில் CPU பொருத்தப்படும் சொக்கட் (Socket)

இலக்கத்திற்கு ஏற்ப தெரிவு செய்யப்படும். புதிதாக ஒரு CPU ஒன்று சந்தையில் கொள்வனவு செய்யும் போது சொக்கட் இலக்கத்தை கூறியே கொள்வனவு செய்ய வேண்டும். மதபோட்டின் வகைகளாவன : 8086, 8088, 80286, 80386, 80486, P1, P2, P3, P4 ஆகும். (P என்பது Pentium ஆகும்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு 1997இல் முதன் முதலாக வழங்கப்பட்ட கணனிகளின் மதபோட் 80486 ஆகும். இதன் CPU சொக்கட் இலக்கம் 3 ஆகும். CPU வின் வேகம் 133MHz ஆகும். இதைத் தொடர்ந்து 2002 இல் வழங்கப்பட்ட கணனிகள் P3 வகையைச் சேர்ந்த Socket 370 Micro ATX Mother Board ஆகும். ATX என்பது Auto Power Off ஐக் குறிக்கும். CPU வின் வேகம் 1000 MHz ஆகும். P4இன் மதபோட் Socket 462, 478 இலக்கத்தைக் கொண்டுள்ளது. இந்த மதபோட் Dual BIOS ஐக் கொண்டுள்ளது.

## நினைவகம் (Memory)

பொதுவாக கணனிகளில் முதன்மை நினைவகம் ராம் (RAM - Random Access Memory) எனப்படும். இதைவிட பதுக்கு நினைவகம் (Cache Memory), துணை நினைவகம் ரொம் (ROM - Read only memory) எனப்பல பிரயோகங்கள் காணப்படுகின்றன.

RAM தொழிற்பாடு

நாம் கணனியை ஒவ்வொரு தடவையும் ஆரம்பிக்கும் போது அல்லது ஒரு கோப்பு (File) திறக்கும் போதும் அதற்குத் தேவையான புறொக்கிராம் கோட் (Program Code) அல்லது தகவல்களை நினைவகத்திற்கு அனுப்புகின்றது.

தற்போது ஒரு சாதாரண கணனியில் 64 MB (MB - Mega Bytes) அல்லது 128MB நினைவகத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆயினும் எங்கள் தேவைக்கேற்பவும் மதபோட்டின் சுலெட்டுகளுக்கேற்பவும் (Memory Slots) ராம் நினைவகத்தை 256MB, 512 MB என அதிகரித்துக் கொள்ள தற்காலத்தில் கணனிகளில் பயன்படுத்தப்படும் மெமரிகளாவன:

* SDRAM - Syncronous Dynamic RAM
* RDRAM - Rambus Dynamic RAM
* DDRRAM - Double Date Rate RAM

எனப்படும்.

மற்றும் மெமரிகளது பின்களின் (Pin) எண்ணிக்கைகளைக் கொண்டும் அதன் வடிவமைப்புக்களைக் கொண்டும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

* SIMM - Single in line Memory Module
* DIMM - Double in line Memory Module
* RIMM - Rambus in line Memory Module

தற்பொழுது சந்தையில் காணப்படும் அதிகமான கணனிகள் 168 பின்களைக் கொண்ட SDRAM DIMM மெமரியைக் கொண்டதாகவே காணப்படுகின்றன. கணனிக்குப் பொருத்தான மெமரியை தெரிவு செய்யும்போது மெமரி சுலெட்டுகளுக்குப் பொருத்தமான மெமரிகளை (Memory Chips) தெரிவு செய்ய வேண்டும்.

மெமரியின் தேவைகளை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

√ Windows95 52 MB - 64 MB
√ Windows98 64 MB - 128 MB
√ WindowsMe 64 MB - 128 MB
WindowsXP 64 MB - 128 MB

## வி.ஜி.ஏ அட்டை(V.G.A / S.V.G.A Card)

V.G.A என்பது Video Graphical Adapter என்பதன் சுருக்கமாகும். வி.ஜி.ஏ காட் ஆனது மதபோட்டில் இதற்கெனவுள்ள சுலெட்டில் (Slot) செருகப்படும். இவ்வாறான சுலெட்டுகள் மூன்று வகையாகக் காணப்படும். அவையாவன,

1. கறுப்பு நிறமுடைய ISA Slot :-
ISA - Industry Standard Architecture, இது மற்றைய Slots உடன் ஒப்பிடும் போது பருமனில் பெரிதாகக் காணப்படும். தற்காலத்தில் இதன் பாவனை குறைந்து கொண்டு வருகின்றது.

2. வெள்ளை நிறங்கொண்ட PCI Slot :-
PCI - Peripheral Components Interface, தற்பொழுது PCI வகை VGA, Sound காட்டுகளும் இலகுவாக சந்தையில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

3. பிறவுண் நிறைமுடைய AGP Slot :-
AGP வகை Slot தற்பொழுது பாவனையில் வந்து கொண்டுள்ளது.

VGA காட்டானது கணனித் திரையில் (Monitor) வெளியீட்டைப் பெற உதவுகின்றது. தற்பொழுது VGA காட்டை விட AVGA காட்டுகளும் பாவனையில் உள்ளன.

SVGA என்பது : Super Virtual Graphical Array எனப்படும். கணனித்திரையில் காணும் ஒரு படத்தின் துல்லியத்தை அப்படம் எத்தனை புள்ளிகளைக் கொண்டு வரையப்பட்டது என்பதை வைத்தே அளவிடலாம். இப் புள்ளிகள் Pixel என அழைக்கப்படும். உதாரணமாக மொனிற்றர்களில் புள்ளிகளின் எண்ணிக்கை 600 x 480, 800 x 600, 1024 x 768, 1280 x 1024, 1680 x 1280 ஆகியவற்றில் ஒன்றால் குறிக்கப்பட்டிருக்கும். உதாரணமாக 800 x 600 எனக் குறிக்கப்பட்டுள்ள மொனிற்றரில் ஆகக்கூடிய 800 நிரல்களும் (Columns) 600 நிரைகளும் (Rows) காணப்படும். 800 x 600 என்பது அவ் வகை மொனிற்றர்களின் Resolution என அழைக்கப்படும். இவ்வகை மொனிற்றர்களைப் பாவிக்கும் போது VGA காட்டானது. Screen Area எனும் பகுதியில் 800 x 600 என சரி செய்யப்படும். இச் சந்தர்பத்தில் 800 x 600 ஐ விட குறைவான Resolution க்கு சரி செய்யப்படுமாயின் மொனிற்றரில் தோன்றும் எழுத்துக்கள் பெரிய எழுத்துக்களாகவும் குறியீடுகள் (Icons) பெரிதாகவும் தோன்றும். மாறாக 800 x 600 க்கு கூடுதலாக சரி செய்யப்படுமாயின் எழுத்துக்களும் குறியீடுகளும் சிறிதாகத் தோன்றும். அத்துடன் கணனித் திரையின் அளவும் சிறுத்துக் காணப்படும்.

இதுவரை விளங்கிக்கொண்ட விடயங்கள் யாவும் கணனியை இயங்க வைக்க தேவையான முக்கிய பகுதிகளாகும். புதிய கணனி ஒன்று பொருத்தும் போது (Assemble) மதபோட்டில் CPU முதலில் பொருத்தப்படும். நினைவகமும், V.G.A காட்டும் அதற்குரிய Slots பொருத்தப்பட்டு, மின்னிணைப்பு வழங்கப்படுமாயின் ஏதாவதொரு காட்சி (Display) திரையில் தோன்றும். அதாவது CPUன் தன்மையைப் பற்றிய விபரங்கள் தோன்றும். இதன்பின்பு மதபோட்டானது கேசில் (Case) வைத்துப்பொருத்தப்படும். மேலும் Floppy, Drive, CD, ROM, Drive, Hard Disc, LED போன்றவை அணிகலங்களாகவே கருதப்படும். இவ்வாறு ஓர் கணனியானது பொருத்தப்பட்டு விரும்பிய Operating System ஆனது Install செய்யப்படும். (உதாரணமாக Win98/ WinMe)
இதற்குமுன் வன் தட்டானது (Hard Disc) பகுதிகளாக்கப்படும். (Partition) உதாரணமாக 20GB கொள்ளளவுடைய வன்தட்டானது பகுதிகளாக்கப்படாமல் Install செய்யப்பட்டு ஒரு பாவனையாளர் வேலை செய்ய ஆரம்பிப்பாராயின் ஒரு கோப்பு கணனி தேடவேண்டுமாயின் 20GB முழுவதும் தேடி கணனித் திரைக்கு கொண்டு வர அதிக நேரம் பிடிக்கும். ஆனால் C, D, E என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்ட வன்தட்டில் ஒரு கோப்பினை தேட கணனிக்கு அதிக நேரம் பிடிக்காது. பகுதிகளாகக்கப்படும் போது ஒரு பகுதி 7 GB க்குகூடாததாக இருப்பது விரும்பத்தக்கது. Partition செய்வதற்கு DOS கட்டளை 'FDISK' ஆகும். இயங்கும் நிலையில் உள்ள கணனியொன்றின் வன்தட்டை Partition செய்வோமாயின் வன் தட்டில் தகவல் எல்லாம் அழிந்துவிடும். மீண்டும் Install செய்யவேண்டிய தேவையுண்டாகும்.

## தேவையான CD Keys வருமாறு

Windows XP 2002
FCKGW - RHQQ2 - YXRKT - 8TG6W - 2B7Q8 Windows 98
HQ6K2 - QPC42 - 3HWDM - 4FAKJ - W4XWJ

Ms Office 2000
GC6J3 - GTQ62 - FP876 - 94FBR - D3DX8

Ms Office 97
0701 - 1234567

Visual Studio 2000
415 - 22222222

Macromedia FLASH - 5
FLW500 - 03143 - 77238 - 80660

Auto CAD 2000
112 - 11111111
5X8NUG

PC - Cillin 2002 Antivirus Program PCTU - 9991 - 9655 - 5350 - 4555


**✸ நூல்களே மிகச் சிறந்த ஆசிரியர்கள்.**

நல்ல கல்விமான்களை உலகுக்குதந்து
அளப்பரிய சேவை செய்துவரும்
கிறிஸ்தவ கல்லூரி அன்னையின்
150 ம் வருட நிறைவுவிழா சஞ்சிகைக்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.



* **சிறந்த முறையில் படங்கள் பிடித்திட நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.**


# கல்யாணி போட்டோ




மானிப்பாய் வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

# குயிக் வீடியோ அன்ட் போட்டோ

# QUICK VIDEO & PHOTO



உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்களகரமான வைபவங்களை
துல்லியமான முறையில் வீடியோ படம்
பிடித்திடவும் கலர் நிழற்படம்
பிடித்திடவும் நீங்கள்,
நாடவேண்டிய



## தனித்துவமான நிறுவனம்

சிவன் கோவில் வீதி, புத்தூர்.

தொடர்பு :-குமரன் வீடியோ ஓடியோ
சங்கானை.

மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**மாதுளை புடவை மாளிகை**

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

கல்லூரியை வாழ்த்துகின்றோம்.

**அம்பிகை பட்டுச் சோலை**

பிரதான வீதி,
சங்கானை.

கல்லூரியின் கல்வி வளர்ச்சி
மேலோங்க வாழ்த்துகின்றோம்.

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்**

44,42, பெரியகடைவீதி,
யாழ்ப்பாணம்.

சஞ்சிகை சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

**ஏ.எஸ். ஆறுமுகம் அண்ட் சன்ஸ்**

81, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் கல்லூரியின் கல்வி
வளர்ச்சிக்கு எமது
பாராட்டுக்கள்

**விக்னேஸ் மூக்குக் கண்ணாடி அகமும்**
**பல்கட்டுமிடமும்**

564 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கல்விச்சாலையின் பணி
சிறக்க வாழ்த்துகின்றோம்
புதிய நவீனா நகையகம்
189, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.

வளர்பிறைபோல்
கல்வியில் வளர்ச்சிபெற
வாழ்த்துகின்றோம்.

**வளர்பிறை பட்டுச் சோலை**

பிரதான வீதி,
சங்கானை.

கல்லூரியின் கல்விக்கடல்
சிறப்புற மேலோங்க
வாழ்த்துகின்றோம்.

**க. சபாநாயகம்**
**வேணு பட்டுச்சோலை**

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

# கூட்டுறவின் வளர்ச்சிப்பாதையில்.......

திருமதி. ருக்மணி ஆனந்தவேல் ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், பழைய மாணவி

கூட்டு உழைப்பு, கூட்டு உறவு, கூடி வாழ்தல் மனித வாழ்விலும் குறிப்பாகத் தமிழர் பண்பாட்டிலும் ஊறிய செயற்பாடுகள் ஆகும். இதனையே நம் முன்னோர்கள் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்றும் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' யென்றும் உறுதிபடக் கூறிவந்துள்ளார்கள். கூட்டுறவின் அடையாளமாகக் 'கைப்பிடித்தல்' உம், அதன் சின்னமாகச் சூரிய ஒளியிலுள்ள ஏழு வர்ணம் கொண்ட கொடியும் திகழ்கிறது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து மனித வாழ்வு முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் அடிப்படையில் மூன்று வகையான பொருளாதார முறைமைகள் உருவாக்கம் பெற்றன. முதலாளித்துவ பொருளாதாரம், தனி மனிதனை மையமாகக் கொண்டும் மூலதனத்துக்கு முதலிடம் கொடுத்தும் செயற்படுகிறது. இதன் தத்துவார்த்தத் தந்தையாக 'அடம்ஸ்மித்' கருதப்படுகிறார். இம் முதலாளித்துவ அமைப்பில் மூலதனம், உழைப்பைச் சுரண்டி தனிமனிதனை வளப்படுத்துவதாக உணரப்பட்டது. இதன் பேறாகவே உழைப்பையும், உழைப்பாளர்களையும் மையப்படுத்திப் பொதுவுடைமைச் சிந்தாந்தம் தலை தூக்கியது. இதன் தத்துவார்த்த தலைமகனாக 'கார்ல்மார்ஸ்' உம், முன்னோடியாக 'லெனின்' உம் கணிக்கப்படுகிறார்கள். மேற்கூறிய இரு பொருளாதார அமைப்புக்களும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டன. முதலாளித்துவ சிந்தனைக்கும், பொதுவுடைமைச் சிந்தனைக்கும் சமரசம் காணும் முறையாகவும் நல்லனவற்றை ஏற்கும் வகையாகவும் கூட்டுறவு இயக்கம் ஆரம்பமானது. இதன் முன்னோடியாக 'றொபேர்ட்ஓவன்' நினைவு கூரப்படுகிறார். 'அனைவரும் ஒருவருக்கென்பது' முதலாளித்துவம். 'ஒவ்வொருவரும் அனைவருக்கும்' என்பது பொதுவுடைமை, 'ஒவ்வொருவரும் அனைவருக்கும், அனைவரும் ஒவ்வொருவருக்கும்' என்பதே கூட்டுறவு. அதாவது தனி மனிதப் போட்டி என்ற நிலையிலிருந்து கூட்டுழைப்பில் தனித்துவம் என்ற நிலைக்கு மனித முயற்சியை நெறிப்படுத்துவது கூட்டுறவு. ஒருவன் சுரண்டப்படாமலும் அதே நேரத்தில் மற்றவர்களைச் சுரண்டாமல் வாழும் முறை கூட்டுறவாகிறது. கூட்டுறவின் முக்கியத்தைப் பொதுவுடைமையின் காவலனாகிய 'லெனின்' "முதலாளித்துவ முறையில் கூட்டுறவு ஒன்று தான் நல்ல அமைப்பு. அதை எப்பாடுபட்டாவது அப்படியே கட்டிக் காக்க வேண்டும்" என்று கூறியுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

'றொபேர்ட் ஓவன்' இன் சிந்தனைகளைப் பின்பற்றி 1844ம் ஆண்டு இங்கிலாந்தில் றொச்டேல் முன்னோடிகள் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தனர். இவர்களே கூட்டுறவுக் கொள்கைகளை முதலில் வகுத்தனர். இக் கொள்கைகள் சமூக வளர்ச்சிக்கேற்பவும், காலத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு காலத்துக்கு காலம் மாற்றமடைந்து வந்தன. உலக ரீதியான கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியின் சின்னமாக 1895 இல் அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனம் உருவானது. இந் நிறுவனமே 1896 இலும் 1934 இலும் 1966 இலும் இறுதியாக 1995 இலும் கூட்டுறவுக் கொள்கைகளை மறு சீரமைத்தது. இதன் பேறாக உடன் காசுக்கு விற்பனை, பங்குக்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டி என்ற கொள்கைகள் நீக்கப்பட்டு கூட்டுறவில் சுயாதீனம், பொருளாதாரப் பங்களிப்பு, சமூகமேம்பாடு என்ற கொள்கைகள் முக்கிய இடம்பெற்றன. உறுப்பினர்க்கே உரியதென்ற கோட்பாடு அனைத்து மக்களுக்குரியதென்று உணரவைக்கப்பட்டது. இன்று பிரகடனப்படுத்தப்பட்ட அனைத்துலகக் கூட்டுறவுக் கொள்கைகளாவன.

1. தன் விருப்பார்ந்த தடையற்ற உறுப்புரிமை
2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்
3. அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு
4. சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படல்.
5. கல்வி, பயிற்சி, தகவல்.
6. கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு
7. சமூக மேம்பாடு

உலகில் பல நாடுகளிலும் கூட்டுறவு இயக்கம் நிலை கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும், இஸ்ரேல், பங்களாதேஷ், யப்பான் போன்ற நாடுகளிலும் கூட்டுறவுத்துறை சுயாதீனமாக இயங்கிப் பல சாதனைகளைப்

படைத்து வருகின்றன. இந்தியா உட்பட இலங்கை போன்ற வளரும் நாடுகளில் கூட்டுறவுத்துறை அரசின் தயவிலேயே இயங்கும் நிலை உள்ளது. எனினும் இந்தியாவிலும் மற்றும் சில நாடுகளிலும் கிராமிய அபிவிருத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்திலும் கூட்டுறவுத்துறை கணிசமான பங்கை வகித்து வருகிறது. இதனால் கூட்டுறவு நாட்டுயர்வாகக் கொள்ளப்படுகிறது.

பொதுவுடமைச் சித்தாந்தத்தைப் பின்பற்றும் ரஷ்யா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பியா நாடுகளிலும் கூட்டுறவுத்துறை, கூட்டு உழைப்பு, கூட்டுப்பங்கீடு, உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற வகையில் பெரும் பண்ணை அமைப்புக்களாகச் செயற்படுகிறது. இங்கே மூலதனத்தின் ஆட்சி அரசினால் வழிநடத்தப்படுகிறது. இக்கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் பாட்டாளி மக்கள் வளமாக வாழவும், நாட்டின் பொருளாதாரம் மேம்படவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் கூட்டுறவு முறை பாரம்பாரியமான வாழ்வு முறையாகவிருந்தாலும் 1911இல் இருந்தே அமைப்பு முறை பெற்று, கூட்டுறவுத்துறை செயற்பட ஆரம்பித்தது. ஐக்கிய நாணயச் சங்கங்களாக கடனுதவுச் சங்கங்கள் ஆரம்பித்து பின்பு ஒவ்வொரு நோக்குக்கும் வெவ்வேறு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் 1927இல் பசறைத் தோட்டத்தொழிலாளிகளிடையே ஆரம்பிக்கப்பட்டது. இதே ஆண்டு முதலாவது பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 1929இல் முதலாவது கூட்டுறவு மாகாண வங்கி யாழ்ப்பணத்தில் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், படகு உரிமையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவும் தோற்றம் பெற்றன. யாழ்ப்பாணத்தில் மலையாள புகையிலை விற்பனைச் சங்கம், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை போன்ற தனிச்சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன. சங்கங்கள் நுகர்ச்சிப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் இரண்டாம் உலக மகாயுத்தம் (1939-1945) ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து அரசு பொருள் விநியோகத்தைக் கூட்டுறவுச் சங்கங்களிடமே ஒப்படைத்தது. இச்செயற்பாட்டால் கூட்டுறவுச் சங்கங்கள் 'கூப்பன்' கடை என்று மக்களால் கருதும் நிலை ஏற்பட்டது. 150 க்கு மேற்பட்ட பொருட்களை விநியோகிக்கும் ஏகபோகம் கூட்டுறவுச் சங்கங்களிடமே இருந்தது. விநியோகத்தை ஒழுங்குபடுத்தப் 'பங்கீட்டு அட்டை' முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு எந்தப் பொருளிலும் ஏகபோகமில்லாத நிலையிலும் பங்கீட்டு அட்டை பயன்படுத்தப்படுகிறது.

1956இல் கூட்டுறவுச் சங்கங்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட்டன. இதனால் கூட்டுறவுச் சங்கம்தான் விரும்பும் எச்சேவையிலும் ஈடுபட வாய்ப்பு உண்டானது. ப.நோ.கூ. சங்கங்களின் சமாசங்கள் பிராந்திய ரீதியாகக் கூட்டுறவு வங்கிகளை ஆரம்பித்தன. இவ் வங்கிகள் அனைத்தும் 1961இல் ஆரம்பித்த மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் நாட்டில் உள்ள பெரும்பான்மையான ப.நோ.கூ. சங்கங்கள் நிர்வாகச் சீர்கேட்டாலும், நிதிப் பற்றாக்குறையாலும் தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இயங்கிய சங்கங்களும் அதிகாரப் பலம்கொண்ட ஒரு சிலரின் உடமையாகக் காணப்பட்டன.

கூட்டுறவுத்துறையிலும் ப.நோ.கூ.சங்க அமைப்பு முறையிலும் உள்ள குறைபாடுகளை நீக்கி மக்களின் தேவையைப் பூரணப்படுத்தும் முகமாக 1970 இல் பதவி ஏற்ற அரசாங்கம் கூட்டுறவுத்துறையைப் புனரமைத்தது. அரசின் 1972ம் ஆண்டு 05ம் இலக்கச் சட்டத்தின்படியும் அதன் கீழான விதி, உபவிதி நடைமுறை விதிகளின்படியும் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த வகையில் இலங்கை முழுவதுமுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 271 ஆரம்ப சங்கங்கள் பதியப்பட்டன. இவை தமது வழமையான பொருள் விற்பனையுடன் அரசின் நிவாரண விநியோகங்களையும் மேற்கொண்டு வந்தன. இச்சங்கங்கள் இன்று எதிலும் ஏகபோகம் அற்ற நிலையில் தம் மனித வளத்தின் பெரும்பகுதியை சமுர்த்தி நிவாரணம், இடம்பெயர்ந்தோர் நிவாரணம், வேறும் நிவாரணங்களையும் வழங்குவதிலேயே ஈடுபடுத்துகின்றன. அன்றியும் உலகமயமாக்கல் சந்தைப் பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் என்ற நிலைமைகளுடன் போட்டியில் செயற்படுவதோடு மக்கள் சேவைக்கும் தம்மை அர்ப்பணித்து வருகின்றன.

மாறிவரும் உலகுக்கேற்பக் கூட்டுறவாளரும், கூட்டுறவுச் சங்கங்களும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். கூட்டுறவுத்துறை மூலம் மக்களின் தேவைகள் அனைத்தும் வழங்கப்படும் நிலை உருவாக வேண்டும். இதற்கு அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு, சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படுதல், கல்வி, தகவல், பயிற்சி என்பவற்றிலும் சமூக மேம்பாடு முதலியவற்றிலும் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு தன்னிச்சையான ஒன்றான அமைவதற்குச் சங்கச் சேவைகள் கவர்ச்சியானதாக இருக்கவேண்டும். பொருளாதாரப் பங்களிப்பு, தம்து தேவைகளைச் சங்கத்திலே பெறுவதாகவும், பங்குமுதலாகவும், வைப்புக்களாகவும், அன்பளிப்புக்களாகவும், வேறு பல்வகை உதவிகளாகவும் அமையலாம். இதில் ஊக்குவிக்கும் காரணிகளாக கூட்டுறவு அறிவும், அதன்மேல் உள்ள நம்பிக்கையும், அதன் பண்பான சேவையும், அர்ப்பணிப்புடனான பணிப்பாளரதும், பணியாளரதும் உழைப்பும் அமையும். இந்த உயர்ச்சியிலும், மிடுக்கிலுமே சுதந்திரமாகவும், சுயமாகவும் செயற்பட முடியும். 'தன்னை அறிந்தே தானம் கொடு' என்ற சிந்தனைக்கமைவாகவே சங்கங்கள் செயற்படுவது தன்னையும் நிலைபெறச்செய்து சமூகத்துக்கும் சேவையைத் தொடர முடியும்.

எதற்கும் அடிப்படை கல்வி என்ற வகையிலும் கூட்டுறவுத்துறையின் புனிதத்துக்கும், மேன்மைக்கும் அதுபற்றிய அறிவும், தெளிவும், தகவல்களும், பயிற்சியும் இன்றியமையாதவைகளாகும்.

இது சாதாரண உறுப்பினர் தொடக்கம், பணிப்பாளர், பணியாளர், தலைவர் வரையிலான தேவையும் தகைமையுமாகும்.

கூட்டுறவுத்துறையில் பிரவேசித்தபின் கல்வி, பயிற்சி, தகவல் என்பன கிடைப்பதும், பெறுவதும் சிரமமான ஒன்றாகித் தேவையற்றதாகவும் கருதப்படும் நிலை உண்டாகிவிடுகிறது. சமுதாயத்தில் கூட்டுறவுத்துறை பிரிக்க முடியாத ஒன்றாகவுள்ளது. நாட்டின் எதிர்காலத்தும், எதிர்காலச் சந்ததி பற்றியும் கூட்டுறவு அறிவும், பயிற்சியும், தகவலும் கிடைப்பது பயனுடையதாகும். இதற்குப் பொருத்தமான இடமும், களமும் பாடசாலைகள் என்பதில் எதிர்க்கருத்து இருக்கமுடியாது. பாடசாலைகளில் அமைக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களில் மாணவர் பங்காளிகளாகவும், நடத்துனர்களாகவும், ஆசிரியர் பங்காளிகளாகவும் வழிகாட்டிகளாகவும், அப்பகுதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலதன உதவி செய்பவர்களாகவும், அவற்றினைப் பதிவு செய்பவர்களாகக் கூட்டுறவுத் திணைக்களம் செயற்படும். மாணவர்களும், வசதிகளும் உண்டு. இதனால் சிறந்த தலைவர்களை உருவாக்கும் பெருமை கூட்டுறவுத் துறைக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும்.

இவ்வாறு மாணவர் சமுதாயம் கல்வியும், பயிற்சியும், தகவல்களும் பெற்றுக் கல்விப் பயிற்சியுடன் சமுதாயச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தி உழைக்க முன்வரும்போது கூட்டுறவுத்துறை வனப்பும், பொலிவும், வலுவும் பெறும் என்பதில் ஐயமில்லை.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

★ **தோல்விகளே வெற்றியின் படிக்கற்கள்.**

★ **உன்னைப் போல் அயலவனையும் நேசி.**

★ **உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானாகவே திருந்திவிடும்.**

★ **மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.**

★ **நம்ப நட, நம்பி நடவாதே.**

# வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலா எனது அனுபவங்கள்

காலம் :- 2002.05.26 - 2002.06.14

செல்வி. துளசி மயில்வாகனம் ஆசிரியர் - யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

உலக வங்கியின் அனுசரனையுடன் மனித வள அபிவிருத்திக் கல்வி பண்பாடு அலுவல்கள் அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தரம் 6 முதல் தரம் 11 வரையிலான வகுப்புகளில் கணித பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான தொழில் சங்க அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வெளிநாட்டுப் பயிற்சி நெறியை, இஸ்ரேல் நாட்டிலுள்ள, "கோல்டா மேயர்", மவுண்காமல் சர்வதேச மத்திய பயிற்சி நிலையத்தில் (Golda Meir Mountcarmel Training Center, Haifa) நெறிப்படுத்தப்பட்டது,

அக்கல்விச் சுற்றுலாவில் இலங்கையிலிருந்து திரு.H.விஜயதாச (Education Reforms Unit. Isurupaya ) தலைமையில் 31 கணித ஆசிரியர்கள் கலந்து கொண்டோம். இவர்களுள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து எனக்கு மட்டுமே பங்குபற்றும் வாய்ப்புக்கிட்டியது. இஸ்ரேல் நாட்டில் Ms. Lilah Grunfeld (Director of the Course MCTC ) தலைமையில் எமக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிறுவனம் வழங்கிய பயிற்சிகள் எம்மைப் பூரணமான அறிவுநிலைக்கு மேம்படுத்தியுள்ளது. மனிதவள நிலையங்கள், செய்திட்டங்கள், ஆய்வுகள், கற்பித்தல் சாதனைப் பயன்பாடுகள், செயன்முறைகள் மீள்சுழற்சி போன்றன பெரிதும் பயன்பெற வைத்துள்ளன.

அங்கு பெற்றுக்கொண்ட கல்விச் சீர்திருத்த முன்னேற்றங்களைப் பற்றி பயன்பெற்ற ஆசிரியர்களில் ஒருவராகிய யான், அதனைச் சுருக்கமாகத் தொகுத்தளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இஸ்ரேல் நாட்டின் கல்விமுறை மிகவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் அரச, தனியார் என இரு வகையானவை உண்டு. இப் பாடசாலைகள் பல பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. பாலர் பாடசாலை(Kinder Garden School)

இப்பாடசாலை இரு பிரிவுகளாக உள்ளது.

1. 3, 4 வயதுடைய மாணவர்கள்
2. 5 வயதுடைய மாணவர்கள்

இப்பாடசாலைகள் இரண்டும் மு.ப 7.30க்கு ஆரம்பமாகி மு.ப.11.30க்கு முடிவடையும் சுமார் 15 மாணவர்கள் ஒரு வகுப்பறையில் இருப்பர். அநேகமான பாடசாலைகளில் அவ் வகுப்பு ஆசிரியரே, அதிபராகவும் கடமையாற்றுகிறார். இவ் வகுப்புக்களில் பிள்ளைகள் வாழ்க்கையுடன் இணைந்த செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். ஒன்றுக்கு ஒன்று தொடர்பு, நிகழ்தகவுகளில் ஆரம்பச் செயற்பாடு, வங்கி, சந்தை, பண்டமாற்று, ஒட்டுச்சித்திரம், இணைத்தல் பிரதிபட ஆக்குதல், வலைப்பந்து, கராட்டி விளையாட்டுக்களில் ஆரம்பநிலை விளையாட்டு, வட்டங்களினூடு எறிதல் போன்ற கற்பித்தல் சாதன செயற்பாடுகளும், விளையாட்டு மூலம் கணித எண்ணக் கருக்களை அறிமுகப்படுத்துவதுடன் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

சகல அம்சங்களையுடைய வீடு, கணணி அறை, சங்கீத சித்திர அறை, காட்சி அறை என்பவற்றின் மாதிரிகள், புள்ளிவிபரங்கள் அடங்கிய பட்டியல், விளையாட்டுத்திடல்கள், ஆசிரியர்கள், ஆடல்பாடல் மூலமும், போலி நாணயங்களால் வங்கிச் சந்தை செயற்பாடுகள் சிறப்பாக அமைந்துள்ளது. வகுப்பறைக்கு வெளியே செயன்முறை அறிவு வழங்குவது சிறப்பான அம்சமாகும்.

2. ஆரம்ப பாடசாலை(Pre - School)

வகுப்பு 1 முதல் வகுப்பு 6 வரையான பாடசாலைகள்

வகுப்பு 1 இல் 6 வயது மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். 3. கனிஷ்ட உயர்நிலைப் பர்டசாலை(Unior High School)

வகுப்பு 7 முதல் வகுப்பு 9 வரையான பாடசாலைகள்

4. சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலை(Senior High School)

வகுப்பு 10 முதல் வகுப்பு 12 வரையும், சில பாடசாலைகளில் வகுப்பு 10 முதல் வகுப்பு 14 வரையும் உண்டு.

இப்பாடசாலைகள் மு.ப 7.30க்கு ஆரம்பமாகி, பி.ப 3.30க்கு முடிவடையும். ஒவ்வொரு வகுப்புக்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி, கணனி, ஒலிபெருக்கி என்பன உண்டு.

ஒவ்வொரு பாடசாலையிலும் மூலவள நிலையம் நூல் நிலையம் உண்டு. நேரந்தவறாமை, மிகவும் கண்ணியமாக பேணப்படுகின்றது. ஒவ்வொரு பாடவேளையும் முடிய, 5 நிமிட இடைவேளை உண்டு.

எல்லாப்பாடங்களும் கற்பித்தல் உபகரணங்களுடனும், செய்முறையுடனுமே கற்பிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பாடங்கட்கும் தலைப்புகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாணவனும் அதில் ஆய்வு (Project) செய்யவேண்டும். நூல் நிலையத்தை அனைத்து மாணவர்களும் பயன்படுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடும் உண்டு. தொடர்பாடல் (Communication), விளம்பரப்படுத்தல் (Advertisements), என்பன விசாலமாக்கப்பட்டுள்ளது. விளம்பரப்பலகை, சுவரெட்டி, அட்டைச்சித்திரம், குழுச்செயற்பாடு, கணனிகள், இஸ்ரேலின் தேசியக்கொடி, நாட்டின் படம் (Isreal Map), என்பன வகுப்பறைகளிலும், மனித நிலையங்களிலும் காணப்படுகின்றது.

தரம் 10,11,12 வகுப்புக்களில் பொதுப்பரீட்சைக்கு(Metriculation Exam - Grade 12) Points system ஆரம்பிக்கப்படுகிறது. தரம் 12 இல் Metriculation Test குறைந்தது. 20 Points எடுத்தால் மட்டுமே பல்கலைகக்ழக அனுமதி அன்றி தொழில்நுட்பக் கல்லூரி அனுமதி கிடைக்கும். பொதுப்பரீட்சைக்கு பாடசாலையில் 50% புள்ளிகளும், பொதுப்பரீட்சையில் 50% புள்ளிகளும் அவசியம்.

சோலார் அமைப்புக்கள் (Solar) சிறப்பான தொன்றாகும். சூரிய சக்தியை சோலார் தட்டுக்களில் சேமித்து, பௌதீகவியல், பிரயோக கணித செயன்முறைகளை நிஜமாகச் செய்து காட்டினர். உ-ம் ஒலியின் அலை வடிவம் (நெடுக்கலை, குறுக்கலை) இச்சக்தியைப் பயன்படுத்தி பல இயந்திரங்கள் இயக்கப்படுகின்றன.

அடைவு குறைந்த மாணவர்களை (Slow Learners) இனங்கண்டு, மேலதிக வகுப்புக்கள் நடாத்துகின்றனர். விசேடமாகக் 'கணிதம்' முக்கிய பாடமாக்கப்பட்டுள்ளது. கணித அடைவு குறைந்தவர்கள் தமது சிநேகிதர்கள் மூலமாகவும், பாடசாலையில் மேலதிக வகுப்புகளை ஆசிரியர்கள் வேறு ஆளணி மூலம் ஒழுங்குபடுத்தி அடைவு மட்டத்தை மேம்படுத்துகின்றனர். வாரத்தில் 6 நாட்கள் பாடசாலை நாட்களாகும். (சனி - விடுமுறை நாள் சபாத்)

5. வெகுமதி அளிக்கும் பாடசாலை (Gifted School)

எல்லா வயதுப்பிரிவு மாணவர்கட்கும், அவர்களின் விசேட அறிவுத்திறனை வளர்க்குமுகமாக, இவ்விசேட பாடசாலை அமைந்துள்ளது. ஒவ்வொரு மாணவரினதும் விருப்பமான அறிவுத்துறை எதுவென ஆரம்ப வகுப்பில் இனங்கண்டு, அத்திறனை மட்டும் வளர்க்கும் நிலையமாகும்.
உ-ம் ஆக, 6ம் வகுப்பில் ஒரு மாணவன் விமான ஓட்டி (Pilot)யாக வேண்டும் என்ற இலட்சிய அறிவு தென்பட்டால், அவ் அறிவை இப்பாடசாலை வழங்கும். பாடசாலை நாட்களில் இப்பாடசலைக்கு சமூகமளிக்க வேண்டும்.

6. தொழில்நுட்ப பாடசாலை (Professional School)

வகுப்பு 12இல் சித்தியெய்திய மாணவர்கள் கட்டாய இராணுவப் பயிற்சியை முடித்த பின்னர் தமது Points க்கேற்றவாறு தொழிற்றகைமக்காக கல்வியை மேற்கொள்ளும் பாடசாலையாகும்.

## கல்வி, நிர்வாக, பொது விடயங்கள்

1. அரச, தனியார் பாடசாலைக்கு, சம்பளம், கட்டிடச் செலவுகளை அரசே வழங்குகின்றது.

2. பாடசாலைகளின் நாணயக்கயிறு பெற்றோர்களே. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள் என்ற எந்த அமைப்புக்களும் இல்லை. 2 மாதங்களுக்கொருமுறை பெற்றோரை அழைத்து கூட்டத்தில் பெற்றோர் முன்வைக்கும் ஆக்கபூர்வமான கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி, சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

3. பாட ஆசிரியர்கள் ஒவ்வொருவரும், தத்தமது பாடத்தில் தனித்தனியான மாணவர் வரவு பதிவு, பாடப்பதிவு, மாணவர் குறைந்த கூடிய அடைவுத்திறன்கள் பதிவுகளையும், பரீட்சைப் புள்ளிகளைக் கொண்ட முன்னேற்ற அறிக்கைகளையும் பயன்படுத்துகின்றனர்.

4. புள்ளித் தரங்களுக்கேற்ப மாணவர்கள் வகுப்புக்களில் தரம் பிரிக்கப்பட்டு, குறைந்த புள்ளிகளைக் கொண்ட மாணவர்கட்கு, சிறப்பாகக் கடமையாற்றும் (Best Teachers) ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்படுவர்.

5. ஒரு மாணவன் ஆசிரியரைக் கேள்வி கேட்கும் பட்சத்தில் மற்றைய மாணவன் வினாத் தொடுக்க தேவை இருந்தால், கையை உயர்த்தி சைகை காட்டிவிட்டு அமருவார். ஆசிரியர் முதல் மாணவனின் பிரச்சினை விடுவித்த பின்னர், மற்றைய மாணவனை அணுகுவார்.

6. மாணவர்களை அன்பாகவும் ஆதரவாகவும் சிரித்த முகத்துடன் அரவணைத்து Very Good, O-K சொற்களைப் பாவிக்கின்ற மாணவர்-ஆசிரியர் உறவு மிகவும் நெருக்கமாக உள்ளது. நகர, கிராமப்புற பாடசாலைகளில் ஏற்றத் தாழ்வு எனப்பாகுபாடு இல்லை. எல்லாப்பாடசாலைகளும் ஒரே மாதிரியான கட்டுக்கோப்புக்களையும் வளங்களையும் கொண்டுள்ளன.

7. நாட்டுப்பற்று சகலருக்கும் அவசியம் என்ற நிலையில் 18 வயதில் ஆண்கள் அனைவரும் கட்டாய இராணுவப் பயிற்சி 18வயதில் பெண்கள் திருமணமாகினால் அவசியமில்லை. 18 வயதில் திருமணமாகாத பெண்கள், இராணுவப் பயிற்சியை விரும்பாவிடில், அவசியம். National Social Service இல் 3 வருட பயிற்சியை மேற்கொள்ளவேண்டும்.

8. முகாமைத்துவக் குழுக்கள், பாட இணைப்பாளர்கள், பாடப் பொறுப்பாசிரியர் குழுக்களை தனித்தனியே அழைத்து அதிபர் கூட்டங்களை நடாத்தி, பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டு பொறுப்பானவர்களிடம் ஒப்படைத்துக் கட்டியெழுப்புவர்.

9. ஆசிரியர் பயிற்சி நிலையங்களில், வாரத்திற்கு 100 ஆசிரியர்கள் வீதம், ஆசிரியர்கட்கு சுழற்சி முறையில் பயிற்சிகள், கருத்தரங்குகள் வழங்கப்படுகிறது. தங்குமிட, போக்குவரத்து, உணவு வசதிகளும் வழங்கப்படும்.

10. ஒரு வகுப்பறையில் இரண்டு மொழிகளில் மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பாடவேளையும் ஒரு அலகினை, அவ்வவ் மொழிகளில் தேர்ச்சி பெற்ற இரு பாட ஆசிரியர்கள் ஒரு நேரத்திற் கற்பித்தல் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால் மொழிப் பாகுபாட்டிற்கு இடமில்லை. தரையிலிருந்து கல்வி கற்கும் நிலையும் அங்கு காணப்படுகின்றது.

11. உணவுப் பொருட்களை சிறிய அளவில் எடுத்து அவற்றினை ருசி பார்த்துவிட்டு தேவையெனில் மீண்டும் அவ்வுணவினைத் தேவையான அளவு எடுத்து உண்ணலாம். தேவைக்கேற்றதை மிஞ்சி எடுத்து அதனை வீணாக்குதல் அவர்களுக்குப் பிடிக்காததொன்றாகும். சுருக்கக்கூறின் இஸ்ரேலியரின் அதிஉன்னத பண்பு, "எதனையும் வீணாக்குவதில்லை" ஆகும்.

12. இஸ்ரேலில் மழை, கிணற்றுநீர் என நீர் வளம் எதுவும் இல்லை. நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, ஜோர்டான் நதியிலிருந்து குழாய் மூலம் நீரினை மேற்கொண்டு வந்து அதனை நன்னீராக்கி மீண்டும் குழாய் மூலம் நீரைப் பெற்று தமது அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். பின்னர் அன்றாடம் கழிவு நீரைச் சேகரித்து மீண்டும் இரசாயனப் பொருட்களால் நன்னீராக்கி, அந்நீரை விவசாயத்துறைக்குப் பயன்படுத்துகின்றார்கள்.

கிராமமொன்றில் அதிகூடிய கழிவுப் பொருளாக மூங்கில் துண்டுகள் இருந்தமையால் களிமண்ணாலான வீடு ஒன்றை அமைத்து அவ் வீட்டின் கூரை அம் மூங்கில் துண்டுகளால் வேயப்பட்டு வீடு ஒன்று அமைக்கப்படுகிறது.

இவ்வாறு எச்செயற்பாடும் "மீள்சுழற்சி" முறைக்கு உட்படுத்தப்படுகின்றது.

இஸ்ரேல் நாடானது இயற்கையில் பாலைவனமான ஓர் நாடாகும். இஸ்ரேலியர்கள் தமது சொந்த முயற்சியாலும் ஒற்றுமையாலும் (இன, மத, மொழி வேறுபாடு இல்லை) மீள்சுழற்சி, வீணாக்குதலின்மை போன்ற நற்குணங்களாலும் அந்நாட்டை ஓர் சோலைவனமாக மாற்றி நாடு தன்னிறைவைப் பெற்று வருகின்றது. நாட்டின் கல்வியில் அதி உச்சமுன்னேற்றம், நாட்டின் உன்னத அபிவிருத்தி என்பன அவர்களின் சுயமுயற்சியே ஆகும்.

இவ்வாறு நாமும், நமது நாட்டின் வளத்தை, வளமாகப் பயன்படுத்தினால், நாமும் அவர்களைப் போல் நன்நிலைக்கு வரலாம் என்பது எனது எதிர்பார்ப்பாகும். அந்நாட்டில் கல்வி முறை எமது நாட்டிக்குப் பொருத்தமாக அமையும் என்பது எனது பெரு விருட்சமான கருதுகோளாகும்.


**✷ இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.**



மூத்த முன்னாள் ஆசிரியை செல்வி.செல்லையா
அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள்




கல்லூரி 2002ம் ஆண்டு பரிசளிப்பு நிகழ்வில்
அதிபருடன் விருந்தினர்கள்



இஸ்ரேல் நாட்டு கல்விச் சுற்றுலாவில் பாலர்பாடசாலை
சிறார்களுடன் கல்லூரிஆசிரியை செல்வி.துளசி
மயில்வாகனம் அவர்கள்

# மலரும் நினைவுகள்

திருமதி.இரஞ்சிதமலர் அருளானந்தம் பழைய மாணவி (முன்னாள் கல்லூரி நூலகர், ஆசிரியர்)

வரலாற்றுப் புகழ்பூத்த கிறிஸ்தவ கல்லூரியில் எனது வாழ்வு மாணவியாக, நூலகராக, ஆசிரியராக மலர்ந்தது. 1970-1977 ஏப்ரல் வரை மாணவியாகவும், 1986-1990வரை நூலகராகவும், 1990-1992 வரை ஆசிரியராகவும் இக்கல்லூரியோடு இணைந்த காலங்கள் என்றும் பசுமைபெறும். எனது கல்வியும், எனது தொழிலும் கல்லூரி அன்னையின் கொடையென்றே பெருமைப்படுகின்றேன்.

என்னை இவ்வுலகிற்கு ஈன்றெடுத்து, பாலூட்டிச் சீராட்டி வளர்த்த அன்னையையும், உலகை அறியவும், வாழ்வை வழிப்படுத்தவும் வளமூட்டி, உரம் தந்த கல்லூரி அன்னையையும் நினைக்குந்தோறும் கடந்து சென்ற காலத்தின் சுவடுகள் என் நினைவில் என்றும் மலருகின்றன.நான் கல்வி கற்ற காலத்து அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா அலுவலர்களில் என் மனதில் பதிந்தவர்களை நன்றியுடன் நினைக்கின்றேன். மேலும் நான் பணிபுரிந்த காலத்து அதிபர், ஆசிரியர்களையும் திரும்பிப் பார்க்கின்றேன் அவ்வகையில் இலங்கையின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் அமரர் ஈ.கே.சண்முகநாதன், எஸ்.சிவசுப்பிரமணியம், எம்.கார்த்திகேயன் போன்றோரை மறக்கமுடியாது. மேலும் திரு.எஸ்.கந்தசாமி செயல்திறன்மிக்க அதிபர் விளையாட்டுத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவரது காலத்திலே செல்லையா ஞாபகார்த்த மண்டபம், விஞ்ஞான ஆய்வுகூடம் போன்றவை நிறைவு பெற்றன.

திரு.சி.சிவநேசனும் மிகுந்த கலை ஆர்வம் மிக்கவர். நாடகங்களை நெறிப்படுத்தி எம்மைப் பரிசளிப்பு விழாக்களில் பங்குகொள்ளச் செய்தவர். உயர்தர வகுப்பு மாணவியர் சேலை கட்டும் பழக்கத்தை விட்டுச் சீருடை (கவுண்) அணிவதற்குக் கோரியபோது புன்முறுவலுடன் ஏற்று நடைமுறைப் படுத்தியவர். இவரது காலத்தில் 125வது நினைவு மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்கான நாள் அத்திவாரம் இடுதலில் மாணவத் தலைவியாக நானும் பங்கு கொண்டேன். இன்று இம்மண்டபத்தின் அமைப்பைப் பார்த்துப் பூரித்துநிற்கின்றேன்.

திரு.பூ.க.இராசரத்தினம் உபஅதிபராக இருந்து உயர்தர வகுப்பிலே ஆங்கிலத்தை அழகுறக் கற்பித்தார். காலைக்கூட்டத்தின்போது எப்போதும் ஒரு பழமொழியை அல்லது ஒரு அறிஞரது கூற்றை ஆங்கிலத்திலே கூறி அதை விளக்குவார். அவரது சேவைக் காலத்திலேயே நான் நூலகர் பணியினை ஏற்றேன். திருமதி.பி.அருள்ராஜா உப அதிபராக, அதிபராக இருந்து எம்மையெல்லாம் சிறந்த முறையில் வழிகாட்டியவர். வழிகாட்டிகளின் (பெண் சாரணீயம்) பொறுப்பாசிரியராக இருந்தவர். தனது சேவை ஓய்வின்போது என்னை அப்பொறுப்புக்குரியவராக்கினார்.

ஆசிரியர்களின் வரிசையில் பலர், அவர்களில் எனது நினைவில் என்றும் அழியா இடம்பெற்றவர்களையே இங்கு நினைவுறுத்துகிறேன். என் முதற் புவியியல் ஆசான் வீ.சோமசுந்தரம். முகத்திலே கோபத்தை என்றுமே நாம் கண்டதில்லை. திரு.தா.சிவசம்பு கண்டிப்பு மிக்கவர். புவியியலைக்கற்பித்தவர் திருமதி.ச.கனகரத்தினம் (செல்வி.ச.விநாசித்தம்பி அறிமுகம்) புவியியலோடு உயர்தர தமிழை சுவையும் செம்மையும் பெற ஆணித்தரமாக கருத்துக்களைக் கூறிக் கற்பித்தவர். எனது தமிழ்ப்பாட அதிவிஷேட சித்தியை அவருக்கே அர்ப்பணிக்கின்றேன். இவரது மென்மையான, முன்மாதிரியாக, தாய்மைக் குணங்களை இன்றைய எனது மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றேன்.

தமிழ்ப்பாட ஆசான் வரிசையில் ரீ.டானியல் என்னை கௌந்தி அடிகளாக்கி இலக்கியச் சுவையைத் தோற்றுவித்தார். ஆசான் எஸ். செல்வரத்தினம் பொருளியல், அரசியல் கற்பித்தவர். அதிகம் பேசார், அதிகம் சிரிக்கார், ஆனால் ஆழமாக அவதானித்துக் கொள்வார். ஆளோ உயரம் கூடியவர். தனக்குரிய பணிகளைத் திருப்தியாகச் செய்தவர்.

மற்றும் உயர்தரப் புவியியல் கற்பித்த திரு.எஸ்.நம்பியாரூரன், திரு.நடராஜலிங்கம், திரு.கே.எஸ்.நடராஜா, செல்வி.ந.பாக்கியம், திருமதி.ஜி.என்.சற்குணசிங்கம் போன்றோர் எம்மோடு தாமும் மாணவராகி, சுற்றுலா சென்ற வேளையில் மகிழ்ந்த நாட்கள் இன்றும் நினைவிற்கு வருகின்றது. கட்டுப்பாடு, ஒழுக்கம் பேணி ஆங்கிலம் கற்பித்த திருமதி.செ.செல்லையா, திருமதி.ரீ.இரத்தினாதிக்கம் இவர்களோடு ஜனாப் ஹரீம், அமரர் சகாதேவன், திரு.பீ.கந்தையா போன்றோரும் என்னால் என்றுமே மறக்க முடியாத ஆசிரியத் தெய்வங்கள்.

கல்லூரியின் எழுதுவினைஞர் பணியில் இருந்த திருமதி தவபுத்திரி யேசுதாசன் எமது மூத்த சகோதரியே, எமது நூலக வாசிப்புப் பழக்கத்துக்கும் உறுதுணையாக இருந்தவர். பாடசாலைவிட்டு விலகிய பின்பும் ''அக்கா''வின் அன்பு எம்போன்றோருடன் நிலைத்துள்ளது. திரு.தம்பையா, திரு.அண்ணாமலை, திரு.பற்குணசிவசோதி, திரு.சண்முகம் ஆகியோரும் மாணவரோடு நல்லுறவு பேணி வளர்த்த கல்விசாரா அலுவலர்களாவார்கள். இந்திய இராணுவ வருகையினால் ஏற்பட்ட இடப்பெயர்வில் அகால மரணமான தம்பையா அண்ணையை நானும் எனது குடும்பத்தினரும் வானிலே எடுத்து சென்று அச்சுவேலி ஆஸ்பத்திரியில் ஒப்படைத்த துன்ப நிகழ்வும், அச்சூழலும் இன்றும் என்னை உறுத்துகின்றது. கல்லூரி மாணவர் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்த திருமதி தனம் அக்கா, செல்வி கிளி அக்கா, செல்வி நேசம் அக்கா போன்றோரும் இன்றும் என் நினைவில் தடம்பதிக்கின்றனர்.

பல சுவையான நினைவுகளும், பிரிவுத் துன்பங்களும், துயர நினைவுகளும் என் நினைவில் மலருகின்றபோது, அவற்றை எழுத்தில் வடிக்கையில் நீளும்............ இன்றைய அதிபரின் "சுருக்கம்" என்ற எல்லை என்னைத் தடுக்கின்றது. எனது கல்லூரி அன்னையின் நினைவுகள் என்றும் நித்தியமே.

# எனது நினைவில் விளையாட்டுத்துறை

திரு.இ.இராசதுரை பழைய மாணவன்

வாழ்க்கையை ஓர் நாடகமாகக் கருதினார் ஒரு பெரியார். என்னைப்பொறுத்தளவில் இன்றும் நான் எனது வாழ்க்கையை ஓர் விளையாட்டாகவே கருதுகின்றேன். விளையாடுதல் ஓர் சந்தோஷமான செயலாகவே யாவராலும் கருதப்படுகின்றதல்லவா! விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம். பங்கேற்பதே பெருமையாகும். இதனால் எனது வாழ்க்கை மகிழ்ச்சியாகவே ஓடிக்கொண்டிருக்கின்றது என்பதில் நான் திருப்திப்படுகின்றேன்.

1961ம் ஆண்டில் வகுப்பு 6ல் தங்கள் பாடசாலையில் அனுமதி பெற்றேன். (மறைந்த அதிபர் நவரட்ணராசா அவர்களின் காலம்) அன்றுமுதல் 100 மீற்றர், 200 மீற்றர் நீளம்பாய்தல், தத்தி மிதித்துப் பாய்தலுடன் 1500 மீற்றர் ஆகிய தடகள ஓட்ட விளையாட்டுக்களில் ஆர்வமாக இருந்தேன். யாழ் மாவட்டத்தில் 100 மீற்றர், 200 மீற்றர் ஆகியவற்றில் 1962ம் ஆண்டு முதல் 1969 வரையில் முன்னணி வீரர் வரிசையில் நின்றதனால் 1967ம் ஆண்டு 68, 69 களில் அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போட்டியில் கொழும்பில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. Public Schools Athletic) விளையாட்டின் ஆர்வம் ஆருயிர் நண்பர்களினது போட்டி மனப்பான்மையினால் பல மனஸ்தாபங்களையும் சந்தித்தேன். எனினும், எனது விளையாட்டு மனப்பான்மை (Sportive Mind) மனஸ்தாபங்கள் விளையாட்டுப் போட்டி நிறைவுற்ற அடுத்த கணமே எல்லாம் மறைந்து விடுகின்றது.

எனது அரச சேவையில் மட்டுமல்ல என்னுடன் உள்ள சகல நண்பர்களையும் இதே போலவே பேணுவதால் எமது நட்பு மேன்மேலும் வளர்ந்து கொண்டே செல்கின்றது. எனது பாடசாலையில் நான் 'விஜய' இல்லத்தில் சேர்க்கப்பட்டேன் அப்போது திருவாளர்.எஸ்.பொன்னுத்துரை (பி.எஸ்.சி. பட்டதாரி கணிதம், இரசாயனவியல் ஆசிரியர்) அவர்களுடன் திரு.க.கந்தையா (அத்தியடி) ஆசிரியரும் இல்ல ஆசிரியர்களாக அரும்பணி புரிந்தார்கள். போட்டி மனப்பான்மை காரணமாக 1968, 1969ல் 1500 மீற்றர் ஓட்டப்போட்டியிலும் பங்கேற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதனைச் சவாலாக ஏற்று 1ம், 2ம் இடங்களை எமது இல்லமே பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு அதில் வெற்றியும் கண்டேன். இதற்காக திரு.பி.ஆறுமுகம் என்னும் சகமாணவனைப் பயிற்றுவித்து போட்டியின் இலக்கினை அடைந்தேன். இறைவனின் துணையுடனும், வாழ்வில் விடாமுயற்சியுடனும் சாதிக்க முடியாதது ஒன்றில்லை என்பதனை உணர எமது பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் உறுதுணையாக இருந்தன. இதற்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் தற்போதைய அதிபரும் எனது சக வகுப்பு நண்பருமாகிய திரு.எஸ்.முத்துக்குமாரசுவாமியின் பங்கு அளப்பரியது. தடகள விளையாட்டில் மட்டுமல்ல பாடசாலையின் கூடைப்பந்தாட்டம், ஹொக்கி, உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், (Over Game & Set Up Game) பூப்பந்தாட்டம் (Badminton) உடற்பயிற்சிப்போட்டிகள் போன்ற குழுநிலை ஆட்டங்களிலும் முக்கிய பங்காற்றி யாழ் மாவட்டப் பாடசாலை அணிக்காகக் கூடைப்பந்தாட்டம் (Basket Ball), ஹொக்கி ( Hockey) ஆகியவற்றிற்குத் தெரிவு செய்யப்பட்டு 67, 68, 69 ல் விளையாடிப் பாடசாலைக்குப் பெருமையைச் சேர்த்தேன். இதற்காக எனக்கு 1967, 68ல் இலச்சினைச் சின்னம் வழங்கப்பட்டது. அத்துடன் எனக்கு சகலதுறை வீரர்களுக்கான இலச்சினைச் சின்னமும் 1969ல் வழங்கப்பட்டது. இதனால் எனது வாழ்வில் இன்றும் சுறுசுறுப்பாகவும், மனநம்பிக்கையுடனும் சகல அலுவல்களையும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. பாடசாலைக்காலங்களில் நான் கழகங்களின் சார்பிலும் போட்டியிட்டு வயதுக் கட்டுப்பாடற்ற போட்டிகள் பலவற்றிலும் பங்கேற்றுச் சாதனைகள் படைத்ததற்குப் 'பாடசாலையின் ஊக்குவிப்பே காரணமாக அமைந்தது.

எமது பாடசாலை என்னை இவ்வாறு வளர்த்ததனால் நான் அவிசாவளை, திருகோணமலை மாவட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகளில் கழகங்களுக்காகப் பங்கேற்று வெற்றி பெற்றதுடன், திருமலையில் கழகங்களுக்காகக் கூடைப்பந்தாட்டம், ஹொக்கி ஆகியவற்றினையும் விளையாடக்கூடியதான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித்தந்தது.

ஆதலினால் விளையாட்டுத்துறை எப்போதும் எமது வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. இத்தருணத்தில் எனக்கு விளையாட்டுக்களைப் பயிற்றுவித்த திரு.ஏ.ஆர்.இராசையா (பிஎஸ்சி), எஸ்.சோமசுந்தரம் (பீஏ), கே.கதிர்காமநாதன்(Physical Trained), எஸ். செல்வரட்ணம்( Dip in Education) ஆகிய ஆசிரியர்களின் பெயர்கள் எனக்குப் பெருமையைச் சேர்க்கின்றன என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆதலினால் சகல மாணவர்களும் கண்டிப்பாக பாடசாலையின் விளையாட்டுக்களில் பங்கேற்பதில் மூலம் வாழ்வில் முன்னேற முடியும் என்பதில் நம்பிக்கை உடையவர்களாக இருப்போம்.

# யாழ்ப்பாணத்தின் தோற்றமும் கோப்பாய்க் கோட்டையும்

க.இ.குமாரசாமி (பழைய மாணவர்)

பூர்வ காலத்தில் இலங்கையின் தென்பால் இயக்கரும், வடபால் நாகரும் வசித்தனர். இயக்கர் சிவ வழிபாடுடையர். இயக்க அரசன் இராணவன் ஸ்தாபித்த கோணேஸ்வரம் கிழக்கே திருகோணமலையிலும், மற்றும் தெற்கில் சந்திரசேகரம், மேற்கில் முனீஸ்வரம், வடக்கில் நகுலேஸ்வரம் என்பன இலங்கையின் நான்கு திசைகளிலும் பிரதான சிவ வழிபாட்டிடங்களாய் இன்றும் உள்ளன. நாகர் நாகவழிபாடுடையவராய் இருந்தனர். இன்றும் யாழ்ப்பாணத்தில் நாகபூசனி, நாகம்மாள், நாகதம்பிரான் ஆலயங்கள் பலவும் வழிபாட்டிடங்களாகவுண்டு. எமது கோப்பாயிலும் நாக வழிபாடு நடந்த மரமடர் சோலைகளின் நடுவே பலானையில் கி.பி. 115-135 ஆண்ட கஜபாகு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட கண்ணகி வழிபாடு இன்றுமுண்டு. உயரிய் கூழாவடியில் நாகவழிபாடு இன்றும் நடைபெறுகின்றது. இங்கு வந்து குடியேறிய சோழ அரச தம்பதிகளின் மகன் வாலசிங்கன் ஆட்சிக் காலத்தில் தமிழையும், சைவத்தையும் நன்கு வளர்த்துப் பெரு வள்ளலாகவும் விளங்கினான். இதனையறிந்த யாழ் வாசிப்பதில் வல்லவனாக விளங்கிய கவி வீரராகவன் எனும் சோழியன் இவ்விடம் வந்து புகழாரமாகப் பல பாக்களைப்பாடி, அதனை யாழிலும் வாசித்தான். அரசன் அவனை மெச்சிப் பல பரிசில்களை அளித்ததோடு அவன் விரும்பியபடி இந் நாக துவீபத்தின் தென்பாலுள்ள மணற்றி எனும் நிலத்தைக் கொடுத்தான். கவி வீரராகவன் தன்னாடு சென்று பரிசினர் பலரையும் அழைத்து வந்து அவ்விடம் குடியமர்ந்தான். யாழ் வாசித்துப் பாணன் பரிசாகப் பெற்றமையால் யாழ்ப்பாணம் என்ற பெயரும் வந்தது.

யாழ்பாடி வீரராகவன் சந்ததியில்லாது காலஞ்சென்ற பின் கூழங்கையாரியன் என்பான் பாண்டி நாட்டினின்று ஆரியர் பலரையும் திரளாக அழைத்து இவ்விடம் வடபகுதியிலுள்ள பல பாகங்களிலும் குடியமர்த்தி, மத்தியில் ஓர் நகரினைக் கட்டி அரசாண்டான். குறித்த நகராகிய நல்லூரின் பாதுகாப்பிற்காகக் கோட்டையும் கட்டி அரசு செய்தான். ஆரியர் வருகையோடு, அவர்கள் வழிபட்ட சிவன், முருகன், விநாயகர், வைரவர் வழிபாடுகளும் தங்கள் தங்கள் குடியிருப்பு இடங்களில் நிறுவி வழிபட்டனர். தந்தைக்குப் பின் மகன் என்ற வகையில் 16ம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். மேலும், பாதுகாப்புக்காக கோப்பாய் சிங்கைபுரம், வன்னி முதலான இடங்களில் உபகோட்டைகளும் நிறுவி அரசாண்டனர். வியாபார நோக்கமாகப் போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்தபோது, கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்ற மூன்று அரசுகள் இருந்தன. கோட்டையை இலேசில் கைப்பற்றித் தமது சமயத்தையும், பாசையையும் வளர்த்தனர். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற 114 முறை போராடியும், முடியாது போகவே 1659ம் புரட்டாதி விஜயதசமி ஆயுத பூசை நடக்கும் போது, காக்கை வன்னியன் என்பான் துணைகொண்டு பின்பக்கமாகப் பண்ணையில் இறங்கிச் சங்கிலியனுக்கு இலேசில் விலங்கிட்டுச் சிறையிலடைத்தனர். சங்கிலி சுரங்க வழியாகத் தப்பிக் கோப்பாய்க் கோட்டைக்குச் சென்றபோது, பறங்கியர் பின் தொடர்வதறிந்து வன்னிக்கோட்டைக்கு ஓடும் வழியில் ஆனையிறவு என்ற ஒடுக்கமான பூசந்தியில் வைத்துப் பிடித்து விலங்கிட்டனர்.

யாழ் - பருத்தித்துறை வீதியில் தற்போது கோப்பாய்ச் சந்தி உள்ள இடத்தின் கிழக்குப் புறமாயுள்ள இடமே கோப்பாய்க் கோட்டையிடமாகும். தற்போது கோட்டை வளவு, கோட்டை வாய்க்கால், கோட்டைப்பனை எனும் பெயர்களால் அழைக்கப்படுவதும், நிலத்தை அகழும் போது எங்கணும் காணப்படும் செங்கற் குவியல்களும் இன்றும் தமிழரசின் கோப்பாய்க் கோட்டையை நினைவுபடுத்துகின்றன. நல்லூருக்கு யமுனா ஏரிபோல கோப்பாய்க் கோட்டைக்குரிய நீச்சல் தடாகம் குதியடிக்குளம் என அழைக்கப்படுகின்றது. கோட்டையிடிக்கும்போது கூடாரமடித்திருந்த இடம் 'வங்களாவடி' எனக் கூறப்படுகின்றது. குறித்த அதில் பொருத்தப்பட்டிருந்த "OLD CASTLE"

எனும் பெயர்ப்பலகையும் அண்மைக் காலத்திலேயே கோட்டையின் வீதியருகிலுள்ள கட்டிடமும், அகற்றப்பட்டது. அக்காலத்தில் மனிதவலு கொண்டு அகழப்பட்ட ஆழமான கிணற்றுக் கரைகளில் மக்கள் பாதுகாப்புக்காகவும், தொழில் கருதியும் கூட்டம்கூட்டமாக வசித்தனர். கிணற்றங் கரையோரங்களில் மரவடிகளில் கற்கள், சிறிய சூலங்களை மறைவாக வைத்து வழிபட்டனர். ஒல்லாந்தர் தங்கள் வருமானத்துக்குக் காணிவரியறவிடுவதற்கு குறிச்சிகள், காணிப் பெயர்கள் பதிவதற்குச் சிங்கள முதலிமாரை நியமித்தனர். அவர்கள் பல பெயர்களைத் தங்கள் மொழியிலேயே பதிந்தனர். அந்தப் பதிவுப் பெயர்களே இன்றும் நிலை கொண்டுள்ளன. எமது கிராமத்திலுள்ள கிளுவானை, அப்பிளானை, மாக்கம்பரை முதலிய குறிச்சிப் பெயர்களும், தலம்பத்தை, பத்தசகச்சி, மாணம், அம்பியவனை, நொந்தாளி, கொத்தம்மை, துவாக்கந்தை போன்ற காணிப்பெயர்கள் பலவும் கருத்து விளங்காத வகையில் இன்றும் உறுதியெழுதப்படுகின்றன. பன்மொழி வல்லுனரான சுவாமி ஞானப்பிரகாசர், கல்லடி வேலுப்பிள்ளை போன்ற அறிஞர்களால் ஒரு சில பெயர்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

கொவிபாய (சிங்களம்)
கொவி - வேளாளர்,
பாய - குடியிருப்பு

உந்துவத்தை -
உந்து - உழுந்து
வத்தை - தோட்டம்

சோனெழு -
சோன் - எருக்கலை
எழு - காடு

தலம்பத்தை -
தலம் - பனை
வத்தை - தோட்டம்

தியர்வத்தை -
தியர் - நல்லதண்ணீர்
வத்தை - தோட்டம்

1796 இல் வந்த ஆங்கிலேயர், தமது மொழி, சமயம் என்பவற்றை வளர்த்ததோடு, ஜனநாயக முறைப்படியல்லாத பல அடக்கு முறைச் சட்டங்களையும் நீக்கினர். ஆங்கிலப் பாடசாலைகள், தமதாலயங்கள் பலவும் நிறுவியதனோடு, சுதேசிகளின் நலன் கருதிச் சுயமொழிப் பாடசாலைகளையும், ஆங்காங்கே நிறுவினர். மேலும் 1833 இல் இலங்கை வந்த அமெரிக்க மெதடிஸ்த, புரொட்டஸ் தாந்து பாதிரிமார்கள், குடாநாட்டிலுள்ள பெரும் பிரிவுகளில் கோயிற்பற்றுக்கள் தோறும் நிலைகொண்டு, தேவாலயங்களையும், ஆங்கிலப் பாடசாலைகளையும், அயலில் சுயமொழிப் பாடசாலைகளையும் நிறுவினர். இந்த வகையில் கோப்பாய்க் கோயிற்பற்றில் C.M.S மிஷனறிமார் நிலைகொண்டு சென்மேரிஸ் தேவலாயம், அருகில் C.M.S ஆங்கிலப் பாடசாலை, ஆரம்ப தமிழ்ப் பாடசாலை என்பவற்றை நிறுவினர்.

இப்பாடசாலைகளே பின்பு ஒன்றிணைந்து யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியாக வளர்ந்தது. இக்கல்லூரியின் பழைய மாணவர் என்ற வகையில் கல்லூரி 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளை எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

★ **"வற்றிய குளத்தைப் பறவைகள் நாடி வருவது கிடையாது வாழ்க்கையில் வறுமை வந்திடும்போது உறவுகள் கிடையாது"**

★ **"பாதை தவறிய கால்கள் விரும்பிய ஊர்சென்று சேர்வதில்லை நல்ல பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவர் பேர் சொல்லி வாழ்வதில்லை"**

# இலங்கையின் பாடசாலை அமைப்பில் பரீட்சைகள், மற்றும் வகுப்புத்தர மாற்றங்கள்

(பொ.த.இராஜா – ஓய்வு பெற்ற உபஅதிபர்)

பண்டைய இலங்கையில் கல்வி முறையானது சமயஞ் சார்ந்ததாகவும், நல்லொழுக்க விழுமியங்களை வலியுறுத்துவதாகவும் விளங்கியது. இந்துப் பிராமண்ய குருகுலக் கல்வி முறையின் தொன்மையிலிருந்து திண்ணைப் பள்ளிக்கூட மரபு உருவானது. சிங்கள பௌத்த கல்விப் பாரம்பரியத்தில் குருவீடு, பன்சாலை, பிரிவேனா, மகாவிகாரை என்பன படிப்படியாக ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரை பங்களிப்புச் செய்தன. இஸ்லாமியப் பள்ளிவாசல்களும் சமயத்தினூடாகவும், அரபு மொழியினூடாகவும் இஸ்லாமியக் கல்வி மரபைப் பேணின. குடும்பத்திலிருந்து முறைசாராக் கல்வி பெறப்பட்டது. இந்நிலையில் ஆரம்ப இடைநிலைக் கல்வி வழங்கப்பட்ட போதிலும், அது வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. வகுப்புக்களோ தரவுகளோ அக்காலத்தில் நிர்ணயம் செய்யப்படவில்லை. வயதும் விடய அடக்கமும் கவனத்திற் கொள்ளப்பட்டது.

## ஐரோப்பியர் கால மாற்றங்கள் :-

பண்டைய கல்விச் சூழ்நிலை மாறிச் சமயக் குழுக்களே கல்வி வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டன. தேவாலயச் சூழல்களில் பாடசாலைகள் அமைக்கப் பெற்றுச் சமயக் கல்வி முக்கியத்துவமளிக்கப்பட்டது. ஆரம்பக் கல்வியில் வகுப்பு முறை பின்பற்றப்பட்டது. கட்டாயக் கல்வி ஏற்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஐந்தாம் வகுப்பு வரை செயற்பட்ட ஆரம்பப் பாடசாலைகளுடன், கொழும்பு அக்கடமியும், அதனுடன் தொடர்புபட்டதாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகமும் கல்வி வாய்ப்பை வழங்கின. கோல்புறூக்குழு, மோர்கன் குழு ஆகியவற்றின் சிபார்சுகளின் பின் ஆங்கிலக் கல்வியும் சுயமொழிக்கல்வியும் ஓருங்கே வளர்ந்தன. பொதுக்கற்பித்தல் திணைக்களம் ஏற்படுத்தப்பட்டது. இது 1912இல் இலங்கைக் கல்வித் திணைக்களமாயிற்று. கல்வி நிர்வாகத்தில் இலங்கையரின் ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. 1943 இல் கன்னங்கராக் குழுவின் சீர்திருத்தத்தின் பயனாகத் தாய்மொழிக்கல்வி, இலவசக் கல்வி, ஆங்கிலக் கல்வி, கட்டாயக் கல்வி, கிராமியக் கல்வி, சமயக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, அழகியற் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, பல்கலைக்கழக கல்வி என்பன பெருவிருத்தி பெற்றன. சுயமொழிக் கல்வியும் சுயமொழிப் பாடசாலைகளும் விருத்தி கண்டன. 1960 இல் பல்கலைக்கழக கலைப்பிரிவில் தாய்மொழி கல்வி கற்கும் நிலையம் ஏற்பட்டது.

1929இல் முதன்முறையாக ஆரம்ப பாடசாலைக்கு மேற்பட்ட பாடசாலை முறை ஒழுங்கமைக்கப் பட்டது. ஆங்கிலமொழி மூலத்தில்,

1. கனிஷ்ட உயர்நிலைப் பாடசாலையில் ஆரம்பப் பாடசாலை விடுகைத் தகுதிப் பத்திர வகுப்பு அல்லது அதற்குச் சமனான வகுப்பும்,

2. சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலையில் இலண்டன் மெற்றிக்குலேசன் வகுப்புவரை அல்லது விசேட அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி வரையிலும்,

3. கல்லூரிகளில் இலண்டன் மெற்றிக்குலேசனும் வேறு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகளும் இடம்பெற்றன.

### சுயமொழிகளில்

1. சுயமொழிக் கனிஷ்ட உயர்நிலையில் சுயமொழி விடுகைத் தராதரப் பத்திர வகுப்பு வரையும்.

2. சுயமொழிச் சிரேஷ்ட - உயர்நிலையில், உயர்நிலை விடுகைத் தகுதிப் பத்திர பரீட்சையுடன் சிங்களம், தமிழ், பாளி, வடமொழி இலக்கியத்தில் இரண்டு வருடப் பயிற்சி நெறியும் இடம்பெற்றன.

1920 இல் 5 - 8 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுடைய பள்ளிக்கூடங்களில் முதன்முதலாகப் பாலர் வகுப்புகள் அனுமதிக்கப்பட்டன. எட்டாம் வகுப்புப் பாடத்திட்டத்தில் மாற்றங்களும் செய்யப்பட்டன.

## சுதந்திரத்தின் பின் :

1951இன் திருத்தச் சட்டப்படி ஆரம்ப வகுப்புக்கு மேல் போதனா மொழி தமிழ், சிங்களமாக இருக்கலாம். முதல் ஐந்து வகுப்புகள் ஆரம்பக் கல்விக்கு உரியன. 9ம் வகுப்பில் பல்துறைப்படுத்தல் ஆரம்பமானது. 10ம் வகுப்பில் கல்விப் பொதுத்தகுதிப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்) நடாத்த வழி செய்யப்பட்டது. 11, 12 ஆம் வகுப்பு இறுதியில் இடம்பெறும் க.பொ.த. பரீட்சை உயர்நிலை, உயர்கல்வி நிலையங்களுக்குச் செல்வோருக்கான புகுமுகப் பரீட்சையாக விளங்கியது. ஆங்கிலப் பாடசாலைகள் 8ந் தரத்தினை முடிவெல்லையாகக் கொண்டு விடுகைச் சான்றிதழுக்குத் தோற்றக்கூடிய மாணவரைத் தயார் செய்தன. 1920 - 1951 காலப்பகுதியில் காணப்பட்ட பிரிவுகள்.

1. முதனிலை-முடிவெல்லை தரம் / வகுப்பு 5

2. கனிஷ்ட உயர்நிலை முடிவெல்லை தரம் / வகுப்பு 8

3. சிரேஷ்ட உயர்நிலையும் கல்லூரி நிலையும் 8க்கு மேல் 12

1967 ஆம் ஆண்டு வரை இருந்த வகுப்பு நிலை 1968 ஜனவரியில் மாற்றம் ஏற்பட்டது. 1ந் தரம் தொடக்கம் 7ந் தரம் வரை ஆரம்பப் பாடசாலைகள் எனவும், 8ந் தரமும் அதற்கு மேற்பட்டவையும், உயர்நிலைப் பாடசாலைகள் எனவும் இரு வகுதிகளாக்கப்பட்டன. 1928 இல் பாலர் வகுப்பு முதல் 8ந் தரம் வரை பாட அட்டவணை வேலைத்திட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து படிப்படியாகப் பாடத்திட்ட விரிவாக்கம் இடம் பெற்றது. 8ந் தரத்தின் இறுதியில் நடாத்தப்பட்ட பாடசாலை விடுகைச் சான்றிதழ்த் தேர்வுக்கு 1933 இல் கனிஷ்ட பாடசாலைச் சான்றிதழ் தேர்வு (J.S.L.C) என மறு பெயரிடப்பட்டது. சிங்கள, தமிழ் ஆரம்பப் பாடசாலைகளில் பாடசாலையை விட்டு நீங்குவோரின் ஆசிரியர் தொடக்கக் கூற்றிதழ்த் தேர்வானது சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ்த் தேர்வு என அழைக்கப்பட்டது. 8ந்தர இறுதியில் தெரிவுத் தேர்வு முறை நடாத்தப்பட்டுத் தரம் 9இல் புதிய கற்றல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

ஜே.எஸ்.சி. (ஆங்கிலம்) பரீட்சை 1941இல் நிறுத்தப்பட்டது. தமிழ் அல்லது சிங்களப்பரீட்சை 1943 வரை தொடர்ந்தது, 1933 இல் சிரேஷ்ட பாடசாலைத் தகுதிப் பத்திரப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் இலண்டன் மெற்றிக்குலேசன் பரீட்சை நிறுத்தப்பட்டது. 1947இல் சிங்களமும் தமிழும் கட்டாய பாடமாக்கப்பட்டன. இவற்றைத் தாய்மொழியாகக் கொள்ளாதோருக்குத் தரங்குறைந்த வினாத்தாளுக்குத் தோற்ற வாய்ப்பளிக்கப்பட்டது. 1951இல் வர்த்தக கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் கட்டாய பாடமாக்கப்பட்டது அல்லது 1949இல் ஒரே பாடத்திட்டத்துக்கமைய மும்மொழி வினாத்தாள் தயாரிக்கப்பட்டது. சி.பா.த.ப பரீட்சைக்குப் பதிலாக 1952 டிசெம்பரில் முதன்முதலாக க.பொ.த (சாதாரணநிலை) பரீட்சை நடாத்தப்பட்டது. ஒரே பாடத்திட்டத்தின் கீழ், வருடம் 2 முறை - டிசெம்பர், ஒகஸ்ட மாதங்களில் நடாத்தப்பட்டது. 1960இல் சி.பா.த.ப. பரீட்சை நிறுத்தப்பட்டது. பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் 4 பாடங்களில் ஏதாவது மும்மொழிகளில் ஒன்றில் சித்தி பெற்றவர்களுக்கு உயர்தரப் பாடசாலைத் தகுதிப் பத்திரம் (H.S.C) வழங்கப்பட்டது. 1964இல் இலங்கை கல்விப் பொதுதராதரப் பத்திரம் (உயர்தரம்) பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் H.S.C கைவிடப்பட்டது. S.S.C பரீட்சை G.C.E (O/L) என்றும் H.S.C பரீட்சை G.C.E (A/L) என்றும் 1960களில் படிப்படியாக மாற்றம் பெற்றது.

## தேசிய மொழி மூலம் நோக்கி :-

1965 டிசெம்பரில் முதன்முதலாக க.பொ.த (சா/த) பரீட்சையின் விஞ்ஞானப் பிரிவினர் தமிழ் அல்லது சிங்கள மொழி மூலத்தில் தோற்றும் வாய்ப்பு ஏற்படுத்தபபட்டு படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டுப் பின்பு க.பொ.த (உ/த) பரீட்சையையும் சுயமொழியில் எழுதும் வாய்ப்பும் உருவானது.

1972 ஆம் ஆண்டின் கல்விச்சீர்திருத்தம் வகுப்புத்தரத்தினை ஆண்டு என அழைக்கச் செய்தது. பொதுக்கல்வித் திட்டப் பாடவிதானங்களை மாற்றியமைத்தது. ஆரம்பக் கல்விக்குரிய ஆரம்ப வயதை ஐந்திலிருந்து ஆறாக உயர்த்தியது. இடைநிலைக்கல்வியை ஓராண்டால் குறைத்து 10ம் ஆண்டின் நிறைவில் தேசியக் கல்விச் சான்றிதழ் சாதாரண பரீட்சையை (N.C.G.E) 10 பாடங்களுடன் நடத்தியது. 12 ஆம் ஆண்டின் நிறைவில் தேசியக் கல்விச் சான்றிழ் உயர்நிலைப் பரீட்சையை (H.N.C.E) நடாத்தியது. அதன்பின் பல்கலைக்கழகம் புகமுன் ஆங்கிலம், தேசியமொழி உட்பட பயிற்சி பெற்று ஓராண்டை நிறைவேற்றவும் வேண்டியிருந்தது. ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் ஒன்றிணைந்த பாடத்திட்டம் அறிமுகமானது. எனினும் 1975, 1976 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் (H.N.C.E) பரீட்சை நடைபெற்றது. 1977ல் அரசியல் மாற்றங்களின் பின் கல்வி முறை மீண்டும் முன்னைய நிலைக்கு மாறியது.

1961ன் கல்வி வெள்ளையறிக்கையில் மீண்டும் க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) வகுப்பு முறைகள் தொடர்ந்தன. தொழில்நுட்ப, அழகியற் பாடங்களில் செயற்பாட்டு அம்சங்களிலும் அக்கறை செலுத்தப்பட்டது, 1997 இன் கல்வி மறுசீரமைப்புத்திட்டம், வகுப்புகளை மீண்டும் ஆண்டு என்பதற்குப் பதில் தரம் என மாற்றியமைத்தது. ஆரம்ப வகுப்புகளில் செயற்பாட்டு அறைகளுடன் கூடிய சீர்திருத்தங்களை முன்வைத்து, 2003 ல் ஐந்தாந்தரத்துடன் இலக்கு நிறைவேற நிர்ணயித்தது. க.பொ.த (சா/த) பரீட்சையில் 10 பாடங்களுக்கும், க.பொ.த (உ/த) பரீட்சையில் 3பாடங்களுக்கும் தோற்றும் முறை ஏற்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக அனுமதிக்காக உளச்சார்பு, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றுவது கட்டாயமாக்கப்பட்டது. கற்பித்தல் முறைகளிலும் தேர்வு முறைகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுத் தொடர் மதிப்பீட்டு முறையில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, ஒப்படைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கணிப்பீடுகள் வகுப்புத்தர மாற்றங்களை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆங்கிலக் கல்விக்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நவீன கல்வி முறை வரலாற்றில் பரீட்சை மட்டங்களும், பரீட்சைகளின் பெயர்களும் மாற்றப்பட்டுவந்துள்ளன. பரீட்சை மொழி மூலங்கள், பரீட்சை இலக்குகள் மாற்றமடைந்துள்ளன. வகுப்புத்தர மாற்றங்களில் கணிப்பீடுகள் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. கல்வித்துறை மாற்றங்கள், ஆட்சி மாற்றங்கள், அரசாங்க இலக்குகளில் மாற்றங்கள் என்பவற்றால் தீர்மானிக்கப்பட்டுள்ளன. கல்விச்சீர்திருத்தங்கள் கல்வி மாற்றங்களுக்கான கொள்கைப் பிரகடனங்கள் போலிருந்துள்ளன. தேசிய கல்வி முறை மாற்றங்கள் அரச கல்வி முறை மாற்றங்களே என்று கூறக்கூடிய வகையில் இலங்கையின் கல்வி வளர்ச்சி நிகழ்ந்து வந்துள்ளது. வரலாற்று மாற்றங்களுக்கேற்பவே கல்வித்துறையும் வளர்ச்சி கண்டு வருகின்றது என்பதையே சுதந்திரத்தின் பின்பும், முன்பும் காணப்படும் கல்விக் கொள்கைகள், வகுப்புத்தர மாற்றங்கள், பரீட்சை முறை மாற்றங்கள் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன எனலாம்.

- ✶ "ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது உயிரினும் ஓம்பப்படும்"
- ✶ "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கும் கொண்டாட்டம்"
- ✶ "போக விட்டுப் புறம் சொல்லித் திரியாதே"

# இலங்கையின் கல்வி வளர்ச்சி அன்று தொடக்கம் இன்று வரை

(எஸ்.சிவனேசராசன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியர்)

பண்டைய காலக் கல்வி பெருமளவுக்குச் சமயக் கல்வியாகவும், பாட ஏற்பாடு முற்றிலும் சமயத் தத்துவங்களைக் கருதியதாகவுமிருந்ததுடன், சமய நிறுவனங்களே கல்வியை வழங்கியும் வந்தன. உ-ம் மடாலயங்கள், திருச்சபைகள் போன்றவையே கல்வியை வழங்கின. சமயத் துறவிகளே கல்வியை வழங்கும் ஆசிரியர்களாகவுமிருந்தனர்.

இலங்கையில் உள்ளூர் சமய நிறுவனங்களே கல்வியை வழங்கி வந்தமையால் இந்து, பௌத்த சமய மரபுகளின் ஆதிக்கம் காணப்பட்டது. மதம் சார்ந்த நிலையங்களில் மதத்துறவிகளால் வானசாஸ்திரம், சோதிடம், இலக்கணம், தருக்கவியல் முதலியனவும் கற்பிக்கப்பட்டன. குரு - சீட முறையிலான கல்வியும், ஆலயப் பாடசாலைகள், திண்ணைப் பாடசாலைகளிலான கல்விமுறையும் காணப்பட்டது.

15ம் நூற்றாண்டின் முடிவில் நல்லூரில் தமிழிலக்கியக் கல்வி நிலையமொன்று அமைக்கப்பட்டது. அது பழைய தமிழிலக்கிய நூல்களைச் சேகரித்துப் பேணிப் பாதுகாத்தது. 1621ல் சங்கிலி மன்னனின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததுடன் உள்ளூர் சமய நிறுவனங்களின் கல்விப் பணியும் சரிவடைய நேரிட்டது.

## அந்நியர் ஆட்சியில் கல்வி வளர்ச்சி

ஐரோப்பியர் வருகையால் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பாரம்பரியமான கல்வி மரபுகளும் விழுமியங்களும் பெருவீழ்ச்சியடைந்தன. போர்த்துக்கேய ஆட்சியாளருடன் வந்த பல்வேறு சமய குருமார் கல்வியினூடாகத் தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்குடன் பாடசாலைகளை அமைத்துப் பாட ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் நேரடியாகக் கல்விப் பொறுப்பை ஏற்றபோதும், கிறிஸ்தவமத குருமார் தலைமையில் அமைக்கப்பெற்ற பாடசாலைச் சபை கிறிஸ்தவ சமயப் போதனை தொடர்பாக அதன் விளைவுகள் பற்றியே மேற்பார்வை செய்தது. கிறிஸ்தவ மதத்தவரே ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதுடன் மாணவருக்குக் கட்டாயக்கல்வி வலியுறுத்தப்பட்டது. மாணவர் பாடசாலைகளில் கட்டாய மதமாற்றத்துக்குள்ளானதால் உள்ளூர் சமய நிறுவனங்களின் கல்வி பெரிதும் வீழ்ச்சியுற்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆரம்ப காலம் முதல் ஆட்சியாளர் ஆதரவுடன் வந்த சமயக் குழுவினரே கல்வி முறையில் ஆதிக்கம் பெற்றனர். இதனால் சமயக்குழுப் பாடசாலை முறை ஒன்று வளர்ச்சி பெற்றது. 1830ல் கோல்புறூக் ஆணைக்குழுவினர் கல்விச் சீர்திருத்தம் பற்றிய தமது அறிக்கையில், "சுதேச குழுக்களால் கோயில்களிலும் மடாலயங்களிலும் கற்பிக்கப்படும் கல்வி கருத்திற் கொள்ளத் தக்கதன்று" என்று கருத்துத் தெரிவித்தனர். மேலும் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கன் சமயக்குழுவினர் ஆற்றிய கல்விப் பணிகளை இவர்கள் புகழ்ந்து, பல்வேறு வழிகளில் சமயக் குழுக்களின் கல்விப் பணிகளுக்கு ஊக்கம் அளித்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு மதகுருவாகிய மேலதிகாரியின் கீழ் இயங்கிய பாடசாலைகளுக்கு அரசாங்க உதவி நன்கொடை வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவரல்லாத பிள்ளைகளுக்கு அவர்களின் பெற்றோர் விரும்பாதவிடத்துக் கிறிஸ்தவ சமயம் போதிக்கக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. கோல்புறூக் குழுவினர் ஆங்கிலக் கல்வியை ஊக்குவித்ததால், ஆங்கிலம் தெரிந்த இலங்கையர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதுடன் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட பாடசாலைகள் அமைந்தன. ஆங்கிலத் தேர்ச்சியினூடாக அரச பதவிகள் பெறலாம் என்பதால் சுதேச மக்களும் ஆங்கிலமொழி மூலம் ஆர்வமுடன் கற்கத் தொடங்கினர்.

1867ல் மோகான் கல்விச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் சுயமொழிக் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் ஊக்கம் அளிக்கப்பட்டது. ஆரம்பக் கல்வி சுயமொழியில் வழங்கப்பட வேண்டும் என்று இக்குழு கருதிய போதும், கல்விப் பணியில் உள்ளூர் மதகுருமார் ஈடுபடுவதை அது ஊக்குவிக்கவில்லை.

## இலங்கையின் கல்வி வளர்ச்சியும் போதனா மொழியும் :—

1831இல் கோல்புறூக் குழுவினரின் விதப்புரைகளின் விளைவாக அரசாங்கம் அதிக ஊக்கத்துடன் ஆங்கிலப் பாடசாலைகளை

அமைத்து நன்கு ஆங்கிலம் தெரிந்த ஆசிரியர்களை நியமித்ததால், சுயமொழிப் பாடசாலைகளாக இருந்த அரசபாடசாலைகள் ஆங்கிலப் பாடசாலைகளாயின. அரசாங்க சேவைகளில் சேர்வதற்காகப் பலரும் ஆங்கிலக் கல்வியை நாடினர். ஆங்கிலம் அரசகரும மொழியாக்கப்பட்டதாலும் ஆங்கிலக்கல்வி அதிக செல்வாக்குப் பெற்றது. ஆங்கிலப் பாடசாலை முறையொன்று வளர்ச்சி பெற்றதுடன் இலங்கையரை ஆங்கிலேயரின் கலை, பண்பாட்டு விழுமியங்களுக்கு அடிமைப் படவும் வைத்தது. ஆங்கிலக் கல்விக்கான தேவை அதிகரிக்க, உதவி நன்கொடையும் அதிகரிக்கப்பட்டதால், சமயக் குழுவினர் பெரிய ஆங்கிலப் பாடசாலைகளை உருவாக்கினர். ஆயினும் சுதேச சமயக் குழுவினரும் சுயமொழிப் பாடசாலைகளை அமைத்துச் சிக்கனமாகவும் திறமையாகவும் சுயமொழிக்கல்வி வழங்கலாயினர். 1841ல் அமைக்கப்பட்ட மத்திய பாடசாலை ஆணைக்குழு சுயமொழிக் கல்வியையே விருத்தி செய்ய வேண்டும் என்று தீர்மானித்ததுடன் 1841 - 1847 காலப் பகுதியில் அக்குழுவினரால் சிங்கள, தமிழ்மொழிகள் மூலப்பாடசாலைகளும் கூடுதலாக ஆரம்பிக்கப்பட்டன.

1943ல் வெளியிடப்பட்ட விசேட கல்விக் குழுவின் அறிக்கையில் போதனாமொழியின் அடிப்படையில் இருவகையான கல்விமுறை நிலவியதால் சமூக அமைப்பிலும் ஆங்கிலம் கற்றவர், சுயமொழி கற்றவர் என்று இரு வேறுபட்ட வகுப்பினர் தோன்றியமையையும், ஆங்கிலம் கற்ற வகுப்பினர் சலுகை பெற்றவர்களாக இருந்தமையையும் குறைபாடுகளாகச் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. போதனாமொழி அடிப்படையில் ஆங்கில மொழிப் பாடசாலைகள், இருமொழிப் பாடசாலைகள், சுயமொழிப் பாடசாலைகள் என மூன்று வகைப் பாடசாலைகள் காணப்பட்டன. சுயமொழிப் பாடசாலைகளில் மாணவர் ஆகக்கூடியது சிரேஷ்ட பாடசாலைப் பத்திரநிலைப் பரீட்சைக்கு மட்டுமே தயார் செய்யப்பட்டனர், ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி ஒரே பாடசாலையிலோ அன்றி வெவ்வேறு பாடசாலைகளிலோ வழங்கப்பட்டது. ஆரம்பப்பாடசாலைகள் ஐந்தாண்டுக் கல்வியை வழங்கின. இடைநிலைப் பாடசாலைகள் எட்டாந்தரம் (கனிஷ்ட இடைநிலை) அல்லது பத்தாந்தரம் (சிரேஷ்ட இடைநிலை) வரையுள்ள வகுப்புக்களை மட்டும் கொண்டிருந்தன.

இருமொழிப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் சுயமொழியும், உயர்வகுப்புகளில் படிப்படியாக ஆங்கிலமும் போதனா மொழிகளாக அமைந்தன.

ஆங்கில மொழிப் பாடசாலைகளில் பொருளாதார வசதி கூடிய மாணவர் மட்டுமே அதிக கட்டணம் செலுத்திப் படித்தனர். இதனால் அங்கு மிகக் கூடிய பௌதிக, ஆளணி வளங்களும் ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படும் முறையும் காணப்பட்டன. இதனால் மிகத் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் இப்பாடசாலைகளிலேயே கற்பித்தனர். ஆங்கிலமொழி மூலம் கற்றவர்கள் அரசாங்க நிறுவனங்களிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும் பங்கேற்க முடிந்தது. அவர்கள் உயர்ந்த பொருளாதார வசதி படைத்தவராகவும், சுயமொழிப் பாடசாலைகளில் கற்றவர்கள் மிகக் குறைந்த பொருளாதார வசதிகளுடனும் வாழ்ந்ததால், போதனா மொழியே இத்தகைய இருவகைச் சமூகப் பிரிவினைகளைத் தோற்றுவித்தது எனலாம்.

1943ல் வெளியிடப்பட்ட விசேட கல்விக்குழுவின் அறிக்கை மேலே சுட்டிக்காட்டியவாறு போதனாமொழி அடிப்படையில் ஏற்பட்ட சமூகப் பாகுபாடே குறைபாடு ஏற்பட்டதென்பதை ஒப்புக் கொண்டது. 1960ம் ஆண்டளவில் தாய்மொழியே போதனா மொழியாக்கும் திட்டம் ஓரளவு முழுமை பெற்றது. கல்வித்துறையில் யாவர்க்கும் சம வாய்ப்பை வழங்கி, முன்பு ஏற்படுத்தப்பட்ட சமூக அநீதியைப் போக்க, எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி இலவசமாக வழங்கப்படல் வேண்டுமென்றும் இக்குழு விதந்துரைத்தது. ஆற்றல்களும் திறன்களும் ஒரு குறிப்பிட்ட சமூக வகுப்பினருக்கு மட்டும் உரியதல்ல என்பதால், யாவர்க்கும் சமவாய்ப்பு வழங்கவென இலவசக்கல்விமுறை நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டுமெனக் குறிப்பிட்டது.

இலவசக் கல்வித்திட்டம் 1943இல் கலாநிதி C.W.W. கன்னங்கரா தலைமையிலான குழுவால் விதந்துரைக்கப்பட்டது. கல்வியில் சமவாய்ப்பு வழங்கும் செயற்பாட்டில் பின்வரும் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கவையாகும் :-

1. இலவசக் கல்வியின் அறிமுகம்
2. தாய்மொழி போதனா மொழியாக்கப்படல்
3. சகல பாடசாலைகளும் அரச பொறுப்பின் கீழ் கொண்டு வரப்படுதல்
4. கலைத்திட்ட மாற்றங்களினூடாகக் கல்வித்தரம் பேணுதல்

## பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல்

1960ல் இது தொடர்பான சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. எனினும் சில பாடசாலைகள் தொடர்ந்து தனியாக இயங்க அனுமதிக்கப்பட்டன. இவை தனியார் பாடசாலைகளாக மாறின. 1960களின் ஆரம்பத்தில் பல்கலைக் கழக மட்டத்தில் கலைத்துறைப் பாடநெறிகளைத் தாய்மொழியிற் பயிலச் சந்தர்ப்பம் உண்டானது. காலப்போக்கில் விஞ்ஞானக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆகியவற்றையும் தேசிய மொழிகளில் கற்கக் கூடியவாறு மாற்றங்கள் ஏற்பட்டன. இலவசக் கல்வியும் தாய்மொழிக் கல்வியும் நடைமுறைப்படுத்தப்பட்டதால் இலங்கையில் பொதுக்கல்வி பெறுபவர் தொகை அதிகரித்துப் பாடசாலைகளின் தொகையும் அதிகரித்தது.

1939ல் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாயக் கல்விமுறைக்கமைய 5வயது முதல் 14வயது வரையுள்ள சகல பிள்ளைகளுக்கும் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. 1959ல் பாடசாலை செல்லாத பிள்ளைகள் பற்றி ஆராயக்குழு ஒன்று நியமிக்கப்பட்டதாயினும், கட்டாயக் கல்வி முறையைக் கடுமையாக நடைமுறைப்படுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது குறைவாகும்.

1964ன் கல்வி வெள்ளை அறிக்கையானது எல்லாப் பிள்ளைகளுக்கும் 2மைல் தூரத்தினுள் ஆரம்பப் பாடசாலைகள் கிடைக்க வேண்டும் என வகுத்துக் காட்டியபோதும் இதனைப் பின்பற்றிய பாடசாலை அமைப்புக் கொள்கை குறுங்கால நடவடிக்கையாகவே அமைந்தது. 1964, 1967ன் கல்வி வெள்ளை அறிக்கைகள் கட்டாயக் கல்வி பற்றியே பெரிதும் குறிப்பிட்டன.

இலங்கையின் பாடசாலை அமைப்பு வளர்ச்சியில் 1940களில் ஆரம்பிக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயங்கள் குறிப்பிடத்தக்கவை. 5,8ஆம் தரங்களின் புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவருக்கு மத்திய மகா வித்தியாலயங்கள் அனுமதி வழங்கியதால், கிராமப்புற மாணவருக்கு உயர்கல்வி பெறுவதற்கு இவை உதவின எனலாம். இவற்றில் கற்றவர் பலர் எதிர்காலத்தில் உயர்நிலைக்கு வரவும் முடிந்தது. கல்வி பெறுபவரின் எண்ணிக்கை அதிகரிக்கவே, பாடசாலைகளின் தொகையும் அதிகரித்தது. இதனால் எழுத்தறிவுள்ளோர் வீதம் 1948ல் 57.8% லிருந்து 1990ல் 87.2% ஆக அதிரித்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வி

1942ல் இலங்கையில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அங்கு ஆங்கில அறிவுடையவர்கள் மட்டுமே கல்விகற்கக் கூடியதாக இருந்தது. இடைநிலைக் கல்வி தாய்மொழியில் பயின்றதால் பலர் பல்கலைக்கழக அனுமதியை நாடினர். 1962ல் பல்கலைக்கழகக் கல்வி ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறத் தகுதியுடைய எவருக்கும் தடையோ மறுப்போ தெரிவிக்கக்கூடாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இதனால் பல்கலைக் கழகங்களின் தொகை அதிகரிக்கப்பட்டு, அங்கு கல்வி பெறுவோர் தொகையும் அதிகரித்து, அவர்கள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை அதிகளவில் உருவாகியது. இதன் விளைவாகத் தேசிய உயர்கல்வி ஆணைக்குழுவின் தீர்மானப்படி, பல்கலைக்கழக அனுமதியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1971ல் மொழியடிப்படைத் தரப்படுத்தல் முறை அனுமதி அறிமுகமானது. 1974ல் அனுமதியில் மாவட்டப் பங்கீட்டு முறை, பின்தங்கிய மாவட்ட மாணவரின் உயர்கல்வியை மேம்படுத்தவென மேற்கொள்ளப்பட்டது, இதற்கமைய 35% திறமை அடிப்படையிலும் 60% மாவட்ட அடிப்படையிலும், 5% பின் தங்கிய மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டது. இத்தகைய கொள்கைகளால் திறமையான மாணவர் பலருக்கு உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைக்காமை பிற்காலத்தில் இளைஞர் புரட்சிகளும் ஏற்பட வழிவகுத்தது. அண்மைக் காலங்களில் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களில் ஏறத்தாழ 5% மாத்திரமே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். தகுதி பெற்றும் அனுமதி கிடைக்காதவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி, தேசிய உயர்தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவை வழங்கி வருகின்றன.

## 1972ன் பின் பாடசாலைக் கல்வி

1972ன் ஐந்தாண்டுத் திட்டம் கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக அது வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய முன்னறிவையும் அநுபவங்களையும் பாடசாலை மட்டத்திலேயே வழங்க வேண்டும் என வலியுறுத்தியது. இதற்கமையவே N.C.G.E தேசிய பொதுகல்விச் சான்றிதழ் H.N.C.E.தேசிய உயர்கல்விச் சான்றிதழ் ஆகிய பரீட்சைகள் நடாத்தப்பட்டன. ஆனால் 1977லிருந்து மீண்டும் க.பொ.த.(சா/த), க.பொ.த. (உ/த) ஆகிய பொதுப்பரீட்சைகளே நடாத்தப்பட்டு வருகின்றன.

தற்போது அறிவியல் உலகில் எதிர்நோக்கும் சவால்களைத் திறமையான முறையில் சமாளிக்கக் கூடிய, பலதுறை ஆற்றல் வாய்ந்த மாணவ சமூகத்தை உருவாக்கும் பிரதான நோக்குடன் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு முறைகளின் அடிப்படையில் மாணவரின் ஆற்றல்கள் இம்முறையின் கீழ் மதிப்பிடப்படுகின்றன. மாணவரின் பண்பு நிலைகளுக்கும் இங்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாணவர் ஆசிரியர்களினால் அவதானிக்கப்பட்டுத் தகுந்த முறையில் வழிகாட்டப்படுகின்றனர்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது கல்வித்துறையில் உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது என்பதை அறியலாம் எனினும் மாவட்டங்களுக்குள்ளேயே பௌதிக ஆளணி வளங்கள் கிராமப்புற, நகரப்புறப் பாடசாலைகளிடையே சமமற்ற முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளமை ஒரு குறைபாடாகக் காணப்படுவதுடன், கட்டாயமாகச் சீர்செய்யப்பட வேண்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில்" - சுருக்க ஆய்வு

(க.செல்வரஞ்சினி B.A.(Hons) பழைய மாணவி)

இற்றைக்கு 1960 வருடங்களுக்கு முன்னர் (கி.பி.113- கி.பி. 135 வரை) சேரன் செங்குட்டுவன் சேர்நாட்டு எல்லையில் திருச்செய்குன்று எனும் இடத்தில் முதல் முதலாகக் கண்ணகி ஆலயம் ஒன்றை அமைத்துக் கும்பாபிஷேக நிகழ்வை நடத்தினான். அந்நிகழ்விற்கு இலங்கையை ஆண்ட கஜபாகு மன்னனும் சென்றான் எனவும், பின் அவன் கண்ணகியை வழிபாடு செய்து கேட்டுப் பெற்ற வரத்தின் படி கண்ணகி சிலைகள் பலவும் கொண்டு வந்து மாதகலுக்கு அணிந்தாயுள்ள திருவடி நிலையில் இறங்கி, அனுராதபுரிக்கு மூன்று அணிகளாக வழி கொண்டு செல்லும் போது தங்கிய பொருத்தமான இடங்களில் கண்ணகி சிலைகள் ஸ்தாபித்துச் சென்றான் என்ற செய்திகளை "சேரன் செங்குட்டுவன்' எனும் நூல் கூறுகின்றது. அங்ஙனம் ஸ்தாபித்த கண்ணகி ஆலயங்களில் ஒன்றாகக் "கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலயம்" மிளிர்கிறது.

இவ்வாலயத்தின் தொன்மையையும், அருட் பெருமையையும் மட்டிட இதன் தலவிருட்சமான கூழா மரத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்தால் போதும். இவ்விடமுள்ள மரமடர் சோலைகளில் ஒன்றான இக்கூழா மரத்தடியில் ஆதி குடிகளாகிய நாகர்கள் ஆரம்பித்த நாக வழிபாடு இன்றும் தொடர்கிறது. 45 அடி சுற்றளவுள்ள இக் கூழாமரம் ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது என ஆய்வாளர்கள் கருதுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இம் மரத்திலுள்ள பொந்துகளில் வெண்மை நிறமுடைய நாகபாம்புகள் வாசம் செய்வதுடன் சில காலங்களில் அவை வெளிப்பட்டுப் பூசகர்களும், அடியார்களும் நைவேத்தியம் செய்யும் பாலினை அருந்திச் செல்வதுண்டு என்றும், அவை யாருக்கும் தீங்கு செய்வதில்லை என்றும், கூறப்படுகிறது. பூசைக் காலங்களில் இக் கூழா மரத்தடியில் விசேட பூசைகள், பிரார்த்தனைகள் நடை பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் இம்மரத்தடியிலே தான் கருங்கல்லாலான கண்ணகி விக்கிரகம் இருந்ததாகவும், பின் இவ்விக்கிரகமே மூலஸ்தான கண்ணகை விக்கிரகமாக இடம் மாற்றப்பட்டதாக அறிய முடிகிறது.

இவ்வாலயத்தின் கூழா மரத்தின் கீழிருந்த கண்ணகையை ஆரம்பத்தில் சின்னாச்சி என்பவர் கூட்டி, நீர் தெளித்துப் பக்திமார்க்கமாக வழிபட்டதாகக் கூறப்படுகிறது. பிற்காலத்தில் இக் கண்ணகிக்கு ஆலயம் அமைக்கப்பட்டதோடு மூலஸ்தானத்தில் கண்ணகிக்கு இடமளிக்கப்பட்டது. அத்தோடு பரிவாரத் தெய்வங்களான பிள்ளையார், வள்ளி, தெய்வயானை சமேத முருகப் பெருமான், வைரவப் பெருமான் ஆகியோருக்கு சந்நிதிகள் அமைக்கப்பட்டுச் சிறப்பான பூசை வழிபாடுகள் சிவாச்சாரிய பரம்பரையினரால் மேற்கொள்ளப்பட்டன.

இன்று பிரமாண்டமான தலமாக விளங்கும் இக்கண்ணகி அம்மன் ஆலயம் குருக்கள் மற்றும் பொது மக்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகச் சிறிது காலம் பூசைகள் எதுவுமின்றிப் பூட்டப்பட்டிருந்தது. நீதிமன்றம் ஏற்படுத்திய சமரசத்தினைத் தொடர்ந்து பின் ஆலயம் திறக்கப்பட்டு, இறுதியாக 1986ம் ஆண்டு கும்பாபிஷேகம் மிகவும் சிறப்புடன் நிகழ்த்தப்பட்டு ஆலயக் கட்டடப்பகுதிகள் மேலும் மெருகூட்டப்பட்டன. ஆலயம் பூட்டப்பட்டிருந்த காலப்பகுதியில் கோப்பாய்ப்பிரதேசத்தின் வளங்கள் ஒளிமங்கி இருந்ததாக அறிய முடிகிறது.

இவ்வாலயக் கலைமரபை நோக்கினால் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்ட இச்சந்நிதானம் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பக்கிரகம், விமானம், மண்டபங்கள், தூண்கள் என்பன சிறப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆலய உட்பிரகாரத்தின் தெற்குப் புறத்தில் ஆலய தல விருட்சமான கூழாமரம் காணப்படுகிறது. இம்மரத்தடியில் நாக விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. வடபுறத்தில் வசந்த மண்டபமும், கிழக்குப் புறத்தில் மணிக்கோபுரமும், தென் மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதானமும், வடமேற்கு மூலையில் முருகப் பெருமான் சந்நிதானமும், வடகிழக்கு மூலையில் வைரவப் பெருமான்

சந்நிதிதானமும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. ஆலய விமானத்திலும் பரிவாரத் தெய்வங்களின் ஆலய விமானங்களிலும் சுதை வேலைப்பாட்டுடன் கூடிய அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆலயச் சுவர்களில் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் அழகிய ஓவியங்கள் தத்ருபமாக வரையப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தின் கிரியை மரபுகளை நோக்கின், ஆரம்பத்தில் பக்தி மார்க்கமாக மேற்கொள்ளப்பட்ட வழிபாடானது பிற்காலத்தில் ஆகம மரபுகளுடன் இணைந்ததாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள் மிகவும் சிறப்புடன் ஆற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தினந்தோறும் காலை,மாலை ஆகிய இரு வேளைகளிலும் நித்திய கிரியைகள் இடம் பெறுகின்றன.


மேலும் நைமித்திய கிரியை மரபின் அடிப்படையில் வாரந்தோறும் திங்கள், செவ்வாய், வெள்ளிகளில் சிறப்பான பூசைகள் இடம்பெறுகின்றன. இந்நாட்களில் கூழா மரத்தடிக்கு குங்கும அர்ச்சனையும், நாகவிக்கிரகங்களுக்குப் பாலாபிஷேகமும் இடம் பெறும். மற்றும் மாதந்தோறும் இடம் பெறுகின்ற கிரியைகளாக சித்திரை வருடப் பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம், நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத்திங்கள், மார்கழித் திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனித் திங்கள் என்பன சிறப்பாக விளங்குகின்றன. பங்குனித்திங்கள், வைகாசி விசாகம் ஆகிய அம்பாளுக்குரிய விசேட நாட்களில் பக்தர்கள் பொங்கல் நீர்ச்சோறு, மோதகம் என்பனவற்றை நைவேத்தியமாக அம்பாளுக்குப் படைத்துத்தமது நேர்த்திகளை நிறைவேற்றுவார்கள். இவ்வாலயத்தில் இடம் பெறும் குளிர்த்தி வைபவமும் தனித்துவமானதாகும்.

அடுத்து நைமித்திய கிரியைகளில் சிறந்ததாக விளங்குவது மகோற்சவ பெருவிழாவாகும். இவ்வாலயத்தில் ஆரம்ப காலத்தில் சிவகாமியை எழுந்தருளியாகக் கொண்டு, கொடியேற்றி ஆடிப்பூரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 25நாட்கள் திருவிழா இடம்பெற்று வந்தது. பின் கண்ணகி அம்மனுக்கு இயந்திரம் வைக்கப்படாது என்ற கொள்கைப்படியும், கண்ணகிக்குக் கொடியேற்றி திருவிழா நடைபெறுவது தவறானது என்றும் கருதிப் பிற்காலத்தில் ஆடிப் பௌர்ணமியைத் தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 10நாட்கள் அலங்கார உற்சவம் இடம் பெற்று 9ம் நாள் தேர் உற்சவமும். 10ம் நாள் தீர்த்த உற்சவமும் சிறப்புடன் ஆற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாலயத்தில் நிகழும் காமியக் கிரியையானது பக்திபூர்வமாகப் பக்தர்களால் அனுஷ்டிப்படுகிறது. இந்த வகையில் நாகதோசத்தில் பீடிக்கப்பட்டவர்கள், குழந்தைப் பேறு கிட்டாதவர்கள் வெள்ளி, செம்பு முதலியவற்றால் ஆன நாக உருவங்களைக் காணிக்கையாகக் கொடுப்பார்கள். மற்றும் சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் தமது மாங்கல்யப் பேற்றிற்காக குங்கும அர்ச்சனை செய்வதும் தேசிக்காயில் விளக்கேற்றுவதும் இவ்வாலயத்திற்குரிய தனிச் சிறப்பம்சமாகும். அம்மை நோயால் பீடிக்கப்பட்டவர்கள் நேர்த்திகள் செய்து நிறைவேற்றுவதையும் காணலாம். இவற்றை விடக் கற்பூரச் சட்டி எடுத்தல், பால் செம்பு எடுத்தல், காவடி, முள்மிதி அணிதல், அங்கப் பிரதட்சனை, அடி அழித்தல், தீமிதிப்பு என்பன சிறப்பாக இடம் பெறுகின்றன. இக்கிரியைகளை விடச் சங்காபிஷேகம் வருடந்தோறும் ஆற்றப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தில் 1924, 1926, 1956ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் ஆற்றப்பட்டதோடு இறுதியாக 1986ம் ஆண்டு ஒரு கும்பாபிஷேகக் கிரியை செய்வதற்கான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடக்கூடிய விடயமாகும்.


இவ்வாலயத்தில் ஆரம்பத்தில் பக்திபூர்வமான வழிபாடுகள் ஆற்றப்பட்டன. பிற்காலத்தில் சிவாச்சாரியார் பரம்பரையால் ஆலயக் கிரியைகள் ஆற்றப்பட்டன. சிவஸ்ரீ கோ.சுப்பையா, சிவஸ்ரீ குருமூர்த்திக் குருக்கள், சிவஸ்ரீ மு.பரமசாமிக் குருக்கள். பொன்குமாரசாமிக் குருக்கள் போன்றோர் இவ்வாலய சிவாச்சாரியார்களாக விளங்கினர். பின் மீண்டும் 1947 - 1980 வரை பிரதம சிவாச்சாரியாராக சிவஸ்ரீ மு.பரமசாமிக் குருக்கள் விளங்கினர். இடைக் காலத்திலெழுந்த முரண்பாடுகளின் பின் பரமசாமிக் குருக்களது மகனான சிவஸ்ரீ ப.சண்முகராசக் குருக்கள் 1.9.1980லிருந்து ஆலயப்பிரதம குருவாக நியமிக்கப்பட்டதோடு இன்றுவரை ஆலயத்தில் இடம்பெறும் எல்லாக் கிரியைகளையும் தலைமைச் சிவாச்சாரியாராக இருந்து சிறப்புடன் ஆற்றி வருகின்றார்.

CHS




COLONIAL HARDWARE STORES

Importers Distributors & General Hardware Merchants



**Head office:**
427, Old Moor Street,
Colombo - 12
Tel: 431950, 435414, 347981 - 83 - 89
Fax: 334090 E - mail - Colonial @ Slt.lk.
Hotline Tel/fax: 321144 (24hrs) 077-760132

**Branch:**
138, Sri Sumanatissa Mawatha,
Colombo - 12
Tel: 334197, 472639 - 40 - 41 074 - 710201,
074 - 610545, 074- 610302
Fax: 074-610260.


AMJ
A.M.JEWELLERY
Guaranteed 22 ct Gold & Fancy Goods
171/4 Sea Street,
Colombo 11.
T.P.330746

இவ்வாலயத்தை நிர்வகிக்கும் பணியில் 15உறுப்பினர்களைக் கொண்ட பரிபாலன சபையினர் திறம்படப் பணியாற்றி வருகின்றனர். இன்றைய நிர்வாக சபை உறுப்பினர்களால் தலைவராக திரு.இ.தெய்வேந்திரம் அவர்களும் செயலாளராக திரு.க.ஜெயசீலனும், பொருளாளராக திரு.ஆ.சக்தி வடிவேலும் தமது பணிகளைத் திறம்பட ஆற்றிவருகின்றதோடு ஆலய வளர்ச்சிக்கும் இப்பரிபாலன சபையினரின் உதவி துணையாக விளங்குகின்றது. இப்பரிபாலன சபை ஆலய வளர்ச்சியோடு சமய, சமூக, கல்விப் பணிகள் பலவற்றை ஆற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு சமுதாய மக்களது பங்களிப்பும் ஆலயம் மேலும் சிறப்படைய வழி சமைத்துக் கொண்டிருக்கிறது எனலாம்.

மேலும் இவ்வாலயத்துக்குரிய தேரானது கட்டுத்தேராகக் காணப்படுவதால் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியதான முழுமை பெற்ற ஒரு தேரினை அமைப்பதற்கான பணியில் பரிபாலன சபையும், சமுதாய மக்களும் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தில் காணப்படும் மஞ்சம் சிறப்பான முறையில் அமைந்துள்ளது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கு இணங்கவும், "கோபுர தரிசனம் பாவவிமோசனம்" என்பதற்கு இணங்கவும் இவ்வாலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றமையும் அது எதிர்காலத்தில் பூர்த்தி செய்யப்படலாம் எனவும் நம்பப்படுகிறது.

இவ்வாறாக ஈழவரலாற்றுச் சிறப்பும் தொன்மையும், புகழும் நிறைந்த இத்திருத்தலத்தில் பல்வேறு அம்சங்கள் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன. கோவையின் கண் வீற்றிருந்து அருளாட்சிபுரியும் பலானை கண்ணகைத் தாய் அனைத்து அடியவர்களுக்கும் வேண்டும் வரம் நல்கி அருள்பாலிப்பாளாக

# கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையாரின் வாழ்த்துரை

மனித சமுதாயத்துக்கு அழியாத செல்வமாகிய கல்வியை அள்ளித் தருவது கல்விக் கூடங்கள். அந்தச் செல்வத்தைக் கொடுத்து, நல்ல சமூகத்தை உருவாக்கி, அதனைக் கட்டியெழுப்புவது அவற்றின் பெரும்பணி. இந்தப் பணியை எமது ஊரிலுள்ள பெரிய கல்விக் கூடமான கிறஸ்தவ கல்லூரி பலகாலமாக ஆற்றி வருவது பெருமகிழ்ச்சிக்குரியது. ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக ஒப்பற்ற பணியாற்றி வரும் இக்கல்லூரியின் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது எமக்கு மகிழ்ச்சிகரமான ஒரு கடமையாகின்றது.

கிறிஸ்தவ கல்லூரி சமய சமரச மனப்பான்மையுடன் சைவ, கிறிஸ்தவ மதவழிபாடுகளையும், கலாசாரங்களையும் நன்கு பேணிவருதல் சிறப்பம்சமாகும். இளைய தலைமுறையினரை நல்வழியில் இட்டுச் செல்வதற்கு வெறுமனே கல்வி அறிவு மாத்திரம் போதாது, இறையன்பும் நம்பிக்கையும் அவசியம். இந்த அம்சங்களின் அடிப்படையில், இக்கல்லூரி நல்லதொரு சமூகப் பணியை ஆற்றி வருகிறது. சிறந்த சீல்விமான்களையும் அதேசமயம் ஒழுக்கசீலர்களையும் உருவாக்கி நிற்கின்றது. கண்ணியமும் கடமையுணர்வும் வாய்ந்த அதிபர்கள் ஆசான்கள் பலரின் சேவைகள் இக்கல்லூரியின் பெருவளர்ச்சிக்கு உரமாகி நிற்கின்றன. தாய் நாட்டிலும், பிறநாடுகளிலும் புகழ்பரப்பி நிற்கும் மைந்தர்களை எண்ணிக்கையற்ற வகையில் ஈன்றளித்த அன்னை இக்கல்லூரி என்பதால் எமது ஊரும் பெருமையடைகிறது. இக்கல்லூரி எதிர்காலத்தில் மென்மேலும் சிறந்தோங்க எமது கண்ணகைத் தாயின் இன்னருளை வேண்டி வாழ்த்தி நிற்கிறோம்.

**இ.தெய்வேந்திரம்**
**பரிபாலன சபைத் தலைவர்**

# எனது நினைவுகள்

(திருமதி. ப. அருள்ராஜா முன்னாள் பிரதி அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்றும் என் மனதைவிட்டு அகலவதில்லை, மறையப்போவதுமில்லை. நான் பிறப்பதற்கு முன்னே எனது தாயார் கிறிஸ்தவ கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமை புரிந்தவர். அப்போது பெண்கள் பாடசாலை வேறாகவும், ஆண்கள் பாடசாலை வேறாகவும் இருந்தது. எனது தாயார் ஆண்கள் பாடசாலையில் 1929ம் ஆண்டு வரை கடமையாற்றியவர். அப்போது, அதிபர் திரு.பீற்றர் செல்லையா ஆவார். அவரது மகன் திரு.செல்வம் செல்லைய்யா பின்பு கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியவர், உப அதிபராக இருந்து மாற்றலாகிச் சென்றவர். திரு. செல்வம் செல்லையா அவரது தந்தை, அதிபர் பீற்றர் செல்லையா தன்னிடம் முதலாம் வகுப்பில் கொண்டுவந்து சேர்த்து விட்டதாகவும், தானே அவருக்கு ஆரம்பக்கல்வியைக் கற்பித்ததாகவும் எனது தாயார் கூறுவார். எனது தாயாரின் அப்போதைய பெயர் Miss. Anna Samuel ஆபிசின் Log book இல் 3, 4 பக்கங்களுக்குள் அவர் பெயர் பதியப்பட்டுள்ளதைக் கண்டுள்ளேன். Miss. Anna Samuel left the school on............ என்று பதியப்பட்டுள்ளது. எனது தாயாரின் கல்லூரி என்ற காரணத்தினால் நான் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியைத் தெரிந்தெடுத்தேன். அம்மா காலத்தில், பெண்கள் பாடசாலை அதிபர் விற்னி அம்மையார், அவர் பெயரில் விற்னி College (விவசாய அறை) பழைய அதிபர் காரியாலயத்திற்குப் பின்னால் அமைந்திருந்தது. 'விற்னி' இல்லம் அவர் பெயரிரிலேயே பின்பு அமைக்கப் பட்டது. எனது தாயார் திருமணத்துக்காக விடைபெற்றபின் திருமதி. வில்லியம்ஸ் அங்கு ஆசிரியையாகப் பொறுப்பேற்றார்.

எனது மாமா கனகரட்ணம் போதகர் கோப்பாய் சேச்சில் கடமையாற்றியவர். போதகர் விடுதியிலும் இருந்தவர். அப்போது எனக்கு வயது 7 அவர்தான் கிறிஸ்தவ கல்லூரி மனேஜராகக் கடமையாற்றினார். அக்காலகட்டத்தில் போதகர் தான் மனேஜர். ஆகவே அங்கு வரும் போதெல்லாம் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர் ஆசிரியர் மாணவர்களுடன் நெருங்கி உறவாடியுள்ளேன. சுற்றுமதில் பிரிக்கவில்லை. இக் காரணத்தினாலும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எனது நெருங்கிய நண்பர்களாக மாறியது.

எனது சகோதரன் பரமோதயனின் மனைவியின் அக்காதான் கோப்பாயில் கல்விகற்பித்த செல்வி.பூபதி நவரட்ணசிங்கம். அவரது காலத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பல விடயங்களில் கொடி கட்டிப் பறந்தது. Netball girls, All Island Champions ஆக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவிகளைப் பயிற்றுவித்து வெற்றி பெற்றுக்கொடுத்தவர்.

மேற்கூறிய காரணங்களால் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு 01.05.63இல் வந்து சேர்ந்தேன். அதிபர் திரு.நவரட்ணராஜா அவரை அடுத்து திரு.சண்முகநாதன், திரு.கார்த்திகேசன், திரு.சிவசுப்பிரமணியம், திரு.செல்வரட்ணம் ஆகிய அதிபர்களின் கீழ் கடமையாற்றியுள்ளளேன். கல்வியைப் பொறுத்தவரை திரு.சண்முகநாதன் காலமே என் கண்முன் முதலிடம் நிற்கின்றது. உயர்தரப் பரீட்சை கலைப்பிரிவு உயர்ந்த பெறுபேறுகளைத் தந்தது. விஞ்ஞானப் பிரிவில் விவசாய பீடத்துக்கு ஒரு மாணவர் தெரிவானார்.

## சாரணர் வழிகாட்டிகள் தொடர்பாக

நான் 1st class சாரணியாக, பாசறைப் பயிற்சிகள் பல பெற்றவளாகக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்குள் 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரவேசித்தேன். திருமதி.ஜோசப் சாரணியர் இயக்கத்திற்குப் பொறுப்பாளராய் இருந்தார். திரு. சண்முகநாதன் எனது ஆசிரியராகச் சுண்டிக்குளியில் இருந்தவராதலால் எனது ஆற்றல்களை அறிந்திருந்தார். ஆகவே என்னையும் சாரணியர் இயக்கத்திற்குப் பொறுப்பாளராய்க் கடமையாற்றும்படி கேட்டார். திருமதி.ஜோசப் அப்பணியை ஆற்றி வந்ததால் நான் அவ்வேண்டுதலை மறுத்து அதற்கு மேற்பட்ட வயதெல்லை கொண்ட பெண்களுக்கான 'றேஞ்சர்' இயக்கத்தை ஆரம்பித்திருந்தேன். மாத்தளை B.M.S ஆங்கிலப் பாடசாலையில் நான் இவ்வியக்கத்தை நடத்திவந்தேன். யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலையில் மட்டுமே இவ்வியக்கம் இயங்கி வந்தது. O/L வகுப்புடன் இயக்க அங்கத்தவர் A/L வரத் தகுதியில்லாமல்கல்லூரியை விட்டு விலகுவதால் இயக்கம் தொடர்ந்து நடைபெற முடியவில்லை. ஜோசப் இறந்தபின் சாரணியர் இயக்கப் பொறுப்பாசிரியராகப் பணியாற்றினேன். கிறிஸ்தவ கல்லூரியிலேயே பல பாசறைகள், ஏனைய கல்லூரிகளுடன் இணைந்து நடத்தியுள்ளோம். விளையாட்டு மைதானம், அதிபர் பங்களாவின் பின்புறம், வரைதல் அறையின் பின்புறம், எல்லாம் கூடாரங்கள்

போட்டு இரவில் சாரணியர் தங்குவார்கள். பொலிஸ்ரேசன், கல்லூரிக்கு முன்னே இருந்ததால் எவ்வித பயமும் இருக்கவில்லை. பல Rally கள் விளையாட்டு மைதானத்தில் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தியுள்ளோம். பொருட்காட்சி, பழைய பூங்காவில் நடத்தியுள்ளோம். பணம் விதையில் செய்த பல முகபாவங்களைக் கொண்ட எமது பொம்மைகள் கொழும்பு வரை காட்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டன. பழைய பூங்காவில் எமது Camp இல் தயாரித்த திடீர் உணவுப் போட்டியில் எங்கள் ஒடியல் கூழ் தெரிவு செய்யப்பட்டது. உணவுக்காக நாம் கொண்டு சென்ற பனையோலைப்பேழைகள், கொழும்பில் இருந்து வந்த கமிஷனர் குழுவால் பாராட்டப்பட்டது. உடைந்து போகாத உடனடியாகக் குப்பையிலிடக்கூடிய, கழுவ நீர் தேவைப்படாத உடன் பாத்திரம் என்ற ரீதியில் எமது புத்திக் கூர்மை வியந்து பாராட்டப்பட்டது.

ஆங்கிலம் பேசப் பயிற்சி பெறவேண்டுமென்பதற்காக, நான் கல்லூரி விலகும் வரை ஆங்கிலத்திலேயே நடத்தி, மாணவிகளை ஆங்கிலத்திலேயே விதிகளைக் கற்க வைத்தேன். Tennis shoes இல்லாத குறையால் பங்குபற்ற முடியாதவர்களுக்கு யாழ்ப்பாண மாணவிகளிடமிருந்து, இரவாக Tennis shoes வாங்கி வந்து போட்டு அழைத்துப் போயிருக்கிறேன். Peto House தலைவியாக கடமையாற்றிய போதும் March Past இல் பங்குபற்ற மறுக்கும் மாணவ மாணவியர் தயக்கம், Tennis shoes வாங்கப் பணம் இல்லாத குறைதான் என்பதை அறிந்து, shoes பல அளவுகளில் இரவல் பெற்று வந்து போட வைத்துப் பங்கு பெறவைத்துள்ளேன். March past பலதடவை முதலிடம் பெறவும் பயிற்சி யளித்துள்ளேன். இல்ல விளையாட்டுப் போட்களில் Peto House பல தடவை பதவிக்கு முதலிடம் பெறவும் பயற்சிகள் அளித்துள்ளேன். உபஅதிபர் பதவிக்கு வந்ததிலிருந்து இப் பொறுப்பை ஒதுக்கிவிட்டு நீதி தவறாத நீதிபதியாகக் கடமையாற்றியுள்ளேன்.

பேச்சுப் போட்டிகளில் நான் பயிற்றுவிக்கும் (ஆங்கிலம்) மாணவர்களே முதலிடம் பெறுவது வழக்கம். தினகரன் நடத்திய நடனப்போட்டியில் கிறிஸ்தவ கல்லூரி நடனம் என்னால் பயிற்றப்பட்டு (முற்றவெளியில்) முதலிடம் பெற்றது.

சண்முநாதன் அதிபர் காலத்தில் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு.இராசையாவும், விளையாட்டாசிரியர் கதிர்காமநாதனும் இல்ல விளையாட்டுப் போட்டியை நடத்த மறுத்துவிட்டனர். நான் இளம் வயதினள் எனினும் என் ஆற்றலை அறிந்த சண்முகநாதன் அவர்கள் என்னைப் பொறுப்பாக நியமித்து விளையாட்டுப் போட்டியை நடத்துமாறு கூறினார். தற்போது கல்லூரியிலுள்ள வெற்றியாளர் ஏறிநின்று பரிசு வாங்கும் மரப்பீடமும், நடுவர் ஏறிப்பார்வையிடும் ஏணிப்பீடமும் அவ்வருடம் நான் செய்வித்து அறிமுகப்படுத்தி வைத்தவைதான். போட்டியில் Torch கொண்டு ஓடி சத்தியம் செய்தல், சத்திய வாக்கியங்களை நானே அறிமுகம் செய்து கொப்பியில் முற்பக்கத்திலும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் எழுதிவைத்துள்ளேன்.

N.C.G.E பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடத்திட்டத்தை பயிற்றுவிக்கப் பயிற்றப்பட்ட நடன ஆசிரியரோ, மனைவியல் ஆசிரியரோ தையல் கலை ஆசிரியரோ இருக்கவில்லை. நேரசூசி எனக்கு அளிக்கப்பட்டபோது அப்பாடங்களில் பல எனக்கு அளிக்கப்பட்டதைக் கண்டேன். அதிபரிடம் வினவியபோது ஆசிரியர் பெறப்படும்வரை இவற்றைத் தவறாது ஏற்றபடி கற்பிக்கும் ஆற்றல் தங்களிடம்தான் உண்டு எனக்கூறி ஏற்றுக்கொள்ள வைத்தார். நானும் என்னால் இயலுமானவரை மாணவரைப் பாடத்திட்டத்திற்கேற்பக் கற்பித்து வைத்தேன்.

விஞ்ஞான, கலைப்பீட மாணவர்களுக்கு இலங்கை வரலாற்றுக் கலாச்சாரம் எனும் பாடம் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கான பயிற்சியை யாழ் சர்வ கலாசாலையில் பெற்று அதைக் கற்பிக்கும்படி அதிபர் இட்ட பணியைக் குறுகிய கால அறிவித்தலாயினும் ஏற்றுச் செய்து பரீட்சைக்கு அனுப்பியிருந்தேன். தங்கள் சுற்றாடல் தேவைகளைத் தாமே நிவர்த்தி செய்யும் ஆற்றலைச் சுற்றாடலுக்கு வழங்கும் திட்டமொன்றும் A/L திட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதன் பொறுப்பாசிரியராகப் பெண்களுக்கு நியமிக்கப்பட்ட நான் Batik அச்சுக்கலை, தையற்கலை ஆசிரியர்களை வரவழைத்துக் கல்லூரி விலகிய மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப், பெண், A/L மாணவர் கூலிவேலை செய்து பணம் சம்பாதித்து ஆசிரியர்களுக்கு வழங்கப் பயிற்றுவித்தேன். பயிற்றப்பட்டவர்கள் சொந்த தையல் Batik நிலையங்கள் ஏற்படுத்த S.L.F.P அரசினர் கொடுத்த கடன் பணத்தைப் பெறவும் ஏற்பாடு செய்திருந்தேன். அம்மாணவிகள் சிலர் இன்று வெளிநாடுகளில் Batik கலையினால் சம்பாதிப்பது மட்டுமல்ல, எனக்கு நன்றிக்கடிதங்களும் எழுதியிருந்தனர். இவை யாவும் தற்புகழ்ச்சிக்காக நான் எழுதவில்லை. என்னைப் பற்றி நான் கல்லூரிக்கு ஆற்றிய தொண்டினை எழுதும்படி தாங்கள் கூறியிருந்தபடியால் எழுதுகிறேன். நான் செய்த தொண்டுகள், மாணவர் மேல் நான் கொண்டிருந்த அக்கறை காரணமாகவேயாகும்.

# கருணையே உருவான ஹட்சின்ஸ் அம்மையார்

(திருமதி. தவபுத்திரி யேசுதாசன்; பழைய மாணவி – முன்னாள் எழுது வினைஞர்)

"திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடு காப்பாற்றுவேன்; உன் விதவைகள் என்னை நம்புவார்களாக எரேமியா, 49:11
கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன் - எபி:13:6

இவ்வாசகங்களுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் செல்வி முயூறியல்வயலற் ஹட்சின்ஸ் அம்மையார் ஆவர். தமது வாழ்க்கையைக் கர்த்தருக்கும், அவருடைய சேவைக்கும் அர்ப்பணித்துத் தமது வாழ்வில் அதிக காலத்தை இலங்கையிலேயே சேவித்துக் காட்டுப் பிரதேசம் என்று அழைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திலேயே இருந்து தமது இறுதி மூச்சையும் கர்த்தரிடத்தில் ஒப்படைத்தார். 'வெள்ளைக்கார அம்மா' என்று பலராலும் அழைக்கப்பட்ட இந்த அம்மையார், இங்கிலாந்து வேல்ஸ் எனுமிடத்தில் 1899 பங்குனி 7ந் திகதி மெதடிஸ்த சபையைச் சேர்ந்த பெற்றோருக்கு மகளாகப் பிறந்தவர். 1926ல் ஒக்ஸ்வேட் பல்கலைக்கழகத்தில் M.A. பட்டம் பெற்றபின் மூன்று ஆண்டுகள் ஸ்ரோவ்பிரிஜ் எனுமிடத்தில் ஆசிரியப் பணியாற்றும்போது சூழ்நிலை காரணமாக அங்கிலிக்கன் திருச்சபையில் இணைந்து கொண்டார். அங்கு இருக்கும்போது அதிக நேரத்தை வாசித்தலில் செலவிட்டதன் பயனாகக் "கிழக்கு நாடுகளின் ஊழியங்களைக் குறித்து வாசித்தார். இதன் விளைவாகவும், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலும், பெற்றோர் தமது அழகிய இளம்பராய மகளை அனுப்பப் பயந்த போதிலும், அவர் கர்த்தரின் துணையுடன் கொழும்பு மகளிர் கல்லூரியில் ஆங்கிலம், லத்தின் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியப் பணியை ஏற்று எம் நாட்டுக்கு வந்து சேர்ந்ததாக அவரைப்பற்றி எழுதியவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 1927 கார்த்திகை 10ந் திகதி இலங்கை வந்து சேர்ந்த அவர் கடவுளுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற பெருவாஞ்சை கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன் மிஷனறிப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தபோது ஏழைகள் மத்தியில் வாழவேண்டும் என்ற பெருவிருப்பும் கொண்டிருந்த காரணத்தால் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இந்நோக்கத்தைப் பூர்த்தி செய்யவென ஏற்கனவே இந்தியா சென்று தமிழை நன்கு கற்றதுடன் கர்நாடக சங்கீதமும் கற்று வந்து சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஆங்கிலமும் லத்தினும் கற்பிக்கும். ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார்.

அம்மையாரின் மனவாஞ்சை கஷ்டப்பட்டவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றிருந்ததால், கோப்பாய் பெண் விடுதிச் சாலையிலிருந்து அநாதைகளுக்குப் பணி செய்யும் நோக்குடன், இரண்டு புரசாலைகள் இணைக்கப்பட்ட உள, பெண்கள் பாடசாலைக்கு அதிபராகப் பொறுப்பேற்றார். அப்பாடசாலையில் அநாதையாக 1925ல் சேர்ந்த மீனா என்பவர் (இன்று 86 வயதுடையவர்) கூற்றுப்படி அம்மையார் மிக அன்பாகவும் இரக்கத்துடனும் அநாதைகளைப் பராமரித்தவரென்று அறியமுடிகிறது. மீனா என்ற அந்தப் பெண்ணை இணுவில் ஆஸ்பத்திரிக்குத் தாதிப்பயிற்சி பெறுவதற்குத் தமது 'ஒஸ்ரின்' காரில் அம்மையார் அழைத்துச் சென்றாராம். அநாதைகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் ரூ.75/- உதவிப் பணத்துடன் அப்பிள்ளைகளின் தேவைகள் அனைத்தையும் திருப்தியாகப் பூர்த்தி செய்த அம்மையார், தாம் குரக்கன் கூழ் சமைப்பித்துச் சந்தோஷமாகக் குடிப்பாராம். அழகிய இளமைப் பருவத்தில் அவர் இவ்வாறு அநாதைகளை மாத்திரமன்றிப் பிராணிகளையும் அன்புடன் நடாத்தி வருவாராம். தான் வளர்த்து வந்த ஒரு மைனாவுக்கு வாழைப்பழம் தீத்தி விடுவாரென்றும் அது சாப்பிட்ட மிகுதியைத்தானே உண்பாரென்றும் மீனா என்ற பெண் கூறுவார்.

எனது வாழ்வில் அந்த அம்மையாரின் கருணை பெற்று வாழ்ந்தமையை நான் என்றும் மறந்துவிட முடியாது. 1949ல் எனது தந்தையாரின் திடீர் மரணத்தால் நானும் எனது தாய் சகோதரரும் தாங்கொணாத துயரமும் அதிர்ச்சியும் அடைந்திருந்தோம். என் தாயாரின் மனநிலையைத் தேற்றவென்று உடுவில் சபைப்போதகர் சிறிது காலம் ஹட்சின்ஸ் அம்மையாரிடம் இருக்கும்படி அவரிடம் சேர்ப்பித்தார். எமது உறவினருடன் நாம் தங்கியிருந்தபோது, தாயார் சிறிது காலம் அங்கேயே இருந்தார். திரும்பி எம்மிடம் வருவதாக இருந்த அவரை, அம்மையார் தனது பெருங்கருணையால் விடுதியின் 'மேற்றன்'ஆக நியமித்ததுடன், என்னையும் விடுதிக்குக் கொண்டுவரச் செய்தார். எனது 7வயதுத் தம்பியாரும் எம்மைப் பிரிந்து வாழ்வது கஷ்டமாயிருந்தது. எனவே பெண்கள் விடுதியெனினும் சிறிய ஆண்பிள்ளைகள் இருக்கலாம் என்று தம்பியையும் அங்கு கொண்டுவரச் செய்தார். யாவற்றுக்கும் கடவுள் கிருபையும் அம்மையாரின் கருணையுள்ளமுமே காரணமாயிருந்தன. எம்மைப் போலவே, செல்லம்மாக்கா என்றழைக்கப்பட்ட திருமதி முருகேசு என்பவரும் அவருடைய மூன்று பிள்ளைகளும் அவ்விடுதியில் சேர்க்கப்பட்டனர். அவர் பின்பு உதவி 'மேற்றன்'ஆக நியமிக்கப்பட்டதுடன் விடுதியிலிருந்து பிள்ளைகளின் சீருடைகளைத் தைத்துக் கொடுக்கும் தொழிலையும் செய்து வந்தார். அவ்வாறே பல பெண்களையும் தாய்மாரையும் (4வயது முதல் 40வயது வரையுள்ளவர்கள்) விடுதியில் சேர்த்து வைத்து அவர்களுக்கு நெசவு, தையல், பன்னவேலை என்பவற்றைக் கற்பித்து வைத்துச் சுயதொழில் செய்து சம்பாதிக்க வழிவகுத்துக் கொடுத்தார். விடுதியிலுள்ள பிள்ளைகள் சிறு வேலைகளுக்குப் பொறுப்பாக உதவிகள் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திப் பொறுப்புணர்வை வளர்த்தார். தாய்மாராக இருந்தவர்கள் சிறிய பிள்ளைகளைப் பராமரிப்பதில் அம்மையாருக்கு உதவி செய்தனர்.

1951ல் நான் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்குப்போன பொழுது அம்மையார் உப அதிபராகவும் விடுதிச்சாலை, அநாதை இல்லம் என்பவற்றுக்குப் பொறுப்பானவராகவும் பணியாற்றினார். அவர் அப்போது கண்தெரியாத ஒரு பெண், வாய் பேச முடியாத ஒரு பெண், மற்றும் 3ஆண்பிள்ளைகள், 2பெண்பிள்ளைகள் ஆகியோரை முழுப் பொறுப்புமெடுத்து வளர்த்து வந்தார். அவர்களுள் ஒருவரான றொபேட் டெர்ப்ஸ் என்பவரைத் தனது பிள்ளையாகத் தத்தெடுத்துக் கொண்டிருந்தார். தான் பராமரித்த அநாதைப் பிள்ளைகளுக்கு வருத்தம் வந்தால் மிகக் கவனமாகத் தனது அறைக்குப் பக்கத்து அறையில் தங்க வைத்துப் பராமரிப்பாராம். அவ்வாறு செய்து வந்தும் நாகேஸ்வரி என்ற பெண் நோய் வந்து இறந்தபோது அம்மையார் மிகுந்த வேதனையடைந்ததாக மீனா என்பவர் கூறினார்.

விடுதிச் சாலையிலிருந்த சகல பிள்ளைகளையும் நாளாந்த வாழ்வில் நல்ல முறையில் வாழப் பழக்கி வைத்தார். காலையில் எழுந்து கிணற்றடிக்குச் சென்று பல்துலக்கி முகம் கழுவி ஜெபம் செய்வது, பாடசாலை செல்வது, ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் வெள்ளை உடையணிந்து வரிசையாகத் தேவாலயம் செல்வது, மாலையில் பாட்டு நேரம் 6.30மணிக்கு எல்லோரும் அம்மையாரின் பங்களா விறாந்தையில் இருந்து பாட்டுப்பாடி ஆண்டவரைத் துதிப்பது முதலிய யாவற்றிலும் அம்மையார் எம்மை மேற்பார்வை செய்து ஊக்குவித்து வழி நடாத்தி வந்தார். ஆங்கிலப்பாட்டு, தமிழ்ப்பாட்டு யாவற்றிலும் பயிற்சி தந்து, வயதில் குறைந்த என்னை Alto கற்பித்து முதன்முதலாக ஐக்கிய நத்தார் விழாவில் பாடவைத்தமையை நான் இன்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அவர் எனது சிறு பராயத்தில் தந்த பயிற்சிகளால் நான் எனது கிறிஸ்தவ வாழ்க்கையில் பல காரியங்களைத் துணிவுடனும் தடங்கலின்றியும் செய்யக் கூடியதாக இருந்தது; இருக்கின்றது என்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அம்மையார், விடுதியில் இருந்த பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரியாக இருந்து வந்தார். நான் முதன் முதலில் அவரைக் கண்டபோது அவர் விடுதி வாசலில் மிக எளிமையான தோற்றமுள்ளவராக இருந்தார். ஒற்றைக்கொண்டையும் காலில் பாதணி எதுவுமில்லாமல் இருந்த அவரைக் கண்டதும், பின்பு அவர் தமது வேலைகளுக்கு வெளியே செல்லும் போது சைக்கிளில் போய் வருவதும் என்னை மிகவும் ஆச்சரியமடைய வைத்த நிகழ்வுகளாகும். அம்மையாரின் பிறந்தநாள் தவசுக் காலத்தில் மார்ச் மாதம் 7ந்தேதி அமைந்திருப்பதால். அக்காலத்தில் பிறந்த நாள் வாழ்த்துப்பாடி ஆரவாரமாக

அதைக் கொண்டாட அவர் அனுமதிப்பதில்லை. இது அவரின் சமயப் பற்றுக் காரணமாக ஏற்பட்ட நல்ல சிந்தனையாகும்.

எளிமையான தோற்றமும் கருணையான சுபாவமும் கொண்ட அவர் விடுதியிலுள்ளோரை ஓய்வு நாளாகிய ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை வேளைகளில் வெளியே உலாவ அழைத்துச் செல்வார். கோப்பாய்க் கடற்கரை, "கூடம்பத்தை"ப் பகுதியிலுள்ள தோட்டப் பகுதிகள், இருபாலை கிழக்கிலுள்ள "குசவபிட்டி" என்ற உயரமான இடம் ஆகியவற்றுக்கு எல்லோரும் போய் வருவோம். கடற்கரையில் பாலத்தடியில் விளையாடி விட்டு நாங்கள் தரவையில் சுற்றி இருந்து பாடி மகிழ்வோம் அம்மையாரும் எங்கள் கூட இருந்து பாடிச் சந்தோஷப்படுத்துவார். கூடம் பத்தைப் பகுதிக்குப் போகும்போது பழங்கள் கண்டால் பிடுங்கித் தோட்டக்காரரிடம் ஏச்சு வாங்கும்போது அம்மையார் எம்மைக் கோபிப்பதுண்டு, அதே போன்று முன்பு விளையாட்டு மைதானத்துக்குச் செல்லும் வழியிலுள்ள தோட்டப் பகுதிகளில் குறும்பு செய்யும் மாணவரையும் அவர் சத்தமிட்டுக் கண்டிப்பதுண்டு, இவற்றின் பயனாக விவசாயிகள் அனைவரும் அம்மையாரை நன்கு மதித்தனர்.

சாதி, மத, பொருளாதார வேறுபாடுகளின்றி விடுதி மாணவரையும், பாடசாலை மாணவரையும் அம்மையார் பெரிதும் அன்புடன் அணைத்து நடந்து கொண்டமையாலும், பாடசாலை திறம்பட இயங்கியமையாலும் மாசியம்பிட்டி, பளை, உடுத்துறை, மருதங்கேணி, மீசாலை, எழுதுமட்டுவாழ் முதலிய இடங்களிலிருந்தும், வேறு மாவட்டங்களிலிருந்தும் (உ + ம். ஹற்றன்) பிள்ளைகள் வந்து விடுதியில் தங்கியிருந்து படித்தனர். விடுதியில் நீண்ட காலம் தங்கியிருந்த பிள்ளைகளின் தனிப்பட்ட வாழ்க்கையிலேகூட அவர் அக்கறை காட்டி வந்துள்ளார் என்பதற்கு மீனா என்பவரின் திருமணம் உதாரணமாகும். அவர் கூறியதன்படி அம்மையார் அவருக்குத் திருமணம் பேசப்பட்டபோது கூடத்தகுந்த ஆலோசனை வழங்கிப் பொருத்தமான மதத்தவரையே திருமணம் செய்வித்து வைத்ததாக அறிய முடிகின்றது. ஆதரவற்ற பிள்ளைகளாக விடுதியிலிருந்தோரை விடுமுறை காலத்திலும் வைத்துப் பராமரித்து, அவர்களுக்கென்றே சமையல் காரரையும் வைத்துப் பேணிய அவர் கருணையை மறந்துவிட முடியாது.

அம்மையார் இலங்கையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சிறந்த பணியாற்றி 1954ல் ஓய்வு பெற்றுத் தமது தாய் நாட்டுக்குச் சென்றார். எனினும் அவருடைய சேவை மனப்பான்மை மீண்டும் அவரை இலங்கைக்குக் கொண்டு வந்தது. கர்த்தரின் துணையுடன் யானைக்காடாக இருந்த கிளிநொச்சிப் பகுதியில் தனது பணியை ஆரம்பித்தார். தமது ஓய்வூதியப் பணத்தைக் கொண்டு காட்டுப்பகுதியைப் பசும் புற்றரையாக்கிச் சிறிய கட்டிடம் அமைத்து 15இளம் பிள்ளைகளை வைத்துப் பராமரிக்கத் தொடங்கினார். பவளி அக்கா என்பவரைத் தமக்கு உதவியாக வைத்துக் கொண்டு, இயேசுவின் விசுவாசத்துடன், அவர் எல்லாத் தேவைகளையும் சந்திப்பார் என்ற நம்பிக்கையுடன் புகலிடமற்றோர், விதவைகள், அநாதைகள், ஏழைகள் என்று பலரையும் பராமரிக்கும் "கருணா நிலையமாக" அந்த இடம் இயங்கியது. தன்னையே சாறாகப் பிழிந்து உண்மையான உத்தம ஊழியக்காரியாக அவர் பணிபுரிவதைப் பலரும் கண்டனர். அவரை நன்கு அறிந்த ஒரு தாயார் அவரைச் சந்திக்கச் சென்றவேளை, அவர் சங்கக் கடையிலிருந்து கூப்பன் சாமான் வாங்கித் தலையில் சுமந்தபடி பொல்லும் பிடித்துக்கொண்டு வீதியால் வந்தகாட்சி கண்டு மிகுந்த மனவேதனை அடைந்தாராம். அம்மையார் அப்பணியை மிக்க மகிழ்ச்சியுடனேயே செய்து வந்தாராம். அவ்வாறு தமது இறுதி மூச்சுவரை முச்சக்கர வண்டியிலிருந்தும் சேவை செய்தாரென்று அறிந்தோம், முன்னர் போக்குவரத்து வசதிகள் இருந்த காலத்தில் யாமும் அம்மையாரின் பணிகளைச் சென்று பார்த்துள்ளோம். அவர் இறுதிவரை அங்கேயே சீவித்து மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அம்மையார் தொடக்கி வைத்த பணியைத் தொடர்ந்து காலத்துக்குக் காலம் ஏற்ற ஆட்களையும் ஏற்படுத்தி அவர்கள் விசுவாசமான வாழ்க்கையுடன் சேவை செய்யக் கர்த்தருடைய நிறைவான ஆசீர்வாதம் இருக்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

✪ இரவும் பகலும் மாறி மாறி வருவது போல் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது தான் மனித வாழ்க்கை

# கிறிஸ்தவ கல்லூரி அதிபர்களுடன் என் அனுபவம்

திரு.S.K. தங்கவடிவேல் பழைய மாணவன், செயலாளர், 150 ஆவது ஆண்டு விழாச்சபை)

1952ல் நான் இக்கல்லூரியில் 5ம் வகுப்பு மாணவனாகச் சேர்ந்த வேளை திரு.A.W.இராஜசேகரம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலம் முதல் இன்று அதிபராகக் கடமையாற்றும் திருநசிவகடாட்சம் அவர்கள் வரை பணியாற்றிய பல்வேறு அதிபர்களுடனும், மாணவன் என்ற வகையிலும், பழைய மாணவனாகப் பழைய மாணவர் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவன் என்ற வகையிலும் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பங்கள் கிடைத்து வந்திருக்கின்றன. இந்த 150ஆவது ஆண்டு விழாக் காலத்தில் அவர்களுடனான அனுபவங்கள் பற்றி இச்சஞ்சிகையில் கருத்துக் கூறுதல் பொருத்தமென்பது எனது கருத்தாகும்.

÷ரு A.W.இராஜசேகரம் அவர்கள் எல்லோரிடமும் அன்பாகப் பழகுபவர். இரக்க சுபாவமுடையவர். அவரைத் தொடர்ந்து குறுகிய காலம் பதில் அதிபராகப் பணிபுரிந்த திரு.D.J.தம்பாபிள்ளை அவர்களும் அதேபோன்று அன்பாகவும் நகைச்சுவையுடனும் பழகுபவராக இருந்தார். நான் சிரேஷ்ட வகுப்பில் கற்ற காலத்தில் ஒரு புது அதிபர் - கண்டிப்பான பேர்வழி - வரப்போகிறார் என எமது ஆசிரியர்கள் கூறினார்கள். அவ்வாறே கொழும்பிலிருந்து வந்து எமது கல்லூரிப் பொறுப்பை ஏற்றவர் அமரர் திரு.E.C.A.நவரத்தினராஜா ஆவர். கம்பீரமான தோற்றமுள்ள அவர் கல்லூரிக்கு ஒளிவிளக்காய் அமைந்தவர். திறமை வாய்ந்த ஆசிரியர்களைக் கொழும்பிலிருந்து வருவித்தும், இங்கிருந்து பெற்றும், ஏற்கெனவே இருந்தோரை ஊக்குவித்தும் கல்வி, விளையாட்டுகள், சாரணீயம் முதலிய துறைகளை நன்கு வளர்ச்சிபெற வைத்ததால் கல்லூரி அவரது காலத்தில் பலவித முன்னேற்றங்களைக் கண்டது. மேடும் பள்ளமுமாக, இரு பாழடைந்த கிணறுகளுடனிருந்த பாடசாலை நிலப்பகுதியைச் சிறப்பான ஒரு மைதானமாக மாற்றியமைத்தார். இதை எம்மால் இலகுவில் மறக்க முடியாது. அவரின் காலப் பகுதியில் நான் மாணவனாக இருக்கும் பாக்கியம் பெற்றிருந்ததுடன் பின்பு பழைய மாணவனாகவும் இருந்தேன். பழைய மாணவரை ஒருங்கிணைத்துக் கல்லூரி மாணவருடன் எதிராக எம்மையெல்லாம் துடுப்பாட ஊக்குவித்து, விளையாட்டுத் துறையுடன் பழைய மாணவர் அமைப்பையும் வளர்த்தார்.

திரு.நவரத்தினராஜா அவர்களின் மறைவால் ஏற்பட்ட அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்பியவர். திரு.E.K.சண்முகநாதன் அவர்கள். அவருடைய காலத்தில் கல்லூரியில் கூட்டுறவுத்துறை அமைந்து நல்ல வளர்ச்சி கண்டமை குறிப்பிடத்தக்கது. அமரர் E.C.A.நவரத்தினராஜா ஞாபகார்த்த நிதி அவரால் ஆரம்பிக்கப்பட்டபோது, நிதி சேகரிக்கும் குழுவில் என்னையும் சேர்த்து ஊக்குவித்தமையால், நிதி சேகரித்து ஊக்கவித்தமையால், நிதி சேரித்த குழுக்களில் எனது குழு இரண்டாவது இடத்தைப் பெற்று மேலும் ஆர்வமுடன் செயற்பட முடிந்தது. இந்த அனுபவத்தை யான் மறப்பதற்கில்லை.

E.K.சண்முகநாதன் அவர்கள் மாற்றலாகிச் சென்றதைத் தொடர்ந்து அதிபரான திரு.M.கார்த்திகேயன், அவரைத் தொடர்ந்து பதவியேற்ற திரு.S.சிவசுப்பிரமணியம் ஆகியோர் தாராள மனப்பாங்குடன் எல்லோரிடமும் நன்கு பழகியதுஎம்நினைவில் நிலைத்துள்ளது. தொடர்ந்து திரு.S.கந்தசாமி அவர்கள் அதிபராகப் பணியாற்றியபோது யான் பழைய மாணவர் சங்கச் செயலாளராக இருந்ததால் அவருடன் இணைந்து செல்லையா மண்டபத்தை அமைக்கும் வேலைகள் செய்தமையை மறந்துவிட இயலாது. கல்வித்திணைக்களம் எமக்குத் தந்த கட்டிடப் பொருட்களை அதிபருடன் சேர்ந்து சிரமதானம் மூலம் எமது சங்கம் அச்சுவேலியில் இருந்துகொண்டு வந்து சேர்த்தே இக்கட்டிடம் அமைத்தோம். இவரே நவரத்தினராஜா மண்டபக் கீழ்த்தளமும் அமைத்தார். அதிபர் அவர்கள் எம்மைவிட்டு நீங்கியபோது எமது சங்கம் அன்னாரின் சேவையை பாராட்டிக் கொட்டும் மழையின் மத்தியிலும் இராப்போசன விருந்துபசாரம் அளித்தமையை மறக்கமுடியாது. தொடர்ந்து அதிபராகப் பதவியேற்ற திரு.சி.சிவனேசன் அவர்கள் கலையார்வம் மிக்கவர், கல்லூரி அபிவிருத்தியில் பெரும் அக்கறை கொண்டிருந்தவர். அவருடன் இணைந்து பணியாற்றிய பழைய மாணவர் சங்கச் செயலாளர் என்பதால் இலங்கையின் புகழ்பெற்ற அறிவிப்பாளர் அப்துல் ஹமீட், பொப் பாடகர்கள் நித்தி கனகரத்தினம், சண் ஆகியோரையும் வரவழைத்து எமது கிராமத்துப் பாடகர்களையும் இணைத்து பெரிய கலைவிழா நிகழ்த்தினோம். வேறு நல்ல கலை நிகழ்ச்சிகளும் இந்த அதிபர் காலத்தில் நடாத்தப்பெற்றன. 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஞாபகார்த்த மண்டபமும் அவருடைய முயற்சியாலே அமைந்தது. நவரத்தினராஜா மண்டபத்தின் மேல்மாடிப் பகுதியும் இவருடைய காலத்திலே அமைக்கப்பட்டது.

திரு.சிவனேசனைத் தொடர்ந்து அதிபராகப் பணியாற்றிய திரு.S.செல்வரத்தினம் மென்மையாகப் பேசும் நல்ல சுபாவமுடையவர். நான் பழைய மாணவர் சங்கப் பொருளாராக அக்காலத்தில்

பணிபுரிந்துள்ளேன். பழைய மாணவர் சங்கத்தின் பட்டியல் சீரிய முறையில் பேண ஆரம்பிக்கப்பட்டது. இவரது காலத்திலேயாகும். கல்லூரியின் தொழில்நுட்பப்பிரிவுக்கான கட்டிடம் அமைத்தல் பணியை முன்னெடுத்தவர் இவரேயாவர்.

திரு.செல்வரத்தினத்தைத் தொடர்ந்து குறுகிய காலம் பணியாற்றியவர் திருமதி.அருள்ராஜா. அவர்பின் அதிபரான திரு.P.K. இராசரத்தினம் மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றிய கொத்தணி அதிபராகவும் விளங்கியவர். அவரைத் தொடர்ந்து அதிபராகப் பொறுப்பேற்ற திரு.த.முத்துக்குமாரசாமி அவர்களுடன் பழைய மாணவர் சங்கச் செயலாளராக யான் இணைந்து பல சிரமதானப் பணிகள், நிதி சேகரிப்புப் பணிகள், கலைநிகழ்ச்சிகள், நூலக அபிவிருத்திப் பணிகள் யாவற்றையும் செய்துள்ளேன். இந்த அதிபர் இரவு 9 மணி வரை பாடசாலையிலே தங்கியிருப்பார். சில சந்தர்ப்பங்களில் பலவேலைகள் தொடர்பாகவும் திட்டமிட்டு விட்டு இரவு 10 மணிக்குத்தான் நானும் அவரும் பாடசாலையிலிருந்து வெளியேறுவோம். இதனால் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவருடனான தொடர்புகள் போன்ற பல விடயங்களை நாங்கள் செய்ய முடிந்தது. அக் காலத்தில் மாணவர்கள் இரவில் பாடசாலையில் வந்து படிப்பதுண்டு. பல கலை நிகழ்ச்சிகளை நடாத்தி நிதி சேகரித்தோம். ஒரு கலை விழாவில் எனது தயாரிப்பான "மலராத மொட்டுகள்" என்ற நாடகத்தின் மூலம் கணிசமான நிதி சேகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மற்றொரு கலைவிழா மூலமும் அவ்வாறே நிதி சேகரிக்கப்பட்டது. மேலும் பல இடங்களுக்கும் நாம் சென்று நிதி சேகரித்துள்ளோம். பழைய கட்டிடங்கள் இடித்து அழித்தல் போன்ற பாரிய சிரமதானப் பணிகளும் அவர் காலத்தில் இடம் பெற்றன. அவரும் எம்மோடு சேர்ந்து அவற்றில் ஈடுபடுவார். தமது கையில் நோவு இருந்தபோதும் அதைப் பொருட்படுத்தாது கல்லுக் கிளப்புவதில் அவரும் ஈடுபட்டதையும், அப்பணிகள் முடிந்த பின்பு கையை வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை பெற்றதையும் என்னால் மறக்கவே முடியாது. இவ்வாறு அதிபர் முத்துக்குமாரசாமி அவர்களின் காலத்தில் பல சம்பவங்கள் பாடசாலை அபிவிருத்திக்குப் பெரிதும் உதவியாக அமைந்தன. அவரைத் தொடர்ந்து பதில் அதிபராகத் திருமதி.இரத்தினசபாபதிப்பிள்ளை கஷ்ட சூழ்நிலையில் கல்லூரியை மீளவும் சிறப்பாக இயங்க ஆவன செய்தார்.

தற்போதைய அதிபர் திரு.ந.சிவகடாட்சம் அவர்கள் பதவிக்கு வந்த காலத்திலிருந்து நான் பழைய மாணவர் சங்கச் செயலாளராக, பொருளாளராக, உப தலைவராக என்று பல பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட்டு இப்போது உபதலைவராகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவராகவும் அமைந்துள்ளேன். அவருடன் நான் பெற்ற அனுபவத்திலிருந்து எனது கருத்து, அவருடன் வேலை செய்வதற்குத் தனித்திறமை வேண்டும் என்பதாகும். அவர் இப்பாடசாலையைத் தமது வீடாகக் கருதிச் செயல்படும் ஒருவராவர். பாடசாலைப் பணிகள் தொடர்பாக நான் இரவு 9,10 மணிக்குக்கூட வீடு செல்வதுண்டு. அவருக்கும் நித்திரை செய்யும் வேளை கூடப் பாடசாலையைப் பற்றிய சிந்தனையே இருப்பதை யான் அறிவேன். பாடசாலையின் பழைய மாணவர் எவராக இருப்பினும் அவரைச் சந்திக்க எந்த இடத்துக்கும், எந்த நேரத்திலும், எம்போன்ற சிலரை அழைத்துச் செல்வார். கல்லூரி வளர்ச்சி தொடர்பாகக் கலந்துரையாடுவார். பாடசாலை வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்து நிற்கும் ஒரு தியாகி என அவரைக் குறிப்பிடலாம். தமது வீட்டில் கட்டாயமாக நிற்க வேண்டிய ஒரு நிகழ்வுக்குக்கூட நிற்காது பாடசாலையில் முக்கியமானதொரு விடயத்தைக் கவனிக்க அவர் வந்திருந்தமையை யாமறிவோம். பழைய மாணவர் சங்க நிலையான வைப்புப் பணத்தின் வட்டிப் பணத்திலிருந்து எமது சங்கத்தினூடாக வறிய மாணவர் பலருக்கு உதவி செய்ய ஊக்குவித்தமை குறிப்பிடத்தக்கது. எமது கிராம இளைஞர்களை ஒன்றிணைத்துக் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக் கழகத்தை உருவாக்கி அதன் போஷகராகவும், பணியாற்றுகிறார். இதனால் பல இளைஞர்கள் வளர்க்கப்பட்டு இன்று பல முன்னேற்றப் பணிகளில் ஈடுபடும் தலைவர்களாக முன்னேறியுள்ளனர். கிராம மக்கள் யாவரையும், சிறப்பாக பழைய மாணவர்களை அவர்களின் பதவி, புகழ், பொருளாதார, சமூக நிலைமைகள் என்ற பேதம் எதுவுமின்றி எல்லோரையும் சமமாக மதித்து நடக்கும் முற்போக்குச் சிந்தனையுடையவர். 150ஆவது ஆண்டு நிறைவு விழாவை எத்தனையோ இடர்களின் மத்தியிலும் உறுதியுடன் முன்னெடுத்துச் சிறப்பாக நடைபெறச் செய்து வருபவர். இங்கு நாம் புரிந்து கொள்வது அவரின் போற்றுதற்குரிய சிறந்த தலைமைத்துவமேயாகும்.

நான் பல்வேறு பொறுப்புகளில் இருந்து அன்று முதல் இன்று வரை அவதானித்து வந்ததில் எல்லா அதிபர்களுமே கல்லூரி நலனுக்குத் தமது பங்களிப்புகளை பற்றுடனும், முழு மனதுடனும் நல்ல முறையில் வழங்கி வந்ததால்தான் இன்று எமது அறிவாலயம் மிகவும் உன்னத நிலையில் 150ஆவது ஆண்டு நிறைவில் பொலிவுடன் திகழ்கின்றது. இதற்காக அனைவருக்குமே யாம் நன்றியுணர்வை வெளிப்படுத்தி வாழ்த்துகிறோம்.

*** "தனது கடமைகளை சரிவரச் செய்யும் மனிதனே உரிமைகளைப் பெறத் தகுதியுடையவன்"**

# ஐம்பது வருஷங்களுக்கு முன்

(அமரர் வ.கந்தப்பிள்ளை பழைய மாணவர் ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் வலி – கிழக்கு )

ஐம்பது வருஷங்களுக்கு முன் இரண்டு தனிப்பட்ட கல்வி நிலையங்களாக இயங்கி வந்த ஸ்தாபனங்கள் ஒன்றிணைந்தே கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்று இப்போது அழைக்கப்பட்டு வருகிறது. இதில் ஒன்று C.M.S ஆங்கிலப் பாடசாலையாகும். அது தேவாலயத்திற்குத் தெற்கே இருந்த பழைய கட்டடத்தில் இயங்கி வந்தது. இப் பாடசாலையில் ஆங்கிலம் மூலமே எல்லாப்பாடங்ககளும் போதிக்கப்பட்டன. முதலாம் வகுப்பு தொடக்கம் ஆங்கில பாடசாலை நீங்கும் தாரதரப்பத்திர வகுப்பு (ESLC பின்னர் JAC) வரைக்கும் ஆங்கிலத்தில் கல்வி போதிக்கப்பட்டது. தமிழ் ஒரு பாடம். இப் பாடசாலையானது சுண்டிக்குளி பரியோவான் (St. Johns College) கல்லூரியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் ஒரு தலைமையாசிரியர் தலைமையின் கீழ் இயங்கி வந்தது.

ஏனைய கட்டடங்களில் பொதுவாகக் கோப்பாய் பெண்கள் பாடசாலை என வழங்கிய கல்வி நிலையம் இயங்கி வந்தது. இதில் நான்கு பகுதிகள் இருந்தன. G.S.செல்லையா ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்ட இடத்தில் இருந்த கட்டடத்தில் ஆரம்பப்பாடசாலை இருந்தது. இதில் முதலாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரையும் நடைபெற்றன. தற்போது நவரத்தினராஜா ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்டுள்ள இடத்தில் இருந்த பழைய கட்டிடத்தில் பெண்கள் தமிழ் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை இருந்தது. அதற்குக் கிழக்கேயுள்ள பெரிய கட்டிடத்தில் 4ம் வகுப்புத் தொடக்கம் 9ம் வகுப்பு வரையும் நடை பெற்றன. இம் மூன்று பகுதிகளில் போதனா மொழி தமிழே.

ஆரம்பப் பாடசாலையிலும் 4ம், 5ம் வகுப்புகளிலும் ஆண்கள் பெண்கள் சேர்ந்து படிக்கலாம். ஆறாம் வகுப்பிலும் அதற்கு மேலும் ஆண்கள் விலகிவிட வேண்டியது.

பெண்பிள்ளைகளுக்குத் தங்கும் வசதிக்காக விடுதிச்சாலையும் நடாத்தப்பட்டது. இந்த நான்கு பகுதிகள் சேர்ந்த பெரிய ஸ்தாபனத்தைப் பொதுமக்கள் கோப்பாய் பெண் பாடசாலை என வழங்குவர். இந்த ஸ்தாபனத்திற்கு ஹச்சின்ஸ் அம்மையார் என்ற மிஷனரி அம்மையார் பொறுப்பாக இங்கேயே வசித்து நடாத்தி வந்தார். இப்போது உபஅதிபர் அறை ஆசிரியர்கள் கூடுமிடம், கந்தோர் ஆகியவை அமைந்துள்ள பெரிய கட்டிடமே ஹட்சின்ஸ் அம்மையார் வசித்து வந்த இடமாகும் இவர் மிகவும் சாந்தமும் அன்பும் நிறைந்த அம்மையார். எல்லாப் பிள்ளைகளையும் சமமாகவும் ஆதரவாகவும் நடாத்தி அவர்கள் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தவர்.

இப்பகுதிக்கும் ஆங்கிலப் பாடசாலைப் பகுதிக்கும் இடையே ஒரு வேலி இருந்தது.

ஐம்பத்து நாலு வருஷங்களுக்கு முன் நான் எனது கல்வியை மேற் கூறிய ஆரம்பப் பாடசாலையில் தொடங்கினேன். இப் பாடசாலையில் கல்வி பயின்ற நாட்கள் இன்பமும் துன்பமும் நிறைந்தனவாய் இருந்தன. அன்புடனும் ஆதரவுடனும் சில ஆசிரியர்கள் கல்வி புகட்டினர். சில ஆசிரியர்களோ "அடியாத மாடு படியாது" என்ற பழமொழியில் தீவிர நம்பிக்கை கொண்டவர்கள் பிரம்பும் பாவிப்பார்கள். ஆனால் அநேகமாக G.S.செல்லையா ஞாபகார்த்த மண்டபத்திற்கு தென்மேற்கு மூலையிலுள்ள புளிய மரத்தின் கம்புகள்தான் பிரம்புக்குப் பதிலாக எங்கள் பின்பக்கத்தைப் பதம் பார்த்தன. சில வேளையில் நாங்கள் கொண்டு போகும் பனைமட்டை "யார்த்தடியும்" உபயோகப்படும். ஆனால் ஒன்று அந்தப் புளியமரத்தின் கம்புகள்தான் கசப்பைக் கொடுத்தனவே தவிர அதன் பழங்கள், காய்கள், பூக்கள் ஏன் குருத்து இலைகள் கூட ஒரு இனிப்புக் கலந்த ''புளிப்புச்சுவையை'' கொடுத்தன. இந்தச் சுவை இந்தப் புளியமரத்துக்கு மாத்திரம் தனித்துவமாக இருந்தது. இப்போது எப்படியோ தெரியாது.

எனவே இப்படியான சுவைமிக்க பழம், பூ முதலிய பொருட்களைத் தரும் புளியமரத்தின் கொப்புக்களால் அடி பெறுவதனால் எங்களுக்கு அவ்வளவு வருத்தத்தைக் கொடுக்கவில்லை. பாடசாலை நேரத்துக்கு முன்னும் பின்னும்

இடைவேளைகளிலும் நாங்கள் அந்தப் புளியமரத்தின் கீழேயே நிற்போம். அதற்கு எறியும் கற்களுக்கோ கணக்கில்லை.

இன்னும் அடுத்த வீட்டுவளவில் உள்ள நெல்லி மரத்தின் மேலும் எங்கள் கவனம் செல்லும், அந்த வீட்டில் திரு.சுவாமிநாதன் (விவாக இறப்புப் பிறப்புப் பதிவாளர் திரு.சுப்பிரமணியம் அவர்களின் தந்தையார்) அவர்களும் அவர்களுடைய தாய் மாமன் குமாரு அப்பா அவர்களும் வசித்து வந்தார்கள் குமாரு அப்பா ஒரு கட்டையர். தாடி மீசை எல்லாம் வைத்து இருந்தார் பார்ப்பதற்கு ஒரளவு பயங்கரமாக இருப்பார் குமாரு அப்பா வீட்டில் இருக்கும் போது நாங்கள் நெல்லி மரத்துக்கு கிட்டவே போகமுடியாது ஒரு பெரிய தடி கொண்டு எங்களை விரட்டித் துரத்தி விடுவார் ஆனால் திரு.சுவாமிநாதன் அப்படிப்பட்டவரல்லர். மரத்தில் ஏறி ஆளுக்கு இரண்டு காய் வீதம் பறித்துக் கொண்டு போக அனுமதியளிப்பார். சில வேளைகளில் தானே விழுந்த காய்களைப் பொறுக்கி எங்களுக்குத் தருவார். நெல்லிக் காயைக் கடித்துக் கொண்டு தண்ணீர் குடித்துதிருக்கீறீர்களா? அதன் சுவைக்கு நிகர் அதேதான்.

அப்புறம் இலுப்பைக் கொட்டை விழும் காலங்களில் அக்கம் பக்கத்திலுள்ள இலுப்பை மரங்களின் கீழ் திரிவோம், இலுப்பைக் கொட்டை பொறுக்கிச் சேர்த்து விளையாடுவதற்குத்தான். "வாளைக்காய்ச்சி" என்ற பெரிய இனத்துக் கொட்டை கிடைத்து விட்டால் எங்கள் பாடு கொண்டாட்டம் அதைக் கொண்டு விளையாட்டுக்களில் சுலபமாக வெற்றி பெற்று விடலாம். வெற்றிக் கொட்டைகள் அதிகம் சேர்த்து விடலாம்.

நாவல் பழக்காலங்களிலும் கொய்யாப்பழக் காலங்களிலும் மரங்களில் ஏறிப் பழங்களைப் பறித்து உண்ணுவோம். நிலத்தில் விழுந்த பழங்களை உண்ணமாட்டோம். ஏன் தெரியுமா? ஔவைப் பிராட்டியாரின் "சுட்ட பழம் சுடாத பழம்" கதை கேட்டிருந்த படியால் சுடாத பழமாகவே மரத்தில் பறித்து உண்ணுவோம் சில வேளை மரத்திலிருநது தவறி விழுவதுமுண்டு, அந்நேரங்களில் பெற்றோரிடம் வசவு வாங்கி ஒடட்கப்புலத்தாரின் புக்கை கட்டிக் கொண்டு இரண்டொரு கிழமைக்கு வீட்டோடு முடங்கிக் கிடக்க நேரிடும்.

இப்படியாக விளையாடியும், அடிவாங்கியும், ஏச்சுப் பேச்சு வாங்கியும் ஆரம்பப் பாடசலையில் மூன்றாம் வகுப்பு வரைக்கும் கல்வி கற்றோம், எண், எழுத்து, வாசிப்பு ஆகியவையே பாடங்கள். காலம் சென்ற S.V சின்னப்பா ஆசிரியர், திருமதி R.C சின்னப்பா நாகரத்தின அக்கா, சின்னாச்சி அக்கா, எமிலி அக்கா, இரத்தினம் அக்கா, ஆகிய ஆசிரியாகளே எங்கள் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள். தங்கள் மாணாக்கர்கள் நன்றாகப் படித்து முன்னேற வேண்டும் என்றும் ஒழுக்கத்துடன் வாழ வேண்டு மென்றும் அரும்பாடுபட்டுத் தங்கள் கடமைகளைச் செய்தார்கள். சில நேரங்களில் பிரம்பைப் பாவித்தாலும் அதுவும் எங்கள் நன்மைக்கே என்றும் அவர்கள் கருதினார்கள் ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து எங்களுக்கு உதாரண புருஷ ஸ்தீரிகளாக விளங்கினர். அவர்கள் எல்லோருக்கும் எனது நன்றியறிதலைச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

இதன் பின்னர் நாலாம் ஐந்தாம் வகுப்புக்கள் கற்றது "மேல்" பள்ளிக் கூடத்தில், அதாவது தற்போது நவரத்தினராஜா ஞாபகார்த்த மண்டபமிருக்கும் இடத்திற்கு கிழக்கே இருக்கும் பழைய கட்டிடத்தில் நாலாம் வகுப்பில் எண், எழுத்து, வாசிப்போடு, இலக்கணம், பூகோளம், சரித்திரம், ஆகிய பாடங்களும் சேர்க்கப்பட்டன. அதன் வகுப்பு ஆசிரியை சின்னம்மா அக்கா, ஐந்தாம் வகுப்பில் இவற்றோடு சமயமும் (கிறிஸ்தவ சமயம்) போதிக்கப்பட்டது. இதன் வகுப்பாசிரியை முத்துப்பிள்ளை அக்கா. இவர் மிகத் திறமையாகப் பாடங்களை போதிப்பார் அத்தோடுபாட்டு, நாடகம், முதலிய நடவடிக்கைகளிலும் எங்களை ஊக்கத் தோடு ஈடுபடுத்துவார். தாவீது என்ற இஸ்ரேலிய அரசன் கொலியாத் என்ற இராட்சதனைக் கல்லால் அடித்து வீழ்த்திய கதையை எங்கள் வகுப்பு மாணவர்கள் நடித்ததாக ஞாபகம்.

ஐந்தாம் வகுப்புக்குப் பின் ஆண்பிள்ளைகள் தொடர்ந்து படிக்க முடியாது அத்தோடு ஆங்கிலம் படிக்க வேண்டுமென எனது குடும்பத்தினர் விரும்பினார். எனவே C.M.S ஆங்கிலப் பாடசாலையில் 1929ஆம் ஆண்டு சேர்ந்தேன். அப்போது அதன் தலைமையாசிரியர் திரு.J.P.செல்லையா அவர்கள் ஆகும். இவர் இருபாலையில் வசித்தவர் நல்ல உயர்ந்த தோற்றமும் எப்போதும் கண்ணியம் ததும்பும் முகத்தோற்றமும்

உடையவர் உதவி ஆசிரியர்கள் முதற் கொண்டு பாமர மக்கள் வரை "கெட்மாஸ்ரர்" என்று மரியாதையுடன் கணிக்கக் கூடிய விதமாக எல்லாருடைய மனதை கவர்ந்தவர் இவர் கணிதம், பூகோளம், ஆகிய பாடங்களைப் போதிப்பதில் மிகவும் திறமைசாலி முக்கியமாக பூகோளப் படங்களை எப்படி வரைவது என்பதை மிகவும் சுலபமாகவும் மனதில் ஆழமாகப் பதியக் கூடிய விதமாகவும் போதிப்பார். உதாரணமாகத் தென்னமெரிக்காக் கண்டப் படத்தை வரைவதானால் முதல் ஒரு சருவக்குடத்தின் படத்தை நாலு கோடு போட்டு கரும்பலகையில் வரைவார். அதற்குப் பின்னர் வேண்டிய சிறு மாற்றங்களைச் செய்து மிகச் சொற்ப நேரத்தில் மிக இலகுவாக தென் அமெரிக்காக் கண்டப் படத்தை வரைந்து முடிப்பார் இதே விதமாக ஏனைய பூகோள வரைபடங்களையும் எவ்வளவு சுலபமாக இலகுவாக வரையலாம் என்பதைக் காட்டித் தருவார் இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாக அவர் தலைமையாசிரியராக விளங்கினார். அவருடைய ஒரே புதல்வன்தான் அண்மைக் காலம் வரை கிறிஸ்தவ கல்லூரி உபஅதிபராக விளங்கிய திரு.J.Aசெல்லையா அவர்கள்.

அந்த நாட்களில் காலஞ்சென்ற E.C.A நவரத்தினராஜா அவர்கள் ஆங்கிலம் போதித்து வந்தார். ஆங்கில இலக்கணம், வசன நடை, செய்யுள், ஆகிய விஷயங்களில் இவர் ஆழமான அறிவுடையவராயிருந்தார். எங்களுக்கு விளங்கக் கூடிய வகையில் இவற்றைச் சொல்லித் தருவார். ஆனால் ஆங்கிலத்தில் திறமையடைய வேண்டுமாயின் நல்ல கதைப்புத்தகங்கள் வாசிக்க வேண்டுமென அறிவுறுத்தி எங்களுக்கு அப்படி வாசிக்கக் கூடியதாக தனது சொந்தப் புத்தகங்களைத் தந்துதவுவார். "சேர் வால்டர் ஸ்கொட்", "சாள்ஸ் டிக்கின்" போன்ற 19ம் நூற்றாண்டு நாவலாசிரியர்கள் எழுதிய நாவல்கள் எல்லாம் அவரிடம் இருந்தன. விடுதலை நாட்களில் இவற்றில் பெரும் பகுதியை வாசித்து முடிப்போம் இப்படி வாசித்ததனால் ஆங்கிலத்தில் சுலபமாகவும் திறமையாகவும் பாடங்களைப் படிக்கவும் சோதனைகளில் விடையிறுக்கவும் எங்களால் இயலக் கூடியதாயிருந்தது.

ஆங்கில எழுத்து, தமிழ் ஆகிய பாடங்களைப் போதித்தவர் திருS.Vஇளையதம்பி ஆசிரியர் அவர்களாகும். இவருடைய ஆங்கில எழுத்து மிகவும் இலட்சணமாயிருக்கும் ''சிவில் சேர்விஸ்'' எழுத்து என்றும் மற்றும் ஆசிரியர்கள் சொல்வார்கள். மாணாக்கர்கள் ஆங்கில எழுத்து எழுதும் போது பின்னால் நின்று சரி பிழை பார்ப்பார். பிழையாக எழுதினால் கைவிரல் மொழியில் அடிமட்டத்தினால் சிறு தட்டுத் தட்டி அதைச் சரிபண்ணச் செய்வார். இதனால் சொற்ப காலத்தில் எங்கள் ஆங்கில எழுத்துக்கள் கோணல் மாணல் இல்லாமல் நேர்த்தியாக அமைந்து விட்டன.

அப்போது திரு.வில்லியம்ஸ் அவர்கள் வரைதலுக்கும் தேகப்பயிற்சிக்கும் பொறுப்பாயிருந்தார். எங்கள் கற்பனைத் திறனை வெளிக் கொணர்வதற்கு வரைதல் பாடத்தை மிகவும் சுவையாகப் போதிப்பார். கோடுகள் வட்டங்களின் படங்களை முதலில் போட்டு அவற்றிலிருந்து நாங்கள் எண்ணிய பொருட்களை எப்படி வரையலாம் என்பதை மிகவும் இலகுவாக எடுத்துக் காட்டுவார். இவர் தொடக்கத்தில் தனியாக வந்து போனார் பின் தனது அழகிய மனைவியாரோடு சேர்ந்து வருவார். திருமதி. வில்லியம்ஸ் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கில வாசிப்பு, எழுத்துக்கள், கணிதம், ஆகிய பாடங்கள் படிப்பித்தார் இத் தம்பதியர் இன்று வரைக்கும் கிறிஸ்தவ கல்லூரியோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கின்றனர்.

அக்காலத்தில் ஆங்கிலப் பாடசாலையில் படிக்கும் மாணவர்களிடம் சம்பளக் காசு அறவிடுவது வழக்கம் சம்பளக் காசைஅறவிட்டுக் கணக்கு வழக்குப் பார்க்கவும் இதர எழுத்து வேலைகளைப் பார்க்கவும் கிளாக்கர் வேலுப்பிள்ளை இருந்தார். இவரைப் போல விசுவாசமான நேர்மையான ஊழியரைக் காண்பதரிது. இவரும் நெடுங் காலம் கிறிஸ்தவ கல்லூரியில் பணிபுரிந்து அண்மையில் இளைப்பாறி இருக்கிறார்.

ஐம்பது வருஷங்களுக்கு முன் இருந்த நிலை இப்படி. இப்போது ஆங்கிலப் பாடசாலையும் ஒன்றிணைந்த பின் இடவசதியும் கட்டிடங்களும் பெருகி கிறிஸ்தவ கல்லூரி ஒரு பெரிய ஸ்தாபனமாகத் திகழ்கிறது. எனினும் அன்று போல இன்றும் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய அரிய முக்குணங்களைச் சிறு வயதிலிருந்தே பெற்றுக் கொள்கிறார்கள். எங்கிருந்தாலும் தங்கள் கல்லூரிக்கு நல்ல பெயரை ஈட்டிக் கொடுக்கிறார்கள். வாழ்க கிறிஸ்தவ கல்லூரி! வாழ்க கோவை நகரம்!

**(மறுபிரசுரம் அறிவொளி 2 - 1978)**

# எனது உயர்வுக்கு வித்திட்ட கிறிஸ்தவ கல்லூரி

(மா.புவனேந்திரன் பழைய மாணவன், சாரணர் மாவட்ட ஆணையாளர், கிளிநொச்சி)

"மாணவனுக்கு ஆர்வம் வரக்கூடிய முறையில் கற்பித்தல் செய்ய வேண்டும். அதனால், நீர் தொடர்ந்து படிப்பிக்காவிட்டாலும், அவன் எங்கேயாவது சென்று தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பான்". அந்தக் கோட்பாட்டுக்கமைவாக, நான் சிறுபராயத்தில் கல்வி கற்ற இக்கல்லூரி என்னை எங்கும் எப்போதும் ஊக்குவித்திருக்கிறது; அன்றைய ஆசிரியப் பெருமக்கள் அப்பணியை நன்றே செய்துள்ளனர் என்பதை நான் இன்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றேன். எனது நினைவுகள் குறித்து இந்த 150ஆவது ஆண்டு மலரில் சில கருத்துகளைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நான் 1952ம் ஆண்டில் 7ம் வகுப்பில் இக்கல்லூரியில் கற்பதற்காகச் சேர்ந்து கொண்டேன். எமது வகுப்பாசிரியரான திரு.A.C.செல்வராஜா அவர்கள் புவியியல் பாட ஆசிரியராக இருந்து எனக்கு நன்கு கற்பித்தமை என்னைப் பெரிதும் ஊக்குவித்தது. அதேபோன்று 8ம் வகுப்பில் திரு.G.A.நைல்ஸ் அவர்களும் கணக்குப் பதியும் முறை (Book Keeping) எனும் பாடத்தை நன்கு கற்பித்து ஊக்குவித்தமையால் எனக்கு இப்பாடங்களில் மிக்க ஆர்வம் பிறந்து, அவற்றை உயர்தர வகுப்பிலும் நன்கு கற்றுச் சிறந்த முறையில் அவற்றில் சித்திபெறும் வகையில் என்னை இட்டுச் சென்றது. இந்த ஆசிரியர்களின் கற்பித்தல், ஆரம்பத்தில் குறிப்பிட்ட வகைக்கு இயைய அமைந்தமையே எனது திறமைக்கு வித்தாகியது எனலாம்.

1952ல் இக்கல்லூரியில் கனிஷ்ட சாரணனாகத் திரு.A.E.தம்பு அவர்களினால் சின்னம் சூட்டப் பெற்றுச் சாரணர் குழுவில் இணைந்து கொண்ட யான், பின்னர் இரண்டாம் வகுப்புச் சாரணனாகத் தரம் உயர்ந்தேன். என் சாரணிய வாழ்வில் ஏற்பட்ட உயர்வுக்கும் இக்கல்லூரியே அத்திவாரமிட்டமையை என்னால் மறக்கவே முடியாது.

1984ல் யான் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய போது, இலங்கைச் சாரணர் சங்கத்தினர் என்னை இலங்கைச் சாரணர் குழுவின் தலைவராகத் தெரிவு செய்தனர். இத்தகைய பதவிக்குப் போட்டி அதிகமாதலால் தெரிவு செய்யப்படுதல் மிகவும் கஷ்டமான காரியமாகும். காரணம் வருடாந்தம் ஜப்பான் நாட்டில் நடைபெறும் சாரணர் 'ஜம்போறி'க்கு அழைப்பு விருந்தினராக இரண்டு சாரணர்களும், தலைவரும் கலந்து கொள்ளச் செல்வதும், அவ்வாறு தெரிவு செய்யப்படுவோருக்கு அதற்கான முழுச் செலவையும் 'நிப்போன்' சாரணர் சங்கம் பொறுப்பேற்கும் என்பதுதான். இந்தத் தலைமைப் பதவி எனக்குக் கிடைத்தமை பெரிய அதிர்ஷ்டமேயாகும்.

1962க்குப் பின் இன்றுவரை வடக்குக் கிழக்கு மாகாணத்திலிருந்து இலங்கைச் சாரணர் குழுவின் தலைவராகச் செல்லும் சந்தர்ப்பம் எனக்கு மட்டுமே கிடைத்துள்ளது. இந்த பெருமை என்னை நன்கு உருவாக்கிய கிறிஸ்தவ கல்லூரிக்கே உரியதாகும். நான் ஜப்பான் செல்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்பு அவ்வாறு செல்ல முன்பு எனக்கு முதன் முதலில் சாரணச் சின்னம் சூட்டிய சாரண ஆசிரியர் திரு.A.E.தம்பு அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்து ஆசிபெற விரும்பினேன். அவர் அக்காலத்தில் Rev. Brother.A.E. தம்பு என்ற ரீதியில் சாவகச்சேரி தேவாலய விடுதியிலிருப்பதை அறிந்து அங்கு சென்று அவ்வாறு அவரின் நல்லாசிகளைப் பெற்றுச் சென்றேன். அது மாத்திரமன்றி என்னை இவ்வாறு உருவாக்கிய கல்லூரிக்கும் சென்று அப்போது அதிபராக இருந்த திரு.P.K.இராசரத்தினம் அவர்களிடமும் ஆசிகள் பெற்றுச் சென்றேன். இக்கல்லூரியில் சாரண ஆசிரியர்களாக இருந்த திரு.T.செல்வராசா, திரு.செல்வம் செல்லையா ஆகியோரின் சேவைகளை நான் நன்றியுடன் நினைவு கூருவதுண்டு. அக்கால உப அதிபராக கடமையாற்றிய செல்வி.ஹட்சின்ஸ், அவரைத் தொடர்ந்து உபஅதிபராகப் பணிபுரிந்த திரு.D.J.தம்பாப்பிள்ளை ஆகியோரும் என்னால் மறக்க முடியாதவர்களாவர். நான் வட்டக்கச்சியில் பணியாற்றியபோது செல்வி.ஹட்சின்ஸ் அம்மையார் கிளிநொச்சி கருணா நிலையத்திலிருந்து வந்ததால் அவரை யான் மாதமொருமுறை நன்றியுணர்வுடன் சந்தித்துவரும் வழக்கமுள்ளவனாக இருந்தேன். எனது மனதில் கிறஸ்தவ கல்லூரியும், அதன் பணிகளும் என்றுமே நீங்காத நினைவுகளாகப் பதிந்து விட்டன. கல்லூரி அன்னைக்கு எனது நன்றிகள் என்றும் உரியன. அவளின் பணி நீண்ட காலம் தொடர்ந்து சிறந்தோங்க இறையருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

# ஏற்றமே கொள்வாய்!

கோவையூர் சிறக்கக் கோதறு பணிகள்
குவலயம் போற்ற வியற்றி மகிழ்ந்திடும்
"கிறிஸ்தவ கல்லூரி" யெனுமறி வாலயம்
கல்வியும் ஒழுக்கமும் நல்குமெம் மன்னை
நூற்றாண் டொன்றொடு ஐம்பது ஆண்டாய்
நற்பணி செய்தே நயம்பட நின்றாள்;
வற்றாப் புகழொடு வாழிய! என்றும்
வளர்பிறை யொத்தென வாழ்த்திநிற் போமே!

ஆங்கிலம் தமிழுடன் பாங்கொடு பண்பும்
அரியவிஞ் ஞானம் கணிதம் வணிகம்
அருங்கலை யாவும் பயின்றே நன்றாய்
அறிவறி மக்கள் பலருவந் தளித்தே
இன்னல் பலவும் இடர்தர வரினும்
இனிதாம் பணியில் இன்புற நின்றாய்!
பரவிடு நின்புகழ் பெருமித முடனே
பாங்குடன் வாழ்த்திப் பணிந்து நிற்போமே!

"மிஷனரிக்" காலம் மிளிர்ந்தே நின்றாய!
அரசின்கீழ் சற்று அசந்தே போனாய்;
வாட்டமும் செழிப்பும் வழமைதா னுலகில்
வரட்சி வந்திடின் வரும்மறு மலர்ச்சி;
சுகமும் துக்கமும் சுழன்றிடு சக்கரம்
சந்திரன் தேய்ந்தால் வளர்தலும் நியதி;
இங்கிவை யுணர்த்தி எழிலுற மலர்ந்தாய்
இனிதே நிற்பாய் நலியா துலகில்!

ஒன்றரை நூற்றாண் டோயாப் பல்பணி
இன்புற ஆற்றி இயைந்திட நின்றனை!
திக்குகள் எட்டிலும் துலங்கிடு நின்பெயர்
தக்கவே வைத்த தவமலி புதல்வர்
எத்தனை பேர்தான் எண்களில் அடங்கா
வைத்தநின் பெருமை வாழ்த்தியே நிற்போம்!
இத்தனை ஆண்டாய் இளமை எழிலொடு
மிக்கதாம் புகழ்தர மிளிர்ந்தனை வாழி!

மாணவர் புதியவர் பழையவர் எவரும்
பெற்றோர் மற்றும் நல்விருப் புடையோர்
அவரோ டிணைந்தே அதிபர்மற் றாசான்
அனைவரும் உன்னை உவப்பொடு ஏத்தப்
புதுமையும் பழமையும் இணைந்திடப் பேணிப்
புகழ்பெறு பணிபல படைத்து நிற் பதனால்
எதிர்வரும் காலம் எத்திக்கும் போற்ற
ஏற்றமே கொள்வாய்! என்றுமே நன்றாய்!

**அன்னையை வாழ்த்தி நிற்கும்,**
**திருமதி.க.சரஸ்வதி,**
**பழைய மாணவி**

# வளர்க கிறிஸ்தவ கல்லூரி

கல்வியில் துலங்கிடும் கிறிஸ்தவ கல்லூரி
கணனிகள் தூக்கிடல் வேண்டும்
வல்லமை நிறைந்திடும் கிறிஸ்தவ கல்லூரி
வாண்மை காத்திடல் வேண்டும்.

ஆண்டுகள் காத்திடும் கிறிஸ்தவ கல்லூரி
அறிவியல் சுமந்திடல் வேண்டும்
பண்புகள் நிறைத்திடும் கிறிஸ்தவ கல்லூரி
பாரம்பரியம் நிறைத்திடல் வேண்டும்.

வெற்றிகள் குவித்திடும் கிறிஸ்தவ கல்லூரி
விடியலில் மினுங்கிடல் வேண்டும்
சத்தியம் சுமந்திடும் கிறிஸ்தவ கல்லூரி
சாதனை நிகழ்த்திடல் வேண்டும்.

கலைகள் வளர்த்திடும் கிறிஸ்தவ கல்லூரி
காவியம் படைத்திடல் வேண்டும்
மனங்கள் வென்றிடும் கிறிஸ்தவ கல்லூரி
மக்களை வாழ்த்திடல் வேண்டும்.

ஆசிரியம் நிறைத்திடும் கிறிஸ்தவ கல்லூரி
ஆத்தல்கள் பொதித்திடல் வேண்டும்
சீரிளமை குன்றாத கிறிஸ்தவ கல்லூரி
செந்தமிழை உயர்த்திடல் வேண்டும்.

தென்றலில் குளித்திடும் கிறிஸ்தவ கல்லூரி
தேசத்தைக் கும்பிடல் வேண்டும்
மன்றங்கள் வளர்க்கும் கிறிஸ்தவ கல்லூரி
மனிதத்தை வளர்த்திடல் வேண்டும்.

**நல்லை அமிழ்தன்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்**
**30-10-2002**

# "விருத்தியை நோக்கி எம் கல்லூரி"

இலங்கை அன்னை.
ஈன்றேடுத்தாள் - எங்கள்.
கிறிஸ்தவ கல்லூரி.
என்கின்ற.
செல்வமதை

செல்வந்தர்.
வறியவர்கள் - பேதமில்லை.
கல்விச் செல்வத்துக்கோ,
இங்கு.
பஞ்சமில்லை.

புத்தாயிரம் ஆண்டுடனே.
புதுப்பொலிவு பெற்றுவிட,
அயராது உழைத்தார்கள் - எம்.
அதிபர் ஆசான்கள்,
கிடைத்தது பலன் இன்று.

கணணிக் கல்விக்காய்
கணணிக் கூடமதும்
கலைகள் பறைசாற்றும்.
நினைவு மண்டபமும்,
உதித்தன - இன்று.

விளையாட்டு விருத்திபெற.
விளையாட்டுத் திடலுடனே.
ஆலய அமைப்பும் - விருத்தி
பெற்றது - இன்று.

தமிழ் பயில்கின்ற - எம்.
கல்லூரி அதிலேதான்,
தமிழ்த்தாய்ச் சிலையும்,
கலையரங்க முகப்பும் - வாயில்.
பெயர்ப்பலகையும் - தந்தது.
தமிழ்ச்சங்கம்.

கல்விப் பெறுபேறு களை கட்டிடவே.
பல்கலைக் - கழகம்
சென்றனர்.
மாணவர் பலரே

நூற்றைம்பது ஆண்டுகள்,
இத் தேசத்தில் - நிலைத்து
மாசற்ற - பல.
மானிடரை வளம் செய்த.
எங்கள் கல்லூரி.
இன்னும் பல ஆண்டுகள்.
நின்று புகழ் சேர்க்கும்.

செல்வன்.ந.பாபு. (A/L - 98)
யாழ் – பல்கலைக்கழக மாணவன்

# அன்னைக்கு அகவை ஒன்றரைச் சதம்

கற்றவர் மலிந்த கோவையிற்றிகழும்
கிறிஸ்தவ கல்லூரிக்கு அகவை நூற்றைம்பது
சொற்களைத் தொகுத்துச் சிறப்பினையுவந்து
நற்கவி புனைந்தேன் வாழ்த்தி

நாற்றிசை மேவ நடுவேமிளிர்ந்து
கற்கை நெறியினைக் கற்றுக் கொடுத்து
ஊற்றெனப் பாயும் ஆயிரம் அறிஞரை
ஆற்றுப் படுத்திய தாயே!

நாட்டில் வைத்தியரை நல்ல குருமாரை
மட்டில்லாக் கவிஞரை மட்டுமா நீயீன்றாய்!
பொறியியலாளரையும் பொறை மாணாக்கரையும்
பொறிக்கப் போதுமா புகழ்!

காட்டிய தீபமாய் கல்லூரி அதிபர்களை
ஈட்டிய குருமாரை எமக்குத்தந்து
இற்றை வரையுமே ஓயாதுழைத்தாய்
அற்றவர் தேற வைத்தாய்.

உள்ளத்தாற்றலை உருவாயமைத்திட
பள்ளித்தந்தாய் போட்டிகள் விழாக்கள்
பள்ளிக் கல்வியில் படிமாறாக் கடமையைச்
சொல்லித் தந்தனை வாழி!

முட்டும் மதியன்ன மங்காப்புகழோங்க
திட்டமிட்டே நீ திகழ வேண்டுமம்மா
பட்டதாரிகள் பாரில் குவிந்திடவே
கெட்டியாய் வாழ வேண்டும்.

கட்டித் தங்கமாய் கற்றவர் பெருகக்
கெட்டித்தனத்துடன் கட்டிடம் ஓங்கத்
தட்டிக் கொடுத்துத் தைரியமான்களை
ஏட்டில் பொறிக்க வாழி

கேட்டவருன் பெயர் குனிந்து வணங்கிடக்
கோட்டையெனக்காட்டி கோவையில் நிலைத்திட
நாட்டவர் நிமிர நாட்டிய நாற்றாய்
பாட்டெலாம் புகழ வாழி!

செல்வி. ஜெனிதா. இராசதுரை
(பழைய மாணவி) - (A/L - 2001)

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு 150 வயது

கல்விக் கூடம் ஒரு கலைக்கூடம் - அங்கு
செல்லுங் கூட்டம் இளங்கூட்டம்
சொல்லைக் கணக்கை வாசிப்பை
எல்லாங் கற்றுத் தேறிய பின்
கல்லைக் கனியாக்கு வல்லமையும் -
வாழ்வை வெல்லும் ஆற்றல் அத்தனையும்
சேர்த்துக் கொடுக்கும் சீர்கூடம்
சிறப்பெல்லாம் பெற்றுச் சீராக
ஏற்றமுடன் என்றும் வாழ்ந்திடவே.

இன்னல்கள் மத்தியிலே இடர்பல நேர்ந்தபோது
மன்னுசீர் கல்விக்காக உழைத்த பல
அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள்
கதியற்றுக் கலக்கமாய் இருந்த வேளை
ஆலவிருட்சமாய் அரவணைத்து
பாலருக்கும் பாவையர்க்கும் இளைஞர்க்கும்
கல்வியை மட்டுமின்றிக் கலைகளையும்
ஒன்றுசேரக் கற்பித்துப் புகழ் பரப்பும்
மன்று போல் துலங்கு கல்லூரியே - நீ
என்றும் போல் நின்று வாழி.
ஒன்றரை நூற்றாண்டு காலமாய்
ஏற்றமிகு கல்வி யெனும் அமுதூட்டி
ஆற்றல்மிகு அறிவாளிகளைப் பார்
போற்றுகின்ற பல உழைப்பாளிகளை
சீர்தூக்கிச் சிறப்பாக்கி இன்னும்
சீரிளமை குன்றாது கோப்பாயில்
செயலாற்றும் கிறிஸ்தவக் கல்லூரியே - உன்
வியத்தகு பணிகள் கண்டு சிரந்தாழ்த்தி
வாழ்த்துகின்றேன் வாழ்க! வாழ்க!

**திரு.சின்னையா சிவநேசன்**
**(துறையூரான்)**
**முன்னாள் அதிபர்.**

---

# கன்னிக்கு வயது 125

மோட்டிமர் தோமசு இச்சொக் காதிய
கல்விப் பெரியோர் கருத்துக் கொண்டு
ஆயிரத் தெண்ணூற் றைம்பதிற் கண்ட
ஆங்கில வாணியின் அருங்கலைக் கோயில்
நான்முறை வெள்ளியும் இருபெரு வைரமும்
ஒருநூற் றாண்டும் கண்டநற் றாயே!
அறுபத் திரு ஆண்டொ டைந்தாகி
அருங்கலை யாவும் அப்பாவுஞ் சுற்றமும்
பாட்டனு முப்பாட்டனும் பயின்ற பழமையோய்!
கருந்தனக் கூடமே அம்மா! உன்றன்
கன்னித் தோற்றம் கண்டு களிக்க
இன்புடை மகா அர் ஈங்கேயீண் டினங்காண்.
ஆனா வூக்க அதிபரா யீண்டு
சிவணிய சிவனேசச் செம்மல் தானும்
அடியொற்றி யாற்றிய அரும்பணி கண்டனம் இதுகாண்

ஏ எம் நதானியல் இருபத்தாண் டகல
மூதறி தேசிகன் இரத்தினா திக்கமும்
அவர்வழி பீற்றர் செல்லையா மேதையும்
ஏம் எம் நதானியல் இருபத்தாண் டகல
மூதறி தேசிகன் இரத்தினா திக்கமும்
அவர்வழி பீற்றர் செல்லையா மேதையும்
இராச சேகர இரும்பொறை யாளனும்
நவரத் தினராசா நல்லறி வோனும்
கருமுகிற் கம்ஞ்சூற் செல்லையா வள்ளலும்
ஒரு முகங் கொண்ட திருமுகம் புரையும்
ஈக்கேச் சண்முக நாத இசையோனும்
கன்றிய கமியூனிசக் கார்த்தி கேயனும்
சீரிய சிவசுப்பிரமணியச் செம்மலும்
கனன்ற காதற் கந்தசாமிக் குரிசிலும்
மனங்கொள வியற்றிய மாடம் யாவும்
ஈண்டே கண்டனை ஆதலின் நீயும்,
முன்னை நாளுக்கி நின்னை யீன்ற
நல்லூர்ச் செமினறி நன்றுற வுவக்க,
புதிய கோலம் புனைந்தனை வாழி!
மேதினி தன்னில் மெச்சவே வாழி!!
நின்னுடை மகாரும் நிறைந்தே வாழி!!!

**அமரர் ஆ.வி.மயில்வாகனம் ("கோவை வாணன்")**

***(125 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது இயற்றிய பாடல்)***
***மறுபிரசுரம் (அறிவொளி - 2 - 1978ல் பிரசுரமாகியது)***

# வன்னி மண்ணிலிருந்து.........

மூத்த உயிர்ப் பொருளே
மூவுலகும் அழியாத
கீர்த்தி கொண்டெழுந்த
கிறிஸ்தவ கல்லூரியே - உன் கிளையில்
பூத்த மகனொருவன்
புன்னகை மாறாவுன்
மூத்த பணி பாடும்
பாமாலை இப் பாட்டு!
உந்தன் மடிமீதென் பொன்பாதம்
வைத்த அந்தப்
பூங்காலைப் பொழுது இன்றும்
பொன்பூக்கள் பூக்க வைக்கும்
காந்தம் போலென்னைக்
கல்வியிலே கவர்ந்த உன்னைக்
கண்ணிறந்து போன பின்னும்
காணத் துடிப்பிருக்கும்.
நண்பர்களோடு சேர்ந்து
நாம் செய்த குறும்புகளில்
பூரித்த உன் மனதைப்
பூஜிக்க நான் வருவேன் - உன்
கிணற்றடிப் "புளியின்" கீழ்
இளைப்பாறிச் சென்றபின்தான்
இந்த உலகிருந்து............
இனிமேல் நான் விடைபெறுவேன்.

கலையே..... களங்கமில்லாக்
கண்ணியத்தின் சிலையே
அலையே..... என் மனதின்
ஆறாத நிலையே - நீ வளர்ந்த
சின்ன மகனொருவன்

சிந்தனையில் உனை நிறுத்தி
வன்னி மண்ணிருந்து வழியனுப்பும் வாழ்த்தம்மா!

முடிவேதும் இல்லை - உந்தன்
முக்கிய பணிதனுக்கு..................
அழிவேதும் இல்லை.............
கலையே... கல்லூரியே... எங்கள்
கலங்கரை விளக்கே - நீ
வாழ்வாய் இன்னும்
வருடங்கள் பலநூறு!

வன்னியிலிருந்து.....
த.நிரஞ்சலன் (இளந்தளிர்)
பழைய மாணவன்

- நியாயத்தைக் கடைப்பிடிப்பவன் பொறாமையின் மத்தியிலும் முன்னேறுவான்.
- பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்து கொள்.
- எதைச் செய்தாலும் ஆர்வத்துடன் அனுபவித்து முழு விருப்பத்துடன் செய்யுங்கள் இளமை உங்கள் கூடவே விலகாமல் இருக்கும்.
- உள்ளம் தூய்மையாக இருந்தால்தான் பேச்சுத் தெளிவாக இருக்கும் பேச்சுத் தெளிவாக இருந்தால்தான் நீர் நேர்மையானவனாக இருப்பீர்!

# FROM THE RETIRED PRINCIPAL'S PEN

(P.K.Rajaratnam Former Principal ]

Kopay Christian College completes 150years of existence, a significant landmark in the history of educational institutions and years up to celebrate it's 150th birthday. It was founded by the Church Missionary society with the object of providing children with good education.

It is an occasion to revisit the past and to restate the future vision. From a humble beginning it has grown to a full fledged institution It has been a long journey. All those who held in their hands the reins of the College, guided and directed the impressionable young lives entrusted to their care, forming them to individual successes.

Kopay Christian College that we see today is the result of dedicated and relentless efforts of several generations. of members of the church Missionary society, Principals, teachers, minor employees, parents, past pupils, well wishers and pupils. It has gone through periods of hardships stress and strains to preserve it. It has been a small revolution in itself which has changed our social, economic and cultural life in a number of ways. Our college is distinguished for its educational excellence and something far more tangible, namely its great traditions. It is an all pervading atmosphere that it binds generations of students who have passed through the college portals.

We commemorate the anniversary to remind ourselves of the services rendered by our Alma mater. Memories come rushing in my minds's eye. They are sweet memories.

